புதியமுறை
எளியவுரை

# நன்னூல்

## எழுத்ததிகாரம்



தமிழண்ணல்

பவணந்தி முனிவர்

அருளிய

# நன்னூல்

## எழுத்ததிகாரம்

புதிய முறை எளியவுரை

தமிழண்ணல்

செல்லப்பா பதிப்பகம்

மயூரா வளாகம்

48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.

தொலைபேசி : அலுவலகம் : 2345971 வீடு : 2560517

முதற் பதிப்பு : மே, 2012

உரிமை : ஆசிரியர்க்கு

விலை : ரூ. 80.00

## நூலைப் பற்றி

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நன்னூல் - எழுத்ததிகாரம் எளிய உரை |
| உரை ஆசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| முதற் பதிப்பு | : | மே, 2012 |
| தாளின் தன்மை | : | வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : | டெம்மி அளவு |
| மொத்தப் பக்கம் | : | 220 |
| நூலின் விலை | : | ரூ. 80.00 |
| ஒளி அச்சுக்கோர்வை | : | ஐ கேட்சர், மதுரை |
| அச்சிட்டோர் | : | கணபதி பிராசஸ், சென்னை-5. 9841223780 |

**CHELLAPPA PATHIPPAGAM**
Mayura Complex
48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.
Phone : 0452 - 2345971 (O) 0452 - 2560517 (R)
Email:chellappapathippagam@hotmail.com

# கற்போம் தமிழைக் கற்பிப்போம்!

நன்னூல் தமிழ் இலக்கணத்தைச் சுருக்கமாகத் தர முயல்கின்றது. நூற்பாக்கள், மிகவிரிந்த கருத்துக்களை, மனப்பாடம் செய்தற்கு எளிதாய்ச் 'சத்துமருந்துச் சுருள்' போல் தருகின்றன.

சன்மதி முனிவரின் மகனாகிய பவணந்தியார் கங்க நாட்டரசன் சீயகங்கனின் அவைக்களப் புலவர். கி.பி. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவர்கள் வாழ்ந்தனர் என்பர் ஆராய்ச்சியாளர். இவர் ஒரு சமண முனிவர்.

தமிழ் குருகுல முறையில் மிகச் சிலர்க்கு, வழி வழியாகப் பாடஞ் சொல்லப்பட்டும் பனை ஓலைகளில் எழுதப்பட்டும் வந்தது. மிகப் பலரை அழைத்து, தமது சமணப் பள்ளிகளில் இன்றைய வகுப்புக்கள்போலப் பாடம் சொல்லித் தரத் தொடங்கியவர்கள் இச்சமண முனிவர்களே யாவர். பள்ளிக்கூடம் எனும் சொல் வழக்கு அதன்வழி வந்ததே. அக்காலத்தே இவர்கள் சொல்லித் தருதற் பொருட்டு, எழுதிய சிறுசிறு பாடநூல்கள் நன்னூல், யாப்பருங்கலக் காரிகை போல்வன. இவர்கள் முன்னதாக மூன்றாம் நான்காம் நூற்றாண்டு தொடங்கியே, தமிழ் அகப்புற இலக்கிய நூல்களையும் நீதி நூல்களையும் பாடநூல்களாக எழுதிக் கற்பித்து வந்தனர்.

பவணந்தி முனிவர் தொல்காப்பியத்திற்கு வழி நூலாக இப்பாடநூலை எழுத முயன்றுள்ளார். இதில் தொல்காப்பிய நூற்பாக்கள், அவ்வாறே எடுத்தாளப் பட்டுள்ளன. அவை 90 (தொல்.11), 252 (28) 317 (590) 396 (531) 404 (502) 408 (942) 409 (1456). இவர் ஐந்திலக்கண நூலாக எழுதத் தொடங்கி, எழுத்து, சொல்லுடன் நின்றதாக எண்ண இடமுளது. எழுத்ததிகாரம் 5 இயல்கள். சொல்லதிகாரம் 5 இயல்கள். முன்னதன் நூற்பாக்கள் 202; பின்னதற்கு 205; ஆக 407 நூற்பாக்கள் கொண்டது இந்நூல். பாயிரவியல், முன்பே பலரால் எழுதப்பட்டு, இவரால் திருத்தமுறத் தொகுக்கப் பட்டதெனலாம். இவர் தொல்காப்பிய இளம்பூரணர் உரையையே பெரிதும் பின்பற்றியுள்ளார். அவரும் சமணரே. இதன் முதல் உரையாசிரியர் மயிலைநாதர். பிறகு இதுகாறும் ஐம்பதற்கும் மேற்பட்டோர் உரைஎழுதியும் பதிப்பித்தும் உள்ளனர்.

எல்லா உரைகளும் சிறுசிறு வேறுபாட்டுடன், ஒன்றை ஒன்று பின்பற்றியவையே.

இந்த உரைவிளக்கம், மாணவர் உளங்கொள்ளுமாறு மிகவும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. கற்பவர்க்கு மட்டு மன்றிக் கற்பிக்கும் ஆசிரியர்க்கும் இதனை ஒரு வழிகாட்டி நூலாகக் கொள்ள வாய்ப்புள்ளது.

புதிய எடுத்துக்காட்டுக்கள் தர முயன்றுள்ளமை, படிக்கும்போது விளங்கும்.

'இயல் கருத்துநிரல்' - ஒரு புதிய முயற்சி. உரைநடை நன்னூற் சுருக்கம் எனலாம். அதனை ஒரு கட்டுரையைப் படிப்பதுபோல் பலமுறை படித்துவிட்டு, நூலுக்குள் நுழைவது நல்லது. நூலுள் எவையெவை, எவ்வரிசையில், எவவெப் பயன் கருதிக் கூறப்பட்டுள்ளன எனும் ஒரு 'முழுமைப் பார்வை' கிடைக்கும். ஒரு பூங்காவிற்குள் சென்று, மணமலர்களைக் காண, வழிகாட்டி அழைத்துப் போவது போன்றது இது.

ஒவ்வொருநூற்பாவுக்கும்தரப்பட்டுள்ளதலைப்பே, ஒரு தெளிவு தரும். நீங்கள் படிக்கப்போவது இன்னது என்பதை, உடனே உணர்வீர்கள், புதிய முறையில் எழுதிய, எளியவுரையும் படிப்பவர் மனத்தில் பசுமரத்தாணி போல், கருத்துக்களைப் பதிய வைக்கும்.

குறிப்பெடுத்துப் படிப்பது நல்ல முறை. மூல நூலை விட்டுவிட்டுப் படிப்பது கல்வியே ஆகாது. நூற்பாக்கள் பலமுறை படிக்கப்பட்டு, மனத்தில் பதிந்தால், அது மிகுபுலமை பெறப் பிற்காலமனைத்தும் பயன்படும். எழுதிப் படிப்பது இன்னும் நல்லது. மாணவர்கள் இயல் ஒவ்வொன்றைப் பற்றியும், கருத்தரங்கக் கட்டுரைகள் படித்து, விவாதிப்பது முழுமையான பயன்தரும்.

இவ்வளவுக்குப் பிறகும், தமிழ் இலக்கணம் விளங்க வில்லையென்றால், ஏன் இவர்கள் 'விளங்கவில்லை' என்றே தோன்றும். நமது முயற்சியும் வேண்டுமல்லவா? 'தெய்வம் காட்டும், ஊட்டுமா?' என்பதுதானே, பழமொழி.

ஏரகம் தமிழண்ணல்

மதுரை 625 020. 12.08.2003.

**தமிழ் ஒளியைப் பரப்புவோம்;**
**அன்பாய்த் தமிழ்ப் பகையைத் திருத்துவோம்!**
**தமிழுடன் அன்பாய்ப் பழகுவோரே தமிழராவார்!**

*தென்னாடுடைய தமிழே போற்றி!*
*எந்நாட்டவர்க்கும் இனியாய் போற்றி!*
*உலகம் உய்யவரும் ஒரு மொழி நீயே!*
*உலகத் தமிழரை ஒருங்கிணைப்பாயே!*
*உன்னத வாழ்வை எமக்கருள்தாயே!*
*உதவாக் கறைகளை ஒழித்திடு வாயே!*
*தடைகளைத் தகர்ப்பாய், பகையைத் துடைப்பாய்!*
*உட்பகை வெளிப்பகை அனைத்தையும் ஒழிப்பாய்!*
*ஆள்வோர் கைவிட்டு ஆரவாரிப்பதுவும்*
*அரசியல் வாதிகள் அலங்காரப் பேச்சும்*
*சூழ்வினை யாளரின் களவும் கயமையும்*
*கண்டு நகைக்கும் கன்னித் தமிழே!*
*இனிவரும் காலம் கனிவரும் காலம்!*
*ஏய்ப்பவர் திருந்துவார்; இழிப்பவர் மாறுவார்!*
*மழலையர் என்னும் மாபெரும் இளைய*
*நெஞ்சுகள் தன்னில் நஞ்சைப் புகுத்திடும்*
*வஞ்சகர் அழிவையே வரலாறெழுதுமே!*
*வள்ளுவன் புகன்றனன்,*
*நன்றி கொன்றவர் தம்மொடு சுற்றமும்*
*உடுப்பதும் உண்பதும் இன்றியே கெடுமாம்!*
*குடியே கெடுமாம் கொள்கை பிழைத்தால்!*
*மறைமொழி பொய்க்குமோ? புறக்கணிக்கின்ற*
*கறைநிறை மனத்தவர் திருந்திட,*
*நிறைமொழி அன்னை நிலைபெறுவாயே!*

## உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | சிறப்புப் பாயிரம் | 18 |
| 2. | பொதுப் பாயிரம் | 21 |
| 3. | சிறப்புப் பாயிர இலக்கணம் | 45 |
| 4. | எழுத்தியல் | 49 |
| 5. | பதவியல் | 97 |
| 6. | உயிரீற்றுப் புணரியல் | 125 |
| 7. | மெய்யீற்றுப் புணரியல் | 174 |
| 8. | உருபு புணரியல் | 200 |
| 9. | நூற்பா முதற்குறிப்பு அகரநிரல் | 217 |

# பாயிரவியல்

## கருத்து நிரல்

## நினைவில் வைக்க ஒரு பருந்துப் பார்வை

### சிறப்புப் பாயிரம்

1. சிறப்புப் பாயிரம் : பாய்-பரந்து கிடப்பது, பாயிரம்-பரந்து விரிந்து செல்லும் நூலின் தொடக்கப் பகுதி. இதனை வரல் ஆறு - மேல் வருவதைச் சொல்வது என்பர்.

   எட்டும் மூன்றும் கொண்ட 11 செய்திகளைக் கூற வேண்டும். 1.ஆக்கியவன் பெயர் - பவணந்தி முனிவர். 2.வழி - முன்னோர் மரபுவழி 3.எல்லை - தமிழகம். 4.நூற்பெயர் - நன்னூல். 5.யாப்பு - தொகை வகை விரி எனும் அமைப்பு 6.நுதலிய பொருள் - ஐந்திலக்கணம் (எழுத்தும் சொல்லுமே கிடைத்துள; பொருள் யாப்பு அணி கிடைத்தில.) 7.கேட்போர் - தமிழ் மாணாக்கர். 8.பயன் - எளிமையாய் யாவரும் அறிதல்.

   சீயகங்கன் எனும் கங்க நாட்டரசனின் காலமும் அவனது அவைக் களமும் அவன் எல்லோரும் அறியும்படி எளிமைப் படுத்தித் தருக எனக் கேட்டுக் கொண்ட காரணமும் இந்நூல் தோன்றக் காரணங்களாகும்.

## பொதுப்பாயிரம்

2.1 **பாயிரம் என்பதன் வேறு பெயர்கள் :** முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை, பாயிரம் (8)

2.2 **பாயிர வகை :** 1) பொதுப் பாயிரம் 2) சிறப்புப் பாயிரம்

2.3 **பொதுப்பாயிரம் :** 1) நூல், 2) நூலைப் பாடம் சொல்பவன், 3) அவ்ன் பாடங்கூறும் முறை, 4) பாடத்தைக் கேட்டுக் கொள்பவன், 5) அவன் பாடங் கேட்கும் முறை. இவை ஐந்தும் கூறப்படும்.

3. **நூலின் இலக்கணம்** : இருவகைப் பாயிரம், முதல்வழி சார்பு நூல் வகையுள் ஒன்று, நான்கு உறுதிப்பொருள் (அறம் பொருள் இன்பம் வீடு) எழுவகை மதம் (எழுதும் கோட்பாடுகள்), பத்துக்குற்றம் நீக்கி, பத்து அழகு பொருந்தப்படைத்தல். 32 உத்திகளும் எழுதும் திறன் பற்றியவை. ஓத்து (இயல்), படலம் என்பன உட்பகுப்புக்கள். சூத்திரம் - மூல பாடம். காண்டிகை, விருத்தி - உரைவகைகள்.

3.1 **நூல் வகை** : முதல் நூல், வழிநூல், சார்புநூல்.

3.1.1 வினைகளின் நீங்கி விளங்கிய அறிவினையுடைய முனைவன் (இறைவன்) முதலாக அத்தகையவர் பலரும் படைப்பது முதனூல்.

3.1.2 முன்னோர் நூலின் முடிபுடன் ஒத்து, பின்னவன் விரும்பும் வேறுபாட்டைச் சேர்த்து, மரபு சிதையாமல் படைப்பது.

3.1.3 முன்னைய இருவர் நூலுடன் ஓரளவு ஒத்து, வேறுபட மாற்றிப் படைப்பது சார்பு நூலாகும்.

3.1.4 வழிநூல்கள் முன்னோர் நூலில் வரும் சொற்களையும் கருத்துக்களையும் பொன்னேபோல் போற்றிக் கொள்ள வேண்டும். **வேறுநூல்** செய்தாலும், முதனூலிலிருந்து சிலவற்றை - சில சூத்திரங்களை மேற்கோளாக அப்படியே எடுத்தாள வேண்டும்.

3.1.5 **நூற்பயன்**: அறம் பொருள் இன்பம் வீடு - உறுதிப் பொருள்களை அடைதலே முடிந்த பயனாகும்.

4. **நூலெழுதும் கோட்பாடுகள்**: நூலாசிரியன் நூலெழுதும் போது பின் பற்றும் ஏழு கோட்பாடுகள்: 1. உடன்படல் 2. மறுத்தல் 3. பிறர் கோட்பாட்டை ஏற்குமளவு ஏற்று மற்றவற்றை நீக்குதல் 4. தானாக ஒன்றைத் தொடங்கி, அதையே இறுதிவரை நிலை நிறுத்துதல் 5. இருவர் கருத்து வேறுபடுமிடத்து, ஒருபக்கம் துணிதல் 6. பிறர் நூல்களிலுள்ள குற்றங்களை எடுத்துக்காட்டுதல் 7. பிறர் கோட்பாட்டை ஏற்காது தன் கொள்கைப்படியே எழுதுதல்.

**நூற்குற்றம் பத்து:**

5. நூலில் வரத்தகாத பத்துக் குற்றங்கள்:1. குன்றக் கூறல் 2. மிகைபடக் கூறல் 3. கூறியது கூறல் 4. மாறு கொளக் கூறல்

5. வழுச்சொற்கூறல் 6. மயங்கவைத்தல் 7. வெற்றெனத் தொடுத்தல் 8. மற்றொன்று விரித்தல் 9. சென்று தேய்ந்து இறுதல் 10. நின்றுபயன் இன்மை.

**நூலழகு பத்து:**

6. நூலில் அமைய வேண்டிய பத்து அழகுகள்: 1. சுருங்கச் சொல்லல் 2. விளங்கவைத்தல் 3. படிப்போர்க்கு இனிமை 4. நல்ல சொற்களையே பயன்படுத்தல் 5. ஓசை இனிமை உடைமை 6. ஆழமுடைத்தாதல் 7. வைப்புமுறை (சூத்திரம், இயல் வரிசை முறையமைப்பு) 8. உலகம் மலைக்காதபடி எழுதுதல் (எளிமை) 9. விழுமிய வற்றையே பயனாகத் தரும்படி எழுதுதல் 10. விளங்கும் வண்ணம் எடுத்துக்காட்டுகளை உடையதாதல்.

**32 உத்திகள்:**

7. உத்தித்திறன் என்பது நூலெழுதும் 'எழுத்துமுறை' பற்றிய திறமைகள்: 1. நுதலிப் புகுதல் 2. ஓத்து (இயல்) வைப்பு முறை 3. தொகுத்துரைத்தல் 4. தொகுத்ததை வகுத்து ரைத்தல் 5. தன் கருத்தை முடித்துக்காட்டில் 6. முடியுமிடம் முன்பே கூறுதல் 7. தானாக ஒன்றை எடுத்துமொழிதல் 8. பிறன் கருத்தை மேற்கோள் காட்டல் 9. சொல்லுக்குப் பொருள் விரித்தல் 10. தொடர்ச்சிகாட்டும் சொற்களை ஆளுதல் 11. இரட்டுற மொழிதல் (இரு பொருள்பட) 12. ஏதுக் காட்டி முடித்தல் 13. ஒப்புமை காட்டிமுடித்தல் 14. மாட்டேற்றுதல் ஒன்றற்குக் கூறியதைப் பின் வருவன வற்றுக்கும் ஏற்றுதல் 15. வழக்கொழிந்ததை விலக்கல் 16. புதியனவற்றை ஏற்றல் 17. முன்னே ஒன்றைச் சொல்லிவைத்தல் 18. பின்பு அதை நிறுவுதல் 19. முன்னதினின்றும் வேறுபட முடித்தல் 20. வேறுபடாது முன்னதின் படி முடித்தல் 21. உரைத்தும் (இனிமேல்) என்றல் 22. (முன்பே) உரைத்தாம் என்றல் 23. ஐயம் வந்துழிஒருபக்கம் துணிதல் 24. எடுத்துக்காட்டி நிறுவுதல் 25. தான் தொடங்கிய சொல்லின்படி முடிவெய்த வைத்தல் 26. இன்னது அல்ல இது; இது வேறு என முடித்தல் 27. சொல்லாததும் முடிவுபெறுமாறு கூறுதல் 28. பிறநூற் கருத்தைத் தானும் உடம்படுதல் 29. தன் 'குறி'வழக்கையே மிகுதியாக எடுத்துரைத்தல். 30. சொல் முடியுமிடத்தே பொருளும் முடியச்செய்தல் 31. இனமானவற்றை

ஒருசேரக் கூறுதல் 32. மறைமுகமானவற்றை உய்த்துணர வைத்தல்.

**8. உத்தி இன்னதென்பது:**

நூலின் உத்தி என்பது, நூல் கூறும் வழக்கை உலக வழக்குடன் பொருத்திக் காட்டி, ஏற்ற இடமறிந்து, இந்த இடத்தில் இவ்வாறு கூற வேண்டுமென, தக்க முறையில் நிறைவுற எழுதி முடிக்கும் திறமையேயாகும். இதனை 'எழுதும் திறன் ' என்றும் கூறலாம்.

**இயலும் படலமும்:**

*9.1* ஒரே வகை மணிகளை, ஓர் அணிகலனில் வரிசைப்படி பதிப்பதுபோல, ஒரே வகைக் கருத்துக்களை நிரல்பட வைப்பது ஓர் இயல் (ஓத்து) எனப்படும்.

*9.2* ஒரே வகையன்றிக் கலந்துவரும் பல கருத்தமைந்த இயல்களை ஓரிடத்தே தொகுத்துரைப்பது 'படலம்' ஆகும்.

**சூத்திரம் என்பது யாது?**

*9.3* சுருங்கிய சொற்களில், மிகுந்த பொருள்களை, கண்ணாடியில் பெரிய உருவத்தையும் உள்ளடக்கிக் காட்டுவதுபோல விளக்குவது; திட்பமும் நுட்பமும் சிறந்தது சூத்திரம்.

*9.3.1* சூத்திரங்கள் ஒரு நூலில் ஆற்றொழுக்குப் போலப் பொருள் தொடர்பு பட நிற்கும். சிங்க நோக்காக முன்னும் பின்னும் சென்று பொருள்தரும். தவளைப் பாய்ச்சல் போல, ஓரிரு நூற்பா இடையிட்டும் பொருள் தொடரும். பருந்தின் வீழ்ச்சிபோல, பல சூத்திரங்களுக்குப் பிறகு போயும் பொருள் தொடரும்.

*9.3.2* **சூத்திர வகைகள்:** தனியே நிற்பன பிண்ட சூத்திரம். தொகுத்துக் கூறுவன தொகைச் சூத்திரம். அதில் வருவன வற்றை ஒவ்வொன்றாகக் கூறுவன வகைச் சூத்திரம். பெயர் குறிப்பன குறிச் சூத்திரம் (இவை கருவிச் சூத்திரம் எனப்படும்). அவற்றைச் செயற்படுத்துவன செய்கைச் சூத்திரம். கூறியன கொண்டு கூறாதனவற்றையும் முடிப்பன புறனடைச்சூத்திரம்.

**உரைகளின் பொது இலக்கணம்:**

*10* 1. மூலபாடம் (சூத்திரம் பாட்டு) 2. கருத்து3. சொற்பிரிப்பு 4. சொற்பொருள் பதவுரை 5. தொகுத்துரை - பொழிப்புரை

6. உதாரணம் எடுத்துக்காட்டு 7. வினாக்கள் 8. அவற்றுக்கு விடைகள் 9. விசேடக் குறிப்புக்கள் 10. விரிவுரை 11. அதிகாரத் தொடர்புடைய பொருள் (அவ்வவ் அதிகாரத்துக்கு இயைபுபடவே பொருள் காணவேண்டும்) 12. ஐயமுள்ள இடத்தில் தெளிவுபடுத்தல் - இதற்கிதுவே பொருளெனல் 13. பயன் இதுவெனல் 14. முதனூல் ஆசிரிய வசனம் மேற்கோள் காட்டுதல். இவை பதினான்கும் உரை சொல்லும் நெறிகள்.

**காண்டிகை உரை:**

10.1 மூலபாடத்தின் 1. கருத்து 2. பதவுரை 3. எடுத்துக்காட்டு மூன்றுமேயாம். அவற்றுடன் வினாவிடை மூலம் சூத்திரத்தின் உட்பொருளை விளக்குவதும் காண்டிகை உரையாம்.

**விருத்தியுரை:**

10.2 சூத்திரத்துப் பொருளுடன், அங்கு இன்றியமையா அனைத்தையும் விளக்குவது. தன் உரையாலும் பிற நூல் மேற்கோள்களாலும் ஐயம் அகற்றுவது. முற் கூறிய காண்டிகை உரைக் கூறு ஐந்தும் கொண்டது.

**'நூல்'– எனும் பெயர்க்காரணம்**

11.1 புலவன்- நூல் நூற்கும் பெண். பஞ்சு -அவன் வார்த்தை. அதைக் கொண்டு இழைக்கும் இழையே நூல். இதற்குக் கைபோல வாயும் நூற்கும் கதிர் போல மதியும் உதவுகின்றன. பஞ்சு நூல் போறலின், படிக்கும் புத்தகமும் நூல் எனப்பட்டது உவம ஆகு பெயர்.

11.2 மரத்தின் வளைவை 'நூல்' மூலம் நேராகக் கட்டி, அறுத்து நேரிதாக ஆக்குவர். அதுபோல அறிவைப் பெருக்கித் தீமையை அழிக்க உதவும் நூல்களும் மக்களின் மனக் கோட்டத்தைத்தீர்த்துச் செவ்விதாக்கும்

**ஆசிரியராவார் யார் யார்?**

12. ஆசிரியனாக அமைய வேண்டிய தகுதிகள்: குலம், அருள், தெய்வ நம்பிக்கை, பெருமை, கலை பயிலவல்ல மனத் தெளிவு, எடுத்துரைக்கும் வன்மை - இவை வேண்டும்.

மேலும் நிலம் மலை நிறைகோல் (தராசு, துலாக்கோல்), மலர் போன்ற மாட்சிமை வேண்டும்.

*12.1* **நிலம்** அளத்தற்கரியது, திண்மை மிக்கது, அகழ்வாரைத் தாங்கும் பொறுமையுள்ளது, பருவம் முயற்சி அளவுக்கேற்ப விளைச்சல் தருவது- இவை நல்ல நிலத்தின் மாண்புகளாகும். ஓர் ஆசிரியனும் இவை போன்ற பண்பு நலன்கள் பெற்றிருக்க வேண்டும்.

*12.2* **மலை** அளக்கமுடியாதது; அளவற்ற பொருளுடையது, அசைக்க முடியாதது, அறிவால் தோற்றம் மிக்கது, வறட்சிக் காலத்தும் வளம்தருவது. ஓர் ஆசிரியனும் இது போன்ற இயல்புகள் பெற்றிருக்க வேண்டும்.

*12.3* **துலாக்கோல்** ஐயம் தீரப் பொருளின் எடையைக் காட்டும். தராசு முனை நடுவுநிலை உடையது. ஓராசிரியனும் இதுபோல் இருக்கவேண்டும்.

*12.4* **மலர்** - யாவரும் விரும்பும் இன்றியமையாத மங்கலப் பொருள். பொழுதொடு மலர்ந்து அனைவராலும் சூடிக் கொண்டு மகிழச்செய்வது. ஆசிரியனும் அவ்வாறாதல் வேண்டும்.

ஆசிரியராகத் தகுதியற்றவர் யார் யார்?

*13.* ஆசிரியராகத் தகுதியற்றவர்கள்: பாடஞ்சொல்லும் இயல் பின்மை, இழிகுணம் உடைமை, பொறாமையுடைமை, ஆசை வஞ்சம் அச்சம் உடைமை - இவர்கள் தகுதியற்றவர்கள்.

*14.* கழற்குடம், மடற்பனை, பருத்திக்குடம், முடத்தெங்கு போன்றவர்களும் தகுதியற்றவர்கள்.

*15.1* கழற்சிக்காய்கள் (சிறு உருண்டைக் காய்கள் ஒரு குடத்தில் போட்ட முறைப்படி வாரா;முறை மாறி வரும். கற்றதை நிரல்படச் சொல்ல முடியாதவர் ஆசிரியராகார்.

*15.2* மடற்பனை கருக்குள்ள மடல்களையுடைமையால், எளிதில் பயன்தரா; அது தானே உதிர்த்தால்தான் உண்டு. இவர் எளிதல் பயன்படாதவர்.

*15.3* பருத்திக் குடத்தில் பஞ்சைத் திணிப்பதும் கடினம். எடுப்பதும் கடினம். கற்கவும் இயலாதவர்; கற்றதைச் சொல்லவும் இயலாதவர் இவர்.

*15.4* முடத்தெங்கு - வீட்டுக்கு - தோட்டத்துக்கு வெளியே வளைந்து நீரூற்றியவர்க்கு ஆகாமல், யாருக்கோ பயன்படும்.

சிலர் வேண்டாதார்க்கே பயன்படுவர்; வழிபடுவோரை விட்டுவிடுவர்.

**பாடம் நடத்தும் நெறிமுறை**

*16.* காலம், இடம் செவ்விதாகப் பார்த்து, சிறப்புடன் அமர்ந்து, தெய்வத்தை வாழ்த்திப் பாடம் தொடங்க வேண்டும். முன்னதாக, நடத்தப்போகும் பாடப்பொருளை நன்கு படித்து மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். விரையாமலும் கோபப்படாமலும் விருப்பத்துடன் முகம் மலர்ந்து சொல்ல வேண்டும். பாடம் கேட்பவர்களது பாடத்தைக் கேட்டறியவல்ல தகுதியையும் பார்த்து, அவர்கள் மனங்கொள்ளுமாறு நடத்த வேண்டும். ஏழை, செல்வர் என மாணாக்கரிடையே வேறுபாடு காணாமல், நடுவு நிலைமையோடு கற்பிக்க வேண்டும்.

**மாணாக்கராகும் தகுதியுடையவர்கள் யார் யார்?**

*17.* குருகுல முறையில் முன்பு பாடம் சொல்லப்பட்டது. இதில் தன் மகன், தன் ஆசிரியனின் மகன், மன்னனது மகன், பொருள் மிகவும் கொடுப்பவன், வழிபாடு செய்யும் அன்புடையோன், சொல்வதைக் கேட்டுக் கொள்ளத் தக்க அறிவுள்ளவன் - இவர்கள் பாடங்கேட்கத் தகுதி யுடையவர்கள்.

*17.1* அன்னம், பசு (ஆ) போன்றவர்கள் தலை மாணாக்கர் மண்ணும் கிளியும் போன்றவர் இடை மாணாக்கர். ஓட்டைக் குடம் ஆடு எருமை நெய்யரிவடிகட்டி போன்றவர் கடை மாணாக்கர்.

அன்னம் பாலைப் பிரித்துப் பருகும். பசு புல்தின்று தின்றதை நன்கு அசைபோடும். தலை மாணாக்கர் இத்தகையர். இடைமாணாக்கர் நிலம் போல முயற்சி யளவு பயன் பெறுவர்; கிளிபோலச் சொல்லிக் கொடுத்ததைத் திரும்பச் சொல்வர்.

ஓட்டைக் குடம் நீரை ஒழுகவிட்டுவிடும். ஆடு பலவிடத்தும் போய் மேயும். எருமை நீரைக் கலக்கிச் சேற்றில் இன்பம் காணும். வடிகட்டி நெய்யை வடியவிட்டுக் கசடுகளை ஏற்றுக்கொள்ளும். கடை மாணாக்கர் இத்தகையர்.

**மாணாக்கராகத் தகுதியற்றவர்கள்**

*17.2* கட்குடியன், சோம்பேறி, காமுகன், கள்வன், நோயாளன், முயற்சியின்மையால் வறுமையுற்றவன், பிணக்கே பேசுபவன், சினம் மிக்கவன், தூங்குவது போல் எப்போதும் காணப்படுபவன், மந்தமான புத்தியினன், பழைய நூல்களைப் படிக்க அஞ்சித் தடுமாறுபவன், முரடன், பாவி, வஞ்சகன் - இவர்களுக்குக் கற்பித்தலாகாது.

**பாடம் கேட்டுப் படிக்கும் நெறிமுறைகள்**

*18.1* குறித்த சமயத்தில் போதல், வழிபடுதல், ஆசிரியரது இயல் பறிந்து பழகுதல், அவரது குறிப்பறிந்து நடத்தல், அவர் 'இரு' என அமர்ந்து, 'பாடம் சொல்' என்றதும் சொல்லுதல். வேட்கையால் நீரைப் பருகுவது போல, ஆர்வமுடன் பாடம் கேட்டல், சித்திரப் பாவைபோல் அடக்கமாக இருந்து, செவியே வாயாகவும் நெஞ்சே ஏற்றுக் கொள்ளும் களமாகவும் கொண்டு கற்றல் வேண்டும். வாய்க்கு வேலை இன்மை என்பது, பாடம் சொல்லும் போது பேசக் கூடாது என்பது. செவிக்கு வேலை மிகுதி. அது பருகுவது போல், கேட்க வேண்டும். கேட்டவை கேட்டவை யாவையும் ஒன்றுவிடாது உள்ளத்தில் பதியவைத்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர் 'போகலாம்' என்று குறிப்புக் காட்டிய பிறகே போதல் வேண்டும்.

*18.2* பாடம் கேட்பவன் உலக வழக்கை அறிந்திருக்க வேண்டும். மூலபாடத்தை மனப்பாடம் செய்யவேண்டும். ஆசிரியரிடம் கேட்டவற்றைப் பிறகு நினைத்துப் பார்த்துச் சிந்திக்க வேண்டும். ஐயம் வரின் ஆசானைச் சார்ந்து, ஐயம் தீரக் கேட்டறிய வேண்டும். தன்னைப் போன்ற நன் மாணவருடன் மட்டும் பலகாற் பழகுதல் வேண்டும். அவர்களுடன் வினவியும் அவர்கள் வினவினால் அவற்றுக்கு விடைகூறியும் பயிலுதலைக் கடமையாகக் கொள்ள வேண்டும். இதுவே நூல் கற்கும் நெறி முறையாகும்.

*18.2.1* ஒரு முறை கேட்டவன் இருமுறை கேட்டால், பெரிதும் பிழையின்றிப் படிக்கலாம்.

*18.2.2* மூன்று முறை கேட்பவன் தானே முறையறிந்து கூறுமளவு ஆற்றல் பெறுவான்.

*18.2.3* ஆசான் நடத்தியதை இவ்வாறு முழுவதும் கற்றாலும், புலமை என்பது காற்பகுதியே அமையும்.

*18.2.4* தன்னைப் போன்ற நன்மாணவருடன் பழகிப் பயிலும் போதுதான், இன்னொரு காற்பகுதி புலமை கிடைக்கும். தானே பிறர்க்குக் தான் கற்றதைச் செவ்விதாகச் சொல்லும் போதுதான், மீதமுள்ள அரைப்பகுதிப் புலமை கிடைக்கும்.

இன்று கருத்தரங்கில் கட்டுரை படிப்பவர் இவற்றை நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

**ஆசிரியருடன் மாணவர் பழகும் முறை**

*19.* குளிர் காய்பவன் நெருப்பை அணுகாமலும் மிகவும் அகலாமலும் இருப்பது போல் பழக வேண்டும். அச்சம் கூடாது; நிழல் போல் பின் தொடர்தல் வேண்டும். அன்பு நிறைந்த நெஞ்சத்துடன் ஆசிரியன் மனம் மகிழும்படி நடக்க வேண்டும். அறநெறியில் மாறுபடாது, பழகுவது வழிபாடாகும்.

**சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம்**

*20.* 1.ஆக்கியோன் பெயர் 2. நூல் வந்தவழி (அல்லது இன்னதுறை என்பது) 3. தமிழகம் முதலாக நூல் வழங்கும் எல்லை 4. நூற் பெயர் இன்னதென்பது 5. நூலின் வகை அல்லது கட்டமைப்பு 6. நூலில் கூறப்பட்டுள்ள பொருள் 7. நூல் யாருக்காக எழுதப்படுகிறது என்ற குறிப்பு 8. நூலால் பெறக் கூடிய பயன் - இவை எட்டும் தனி ஒரு நூலுக்குத் தரத்தகும் சிறப்புப் பாயிரம்-நூல் விவரக் குறிப்பு.

*20.1* நூல் எப்பொழுது, எவ்விடத்தில் , எக்காரணம் பற்றி எழுதப்பட்ட தென்பனவும் கூறப்படும். (பதிப்பு விவரம் இன்றும் சுட்டுகின்றோம்.)

**நூலுக்கு எவ்வெவ்வாறு பெயரிடுவர்?**

*21.* 1. முதனூலால் பெயரிடலாம் (வள்ளுவம்) 2. ஆசிரியன் பெயரே நூற்பெயராகலாம் (சேனா வரையம்) 3. அளவு (எண்ணிக்கை) பற்றிப் பெயரிடுவர் (புற நானூறு) 4. ஒரு நூலில் வரும் மிகுதியான செய்தி பற்றியும் பெயரிடுவர் 5. நூலை ஆக்க உதவிய புரவலர் பெயரை இடுவர் 6. தன்மையால் பெயரிடுவர் (அக்கினிச் சிறகுகள்) 7. இவை போல ஏதேனும் ஒரு காரணம் கருதியிடுவதால் இது

பலவகைப்படும். ஆத்திசூடி - முதற்சொல்லால் பெயரிடப் பட்டது. 8. வெறுமனே இடுகுறி அளவாய் வரும் பெயர்கள் அரிதாய் வரும். காரணம் தெரியாத பொழுது மட்டும் இவ்வாறு கூறுவர்.

**வழிநூல் வகைகள்**

22. 1. முன்னைய நூலினைச் சுருக்கி எழுதுதல் 2. விரித்து எழுதுதல் 3. சுருக்க வேண்டிய இடத்துச் சுருக்கி, விரிக்க வேண்டிய வழி விரித்து எழுதுதல் 4. மொழி பெயர்த்தல். இவை நான்கும் வழிநூல் வகைகள்.

23. **சிறப்புப் பாயிரத்தை யார்யார் எழுதலாம்?**

1. தன் ஆசிரியன் எழுதலாம் 2. உடன் பயின்ற வகுப்புத் தோழன் எழுதலாம் 3. தன் மாணாக்கன் எழுதலாம் 4. உரையாசிரியனும் எழுதலாம்.

23.1 **தானே 'தற்சிறப்புப் பாயிரமாக' எழுதிக்கொண்டால் என்ன?**

முன் இல்லாத ஒன்றைக் கண்டு, புதிய பல துறைகளைத் தோற்றுவித்து, ஒரு புதிய ஆய்வேடே எழுதினாலும், தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளுதல் தகுதியாகாது.

23.2. அவ்வாறெனில் 'தற்புகழ்ச்சி' அல்லது 'தற்சிறப்பைக்' கூறவே கூடாதா?

ஒருவன் தன் சிறப்புக்களைக் கூறவேண்டிய கட்டாயம் உலகியலில் சிலபோது ஏற்படும். அவை: அரசவையில் பரிசுபெற அனுப்பும் சீட்டுக்கவி (ஓலைத்தூக்கு). (மாகவி பாரதியாரே சீட்டுக்கவி எழுதியுள்ளதைப் படித்துப் பார்க்கலாம்). தன் அறிவாற்றலை அறியாதவர் முன் கூறுதல் தவறன்று. பெரியதோர் அவையில் - சொற்போர் விவாத மேடையில்- தற்சிறப்பை நவிலலாம். மாற்றார் தன்னைப் பழித்தவிடத்து எதிரி மறுத்துப் பெசும் போது தன் ஆற்றல்களை எடுத்துரைக்கலாம். புலமையாளர்க்கு இந்த இடங்களில் 'தற்சிறப்பை' மொழிதல் தகும்.

24. **எந்த ஒரு நூலுக்கும் பாயிரம் - அணிந்துரை, நூன்முகம், முகவுரை மிகமிக இன்றியமையாதது.**

ஒரு நூல் ஆயிரம் வகையால் சிறப்புடையதாயினும் இம் முன்னுரையாம் பாயிரம் இன்றேல் அது 'பனுவல்' (ஆய்வுநூல்) ஆகாது. சிறந்த நூல்களுக்கு முகவுரை வேண்டும்.

**24.1 அவ்வாறு 'பாயிரம்' இன்றியமையாது அமைதலின் காரணம் என்ன?**

மாடமாளிகைக்குச் சித்திரங்களின்றேல் அழகாக இராது. பெரிய நகரங்களுக்கும் கோயில்களுக்கும் நுழைவாயில் கோபுரங்களே அழகுதரும். அதனால் நூலை ஆராய்ந்து, அதன் முன்னதாக, அழகிய நுட்பவுரையாக, அணிந்துரையை, எந்த ஒரு நூற்கும் பெரிதும் இயைபுபட நம் பெரியோர் வைத்தனர்.

# நன்னூல்

## சிறப்புப்பாயிரம்

### இறைவன் திருவருள்

மலர்தலை உலகின் மல்குஇருள் அகல
இலகு ஒளி பரப்பி யாவையும் விளக்கும்
பரிதியின் ஒருதா னாகி, முதல்ஈறு
ஒப்பு அளவு ஆசை முனிவு இகந்து உயர்ந்த
அற்புத மூர்த்திதன் அலர்தரு தன்மையின்

### பதினெண் மொழிகளுள் ஒன்றாகிய முத்தமிழ்

மனஇருள் இரிய மாண்பொருள் முழுவதும்
முனிவு அற அருளிய மூஅறு மொழியுளும்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனும் நான்கு எல்லையின் இரும்தமிழ்க் கடலுள்

### ஐந்திலக்கணமும் தருக எனல்

அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணரத்
தொகைவகை விரியில் தருக என,

### சீயகங்கன் கேட்டுக்கொண்டமை

துன்னார்
இகல்அற நூறி, இருநிலம் முழுவதும்
தனது எனக் கோலித் தன்மத வாரணம்
திசைதொறும் நிறுவிய திறல்உறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோல் சீய கங்கன்

அருங்கலை வினோதன் அமர்ஆ பரணன்
மொழிந்தனன் ஆக,

**நூற்பெயர்** முன்னோர் நூலின்

வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்

**பவணந்தி முனிவன்**

பொன்மதில் சனகைச் சன்மதி முனிஅருள்
பன்னரும் சிறப்பிற் பவணந்தி
என்னும் நாமத்து இருந்தவத் தோனே!

**கொண்டு கூட்டு :**

பொன்மதில் சனகையில், சன்மதிமுனிபெற்ற, பவணந்தி என்னும் நாமத்துத் தவத்தோன், (இம்) மலர்தலை உலகின் பரிதியின் (சூரியனின்) ஒருதானாகிய, அற்புத மூர்த்தி தன் (அருளால்), மனஇருள் இரிய அருளிய மூஅறு (பதினெட்டு) மொழியுளும், நான்கு எல்லையின் (உட்பட்டு வழங்கும்) இரும் (பெரிய) தமிழ்க் கடலுள், (எழுத்து சொல் பொருள் யாப்பு அணி எனும்) அரும் பொருள் (இலக்கணம்) ஐந்தையும், யாவரும் உணர; இருநிலம் முழுவதும் தனதெனக் கோலி(ய) திருந்திய செங்கோல் சீயகங்கன் மொழிந்தனனாக, (கேட்டுக் கொண்டானாக) முன்னோர் நூலின் வழியே (மரபு வழிப்படி) நன்னூல் (என்னும்) பெயரின் வகுத்தனன்.

**தெளிவுரை :**

சனகாபுரியில் சன்மதி முனிவன் பெற்ற, சொல்லுதற்கு அரிய சிறப்பினையுடைய பவணந்தி என்னும் பெயரைக் கொண்ட தவத்தினன் இந்நூலை இயற்றினன்.

உலகின் புறஇருள் அகல ஒளிபரப்பி, அனைத்தையும் விளக்கும் ஞாயிற்றைப் போன்ற ஆதி அந்தம் இல்லாதவனும் தனக்கு ஒப்பில்லாதவனும் விருப்பு வெறுப்பற்றவனுமான அற்புத மூர்த்தியாகிய இறைவன் தனது அருளால் மன இருளை ஓட்டுமாறு அருளப் பெற்றவை பதினெட்டு மொழிகள். அவற்றில் இருபுறமும் கடல்களுடன் குமரி முதல் வேங்கடம் வரை விளங்கும் தமிழ்மொழியாகிய கடலுள், எழுத்து சொல்

பொருள் யாப்பு அணி எனும் ஐந்திலக்கணத்தையும் யாவரும் எளிதில் அறியுமாறு தருக என்றனன்ரே, பகைவரை அழித்து உலகம் முழுவதையும் தனது எனக் கொண்டவனும் தன் மத யானைகளை எட்டுத் திசைகளிலும் நிறுத்தியவனும் கழல் அணிந்து, வெண்கொற்றக் குடைக்கீழ் கார்மேகம் போன்ற வண்கையுடன் விளங்குபவனும் திருந்திய செங்கோலும் அரிய கலைகளில் ஆர்வமும் போரை அணிகலனாக ஏற்கும் வீரமும் உடையவனுமான சீயகங்கள் இவ்வாறு கேட்டுக் கொண்டானாக, முன்னையோர்தம் மரபுவழிப்படி **'நன்னூல்'** என்னும் பெயருடன் இந்நூலைப் படைத்தனன்.

**சிறப்புக் குறிப்பு :**

ஒவ்வொரு நூலுக்கும் தனியே, அந்நூலின் பெயர், எழுதிய ஆசிரியன் பெயர், நூலெழுதிய காரணம், நூலினுள் நுவலப்படும் பொருள், நூல் எழுத ஆதரித்த புரவலன் பெயர், நூலினது வழக்கிற்குரிய நாட்டு எல்லை போல்வனவற்றைக் கூறுவது சிறப்புப் பாயிரம். இதனை நூலாசிரியனே கூறினால், அது தற்சிறப்புப் பாயிரம். ஆசிரியனுக்கு நெருக்கமான, பிறர் ஒருவர் எழுதினால் சிறப்புப் பாயிரம்.

இன்றைய நூல்களுள் 'நூல்பற்றிய விவரம் தருதல்', நூலாசிரியனின் தன்விவரக் குறிப்பு, அதனையே பிறர் கூற்றாகத் தருவது அனைத்தும் இதில் அடங்கும்.

பொதுப்பாயிர இலக்கணப்படி இதன் விவரம் : ஆசிரியன் பெயர் - பவணந்தி முனிவன். வழி - முன்னோர் மரபுவழி. எல்லை - வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட தமிழகம். நூற்பெயர் - நன்னூல். யாப்பு - தொகை வகை விரியாக எழுதியுள்ளமை.

நுதலிய பொருள் - எழுத்து சொல் (பொருள் யாப்பு அணி).

கேட்போர் - முற்கூறிய தமிழக மாணாக்கர்.

பயன் - எளிமையால் யாவரும் அறிதல்

காலம் - சீயகங்கன் காலம் (கங்கநாட்டரசன்) கி.பி.13ஆம் நூற்றாண்டு

களம் - அவனது அவைக்களம்

காரணம் - யாவரும் அறியத் தருக என அவன் கேட்டமை.

## பொதுப் பாயிரம்

ஒரு நூலைத் தொடங்கும் முன் அல்லது முற்காலக் குருகுல முறைப்படி ஆசான் ஒரு பாடத்தைச் சொல்லித்தரத் தொடங்கும் முன் நினைவில் வைக்குமாறு விளக்குகிற முன்னுரைகளே பாயிரம் எனப்பட்டன. இக்காலத்துக் கல்வி கற்கும் நெறிமுறைகளும் (பி.எட். எனக் கற்பன), ஆராய்ச்சி நெறிகளும், அவற்றை அதாவது ஓர் ஆய்வுநூலை எழுதும் முறைகளும் இப் பகுதியில் விளக்கப்படுகின்றன. இக் கருத்துக்கள் தொல்காப்பிய உரைகள் தொடங்கிப் பல நூல்களிலும் காணப்படுகின்றன. நன்னூலில் இவை நிரல்படத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**1 முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்**
**புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம் 1**

முகவுரை - நூலுக்கு முகம்போல அமைவது. இன்று முன்னுரை என்றும் கூறப்படும். பதிகம் - பெரிதும் நூலின் இறுதியில், நூல் தொடர்பான செய்திகளைத் தருவது. அணிந்துரை - நூலின் நலங்களை நவில்வது. நூன்முகம் - நூலுடன் நெருக்கமான தொடர்புடையது. புறவுரை - நூலில் இல்லாதவற்றை விவரிப்பது. தந்துரை - நூலுக்கு மேலும் தேவைப்படுவனவற்றை, துணையாகத் தந்துரைப்பது. புனைந்துரை - கற்பனையாக அழகுபட அமையும் அணிந்துரை இது. இவை யாவும் பாயிரம் என்பதன் வளர்ச்சிகளாகும்.

## பாயிரம் இருவகைப்படும்

**2 பாயிரம் பொது, சிறப் பென இரு பாற்றே 2**

பொது - நூல் எழுதுவோர், கற்போர், பாடம் சொல்வோர் அனைவர்க்கும் பொதுவானவற்றை விளக்குவது. சிறப்பு - தனி ஒரு நூல் பற்றியது.

## பொதுப்பாயிரத்தில் ஐந்து கூறுகள் கருதப்பட வேண்டும்

**3 நூலே நுவல்வோன் நுவலுந் திறனே**
**கொள்வோன் கோடற் கூற்றாம் ஐந்தும்**
**எல்லா நூற்கும் இவைபொதுப் பாயிரம்** 3

ஆசிரியர் பாடம் சொல்ல, மாணவர் அதைக் கேட்டுப் பயில்கின்றார். நூல் - பாடம் சொல்லும் நூல் எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது. நுவல்வோன் - பாடம் சொல்லும் ஆசிரியனது இலக்கணம். (நுவலுதல் - வாயாற் சொல்லுதல்). நுவலும் திறம் - பாடம் சொல்லும் திறமை. கொள்வோன் - பாடத்தைக் கேட்டுக் கொள்பவனது பண்புகள். கோடற்கூற்று - பாடம் கேட்டுப் படிக்கும் நெறிமுறைகள். இவை எல்லாப் பாடநூலுக்கும் உரியவை.

## ஒரு நூல் எங்ஙனம் அமைய வேண்டும் - இலக்கண நூல் எழுதும் நெறிமுறை

**4 நூலின் இயல்பே நுவலின், ஓரிரு**
**பாயிரம் தோற்றி, மும்மையின் ஒன்றாய்,**
**நாற்பொருட் பயத்தோடு, எழுமதம் தழுவி,**
**ஐயிரு குற்றமும் அகற்றி,அம் மாட்சியோடு**
**எண்ணான் குஉத்தியின் ஓத்து, படலம்,**
**என்னும் உறுப்பினில் சூத்திரம் காண்டிகை**
**விருத்தி ஆகும்; விகற்பநடை பெறுமே** 4

நூலின் இயல்புகளாவன : பொது, சிறப்புப் பாயிரத்தில் தொடங்க வேண்டும். முதல் வழி சார்பு எனும் நூல்வகை மூன்றில் ஒன்றாய் அமைதல் வேண்டும். அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கு உறுதிப் பொருளையும் பயத்தல் வேண்டும். மதம் என்பது நூல் எழுதும் ஆசிரியனது கொள்கை அல்லது அவன் கைக்கொள்ளும் நூல் எழுதுவதற்கான கோட்பாடுகள். அது ஏழு வகைப்படும். பத்துவகை நூற் குற்றமும் நீக்கி, பத்துவகை அழகு பொருந்த எழுதவேண்டும்.

முப்பத்து இரண்டு உத்திகள் என்பன நூலுள் அமையும் 'எழுத்து நடைமுறைகள்'. ஓத்து - இயல், சிறுபிரிவு. படலம் - பெரும் பிரிவு. சூத்திரம் எனும் நூற்பாவால் எழுதப்படும். அதை விளக்கும் உரைகள் காண்டிகை உரை (சுருக்கமானது), விருத்தியுரை (விரிவானது) என இருவகைப்படும். பயம் - பயன். மதம் - கொள்கை. அம்மாட்சி - அதேபோன்று பத்து அழகு. உத்தி - நூல் எழுதும் சிறுசிறு திறன்கள். விகற்பநடை - வெவ்வேறு நடைகள். முன்பு 'நூல்' - என்றால் இலக்கண நூலை மட்டும் குறிக்கும். நூற்பா - சூத்திரம். முன்பு உரைகள் வாயினால் பாடம் சொல்லி உரைக்கப்பட்டதால் அப்பெயர் பெற்றன.

## மூன்றுவகை நூல்கள்

5 **முதல்வழி சார்புஎன நூல் மூன்றாகும்** 5

நூல் முதல்நூல், வழிநூல், சார்புநூல் என மூன்று வகைப்படும். இன்று சிலப்பதிகாரம் முதல்நூல் என்றால், அது பற்றிய ஆய்வுகளை வழிநூல்கள் எனலாம்.

## 'முதல்நூல்' என்பதன் இலக்கணம்

6 **அவற்றுள்,**
**வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**
**முனைவன் கண்டது முதல்நூ லாகும்** 6

நல்வினை தீவினைகளினின்றும் நீங்கி விளங்குபவன் இறைவன். விளங்கிய அறிவினையுடைய அம் முனைவனாம் முதல்வன் செய்தது முதல்நூல் ஆகும். இன்று முதன்முதலாகப் புதிய உண்மைகள் கண்டு எழுதுபவரையும் முனைவர் எனக் குறிக்கின்றோம். இறைமைப் பண்பு மிக்காரையும் இறைவன் எனக் கொள்வதே தக்கது.

## 'வழிநூல்' இலக்கணம்

7 **முன்னோர் நூலின் முடிபுஒருங்கு ஒத்து**
**பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி**
**அழியா மரபினது வழிநூ லாகும்** 7

முன்னோர் நூல் - தமக்கு முன்பு முதல்நூல் எழுதியவர்கள். இதனால் இறைவனேயன்றி, முன்னையோர் எழுதியனவும் முதனூலாகும் என அறியலாம். அந் நூல்களின் முடிபுகளுடன் ஒத்துப்போக வேண்டும். முரண்படாது, பின் வருபவன் தான் விரும்பும் வேறுபாடுகளை, மரபு வளர்ச்சியாகக் கூறலாம். மரபுவழி அழியாது காப்பது எதுவோ, அதுவே வழிநூலாகும்.

## சார்புநூல் இலக்கணம்

8 **இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கி**
**திரிபுவேறு உடையது புடைநூ லாகும்** 8

முதல்நூல், வழிநூல் எழுதியவரின் பொருள் முடிபுகட்கு, ஒருபுடை ஒத்தும், பிறவனைத்தும் வேறுபட அமைந்தும் எழுதப்படுவது சார்பு நூலாகும். ஒறுசிறை - ஒரு பக்கம், ஒரு சிறிது. திரிபு-கருத்துக்கள் வேறுபடுவது. புடைநூல்-சார்புநூல்.

## வழிநூல்கள் முதல்நூலைப் போற்ற வேண்டிய முறை

9 **முன்னோர் மொழிபொருளே அன்றி அவர்மொழியும்**
**பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கும் -**
**முன்னோரின்**
**வேறுநூல் செய்துமெனும் மேற்கோள்இல் என்பதற்கும்**
**கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்** 9

வழிநூல் செய்வோர் முன்னோர் நூல்களிலிருந்து மேற்கோள் காட்டவேண்டும். முன்னோர் கருத்தை மட்டுமன்றி, அவர்தம் 'நூற்பாக்களை'யும் ஆங்காங்கு, அப்படியே எடுத்தாள

வேண்டும். அடிமரமின்றிக் கிளை மரமில்லை. முன்னோர் நூல் வழிப்பட்டதே, தம் நூலென்பதை மறவாது நன்றி செலுத்தும் முறை இது.

முன்னோர் மொழிந்த பொருளை மட்டுமல்லாமல், அவர்தம் சொற்களையும் பொன்னேபோல் போற்றுவோம் என்பதை அறிவிப்பதற்காகவும், அவர் நூலைப் பின்பற்றியதைக் காட்டுமாறு, அதிலிருந்து மேற்கோள் காட்ட வில்லையென்ற குற்றம் ஏற்படாதிருக்கவும், அப்பழைய சூத்திரங்கள் சிலவற்றை, உன்வழிநூலில் எடுத்துக் கூறுவாயாக!

## நூலின் முடிவான பயன்

10 **அறம்பொருள் இன்பம்வீடு அடைதல்நூற் பயனே** 10

நூல்களினால் மானுட விழுமியங்களாம் அறம்பொருள் இன்பத்துடன் வீடுபேறும் அடைதலே, அவற்றின் முடிந்த பயனாகும். இலக்கண நூலுக்கும் இது பொருந்தும்.

## நூல் எழுதுவோர் பின்பற்றும் ஏழுவகைக் கோட்பாடுகள்

11 **எழுவகை மதமே உடன்படல், மறுத்தல்,**
**பிறர்தம் மதம்மேற் கொண்டு களைவே,**
**தாஅ னாட்டித் தனாது நிறுப்பே,**
**இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே,**
**பிறர்நூற் குற்றம் காட்டல், ஏனைப்**
**பிறிதொரு படாஅன் தன்மதம் கொளலே** 11

நூல் எழுதுவோர் பிறர் கொள்கையை ஏற்று எழுதுதல்; மறுத்து எழுதுதல்; பிறரின் கோட்பாட்டில் ஏற்கக் கூடியதை ஏற்று மற்றவற்றை மறுத்தல்; தானாக ஒரு கோட்பாட்டை. நிறுவி அதனையே இறுதிவரை நிலைநிறுத்தல்; இரண்டுபேர் தமக்குள் மாறுபடுமிடங்களில் ஒரு பக்கமாகத் துணிதல்; பிறர் நூல்களிலுள்ள குற்றங்களை எடுத்துரைத்தல், பிறர்

கோட்பாட்டை ஏற்காது மறுத்துத் தன்னுடைய கொள்கையையே நிலை நாட்டுதல். இவை ஏழும் நூலெழுதுவோர் பின்பற்றுவன. மதம் - கொள்கை, கோட்பாடு, கருத்து. களைதல் - மறுத்து நீக்குதல். ஒருதலை துணிதல் - இரண்டில் ஒன்றைத் துணிதல்.

## நூலில் வரத் தகாத பத்துக் குற்றங்கள்

**12 குன்றக் கூறல் மிகைபடக் கூறல்**
**கூறியது கூறல் மாறுகொளக் கூறல்**
**வழூஉசொல் புணர்த்தல் மயங்க வைத்தல்**
**வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்**
**சென்றுதேய்ந்து இறுதல் நின்றுபயன் இன்மை**
**என்றுஇவை ஈரைங் குற்றம் நூற்கே** 12

இன்றைய எழுத்தாளர், ஆய்வாளர், பேச்சாளர்களிடம் நிரம்பக் காணப்படும் குற்றங்கள் இவை. முன்பு இக் குற்றங்கள் வராமல் கருதிக்கருதி. பார்த்துப்பார்த்து எழுதியதாலேயே அவை நிலைபெற்றன.

1. விளக்க வேண்டிய அளவு விளக்காமல், குறைவாகக் கூறுதல் 2. விளக்க வேண்டியதற்கு மேலே மிகுதிப்படக் கூறுதல் 3. முன்பு கூறியதையே பின்பும் கூறுதல் 4. முன் எழுதியதற்கு மாறுபடப் பின்னே எழுதுதல் அல்லது கூறுதல் 5. வழுப்பட்ட கொச்சைச் சொற்களை இடையே சேர்த்துவிடுதல் 6. இதுவோ அதுவோ என மயங்கும்படி செய்தல் 7. ஒரு பொருளுமின்றி வெறுமனே நீட்டிக் கொண்டு போதல் 8. சொல்லவந்ததை இடையிலே விட்டுவிட்டு மற்றொன்றை விவரித்துக்கொண்டு போதல் 9. விறுவிறுப்பாய்த் தொடங்கி இறுதியில் அது படிப்படியாய்க் குறைந்து, 'சப்'பென்று முடித்தல் 10. நிலைத்த பயனின்றிப்போதல். இவை படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் சலிப்பையும் வெறுப்பையும் ஏற்படுத்தும். நூல் என்றால் முன்பு இலக்கண நூலையே குறித்தாலும், இன்று ஆய்வேடுகளுக்கு (M.Phil; Ph.D.,) இவை மிகவும் பொருந்தும்.

## நூலில் அமைய வேண்டிய பத்து அழகுகள்

13 சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலகம்மலை யாமை
விழுமியது பயத்தல் விளங்குஉ தாரணத்தது
ஆகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே 13

1. எதனையும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும் 2. அங்ஙனம் சுருக்கமாகச் சொன்னாலும் விளங்கும்படி சொல்ல வேண்டும். சுருங்கச் சொன்னதால் விளங்காமற் போய்விடக் கூடாது. 3. கேட்போர்க்கும் படிப்போர்க்கும் இனிமை தர வேண்டும். (நவிலுதல் - வாயால் சொல்லிப் படித்தல்) 4. நல்ல சொற்களையே பயன்படுத்த வேண்டும். சொல்லழகும் செறிவும் இனிமையும் வேண்டும் 5. பாடலாயின் சந்த இனிமை; உரைநடையாயின் நடைச் சிறப்பு 6. கருத்துக்கள் ஆழமுடையவையாய் அமைய வேண்டும். 7. நூல் முழுதும் 'முறைவைப்பு' இருக்க வேண்டும். படலம், இயல்கள், அவற்றுள்ளும் ஒரு வைப்புமுறை வேண்டும். தொல்காப்பியம், நன்னூல், திருக்குறள் போலும் பழந்தமிழ் நூல்களில் இவ் வைப்புமுறையைத் தெளிவாகக் காணலாம். மேனாட்டார் இதை 'இயைபுடைமை' (Sequence) என்பர். 8. உலகம் மலைக்கும் படியும் திகைக்கும்படியும் எழுதுவது அதாவது உலகியலுக்கு மாறுபட எழுதுவது கூடாது. 9. எழுத்துக்கலை மானுட விழுமியங்களைக் காத்துப் போற்றும்படி இருக்க வேண்டும். 10. நன்கு விளங்கும்படியான எடுத்துக் காட்டுக்களுடன் அமைதல் வேண்டும்.

இவை யாவும் எவ்வகை ஆய்வுரைக்கும் இன்றும் பொருந்தும்.

## ஒரு நூலை எழுதும் பொழுது பின்பற்றக் கூடிய முப்பத்து இரண்டு உத்தித்திறன்கள்

14. 1. நுதலிப் புகுதல் 2. ஓத்துமுறை வைப்பே
3. தொகுத்துச் சுட்டல் 4. வகுத்துக் காட்டல்

5. முடித்துக் காட்டல் 6. முடிவிடங்கூறல்
7. தான்எடுத்து மொழிதல் 8. பிறன்கோள் கூறல்
9.சொற்பொருள் விரித்தல் 10. தொடர்ச்சொற் புணர்த்தல்
11. இரட்டுற மொழிதல் 12. ஏதுவின் முடித்தல்
13. ஒப்பின் முடித்தல் 14. மாட்டெறிந்து ஒழுகல்
15. இறந்தது விலக்கல் 16. எதிரது போற்றல்
17. முன்மொழிந்து கோடல் 18. பின்னது நிறுத்தல்
19. விகற்பத்தின் முடித்தல் 20. முடிந்தது முடித்தல்
21. உரைத்தும் என்றல் 22. உரைத்தாம் என்றல்
23. ஒருதலை துணிதல் 24. எடுத்துக் காட்டல்
25. எடுத்த மொழியின் எய்த வைத்தல்
26. இன்ன தல்லது இதுவென மொழிதல்
27. எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்
28. பிறநூன் முடிந்தது தானுடம் படுதல்
29. தன்குறி வழக்கம் மிகவெடுத் துரைத்தல்
30. சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்
31. ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல்
32. உய்த்துணர வைப்புஎன உத்திஎண் ணான்கே

14

எழுத்தாளனின் எழுத்துநுட்பத் திறனே உத்தி. அவன் எழுதும் முறை அது. இம் முறைநெறிகள் கணக்கிலடங்கா. ஆளுக்கு ஆள் வேறுபடலாம். பொதுவானவை, அவரவர்க்குரியவை என இரு வகையாகப் பிரிக்கலாம். இவற்றுட்சில எழுவகை மதத்திலும் பத்தழகிலும் காணப்படுவனவே.

தமிழில் தொல்காப்பியப் பிற்சேர்க்கை தொட்டு, உரையாசிரியர் வரை கூறப்படுவனவற்றுள் சிற்சில வேறுபாடுண்டு. இங்கு நன்னூலிற் கூறப்படுவன 32 வருமாறு :

1) இன்னதைச் சொல்லப் போகிறேன் என முதலிற் கூறித் தொடங்குதல் 2) இயல் வைப்பு முறையை வரிசைப்படி, ஒன்றற்கொன்று இயைபுபட வைத்தல். இன்ன தலைப்புக்குப் பின் இன்னது வரவேண்டுமெனத் திட்டமிட்டு அமைப்பது இது. 3) செய்யுளுறுப்பு 34 என்பது தொகுத்துச்சுட்டல் 4) அதை அவ்வரிசைப்படி நிரலே கூறிப்போவது வகுத்துக்

காட்டல். 5) முன்னையோர் கூற்றுப்படி இது அமைகிறது என முடித்துக் காட்டுதல் 6) அவ்வாறு முடியுமிடம் முன்னூல்களில் இருக்குமிடத்தைச் சுட்டிக் காட்டுதல் (இக்கால அடிக்குறிப்புப் போல்வன இவை) 7) தன் கருத்தைக் கூறுதல் 8) பிறன் கருத்தைக் கூறுதல் 9) சொல்லின் பொருளை விளக்குதல் (வனப்பு - உறுப்புக்கள் அனைத்தும் திரண்டவழிப் பெறுவதோர் அழகு என்பது போல) 10) தொடர்கட்டுரை, கதைபோலத் தொடர்பு படுத்திக் காட்டி எழுதுதல் 11) இருபொருள்பட எழுதுதல் 12) காரணம் காட்டி ஒன்றை நிறுவுதல் 13) ஒன்றற்கொன்று ஒப்புமையுடையவற்றை ஒப்பிட்டு முடித்தல் 14) ஒன்றற்குக் கூறிய இலக்கணம் பின்வருவனவற்றில், இவ்விவற்றிற்குப் பொருந்துமென மாட்டெறிதல் (அதுவும் அற்றே என முடித்தல்) 15) காலத்தால் மறைந்து போனதை விலக்குதல் 16) புதிதாக வந்த வழக்காறுகளை ஏற்றுப் போற்றுதல் 17) முன்னே ஒரு கருத்தையோ - குறியீட்டையோ சொல்லிவைத்து 18) பின்பு அதையே விளக்கி நிறுவுதல் 19) வேறுவேறாகப் பிரித்து எழுதி 20) பிறகு ஒருவழித் தொகுத்து முடித்தல் 21) பின்பு விளக்கப்படும் எனக் கூறுதல் 22) முன்பே சொன்னதை நினைவுபடுத்தல் 23) இரு கருத்து வரின் அதில் ஒன்றைத் துணிதல், 24) தன் கூற்றுக்கு எடுத்துக்காட்டுத் தந்து நிறுவுதல் 25) தான் சொன்னதிலேயே, சொன்ன முறையால் ஓர் இலக்கண விதியும் அறிய வைத்தல் 26) ஐயம் ஏற்பட்டவிடத்து இன்னது அல்ல இது என விளக்கி ஐயம் தீர்த்தல் 27) சொல்லாது எஞ்சிய - விடப்பட்ட இலக்கணத்தைச் (கருத்தை) சொன்னது கொண்டு விளங்கவைத்தல் 28) பிற நூல்களில் கூறப்பட்ட வற்றைத் தானும் உடம்படுவதாகக் கூறுதல் 29) தான் குறிப்பிட்ட குறியீடு ஒன்றை மிகுதியாக அடிக்கடி எடுத்தாளுதல் 30) ஒன்றைச் சொல்லி முடிக்கும்போது அதனுடனேயே அதன் பொருளையும் முடித்துவிடுதல் 31) ஒற்றுமைப்பட்ட வற்றையும் இனமானவற்றையும் ஒரே இடத்தில் கூறிமுடித்தல் 32) ஒன்றை வெளிப்படக் கூறாமல் உய்த்துணரும்படி, பொருள் பொதிய எழுதுதல்.

இவை பெரிதும் இலக்கண நூல்கள், ஆய்வு நூல்களுக்கும் உரியன. இவற்றுள் சிலவோ, பலவோ பின்பற்றப் படல் கூடும். இன்றைய ஆய்வேடு எழுதும் முறைகளுடன் (Thesis Writing) மதம், குற்றம், அழகு, உத்தி போன்றவற்றை ஒப்பிட்டுக் கற்றால், வியப்படைவீர்கள். உரையிற் கோடல், மொழிந்ததோடு மொழியாததனையும் முடித்தல், உடம்பொடு புணர்த்தல், ஏற்புழிக் கோடல் என உத்தி வகைகளை மேன்மேலும் விரித்துக் கூறலாம். ஓர் உத்திக்குச் சொல்லப்படும் விளக்கம்கூட வேறுவேறாக அமையும் வாய்ப்புளது.

## உத்தி - திறன் இன்னதென்பது

**15 நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி**
**ஏற்புழி அறிந்து இதற்கு இவ்வகை யாம்எனத்**
**தகும்வகை செலுத்துதல் தந்திர உத்தி** 15

தந்திரம் - நூல். உத்தி - எழுதுந்திறன். ஒரு நூலின் பொருளை உலகவழக்கு இலக்கிய வழக்கு இரண்டுடனும் பொருந்தும்படி அமைத்து, இதற்கு இவ்வாறு எழுதவேண்டுமென ஏற்புடைய வழியை அறிந்து, தக்க வகையில் எழுதி முடிப்பதே நூலெழுதுவதற்கான உத்தியாகும்.

## ஒத்து அல்லது இயல் இன்னதென்பது

**16 நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு**
**ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது**
**ஒத்துஎன மொழிப உயர்மொழிப் புலவர்** 16

ஒரே இனமான மாணிக்கக் கற்களை, வரிசைப்பட ஓர் அணிகலனில் பதிப்பதுபோல, ஒருவகைப்பட்ட பொருள்களை, ஓரிடத்துத் தொகுத்துரைப்பது 'ஒத்து' (இயல்) எனப்படும் என்று, உயர்ந்த மொழிப்புலமைமிக்க புலவர் கூறுவர். ஓதப்படுவது ஒத்து. நூலின் சிறுபிரிவு இது.

நோக்கம்) என்பது, ஒரு நூற்பாப் பொருள் முன்னும் பின்னுமாய்க் கூட்டிப் பொருள்கொள்ள அமைவது. ஒரு கருத்தையே ஒவ்வொரு நூற்பா இடைவிட்டுப் பொருள்காண வைப்பது தவளைப் பாய்த்து. வானத்திலிருந்து நேரே பாய்ந்து தரையிலுள்ள பொருளைக் கவ்வும் பருந்துபோல, ஒரு நூற்பா நீண்ட இடைவெளிக்குப் பிறகுவரும் நூற்பாவோடு கருத்துத் தொடர்பு படுவது பருந்தின் வீழ்வு.

இன்றும் முதற்பக்கத்திற் குறித்த கருத்தொன்று, நூற்று நான்காம் பக்கத்துக் கருத்தொன்றுடன் தொடர்புபடுவது உண்டல்லவா?

## காரணவகையால் சூத்திரங்கட்குப் பெயர்குறித்தல்

**20 பிண்டம் தொகைவகை குறியே செய்கை**
**கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம் 20**

குறிச்சூத்திரம் என்பது இது பெயர், இது வினை எனப் பெயர்க் குறியீட்டை அறிவிப்பது. செய்கைச் சூத்திரம் என்பது இவ்வாறு குறியிட்டவற்றை - அறிவித்தவற்றைச் செயற்படுமாறு கூறுவது. இதனைக் கருவியும் செய்கையும் என்பர். இன்று ஆங்கிலத்தில் 'கொள்கையும் செய்கையும்' (Theory and practice) என்பது போல்வது அது. தொகுத்துச் சொல்லிப் பின்பு ஒவ்வொன்றாக வகுத்துச் சொல்வதால், அவை தொகைச் சூத்திரம், வகைச் சூத்திரம் எனப்படும். 'பன்னிரு பாற்றதுவே' என்பது தொகைச் சூத்திரம். எண், பெயர் பற்றி ஒவ்வொன்றையும் பிறகு விளக்குவன வகைச் சூத்திரம். பிண்டச் சூத்திரம் தனித்து நிற்கும்; அதன் பொருள் அதிலேயே முடிந்துவிடும். புறனடைச் சூத்திரம் இயல், படல இறுதியில் கூறியன கொண்டு கூறாதனவும் கொள்ள வைப்பது. கூறிய இலக்கணங்களுள் அடங்காதன, புறனடை என ஏற்கப்படும் இடங்கள் உண்டு.

## உரைகளின் பொது இலக்கணம்

**21 பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்**
**தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்**
**விரிவுஅதிகாரம் துணிவு பயனோடு**
**ஆசிரிய வசனம்என்று ஈரேழ் உரையே 21**

முன்பு குருகுல முறையில் ஓராசிரியன் அமர்ந்து, தன் மாணவர்களுக்குத் தன் வாயால் பாடம் சொல்வான். பனை ஏடுகள் அரிதாகவே இருக்கும். வாயால் உரைத்துப் பாடம் நடத்துவதால், இவை 'உரை' எனப்பட்டன. இவ்வாறே ஒருவரிடம் பாடம் கேட்டவன், பிறகு மற்றவர்க்குப் பாடம் சொல்வான். ஏடுகள் குறைவாக இருந்ததால், வாய்மொழி மரபாகவே பாடம் கூறும் உரைமரபு பரம்பரைகளுக்குத் தொடரும். வாய்மொழியாக 'உரை'க்கப்பட்டு வந்தனவே, பின்பு ஒருகாலத்தில் ஏடுகளில் எழுதிவைக்கப்பட்டன. பாடம் என்பது மட்டுமே 'மூலபாடம்' (Text). அது முதலில் மனப்பாடமாகும். ஆசிரியர் பலர் மூலபாடம் சொல்லி, உரை கூறி விளக்கிப் பாடம் நடத்திய மரபுவழி வந்தனவே, பிற்பாடு பல உரைகளாயின. இவ்வகையில், இளம்பூரணர் உரை என்றால், அது ஒரு பரம்பரையினர் சொல்லி வந்து, பிறகு அவரால் எழுதப்பட்டது. 'என்னுதலிற்றோ எனின்', 'இன்னது நுதலிற்று', 'நன்கு கடாயினாய்', அதற்கது உரையன்று என மறுக்க' - இச்சொல் நடைகளே வாய்மொழி மரபை உணர்த்தும்.

1) மூலபாடம் சொல்லுதல் 2) அதன் கருத்து இதுவெனல் 3) சொற்களைப் பிரித்துக் காட்டுதல் 4) சொற்களுக்குப் பொருள் கூறுதல் (பதவுரை) 5) பொழிப்புரையாகக் கூறுதல் 6) எடுத்துக்காட்டுத் தருதல் 7) தாமே வினா ஒன்றை எழுப்புதலும் மாணாக்கர் வினவுதலும் 8) அவ்வினாவிற்கு விடை கூறி ஐயம் அகற்றுதல் 9) விசேடம் - முக்கியமானவற்றுக்கு விசேடவுரை கூறுதல் 10) விரிவு - விளக்கவுரை கூறுதல் 11) அதிகாரம் - அதிகாரத்திற்கு இயைபுபட விளக்குதல். நூற்பா மிகச் சுருக்கமாக இருத்தலால், அதிகாரத்தை நோக்கி விளக்க வேண்டியவை பலவாகும். 12) ஐயம் அகற்றி 'இதற்கு இதுவே பொருந்தும்' என நிறுவுதல் 13) பயன் - இவ்வாறு கூறியதன்

பயன் இதுவெனச் சுட்டிக் காட்டுதல் 14) வேண்டுமிடங்களில் 'ஆசிரிய வசனம்' என்று, மேற்கோள் காட்டுதல்.

இவ் உரைக்கூறுகள் பதினான்கனுள் அனைத்தும் வருவனவும் உண்டு; சிற்சில விடுபடுதலும் உண்டு.

## காண்டிகையுரையின் இலக்கணம்

**22 கருத்து, பதப்பொருள், காட்டு மூன்றினும்**
**அவற்றொடு வினாவிடை ஆக்க லானும்**
**சூத்திரத் துட்பொருள் தோற்றுவ காண்டிகை** 22

மூலபாடம் கூறியபின், கருத்துரை, பதவுரை, எடுத்துக்காட்டு மூன்றும் வருவது காண்டிகையுரை. தேவைப்படுமிடங்களில் வினாவிடையாக விளக்கம் தரப்படும். இவ்வாறு ஐந்து விதமாகச் சூத்திரத்தின் உட்பொருளை விளக்குவன காண்டிகை உரை.

## விருத்தியுரையின் இலக்கணம்

**23 சூத்திரத் துட்பொருள் அன்றியும் ஆண்டைக்கு**
**இன்றி யமையா யாவையும் விளங்கத்**
**தன்னுரை யானும் பிறநூ லானும்**
**ஐயம் அகலஐங் காண்டிகை உறுப்பொடு**
**மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி** 23

சூத்திரத்தின் உட்பொருளை விளக்குவதோடன்றி, அங்கங்கே இன்றியமையாத எல்லாவற்றையும் விளங்க உரைப்பதும் தன் உரை விளக்கத்தாலும் பிறர் கூறும் விளக்கங்களாலும் ஐயம் அகற்றுவது விருத்தியுரை. இதில் முன்பு காண்டிகை உரைக்குக் கூறிய ஐந்தும் அடங்கும். சூத்திரம் கூறவந்த மெய்ம்மைப் பொருளைச் சிறிதும் குறைவுபடாது கூறுவது இது.

வாயால் சொல்லிவந்த - உரைகள் எழுதிவைக்கப்பட்ட காலத்தில், இவை உரை வகைகளாக்கப்பட்டன.

## நூலின் இலக்கணம்

**24 பஞ்சிதன் சொல்லா, பனுவல் இழையாக**
**செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத**
**கையேவா யாக, கதிரே மதியாக**
**மையிலா நூல்முடியும் ஆறு 24**

பஞ்சால் நூற்கும் நூலே முதலில் நூலெனப்பட்டது. அது போன்றது என்பதால், படிக்கும் பொத்தகமும் நூல் எனப்பட்டது. உவமையாகு பெயர் என்பார்கள். செஞ்சொல் பாடும் புலவனே இங்கு நூல் நூற்கும் பெண் (சேயிழை). பஞ்சு - சொல். புலவன் வாயே நூற்கும் கை. அவனது மதி (அறிவு) தான், நூல் நூற்கும் கருவி-கதிர். அப்புலவனது நூலே (பனுவல்), நூலிழையாகும். இவ்வாறு நூல் யாக்கப்படுகிறது.

முதலில் நூலின் இலக்கணம் கூறிப் பிறகு உரைகளின் இயல்பு கூறவேண்டும். இவ்வாறு மாற்றிச் சொல்லும் மரபு தொன்றுதொட்டுக் காணப்படுகிறது. எளியன கூறி, அரியதில் முடிப்பது போலும் இது.

**25 உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்**
**புரத்தின் வளம்முருக்கிப் பொல்லா - மரத்தின்**
**கனக் கோட்டம் தீர்க்கும்நூல் அஃதேபோல் மாந்தர்**
**மனக்கோட்டம் தீர்க்கும்நூல் மாண்பு 25**

மரம் செவ்வையாய் இராது. நூலைப் பிடித்து, அதன்படி அறுத்தால், அதன் கோணல் நீங்கி, நேராகும். அந்த நூல் மரத்தின் கோட்டத்தை (கோணலை) நீக்குவதுபோல, கல்வி நூல் மனக்கோட்டத்தை (அறியாமையை) நீக்குமென்பது கருத்து. உரம் - அறிவு. முருக்குதல் - அழித்தல். அறிவு வளம்பொருக்கி, அறியாமை எனச் சொல்லும் தீமை வழிப்பட்டதை அழித்து, செவ்வையாய் இல்லாத மரத்தினது கனமான கோணலை, நூல் ஒன்று நீக்குவது போல, மாந்தரின் மனக் கோணலை நீக்குவதே மாட்சிமைப்பட்ட நூலாகும்.

## ஆசிரியர் இலக்கணம்

**26 குலன், அருள், தெய்வங் கொள்கை, மேன்மை,**
**கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை,**
**நிலம், மலை, நிறைகோல், மலர்நிகர் மாட்சியும்**
**உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்**
**அமைபவன் நூல்உரை ஆசிரி யன்னே 26**

நூலை பாடமாகக் கற்பிக்கும் ஆசிரியனிடம் அமைய வேண்டிய நல்லியல்புகளை இந்நூற்பா கூறுகிறது.

1) நல்ல குடிப்பிறப்பு 2) அருளுடைமை 3) தெய்வ நம்பிக்கை 4) பெருமை 5) கலைகளைப் பயின்ற தெளிவுடைமை 6) எடுத்துரைக்கும் நாவன்மை (கட்டுரை - இங்கு தெளிவுபட எடுத்துக் கூறுதல்) ஆகிய இயல்புகள் ஆசிரியனுக்கு வேண்டும். மேலும் நிலம், மலை, நிறை பார்க்கும் துலாக்கோல். மலர் - இவை நான்கும் போன்ற மாட்சிமை வேண்டும். இவற்றுடன் அவ்வக் காலத்திற்கேற்ற உலகியலறிவும் உயர் குணங்களும் இவை போல்வன பிறவும் வேண்டும்.

## நிலம் போல்பவன் ஆசிரியன்

**27 தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்**
**பருவம் முயற்சி அளவிற் பயத்தலும்**
**மருவிய நன்னில மாண்பா கும்மே 27**

அளந்தறிய முடியாத நிலவுலகம் போலக் கல்விப் பெருமை; அதைப் போன்ற மனவுறுதி; தன்னைத் தோண்டினாரையும் துன்புறுத்தாத நிலம் போன்ற பொறுமை; பருவத்தே பயிர் செய்யும் முயற்சிக்கேற்பப் பயன்தருதல் போல, மாணாக்கர் முயற்சிக்கேற்பப் பயன்தருதல் ஆகியவை ஆசிரியனிடம் வேண்டும்.

## மலை போல்பவன் ஆசிரியன்

**28 அளக்க லாகா அளவும் பொருளும்**
**துளக்க லாகா நிலையும் தோற்றமும்**
**வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே 28**

மலைபோல் அளக்கமுடியாத அறிவுடைமையும் அம் மலையிலுள்ள அளவற்ற பொருள்கள்போலப் பலவகைப் புலமை நலமும் அசைக்க முடியாத மலைபோன்ற மனவுறுதியும் அதைப் போன்ற மிகவுயர்ந்த ஆளுமைமிக்க தோற்றமும் வறண்ட காலத்தும் வளம் தரும் வண்மையுடைய மலைபோல, மாணாக்கர்க்கு இடர்ப்பட்ட காலத்தும் கற்பிக்கும் அருளு டைமையும் ஒரு நல்ல ஆசிரியனிடம் அமைதல் வேண்டும்.

## நிறைகோல் போல்பவன் ஆசிரியன்

**29 ஐயம்தீரப் பொருளை உணர்த்தலும்**
**மெய்ந்நடு நிலையும் மிகும்நிறை கோற்கே 29**

நிறைகோல் - தராசு, துலாக்கோல். ஒரு பொருளின் எடையை ஐயம்தீர உணர்த்தும். உண்மையான நடுவுநிலையில் அதன் முனை நிற்கும். ஆசிரியனிடமும் ஐயம் தீர்த்தலும் நடுவு நிலைமையும் வேண்டும்.

## மலர் போல்பவன் ஆசிரியன்

**30 மங்கல மாகி இன்றி யமையாது**
**யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கி**
**பொழுதின் முகம்மலர் வுடையது பூவே 30**

மலர் மங்கலப் பொருளாகி, - இன்றியமையாததாய், எல்லோராலும் மகிழ்ந்து மேற்கொள்ளப்படும். ஆசிரியனும் எல்லா இடத்தும் மங்கலப் பொருள்போல மதித்து மகிழ்வுடன் வரவேற்கப் படுவான். மென்மையாய் தக்க பொழுதில் மலர்வது பூவின் இயல்பு. ஆசிரியனும் முகமலர்ச்சியுடன் பாடம் நடத்துபவன் ஆவான்.

## யார்யார் ஆசிரியராகத் தகுதியுடையவரல்லர் என்பது

**31 மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்**
**அழுக்காறு அவாவஞ்சம் அச்சம் ஆடலும்**
**கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை**
**முடத்தெங்கு ஒப்பென முரண்கொள் சிந்தையும்**
**உடையோர் இலரா சிரியர் ஆகுதலே 31**

பாடஞ்சொல்லும் இயல்பின்மையும் இழிந்த குணங்களுடைய ராதலும் பொறாமை ஆசை வஞ்சனை அச்சம் ஆகிய தீய குணங்களையுடையராதலும் உடையவர் ஆசிரியராகும் தகுதி யுடையவராதல் இல்லை. மேலும் கழற்குடம், மடற் பனை, பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு போல்பவர் என நினைக்கும் படி முரண்பட்ட சிந்தனையுடையவரும் ஆசிரியராதற்கு உரியவரல்லர். ஆடல் - ஆளுதல், உடையராதல்.

## கழற்குடம் போன்றவர்

**32 பெய்த முறையன்றிப் பிறழ உடன்தரும்**
**செய்தி கழற்பெய் குடத்தின் சீரே 32**

கழற்சிக்காய் - ஒருவகை உருண்டைக்காய். ஒரு குடத்தில் அவற்றைப் போட்டுவைத்தால், போட்ட முறைப்படி திரும்ப வாராது. பலவிதமாக வெளிவரும். கற்ற முறைப்படி அல்லாது குழப்பமாகப் பாடம் சொல்பவர் இவர். இக்கழற்சிக் காயைப் போட்டு, எண்ணிக் குறிசொல்வது பண்டைய வழக்கம்.

## மடற்பனை

**33 தானே தரக்கொளின் அன்றித் தன்பால்**
**மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை 33**

பனைமடலின் கருக்கு கூர்மையாய் அரம்பம்போல் இருப்பதால், அம் மடற்பனையை நெருங்கமுடியாது. அதுவாகப் பனங்காயைக்

கீழே உதிர்த்தாலல்லது, அதில் ஏறிப் பறித்துக் கொள்ள முடியாது. நெருங்க முடியாதவர்களாக இருப்பது ஆசிரியர்க்குத் தகுதியன்று.

## பருத்திக் குடுக்கை போன்ற ஆசிரியர்

**34 அரிதிற் பெயக் கொண்டு அப்பொருள் தான்பிறர்க்கு**
**எளிதுஈ வில்லது பருத்திக் குண்டிகை 34**

பருத்தியைச் சிறு குடம்போன்ற குடுக்கையில் பெய்து வைத்தால், அதில் பஞ்சை உள்ளே செலுத்துவதும் கடினம், அதைப் பிறர் எடுப்பதும் கடினம். தானும் எளிதிற் கற்காமல் பிறர்க்கும் எளிதில் கற்றுத் தராமல் இருக்கக் கூடியவர் ஆரிரியராகார்.

## முடத்தெங்கு போன்ற ஆசிரியர்

**35 பல்வகை உதவி வழிபடு பண்பின்**
**அல்லோர்க்கு அளிக்கும் அதுமுடத் தெங்கே 35**

முடத்தெங்கு வீட்டுக்கு வெளியே வளைந்து நீட்டிக் கொண்டிருந்து வருவோர் போவோரால் இளநீர் பறிக்கப்பட்டுப் போகும். நீர் ஊற்றி வளர்த்தவர்க்குப் பயன்படாது. ஆசிரியர் ஆவார் தம்மை வழிபடும் பண்பினர்க்குப் பயன்பட வேண்டும் அல்லாமல் மற்றவர்க்குப் பயன்படுபவர் ஆசிரியர் ஆகார்.

## பாடம் சொல்லும் நெறிமுறை

**36 ஈதல் இயல்பே இயம்பும் காலைக்**
**காலமும் இடமும் வாலிதின் நோக்கிச்**
**சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி**
**உரைக்கப் படும்பொருள் உள்ளத்து அமைத்து**
**விரையான் வெகுளான் விரும்பி முகம்மலர்ந்து**
**கொள்வோன் கொள்வகை அறிந்துஅவன்**
**உளங்கொளக்**
**கோட்டம்இல் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப 36**

பாடம் சொல்லுதலை 'ஈதல்' என்றார். ஊதியம் நோக்கியதன்று அது. பாடம் நடத்த தக்க காலம் எது, தகுந்த இடம் எது என்று விளக்கமுற அறிதல் வேண்டும் (வாலிதின் - தெளிவாக) அமரும் இடமும் சிறந்ததாக இருக்க வேண்டுமாம். அவரவர் தத்தம் தெய்வத்தை வாழ்த்திப் பாடம் நடத்த வேண்டுமாம். தான் நடத்தப் போகும் பாடத்தை, முன்பே நன்கு படித்து உள்ளத்துள் அமைத்துக்கொள்ள வேண்டும். விரைவாக நடத்தாமல், இடையே கோபங்கொள்ளாமல், விருப்பத்துடன் முகம் மலர்ந்து நடத்த வேண்டும். மேலும் பாடம் கேட்பவன் எந்த அளவு தான் கூறுவதை விளங்கிக் கொள்கிறான் என்பதை அறிந்து, அவன் உள்ளத்தில் பதியும்படி, குறைகுற்றமில்லாத நல்ல மனத்துடன் நூலைக் கற்பிக்க வேண்டும். கோட்டம் - வளைவு, குறைகள்.

## மாணாக்கர் ஆகும் தகுதியுடையவர் யார்யார்?

**37 தன்மகன் ஆசான் மகனே மன்மகன்**
**பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே**
**உரைகோ ளாளற்கு உரைப்பது நூலே** 37

ஆசிரியன் தன் மகனுக்கும் தன் ஆசிரியன் மகனுக்கும் மன்னன் மகனுக்கும் (மன்+மகன்) பொருள் மிகுதியாகக் கொடுப்பவனுக்கும் தன்னை வழிபடுபவனுக்கும் (தன்பால் பக்தி செலுத்துபவன்), சொல்லித் தந்த பாடத்தை ஏற்றுக் கொள்ள வல்லவனுக்கும் நூலைக் கற்பிக்கலாம். (உரை + கோளாளன் = சொல்வதைக் கொள்பவன்)

## மூவகை மாணாக்கர் இலக்கணம்

**38 அன்னம் ஆவே, மண்ணொடு கிளியே,**
**இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி**
**அன்னர் தலைஇடை கடைமா ணாக்கர்** 38

அன்னமும் பசுவும் தலைமாணாக்கர். நீரைப் பிரித்துப் பாலை யுண்ணும் அன்னம்போல, நல்லதை மட்டும் எடுத்துக் கொள்பவர். பசு புல்மேய்ந்து, பின்பு அசைபோடும். படித்ததை நினைவில் வைத்து, மீண்டும் மீண்டும் சிந்திப்பர்.

மண்ணும் கிளியும் இடைமாணாக்கர். நிலம் முயற்சி யளவுக்கு விளைவு தரும். கிளி சொன்னதைத் திருப்பிச் சொல்லும். இவ் வியல்புடையவர் இடை மாணாக்கர்.

இல்லிக் குடம் - ஓட்டைக்குடம். ஊற்றிய நீர் தங்காது. ஆடு - பரவலாக மேயும். எருமை சேற்றில் இன்பங்காணும். நெய்யரி - நெய் வடிகட்டி. இது நல்லதைக் கீழே விட்டுவிட்டு, அல்லாததைத் தக்கவைத்துக் கொள்ளும். கடை மாணாக்கரும் அத்தகையவரே.

## முற்றிலும் மாணாக்கராகத் தகுதியற்றவர்கள்

**39 களிமடி மானி காமி கள்வன்**
**பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்**
**துயில்வோன் மந்தன் தொன்னூற்கு அஞ்சித்**
**தடுமாறு உளத்தன் தறுகணன் பாவி**
**படிறன்இன் னோர்க்குப் பகரார் நூலே** 39

கட்குடியன், மடி - சோம்பேறி, மானி - தற்செருக்கன், காமி - காமுகன், கள்வன், பிணிவாய்ப்பட்டவன், தன்முயற்சியற்ற வறியவன், எந்நேரமும் பிணக்காகப் பேசுபவன், சினம் மிக்கவன், எப்போதும் தூங்குகிறவன், புத்தி மிக மந்தமானவன், பழைய நூல்களைக் கற்க அஞ்சித் தடுமாறும் மனமுடையவன், முரடன், பாவி, வஞ்சகன் ஆகிய இத்தகையவர்க்குப் பாடம் சொல்லமாட்டார்கள். தறுகணன் - இங்கு முரடன்.

## பாடம் கற்கும் நெறிமுறை

**40 கோடல் மரபே கூறுங் காலைப்**
**பொழுதொடு சென்று வழிபடல் முனியான்**

குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து
இருவென இருந்து, சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்னஆர் வத்த னாகிச்
சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுஉளத்து அமைத்து,
போவெனப் போதல் என்மனார் புலவர் 40

கோடல் - பாடங்கேட்டல், கற்றல். காலத்தே சென்று, ஆசிரியனை வணங்கி (வழிபடல் முனியான் - வணங்குவதை வெறுப்பாக நினைக்காமல்), ஆசான் குணமறிந்து பழகி, அவரது குறிப்புப்படி பார்த்து, 'இரு' என்றபின் அமர்ந்து, 'பாடத்தைச் சொல் 'என்றதும் மூல பாடத்தைக் கூறி, அதற்கவர் கூறும் விளக்கத்தை, நீர் வேட்கையால் தண்ணீர் பருகும் ஆர்வம்போலப் படிப்பில் ஆர்வமுடையவனாய், சித்திரப் பாவை போல் பேச்சு ஆரவாரம் எதுவுமின்றி அமைதியாய் அடங்கியிருந்து பாடம் கேட்க வேண்டும். செவியே வாயாகக் கேட்க வேண்டுமே தவிர, வாய் வீண்பேச்சுப் பேசக் கூடாது. நெஞ்சக் களத்தில் கேட்ட பாடங்களைக் கேட்டமுறைப்படி, ஒன்றுவிடாது உள்ளத்தமைத்து, பிறகு இறுதியில் ஆசான் 'போகலாம்' என்ற பின்பு போகின்றவன் எவனோ, அவனே நன் மாணாக்கன்.

## மேன்மேலும் பாடத்தைப் பயிலும் முறைகள்

41 நூல்பயில் இயல்பே நுவலின்வழக்கு அறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்துஅவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றுஇவை
கடனாக் கொளினே மடம் நனி இகக்கும் 41

பாடம் படித்தலின் இயல்புகள்: நூலால் நுவலப்பட்ட (சொல்லப் பட்ட) உலக வழக்கையும் இலக்கிய வழக்கையும் தானும் அறிதல். பாடம் போற்றல் - மூல பாடத்தை மனப்பாடம் செய்தல். கேட்டவை நினைத்தல் - ஆசிரியன் பாடம்

சொல்லக்கேட்டவற்றைச் சிந்தித்தல். ஆசாற்சார்ந்து அவை அமைவரக்கேட்டல் - ஆசிரியனை அணுகி, அங்ஙனம் படித்தவற்றிலுள்ள ஐயங்களைக் கேட்டு அறிதல், அத்தகைய நன்மாணாக்கர்களுடன் கலந்து பழகுதல்; அவர்களிடம் வினாத் தொடுத்தல், அவர்கள் கேட்கும் வினாக்களுக்கு விடை பகர்தல் என்று இவற்றைத்தம் கடமையாகக் கொண்டால் அறியாமை நீங்கும். இறுதியில் கூறப்பட்டவை, இன்று மாணாக்கர் பங்குகொள்ளும் கருத்தரங்குகளை அப்படியே நினைவூட்டுகிறது.

## பலமுறை கற்றலே பயிற்சியாகும்

**42 ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பின்**
**பெருக நூலிற் பிழைபா டிலனே 42**

ஒரு பாடத்தை ஒருமுறை கேட்டவன், இமுறை கேட்டால், நூலின்கண் பெரிதும் பிழையின்றிக் கற்றவனாவான்.

**43 முக்காற் கேட்பின் முறையறிந்து உரைக்கும் 43**

மூன்றுமுறை கேட்டால், நூலை விளக்கும் முறைகளை யறிந்து, தானே விளக்கவல்லவனாவான்.

**44 ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்**
**காற்கூறு அல்லது பற்றல னாகும் 44**

ஆசிரியன் உரைத்த பாடத்தை, முழுமைபெறக் கேட்டுக் கொண்டாலும், அதில் காற்பகுதி மட்டுமே கற்றவனாவான். அதற்குமேல் படித்தவனாக மாட்டான்.

**45 அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்**
**செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்**
**மையறு புலமை மாண்புடைத் தாகும் 45**

முற்கூறியவாறு ஆசானிடம் மும்முறை கேட்டாலும் காற்பகுதிக் கல்வியே கைகூடும். அதே கல்விகற்கும் மாணவர்களோடு பழகுவதால் பிறிதொரு காற்பங்கு கைகூடும்.

இந்த அரைப்பங்கு போக, எஞ்சிய அரைப்பங்கு எப்போது கைகூடும்? தான் முன்நின்று, பிறருக்குச் செவ்வையாக உரைக்க முயலும்போது, மீதமுள்ள இரண்டு காற்பகுதியும் கைகூடும். அதனால் குற்றமற்ற புலமை மாட்சிமை பெற வாய்க்கும். இதிலிருந்து ஆசிரியர்களாகும் நிலை நோக்கி வளர்பவரும், பிறருக்கு வழிகாட்ட முற்படுவோரும் முழுமையான புலமைபெற முடியுமென்று ஆகிறது.

மேனாட்டுக் கருத்தரங்கு முறையை இது முற்றிலும் நினைவூட்டுகிறது. முறையான கருத்தரங்குகளே புலமையை நிறைவுசெய்யும்.

## ஆசிரியருடன் மாணவர் பழகும்முறை

**46 அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி**
**நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமோடு**
**எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்**
**அறத்தின் திரியாப் படர்ச்சி வழிபாடே** 46

குளிர் காய்பவன் நெருப்பை விட்டு மிக விலகினாலும் மிக அருகில் சென்றாலும் நல்லதன்று. அதுபோல ஆசிரியரிடமும் விழிப்பாகப் பழகவேண்டும். மேலும் ஒருவரது நிழல், அவர் பின் தொடர்வதுபோல, அவரைப் பின்பற்றி நடக்க வேண்டும். அன்பு நிறைந்த மனத்துடன், எவ்வாறு நடந்தால் ஆசிரியர் மனமகிழ்ச்சி அடைவாரோ, அவ்வாறு நடக்க வேண்டும். இவ்வாறு அறநெறிக்கு மாறுபடாத பழக்கமுடையராதலே, வழிபடுதல் என்பதன் பொருளாகும். படர்ச்சி - பழகுதல்.

## சிறப்புப் பாயிரம்

### சிறப்புப் பாயிரத்துள் வரவேண்டியன

47 ஆக்கியோன் பெயரே, வழியே, எல்லை,
நூற்பெயர், யாப்பே, நுதலிய பொருளே
கேட்போர், பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே 47

1) நூல் படைத்தவன் பெயர், 2) எந்த நூலின்வழி (துறை) 3) நூல் வழங்கும் நாட்டு எல்லைகள் 4) நூலின் பெயர் 5) நூலின் வகை அல்லது அமைப்பு 6) நூல் விளக்கும் பொருள் 7) அந்நூலைக் கேட்டற்குரியார் (படித்தற்குரியார்) யாரென்பது 8) அந்நூலால் விளையும் பயன். இவை எட்டினையும் பொருத்தமுறக் கூறுதல், தனிநூல்களுக்குரிய சிறப்புப் பாயிரமாகும். நூல் விவரக் குறிப்பு இது.

48. காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே 48

1) நூல் படைக்கப்பட்ட காலம் 2) நூல் அரங்கேறிய அல்லது எழுதப்பட்ட சூழல், இடம் 3) ஏன் அந்த நூல் எழுதப்பட்டது என்ற காரணம். இம் மூன்றையும் சேர்த்துச் சொல்பவரும் உண்டு.

## நூலுக்குப் பெயரிடும் மரபு

49 முதனூல், கருத்தன், அளவு, மிகுதி,
பொருள், செய்வித்தோன், தன்மைமுதல் நிமித்தினும்
இடுகுறி யானும் நூற்கு எய்தும் பெயரே 49

'சிலப்பதிகாரக் கட்டமைப்பு' - முதனூலால் பெயர்பெற்றது. கருத்தன் - ஆசிரியன். தொல்காப்பியம். அளவு - நாலடியார். மிகுதி - களவியல் (கற்பியல் வரினும்). பொருள் - அகம்

(அகநானூறு). செய்வித்தோன் - வீரசோழியம். தன்மை- நன்னூல். நிமித்தம் - இவை ஏழும் காரணப்பெயர்கள். நிமித்தம் - காரணம். இவை தவிர வெறுமனே இடுகுறியால் பெயர் வைப்பதுமுண்டு. இவை ஒன்றும் பலவும் கலந்தும்வரும். பெரிதும் பொருளால் பெயர் பெறுவனவே மிகுதி : கண்ணன் பாட்டு, அழகின் சிரிப்பு. முதற்சொல்லால் வெற்றி வேற்கை, ஆத்திசூடி எனப் பெயர் வைப்பதுமுண்டு. இவை மேலும் பலவகைப்படும்.

## வழிநூல் வகைகள்

**50 தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு**
**எனத்தகும் நூல்யாப்பு ஈரிரண்டு என்ப** 50

முன்னைய கருத்துக்களை எடுத்துக்கொண்டு தொகுத்து உரைப்பன; அவற்றை விரித்துரைப்பன; தொகுத்தும் விரித்தும் விளக்குவன; மொழிபெயர்ப்பு என நூல்யாப்பு அல்லது நூல்வகை நான்காகும். இன்றும் சான்றாதாரம் தொகுத்து ஆய்வெழுதுவோர் முதல் மூன்று நெறிகளைப் பின்பற்றுவர்.

## சிறப்புப் பாயிரம் யார்யார் எழுதலாம் என்பது

**51 தன்ஆ சிரியன் தன்னொடு கற்றோன்**
**தன்மா ணாக்கன் தகும்உரை காரன்என்று**
**இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே** 51

நூல் எழுதியவனின் ஆசிரியன், அந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் எழுதலாம் / பாடலாம். உடன் கற்றவன் எழுதலாம் (தொல் காப்பியத்திற்குப் பனம்பாரனார் எழுதியது போல). அவனது மாணாக்கனும் எழுதலாம். உரையாசிரியனும் எழுதலாம். இவர்கள் நூலாசிரியனையும் அவனது நூலையும் அறிந்தவர்கள். எனவே சிறப்புப் பாயிரம் எழுதத் தகுதியுடையவர்.

## தானே சிறப்புப் பாயிரம் எழுதினால் என்ன?

52 தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி அன்றே 52

அது தற்புகழ்ச்சி ஆதல் கூடும். இதுவரை தோன்றாத கருத்து நுட்பங்களையெல்லாம் கண்டு, பல்வேறு துறைகளில் ஆய்வெழுதி முடித்த ஆற்றலுடையவனேயாயினும், தானே தன்னைப் புகழ்ந்து கூறிக்கொள்ளுதலாகி விடுமாதலால், அது தகுதியுடையதாகாது.

## தற்புகழ்ச்சியும் வேண்டுமிடங்கள் உலகிலுண்டு

53 மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோற்கே 53

இடைப்பிற வரலாக இந்நூற்பா வருகிறது. அங்ஙனமாயின் ஒருவன் தன்னைப் புகழ்ந்து கூறிக்கொள்ளுதலே தவறா? அன்று. சிற்சில இடங்களில் அதற்கு அவசியம் நேரும்.

முற்காலத்து அரசனிடம் பரிசு பெறும்பொருட்டு 'சீட்டுக்கவி' என எழுதித்தருவர். முன்பு அது 'ஓலைத்தூக்கு' (ஓலையில் எழுதப்பட்ட பாட்டு) என்று பெயர். தன் ஆற்றலை அறியாதாரிடையே பேச நேரும்பொழுது, தன்னைப் பற்றிக் கூறித் தொடங்கலாம். பெரிய அவையொன்றில் விவாதம் நடத்தி, வெல்ல வேண்டிய சூழலிலும் தன்பெருமைகளைக் கூறலாம். தன்னை எதிரி ஒருவன் (மறுதலை) பழித்துப் பேசும்பொழுது, தன்சிறப்புக்களை எடுத்துக் கூற நேரும். இவ்விடங்களில் புலவன் தன்னைப் புகழ்ந்து கொள்ளுதலில் தவறில்லை. 'புகழ்தலும் தகும்' என்றதால், புகழாமையே பெரிதும் தகும் என்பதாம்.

## முன்னுரைப் பாயிரங்கள்

**54 ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்**
**பாயிர மில்லது பனுவல் அன்றே** 54

பனுவல் - சிறந்த நூல், ஆய்வுநூல். ஒரு நூல் ஆயிரம் சிறப்புக்களையுடையதேயாயினும், அதுபற்றிய விவரங்கள் முற்பகுதியில் தரப்பட வேண்டும். அதுவே பாயிரமாகும். இப்பகுதி இல்லாதது பனுவல் (படைக்கப்பட்ட நூல்) ஆகாது.

## பாயிரங்களின் இன்றியமையாமையும் சிறப்பும்

**55 மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்**
**ஆடமைத் தோள் நல்லார்க்கு அணியும்போல் -**
**நாடிமுன்**
**ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்**
**பெய்துரையா வைத்தார் பெரிது** 55

மாடமாளிகைக்குச் சித்திரம் தீட்ட வேண்டும். பெரிய நகரத்திற்கு வாயில் கோபுரமும் (கோயிலுக்கு முன்புள்ள இராசகோபுரமுமாம். நகர் - கோயில்) வரவேற்பு வளைவாகும். அசையும் மூங்கிலனைய தோளினையுடைய மகளிர்க்கு அணிகலன்கள் அழகு செய்யும். அவைபோல், எவ்வகை நூலுக்கும் நூலின் நுண்பொருளை உணர்த்துகின்ற அணிந்துரையாம் பாயிரத்தை, பெருமை பொருந்த எழுதி வைக்க வேண்டியதெனக் கருதினர் பெரியோர். ஐது - நுண்மை, அழகு. அணிந்துரை - அழகை உணர்த்தும் உரை. இது நூல் நயம் காட்டும். நாடி - ஆராய்ந்து, முன் - நூலின் முன்பகுதியில். ஆடு அமை - அசையும் மூங்கில்.

# எழுத்ததிகாரம்

# 1. எழுத்தியல்

## இயல் கருத்து நிரல்

ஒரு பருந்துப் பார்வையாக, இயலின் கட்டமைப்பை முதலில் தெரிந்துகொள்வது, முழுமையான அறிமுகமாகிறது. அதனால் ஓர் இயலின் உரைநடை வடிவச் சுருக்கமும் ஆவதால், பாடம் பசுமரத்து ஆணிபோல் பதியும்.

அசோகமர நிழலில் அமர்ந்திருக்கும் அருகக் கடவுளைத் தொழுது, எழுத்திலக்கணத்தை நன்கு இயம்புவன்.

எழுத்திலக்கணம் பன்னிரண்டு கூறுகளாக இவ்வியலில் பகுத்துரைக்கப்படுகிறது. 1. எழுத்துக்களின் எண்ணிக்கை 2. பெயர் 3. வரிசை முறை 4. பிறப்பு 5. உருவம் 6. மாத்திரை 7. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் 8. இறுதியில் வருவன 9. இடையில் வரும் மெய்ம்மயக்கம் 10. எழுத்துப்போலி. இவற்றுடன் 11. பதம்- சொற்கட்டமைப்பு 12. புணர்ச்சி (சொற்கள் சேர்ந்து தொடர்ச்சொற்களாவது).

### எண்ணும் பெயரும்

### 'எழுத்து' என்பது யாது? அதன் வகைகள் யாவை?

1. உள்ளிருந்து எழும் ஒலி அணுக் கூட்டத்தின் காரியமாய்த் தோன்றுவதும் பொருள்தரும் சொல்லுக்கு முதற்காரண மாவதும் எழுத்து எனப்படும். அது முதலெழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும்.

1.1 உயிர்பன்னிரண்டும் மெய் பதினெட்டும் ஆக முப்பதும் முதலெழுத்துக்களாகும்.

1.2 சார்பெழுத்து பத்து: உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக் குறுக்கம்.

1.3 சார்பெழுத்துக்கள் தோன்றும் இடங்கள் 369. உயிர்மெய் வடிவம் (18x12) 216. ஆய்தம் 8. உயிரளபெடை 21. ஒற்றளபெடை 42. குற்றியலிகரம் 37. குற்றியலுகரம் 36. ஐகாரக் குறுக்கம் 3. ஔகாரக் குறுக்கம் 1. மகரக்குறுக்கம் 3. ஆய்தக்குறுக்கம் 2. ஆக 369.

1.4. பெயர்களின் வகை:1. இடுகுறிப் பெயர் 2. காரணப் பெயர். இடுகுறிப்பொதுப் பெயர், இடுகுறிச்சிறப்புப் பெயர். காரணப் பொதுப் பெயர், காரணச்சிறப்புப் பெயர் என இதை 4 ஆக்குவர்.

இடுகுறி, காரணம், காரண இடுகுறிப்பெயர் எனவும் வகைப்படுத்துவர்.

1.4.1 'அ' தொடங்கி 12 உயிர்எழுத்து. க தொடங்கி (க்)18 மெய்யெழுத்து.

1.4.2 உயிர்க்குறில் 5 (அ இ உ எ ஒ)

1.4.3 உயிர் நெடில் 7 (ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ)

1.4.4 சுட்டு அ, இ, உ தனித்து நின்று சேய்மை, அண்மை, மேலே மற்றும் நடுவில் உள்ளவற்றைச் சுட்டுவதற்குப் பயன்படும்.

1.4.5 வினா: எ, யா இரண்டும் முதலில் நின்றும் ஆ ஓ இரண்டும் இறுதியில் நின்றும் ஏ முதலிலும் இறுதியிலும் நின்றும் வினவ-கேள்விகேட்கப் பயன்படும்.

1.5.1 வல்லினம்: மெய்யில் வல்லினம் ஆறு (கசடதபற)

1.5.2 மெல்லினம்: ஆறு (ஙஞண நமன)

1.5.3 இடையினம்: ஆறு (யரல வழள)

2.1 இன எழுத்துக்கள் : அ, ஆ ஓரினம். ஐக்கு இ, ஔவுக்கு உ இனம். க, ங என இவ்வாறு வல்லினத்திற்கு அடுத்த மெல்லினம் அதன் இனம். இடையினம் ஆறும் ஓரினம்

2.2 இனம் ஆவதற்குக் காரணம்: எழுத்துப் பிறக்குமிடம் (தானம்), எழுத்தை ஒலிக்கும் முயற்சி வேறுபாடு, எழுத்தின் மாத்திரை, ஒலியளவு, எழுத்தின் பொருள் ஒற்றுமை, வடிவ ஒற்றுமை. இவை ஒன்றோ, பலவோ ஒருபுடை ஒப்புமையுடையவாயின் இனம் எனப்படும்.

## முறை

3 அ முதலாக ஔ ஈறாக உயிரும் க முதலாக ன ஈறாக மெய்யும் வரிசைப்படுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம் அவற்றின் சிறப்பும் இனமும் கருதியேயாகும்.

## பிறப்பு

4. உயிரின் முயற்சியால் உள்ளிருந்து எழும், ஒலி அணுக் கூட்டம் மார்பு, குரல்வளை (கண்டம்), உச்சி, மூக்கு ஆகிய நான்கு இடங்களில் பொருந்தி, வாய்இதழ், நாக்கு, பல், மேலண்ணம் (மேல்வாய்ப்பகுதி) ஆகிய நான்கின் முயற்சி வேறுபாட்டால் வெவ்வேறு எழுத்தொலியாய்ப் பிறக்கும்.

4.1 பிறக்குமுன் பொருந்துமிடம்: உயிரும் இடையின மெய்யும் (மிடறு) குரல்வளையை இடமாகக் கொண்டு பிறக்கும். மெல்லினம் மூக்கினை இடமாகக் கொண்டும் வல்லினம் மார்பை (உரம்) இடமாகக் கொண்டும் பிறக்கும். (ஆய்தம் தலை உச்சியை இடமாகக் கொண்டு பிறக்கும்)

4.2.1 அ, ஆ வாயை அங்காத்தலால் (ஆ எனத் திறத்தலால்) பிறக்கும்.

4.2.2 அங்காப்புடன், அண்ணத்தின் பல்லினது அடியை, நா விளிம்புறல் = இ, ஈ, எ ஏ ஐ.

4.2.3 இதழ் குவிதல் = உ, ஊ, ஒ, ஓ, ஔ. (ஒட்டாது குவிதல்)

4.3.1 க, ங - அடிநா அடி அண்ணம்

ச, ஞ - இடை நா இடை அண்ணம்

ட, ண - நுனிநா நுனி அண்ணம்

4.3.2 த, ந - அண்ணத்தினது பல்லின் அடியை, நாநுனி பொருந்துதல்.

4.3.3 ப, ம -மேலிதழும் கீழிதழும் பொருந்துதல்.

4.3.4 ய - அடிநா அடி அண்ணத்தை அழுந்த ஆனால் ஒட்டாமல் பொருந்துதல்.

4.3.5 ர, ழ - மேலண்ணத்தை நாநுனி வருடுதல்.

4.3.6 ல, ள - அண்ணத்தின் பல்லினது அடியை நாவிளிம்பு (முனை) அழுத்தமாய்ப் பொருந்த'ல' காரம் பிறக்கும். அவை அழுத்தமாய் வருடினால் 'ள'காரம் பிறக்கும்.

*4.3.7* வ - மேற்பல்லை, கீழ் உதடு பொருந்துதல். *(இதழ்- உதடு)*

*4.3.8* ற,ன - மேலண்ணத்தை (மேல் வாயை) நா நுனி, மிக அழுத்தமாகப் பொருந்துதல். பிறக்கும் முயற்சியை வைத்து இவை வரிசைப்படுத்தப்பட்டிருப்பது தெரிகின்றதன்றோ?

*4.3.9* ஆய்தம் தலையை இடமாகக் கொண்டு, அங்காத்தலால் பிறக்கும். ஏனைய சார்பெழுத்துக்கள் எல்லாம் தத்தம் முதலெழுத்துக்கள் பிறக்குமிடமும் முயற்சியும் பற்றியே பிறக்கும்.

*4.3.10* இவை ஒவ்வோரெழுத்தும் குரலை உயர்த்திக் கூறல், தாழ்த்தி ஒலித்தல், நலிந்து கூறல் எனும் முயற்சி வேறுபாடுகளால், தத்தம்மில் சிறுசிறு வேறுபாடுகள் பெற்று ஒலிக்கும்.

## சார்பு எழுத்துக்கள்

## உருவம் - உயிர்மெய்

*5.1* மெய்யிலுள்ள புள்ளியை எடுத்துவிட்டால் க,ங என உயிர் - மெய்யாகிவிடும். இது 'அ' கரம் சேர்ந்தது. ஏனைய உயிர்களைச் சேர்க்கும் போது கி, தீ என இவ்வாறு உருவங்கள் வேறுபடும். உயிர்மெய்க்கு மாத்திரையளவு, உயிருக்குள்ள படியேயாகும். அ - ஒரு மாத்திரை. க-வும் ஒரு மாத்திரை. உயிர்மெய்யில் உயிரின் வடிவம் தெரியாது. உயிர் மெய் என இரண்டாலும் பெயர் பெறும். பிரிக்கும் போது க் + அ = க என ஒற்றே முதலில் நிற்கும்.

## ஆய்தம்

*5.2* ஆய்தம் முப்புள்ளி வடிவம். அது குற்றெழுத்தின் பின்னும் இறுதியில் உயிருடன் கூடிய வல்லெழுத்தைப் பெற்றும் வரும். *(அஃது, பஃறி)(பஃறி - பன்றி).*

## உயிரளபெடை

*5.3.* செய்யுளில் ஓசை குறையுமிடத்து, அதை நிறைவு செய்ய சொல்லின் முதல், இடை, கடைசியில், நெட்டெழுத்துக்கள் அளபெடுக்கும். அதற்கு அடையாளமாக அவற்றின் குற்றெழுத்துக்கள் பக்கத்தில் எழுதப்படும். *(ஆஅ, காஅ).*

## ஒற்றளபெடை

*5.4.* அஃதே போல ஓசை குறையுமிடத்து குறிற்கீழ இடையிலும் குறிலிணைக் கீழ் இடையிலும் குறிற்கீழ்க்

கடையிலும் குறிலிணைக்கீழ்க் கடைசியிலும் ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல, ள ஆகிய பத்தும் அளபெடுக்கும். அடையாளமாக அதே எழுத்து பக்கத்தில் எழுதப்படும். ஆய்தம் மொழியிடையே மட்டும் வருமாதலின் குறிற்கீழ் இடையிலும் குறிணைக்கீழ் இடையிலும் அளபெடுக்கும்.

## குற்றியலிகரம்

*5.5* வல்லெழுத்து ஆறும்(க் ச் ட் த் ப் ற்) உகரத்துடன் சேர்ந்து, சொல்லினிறுதியில், தனிக்குறிலல்லாத எழுத்துக்களைத் தொடர்ந்து வருமானால், குறுகிஒலிக்கும் (காசு, பிறப்பு, கடுகு, நடு). அது குற்றியலுகரம் எனப்படும். அதன் எதிரே 'யகர' முதன்மொழி வந்தால், அது இகரமாகத்திரியும். (நாடு + யாது = நாடியாது, அறிஞனாவது + யாங்ஙனம் = அறிஞனாவதியாங்ஙனம்) கேண்மியா (கேள் என்னும் ஏவல் முன்பு). இதில் 'மியா' - அசைச்சொல். அதற்குப் பொருளில்லை. அம் 'மியா' விலுள்ள 'இ'யும் குறுகும்)

## குற்றியலுகரம்

*5.6* தனிநெட்டெழுத்து, ஆய்தம், உயிரெழுத்து, வல்லெழுத்து, மெல்லெழுத்து இடையெழுத்து-இவற்றில் ஒன்று ஈற்றயலாகத் தொடர்ந்துவர, (கடைசி எழுத்திற்கு முன்னெழுத்தாக வர), இறுதியில் வரும் வல்லெழுத்துடன் கூடிய உகரம் (கு,சு,டு,து,பு,று)தன் ஒலி அளவில் குறுகி அரைமாத்திரை அளவே ஒலிக்கும். தனிக்குறிலைத் தொடர்ந்து வரும் பசு, அது, தொடு என்பன குறுகா. இக்குற்றியலுகரம் வல்லோசையை மென்மைப்படுத்துகிறது (ஆடு, அஃது, கடுகு, சுக்கு, கங்கு, சார்பு).

## ஐ,ஔ காரக் குறுக்கம்

*5.7.8* ஐ,ஔ எனத் தனியே, அந்த எழுத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால் குறுகாது. ஐ, சொல்லில் வரும் போது முதல் இடை கடை மூன்றிடத்தும் குறுகும் (ஐவர், இடையன், மடை): ஔ,மொழி முதலில் மட்டும் வந்து குறுகும். (கௌவை) இவை செய்யுளில் அசை கணக்கிடும் போதுதான் மிகவும் பயன்படும்.

## மகரக் குறுக்கம்

*5.9.* செய்யுளில் மருளும் என்பது மருண்ம் என்றும் போலும் என்பது போன்ம் என்றும் வரும். அங்கு இறுதி 'ம்' அரை

மாத்திரையிற் குறுகி கால் மாத்திரையாகும். தரும் + வளவன் என 'வ' கரத்தின் முன் வரும் 'ம்' - குறுகுமென்பர்.

## ஆய்தக்குறுக்கம்

5.10 ல,ள இரண்டும் சொற்கள் சேரும் புணர்ச்சியில் ஆய்தமாகும். (அல் + திணை = அஃறிணை, முள் + தீது = முஃடீது) இப் புணர்ச்சிவழி வந்த ஆய்தம் குறுகும். அரையில் குறைந்து கால்மாத்திரையாகும்.

## எழுத்துக்களின் வரிவடிவம்

6. எழுத்துக்கள் தொன்றுதொட்டு எழுதப்பெற்று வந்தபடியே வடிவம் பெறும். எ,ஒ இரண்டும் மெய்களும் மேலே புள்ளியிட்டு எழுதப்பெற்றதுண்டு. புள்ளியை எடுத்தால் ஏ,ஓ ஆகும். (அதை மாற்றி வீரமா முனிவர் எ,ஏ,ஒ,ஓ என வடிவமைத்தார் என்பர். மெய் தவிர்த்தவும் புள்ளி யிட்டெழுதப் பெற்றது, புதுமையாகவும் முரணாகவும் படுகிறது.)

## மாத்திரை - எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு

7. உயிரளபெடை - மூன்று மாத்திரை பெறும். நெட்டெழுத் தெல்லாம் - இரண்டு மாத்திரை பெறும்.

குற்றெழுத்து, ஐகாரக் குறுக்கம் ஔகாரக் குறுக்கம், ஒற்றளபெடை - ஒரு மாத்திரை பெறும்

ஒற்றெழுத்து, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்- அரை மாத்திரை பெறும்.

மகரக் குறுக்கம், ஆய்தக்குறுக்கம் - கால் மாத்திரை பெறும்.

## ஒரு'மாத்திரை'யின் அளவு என்ன?

7.1 மக்களிடம் இயல்பாக எழுகின்ற கண்ணிமைப் பொழுதும், இயல்பாகக் கை விரலால் நொடிக்கும் (சுண்டும்) பொழுதும் ஒரு மாத்திரைக்கு அளவாகும்.

உன்னல் காலே, ஊன்றல் அரையே,
முடுக்கல் முக்கால், விடுத்தல் ஒன்றே - என நொடிப் பொழுதை நான்கு கூறாக்கிக் காட்டுவதுண்டு. (உன்னல் - நினைத்தல்).

7.2 நெட்டெழுத்தும், ஒற்றெழுத்தும் அளபெடுத்தலில் ஒரு வரையறை உண்டு. இவை இசை பாடும் போதும், விளி என அழைக்கும் போதும் (பையா அஅஅ!) , பண்டமாற்று (விலை கூறிவிற்றல்) (உப்போஒஒ) முதலியவற்றில் அளவு கடந்தும் ஒலிக்கும். 'ஆதியின்' (முதலியவற்றின்) என்றதால் புலம்பல், முறையீடு, குறிப்பிசை எனப் பிறசில இடங்களிலும் ஓசை அளவுகடந்து ஒலித்தல் உண்டு என்பது பெறப்படும்.

## மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

8. பன்னிரண்டு உயிரும் மொழிக்கு முதலில் வரும். மெய்களில் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங பத்தும் உயிருடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

8.1 'வ' - அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ எனும் எட்டுயிருடன் வரும் உ, ஊ, ஒ, ஓ - நான்குடன் மொழி முதலில் வராது.

8.2 'ய' - அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ - ஆறு உயிருடன் வரும்.

8.3 'ஞ' - அ, ஆ, எ, ஒ - நான்கு உயிருடன் வரும்.

8.4 'ங' - தனித்து மொழி முதலில் வராது. அ இ உ சுட்டுடனும் யா, எ வினாவுடனும் கூடி, 'ங'- வும் மொழி முதலாகும். (அங்ஙனம், யாங்ஙனம்).

## மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்

9. உயிரெழுத்து பன்னிரண்டும் மொழிக்கு இறுதியில் வரும். மெய்களில் ஞணநமன யரலவழள பதினொன்றும் மொழிக்கு இறுதியில் வரும். குற்றியலுகரமும் மொழிக்கு இறுதியில் வரும். (ங மெய் மட்டும் வராது. மெல்லினம் இடையினம் 12 எழுத்தில் 'ங' தவிர்த்தவை, மொழியிறுதியில் வரவும் வல்லெழுத்து ஆறும் வாரா. ஏன்? அவை 'உகரம்' பெற்றே வரும். (வல்லோசையை 'திக்' என்று நிறுத்தாமல் 'திக்கு' ஆக்கியே வருவதொன்றே, தமிழ்மொழி பிறப்பிலேயே ஒலி எளிமை நோக்கியது என்பதை அறியலாம். தமிழின் அருமை பெருமைகளை அறியாதார் அதனை அறவே புறக் கணிப்பதை எண்ணும் போதெல்லாம் நெஞ்சம் நெக்குருகுகின்றது.)

9.1 உயிர் பன்னிரண்டும் மொழிக்கு இறுதியில் வரும் என்றார். ஆயினும் குறில்கள் (அ, இ, உ, எ, ஒ) ஐந்தும்

அளபெடையின் போது மட்டும் மொழிக்கு இறுதியில் வரும். (பல - ப் + அ + ல் + அ. இதில் அகரம் ல்-லுடன் சேர்ந்து ஈறாகிறது. தனி 'அ' ஈறாக வராது. 'பலாஅ' அளபெடுத்தால் வரும். 'எ'-மெய்யுடன் சேர்ந்தும் (கெ, பெ, தெ) மொழியீறாகாது. 'ஓ'-ந் மெய்யுடன் சேர்ந்து நொ(நொந்து போ) என ஒரே இடத்தில் மட்டும் ஈறாக வரும். ஔ (கௌ, வௌ என) க்,வ் வுடன் சேர்ந்து இரண்டே இடத்தில் மட்டுமே ஈறாக வரும்.

### உயிர்மெய்யில் முதலும் ஈறும் யாவை?

9.2 உயிர்மெய் என்றதும் உயிர்முன்னும் மெய் பின்னும் வருமெனத் தோன்றும். அங்ஙனம் வரின் 'அக்' என ஆகும். 'க' என்ற உயிர்மெய்யில் க் முதலிலும் அ இறுதியிலும் நிற்கின்றன. ஒலிக்கும் போது க் ஒலியே முன்னிற்கிறது. எல்லா உயிர்மெய்க்கும் இது பொருந்தும். (கடமை - க்+அ+ட்+அ+ம்+ஐ. தனித்தனி பிரிப்பது இது. இதன்படி 'க' வில் - க் தானே முதலில் நிற்கிறது; அ பின்னேதான் வருகிறது. சொல்லிப்பார்த்து நுட்பம் அறிக.)

### இடைநிலை மெய்ம்மயக்கம்

### மொழியின் இடையில் மெய்கள் மயங்கிவருதல்

10 மெய்ம்மயக்கம் உடனிலை, வேற்று நிலை என இரண்டு வகைப்படும். பக்கம் என்பது உடனிலை (ப + க் + க் + அ + ம்) இதில் 'க்' -பிறகு, 'க்' -அதே எழுத்துளது. எனவே இது உடனிலை. பங்கம் என்பது வேற்றுநிலை. (ப + ங் + க் + அ + ம்) ங்-பிறகு க் என்னும் வேறு எழுத்து வந்துளது. எனவே இது வேற்றுநிலை.

மெய் 18 இல், கசதப நான்கும் நீங்கிய பதினான்கு மெய்யும் தம்முன் பிற மட்டுமே வரும் வேற்றுநிலை மெய்ம் மயக்கம். அவ்வாறெனில் கசதப நான்கும் தம்முடன் தாம் மட்டுமே வரும் உடனிலை மெய்ம்மயக்கம் என்பது பெறப்படுகிறது.

மெய் 18 இல் ர,ழ நீங்கிய பதினாறும் உடனிலையாக வரும். அவ்வாறெனில் ர,ழ இரண்டும் வேற்றுநிலையாகவே வருமென்பதுபெறப்படுகிறது.

உடனிலையாகவே வருவன 4 = க ,ச,த,ப

வேற்றுநிலையாகவே வருவன 2 = ர,ழ

இரண்டுமாக வருவன = 12 ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன்

**வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்பு விதிகள்**

*10.1.1* ங,க் சேர்ந்து வரும். (வங்கம்)

வ்,ய் சேர்ந்து வரும்.(தெவ்யாது)

*10.1.2* ஞ், ச் இணையும். (பஞ்சு)

ந், த் இணையும். (பந்து)

யவும் இணையும். (உரிஞ் யாது, பொருந் யாது)

*10.1.3* ட முன் கசப சேரும் - வெட்கம், வெட்சி, நட்பு.

ற முன் கசப சேரும் - வேற்கை, முயற்சி,கற்பு.

*10.1.4* ண முன் ட்,-கசஞபமயவ பொருந்தும். கண்டம், காண்க.

ன முன் ற்- கசஞபமயவ பொருந்தும். இன்று, புன்கு.

*10.1.5* ம முன் பயவ- மயங்கும். கம்பு, நலம் யாது. வலம் வருக.

*10.1.6* யரழ முன் மொழி முதலில் வரும் பத்து மெய்யும் வரும்.

(கசதநபமவயஞங) வேய்கடிது, வேர் கடிது, வீழ் கடிது.

*10.1.7* ல,ள முன் கசபவய மயங்கும். சால்பு, நீள்பு என ஒரு மொழியில் வருவதே சிறப்பு. ஆனால் மெய்ம்மயக்கத்திற்குத் தொடர் மொழிகளும் காட்டப்படுவது வியப்பாகவுளது. காலப் பழைமையால் இவை நேர்ந்த போலும்.

**உடனிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்பு விதிகள்**

*10.2.1* ர,ழ தவிர்த்த 16 மெய்யும் தம்முடன்தாம் மயங்கும்.

(பக்கம், இங்ஙனம், பச்சை)

**ஈரொற்றுடனிலை மெய்ம்மயக்கம்**

*10.2.2* இதுவரை பார்த்தது மெய்யும் உயிர்மெய்யுமாய் நிற்கும் இடைநிலை மெய்ம்மயக்கம். அதாவது வெப்பம் என்றால், மொழிக்கு இடையே ப்ப என வந்துளது. இரண்டாவது ப-விலும் ப் + அ எனப் பிரிபடுவதால், இதனை மெய்ம் மயக்கம் என்கிறோம். மெய்யும் மெய்யுமாகவே சேர்ந்து நிற்பதை ஈரொற்று உடனிலை மெய்ம்மயக்கம் என்பர். குளிர்ச்சி ர்ச் - இரண்டு மெய்யாக இருக்கிறதல்லவா?

ய்ர்ழ்-மூன்றின் முன் கசதப ஙஞநம ஆகியவை ஈரொற்றாய் மயங்கும் (தாய்க்குலம், வார்ப்படம், தமிழ்த்தாய், பார்ப்பனர், வேய்ங்குழல், ஈர்ந்தடி.)

ர,ழ இரண்டும் தனிக்குறிலின் பின் ஈரொற்றாக வாரா. அர்த்தம் தமிழன்று; அருத்தம் எனல் வேண்டும். கர்த்தா தமிழில் கருத்தா ஆவார்.

## செய்யுளில் மட்டுமே வரும் ஒருவகை ஈரொற்றுடனிலை

*10.2.3* போலும் - போன்ம். மருளும் - மருண்ம். இவை இரண்டும் செய்யுளில் மட்டுமே வரும். ன்ம், ண்ம்- ஈரொற்றாம் இதில் குறுகுவதே 'மகரக்குறுக்கம்'.

*10.2.4* முதலாகு எழுத்து, மயக்க எழுத்து என்பன, அவ்வவ் எழுத்தைக் குறித்துச் சொல்லும் போது, முன்பு குறித்த முறைப்படியல்லாமல் மாறியும் வரும்.

ல காரம், டகரம், றஃகான்- மொழி முதலில் வாராதன எழுத்துப் பெயர் கூறுமிடத்து வந்தன. மயக்கமும் அரிதாக மாறி வருமிடங்களுண்டு.

## எழுத்துப்போலிகள்

*11.1* அறம் - அறன், கலம் - கலன். இவ்வாறு மகர இறுதி அஃறிணைச் சொற்கள் னகரமாக மாறி, போலியாக வரும். ஒன்றைப் போல வருவது போலி. இங்கு மகரம் போல னகரம் நின்றாலும் அதே பொருளில் வருகிறது.

உறழாது நடப்பவும் உண்டு என்றும் பொருள் கொள்ளலாம். குடம், திடம், வடம் - இவற்றை குடன், திடன், வடன் எனல் ஆகாது.

இவை போல சுரும்பு - சுரும்பர், சாம்பல்-சாம்பர் என வரும் இறுதிப் போலிகளும் உள என்று உரையாசிரியர் காட்டுவர்.

*11.2* அ,ஐ இரண்டும் சஞய முன் மொழியிடையே எழுத்துப் போலியாய், ஒன்றுபோல் ஆளப்படுதலுண்டு

மஞ்சு - மைஞ்சு, பயல் - பையல், மயல் - மையல். இவை மொழி முதலில் வந்தன. அரயன் - அரையன். இவை மாறியும் அறிப்படும்: ஐந்து - அஞ்சு. சமையம் - சமயம் பழைமை - பழமை.

*11.3* ஐ,ய - வின் பின்னே வரும் ந என்பது, ஞ வாக மாறிவருதலு முண்டு (ஐந்நூறு - ஐஞ்ஞூறு. செய்ந்நின்று - செய்ஞ்ஞின்று)

*11.4* அ முன்னே வரும் இகரம்
ஐ ஒத்து இசைக்கும்:

அ முன் இ = அயி ய்-(உடம்படுமெய்) - வயித்தியன்
வைத்தியன் - இரண்டும் ஒத்திசைக்கும்
மயிலாப்பூர் - மைலாப்பூர்.

அ முன் 'ய'வும் ஐ ஒத்து இசைக்கும் - அய்ந்து ஐந்து- இரண்டும் ஒத்திசைக்கும்

அ முன் உ சேர்ந்து 'ஔ' போல ஒலிக்கும் - கவுந்தி கௌந்தி- இரண்டும் ஒன்றே போல் ஒலிக்கும்.

அ முன் வ் சேர்ந்து ஔ போல ஒலிக்கும் - ஔவை அவ்வை. கௌவை கவ்வை.

வடமொழியில் சந்தியக்கரம் - கூட்டெழுத்து உண்டு. அந்தப் பழக்கத்தில் இச் சூத்திரம் தமிழில் சந்தியக்கரம் பற்றிக் கூறுகிறது என்பர். அய்இ, அவ்உ - ஐ,ஔ ஆயின என்பர். அது தவறு. தமிழில்'போலி' எழுத்துப்பற்றியதன் தொடர்ச்சியே இது. கவுந்தி - கௌந்தி, அய்ந்து - ஐந்து ஔவை - அவ்வை. இவ்வாறு எழுத்துப் போலியாய் ஒத்திசைப்பது பற்றிபதே இது. 'ஒத்து இசைக்கும்' என்பதே சூத்திரம்.

## தமிழெழுத்துக்களைச் சாரியை சேர்த்து ஒலித்தல்

*12* தமிழ் எழுத்துக்களை அ, ஆ, இ, ஈ என ஒலிப்பர்; க, ங, ச, ஞ - அகரம் சேர்த்து ஒலித்தலும் க கர மெய், ஙகர மெய் எனக் கூறலும் உண்டு. எழுத்துக்களை எளிதில் உச்சரிக்கவும் எழுத்துக்களிடையே வேறுபாடறிய இவ்எழுத்துச் சாரியைகள் உதவுகின்றன.

கரம் காரம் கான் என்பன எழுத்துச் சாரியைகள். மெய்கள் அகரமும் - அதாவது ககர மெய், டகர மெய் என்பர். மெய்கள் 'அ' கரமும் என்றதால் க,ங என மெய்யை ஆள்வதுமுண்டு.

காரம் பெறுவன: உயிர் நெடில்கள் - ஈகாரம், ஊகாரம். காரம், கான் இரண்டும் பெறுவன : ஐகாரம், ஐகான்.

ஔகாரம், ஔகான்

கரம், காரம், கான் பெறுவன : இருமைக்குறில் : உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும்.

உயிர்க்குறில்: அகரம், அகாரம், அஃகான்.

உயிர்மெய்க் குறில்: டகரம், ககாரம், மஃகான்.

13. க எனத் தனித்துக் கூறினும் கடல் எனச் சொல்லாய்த் தொடரினும் க-வுக்கு ஒரே ஓசை, உச்சரிப்பு, மாத்திரை போல்வன யாவும் ஒன்றேயாம். ஆங்கிலம் Put, Cut, Tube (ஒரே u - உ, அ, ஊ) எனப் பல உச்சரிப்புப் பெறுகின்றன. மொழியிடையே வரினும் முன் அனைத்து எழுத்தே எனக் கூற அங்கு இயலாது. தமிழில் தனித்துக் கூறினும் எழுத்திடை வைத்துக் கூறினும் ஒன்றே போல இருப்பது, மிக அரிய சிறந்த இயல்பாகும்.

# எழுத்தியல்

## கடவுள் வணக்கம்

**56 பூமலி அசோகின் புனை நிழல் அமர்ந்த**
**நான் முகற் றொழுது நன்கு இயம்புவன் எழுத்தே 1**

பூக்கள் நிறைந்த அசோகமரத்தின் அழகிய நிழலில் அமர்ந்துள்ள நான்முகனாம் அருகக் கடவுளைத் தொழுது, எழுத்தினது இலக்கணத்தை நல்ல முறையில் எடுத்துரைப்பேன்.

ஆலமர் நிழலில் சிவன் (தென்முகக் கடவுள், தட்சிணா மூர்த்தி), போதிமர நிழலில் புத்தர்(அரசமாம்), அசோகமர நிழலில் அருகன் (சமணம்) - ஒற்றுமை காண்க.

## எழுத்திலக்கணம் பன்னிரண்டு வகையாகப் பகுத்து விளக்கப்படும்

**57 எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை,**
**முதல், ஈறு, இடைநிலை, போலி என்றா**
**பதம், புணர்பு எனப்பன் னிருபாற் றதுவே 2**

எழுத்துக்களின் எண்ணிக்கை, அவற்றின் பெயர்,அவற்றின் வரிசை வைப்புமுறை, அவை உச்சரிக்கும் பொழுது வாய்வழியாகப் பிறக்குமிடங்கள், அவற்றின் வரி வடிவம், அவை ஒலிக்கப்படும் கால அளவாம் மாத்திரை, சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் எழுத்துக்கள், போலியாக வரும் எழுத்துக்கள் என இவை பத்தும் ஒரு வகை. பதம், புணர்ச்சி வேறு ஒரு வகை. ஆக பன்னிரண்டு விதமாக எழுத்ததிகாரத்தில் எழுத்தின் இலக்கணம் கூறப்படும். இது தொகுத்துச் சுட்டல் என்னும் உத்தி; பின்பு ஒவ்வொன்றாக இவை விளக்கப்படுவது வகுத்துக்காட்டல் என்னும் உத்தி.

முதல் பத்தும் எழுத்தியலில் விளக்கப்படும். பதம் - சொல். சொற்கட்டமைப்பு பதவியலில் விளக்கப்படும். புணர்ச்சி - **உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் எனும் மூன்றில் விளக்கப்படும். ஆக ஐந்து இயல்கள்.**

## 'எழுத்து' என்பது என்ன? அதன் வகைகள் யாவை?

**58 மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலி**
**எழுத்து, அது முதல் சார்பு என இரு வகைத்தே** 2

ஒலிஅணுத்திரள் (சேர்ந்தது) எழுத்து; (அந்த எழுத்து) மொழிக்கு (சொல்லுக்கு) முதற்காரணம். அது முதலெழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும்.

அதாவது ஒலி அணுத்திரள்கள் சேர்ந்து ஒலிப்பதும், சொல்லுக்கு முதற்காரணமாக அமைவதும் எழுத்து எனப்படும்.

முற்கு,வீளை (சீட்டி ஒலி) முதலிய ஒலிகள் பொருள் அற்றவை; அவை கூடிச் சொல்லாகா. எனவே பொருள் தரும் ஒலியே எழுத்தாகும். ஒலிஅணுக்கூடி, எழுத்தாகும் என்றது சமணக்கொள்கை.

உள்ளிருந்து எழும் ஓசையால் 'எழுத்து'; எழுதப் படுதலின் எழுத்து - இருவகையாகவும் கூறுவர்; இரண்டும் பொருத்தமாக வுள்ளன.

முதலெழுத்து - தனி எழுத்துக்கள். சார்பெழுத்து- சொல்லை இடமாகக் கொண்டு சார்ந்து வருவன; இவை எழுத்துக்கள் சொல்லில் அமையும் போது ஏற்படும் ஒலி மாற்றம், பொருளுணர்ச்சி முதலியவற்றில் வேறுபடுவனவே.

## தமிழ் எழுத்துக்கள் முப்பது மட்டுமே

**59 உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே** 4

உயிரெழுத்து பன்னிரண்டும் உடம்பு (மெய், ஒற்று, புள்ளி) பதினெட்டும் ஆகும். முப்பதுமட்டுமே தமிழின் முதல் எழுத்துக்கள். இவை அடிப்டையானவை.

ஆங்கிலம் 26 என்றால் தமிழ் 30 மட்டுமே. ஆய்தம் வல்லெழுத்தை மென்மைப்படுத்த ஒலிக்கும் போது, அதன் அடையாளமாக எழுதப்பட்டது.

## சார்பெழுத்து என்றால் என்ன? பத்துவகைச் சார்பெழுத்துக்கள் யாவை?

**60 உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு**
**அஃகியஇ,உ,ஐ,ஔ மஃகான்**
**தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும்**

உயிர்மெய் - வரிவடிவ மாறுதல் மட்டுமே. தனி எழுத்து அன்று. ஆங்கிலத்தில் Katavul என ஏழுஎழுத்து வருவதைத் தமிழில் கடவுள் என நான்காக எழுதலாம். க் அட்அவ் உள் என எழுதநேர்வதைக் குறைக்க, க் + அ = க என உயிர்மெய் வடிவம் கண்டனர். உயிர்மெய் வடிவங்கள் முன்னோர் நமக்குத்தந்த கொடை. இவை எழுத்துச் சுருக்கம் கருதியன. மெய் பதினெட்டின் மேலும் உயிர் பனிரண்டும் ஏறியதால் 216 உயிர்மெய் **வடிவங்கள்** கிடைத்தன. தொல்காப்பியர் உயிர்மெய்யைச் சார்பெழுத்து என்று கூறாததற்குக் காரணம், அவை வரிவடிவ மாற்றங்களே என்பதாலாகும். 216 - சேர்த்து ஆய்தம், முதலெழுத்து முப்பது- ஆக 247 எழுத்து எனவும் தமிழில் இத்தனை எழுத்துக்களா என வாயை அகல விரிப்பதும், அறிவின்மையின் வெளிப்பாடு. முப்பதே தமிழ் எழுத்து. உயிர்மெய் வரிவடிவமே.

ஆய்த எழுத்து வருமிடத்தெல்லாம் அதன்பின் வல்லெழுத்து நிற்கும் (அஃது, கஃசு, பஃறி). இது ஒலியை மென்மைப் படுத்தும் அடையாளமே. அல் + திணை = அஃறிணை. பல் + துளி + ஆறு = பஃறுளியாறு. இவ்வாறு புணர்ச்சி வேற்றுமையால், பொருளுணர்ச்சிக்கும் பயன்படுதலின், இதனை ஒரு சார்பெழுத்தாகக் கொண்டனர்.

உயிரளபெடை, ஒற்றளபெடை முதலெழுத்துக்களின் ஒலி நீட்சியே. (தொழாஅர் எனின், கண்ண்ணாயிரு). மற்றவை ஒலிக்குறுக்கங்கள். குற்றியலிகரம் முதலெழுத்து இகரத்தின் குறுக்கம்( நாடியாது = நாடுயாது); குற்றியலுகரம் முதலெழுத்து உகரத்தின் குறுக்கம். (பாட்டு, பாட்டைக்கேள்). ஐகாரம் குறுகும் - பழைமை: பழமை போல் ஒலிக்கும். ஔ குறுகும் - ஔவியம், அவ்வியம். மகரம் குறுகும்- போன்ம் (போலும்). ஆய்தம் (தனிநிலை) குறுகும் - அஃறிணை. முதலெழுத்துக்கள் நீண்டு ஒலிப்பன இரண்டு. (அளபு + எடை) ஒலி அளபு நீளுதல், அளபெடுத்தல். உயிர் நெடிலும் மெய்யெழுத்தும்.

குறுகி ஒலிப்பன: ஆறு எழுத்துக்கள். உயிரும் மெய்யும் ஆகாத ஆய்தம் தனிநிலை எனப்பட்டது. ஆக உயிர்மெய் வடிவம்-1, ஆய்தம்1, நீண்டு ஒலிப்பன 2, குறுகிஒலிப்பன் 6 (10) .

தொல்காப்பியர் குற்றியலுகரம் குற்றியலிகரம் ஆய்தம் ஏன்ற மூன்றை மட்டுமே சார்பெழுத்தாகக் கொண்டார். அவற்றையும் 'எழுத்தோரன்ன' என்றார். 'சார்ந்து வரும் மரபின' என்றார். இவை பலவும் சொல்லிடையே வரும் போது சில எழுத்துக்கள் அடையும் வேறுபாடுகளேயாகும். தனி எழுத்துக்கள் அல்ல,

சார்பெழுத்து சொற்களைச் சார்வதால், சில எழுத்துக்களடையும் ஒலிவேறுபாடுகளேயாகும். அவற்றுள் பொருள் வேற்றுமையும் புணர்ச்சி வேற்றுமையும் ஒருசேர உடைய ஆய்தம் குற்றியலிகரம் குற்றியலுகரம் மூன்றுமே தனி எழுத்துக்களல்லவாயினும், சார்ந்துவரும் மரபினவாய் எழுத்தோரன்ன. ஓரளபுக்குட்பட்டு எழுத்தாம் தன்மை பெறுதற் குரியன. மற்றவை சொல்லிடை வரும் ஒலி வேறுபாடுகளே.

## சார்பெழுத்துக்கள் வரும் இடங்களைக் கணக்கிடுதல் - இடங்கள் 369.

61 **உயிர்மெய் இரட்டுநூற் றெட்டு, உயர் ஆய்தம்**
**எட்டு,உயிர் அளபு எழு மூன்று, ஒற்று அளபெடை**
**ஆறுஏழ், அஃகும் இம்முப் பானேழ்,**
**உகரம் ஆறாறு, ஐகான் மூன்றே,**

**ஔகான் ஒன்றே, மஃகான் மூன்றே,**
**ஆய்தம் இரண்டொடு சார்பெழுத்து உறுவிரி**
**ஒன்றொழி முந்நூற்று எழுபான் என்ப 6**

சார்பெழுத்து உறு விரி - சார்பெழுத்தாக வருவன சொல்லிடை மட்டுமே. அவ்வாறு சார்பெழுத்து, உறுவிரி - வருமிடங்களின் விரிவு, 369 ஆகும்.

உயிர்மெய் - 216. இவை வரிவடிவங்கள். இவற்றுள் பெரிதும் ஒரு சீர்மை இருப்பதால் வடிவத்தைக் கற்பது எளிதே.

ஆய்தம் - 8. உயிரளபெடை - 21. ஒற்றளபெடை - 42. குற்றியலிகரம் - 37. குற்றியலுகரம் 36. ஐகாரம் குறுக்கம் - 3. ஔகாரக் குறுக்கம் 1. மகரக்குறுக்கம் 3. ஆய்தக்குறுக்கம் - 2.

உயிர்மெய் 216. தனிநிலையாம் ஆய்தம் - 8. ஒலிநீட்டம் (அளபெடை) - 63 இடங்கள். (ஒலிக்) குறுக்கங்கள்: 82 - 369

இவை வருமிடங்களை, அவை பற்றிய நூற்பாக்களில் பார்க்கலாம்.

## பெயரிடும் மரபுகள் யாவை?

**62 இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின 7**

இடுகுறிப் பெயர் - இடுகுறிப் பொதுப் பெயர்- 'உ'கரம், மரம்.

இடுகுறிச் சிறப்புப் பெயர் - 'கு'கரம், பலா

என இருவகைப்படும்.

'உ'கரம் - உகர வரிசைக்குப் பொது. ஆகவே இடுகுறிப் பொதுப்பெயர். 'கு'கரம்- 'கு' என்பதை மட்டும் குறிக்கும். ஆகவே இடுகுறிச் சிறப்புப் பெயர்

இவை காரணம் தெரியாத பொழுது 'இடுகுறி'என்பர்.

உயிர்,மெய் - அவையவை போல வருதலின் காரணப் பொதுப்பெயர்.

ஆய்தம் - காரணம் கருதினால் பலவற்றையும் குறிக்கும். இங்கு அவ்எழுத்தையே குறிப்பதால் காரணச் சிறப்புப் பெயர். இவை, அதிகாரம், இயலின்படி எழுத்துக்களுக்கு இட்ட பெயர் பற்றியே ஆதல் வேண்டும்.

மரம், பலா - இடுகுறிப் பொதுவும் சிறப்பும். தோப்பு, மாந்தோப்பு - தொகுப்புப் பற்றி வந்த இவை காரணப் பொதுவும் சிறப்புமாம்.

இரட்டுற மொழிதலால் இடுகுறிப்பெயர்-கண், காரணப் பெயர் - கண்ணன், காரண இடுகுறிப்பெயர் - புள்ளி. புள்ளியுடைய எல்லாவற்றையும் குறிக்காமல், புள்ளி பெற்ற மெய்யெழுத்தையே குறிப்பதால் இப்பெயர் வந்துளது. இவ்வாறு மூவகையும் சேர்ப்பதுண்டு.

காரணமின்றிப் பெயரிடுவது மனிதர்களிடையே உண்டு. காரணமின்றி ஏனைய பெயரோ, சொல்லோ, எழுத்தோ தோன்றுவதில்லை. காரணம் தெரியாத நிலையில் மறந்து போன பிறகு 'இடுகுறி என்கிறோம்.

## உயிர் பனிரண்டும் மெய் பதினெட்டும் தமிழ் எழுத்துக்கள் என்பது

**63 அம்முதல் ஈராறு ஆவி; கம்முதல்**
**மெய்ம்மூ வாறு என விளம்பினர் புலவர்** 8

அ - முதலாக பனிரண்டு ஆவி, உயிர் எழுத்தெனப்படும்.

க - முதலாக (க்,ங்,ச்,ஞ் என) பதினெட்டும் மெய், உடம்பு, புள்ளி, ஒற்று எனப்படும். இவை மொழிக்கு முதல் அடிப்படை யாதலின் முதலெழுத்துக்கள் எனப்பட்டன.

அ ஆ, இ ஈ, உ ஊ, எ ஏ, ஐ, ஒ, ஓ, ஔ - உயிர்
க்,ங்,ச்,ஞ்,ட்,ண்,த்,ந்,ப்,ம்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள்,ற்,ன் - மெய்

தனித்து இயங்குவதாலும் மெய்யை இயக்குவதாலும் 'உயிர்' எனப்பட்டது. ஆவி, உயிரின் மறுபெயர். உயிருடன் சேர்ந்தன்றி இயங்காமையால் மெய்யெனப்பட்டது. உடல், உடம்பு மெய்யின்

மறுபெயர்கள். புள்ளியிட்டு எழுதுவதால் புள்ளி, சொற்களை ஒற்றுவதற்கு இடையே வருவதால் ஒற்று எனப்பட்டது.

## குற்றெழுத்துக்கள் யாவை?

**64 அவற்றுள்**
**அஇ உஎ ஒக்குறில் ஐந்தே** 9

குறுகிய ஓசையுடைமையின் இவை குற்றெழுத்துக்கள். (க, கி, கு, கெ, கொ போல்வன உயிர் மெய்க் குறில்கள்).

## நெட்டெழுத்துக்கள் யாவை?

**65 ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்** 10

நீண்ட ஓசையுடைமையின் இவை நெட்டெழுத்துக்கள். (கா,கீ,கூ,கே,கை,கோ,கௌ போல்வன உயிர்மெய் நெடில்கள்.)

## சுட்டப்பயன்படும் எழுத்துக்கள் யாவை?

**66 அஇ உம் முதல் தனிவரின் சுட்டே** 11

அஇஉ என்ற மூன்றும் தனித்து நின்று, ஒன்றைச் சுட்டிக் காட்டப் பயன்படும் சுட்டெழுத்துக்கள். மலையாளத்தில் இன்றும் அ பையன், இ மாடு என வழங்குவர். தனித்து - தனித்து நின்று. இவை ஓரெழுத்து ஒரு மொழிகளுமாம். அங்கு, அவன், அது- சுட்டுச்சொற்கள். அவன், அது - வில் 'அ' எழுத்தைப் பிரிக்க முடியாது. எனவே அகச்சுட்டு எனப்படும். அப்பையன், இந்நூல் - அ, இ பிரிக்க முடியும் (அ+பையன்). இவை புறச் சுட்டு எனப்படும். 'உ' என்ற சுட்டு மேலே உள்ளதையும் (உம்பர் - மேலே), பின்னுள்ளதையும் குறிக்கும். 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' (குறள் 620) - பின்பக்கம், முதுகு.

## வினவப்பயன்படும் எழுத்துக்கள் யாவை?

**67 எயா முதலும் ஆஓ ஈற்றும்**
**ஏ இரு வழியும் வினாஆ கும்மே** 12

எ, யா முதலில் நின்று வினவப் பயன்படும்- எவன்? யாது?

ஆ, ஓ சொல்லிறுதியில் நின்று வினவப்படும்- அவனா? அதுவோ?

ஏ - முதலிலும் இறுதியிலும் நின்று வினவ உதவும் - ஏது? அவனே செய்தான்? (வினவும் போது).

எவன் - அகவினா, எம் மனிதன்- புறவினா எனப்பகுப்பதும் உண்டு.

எவன் - 'எ' பிரித்தால் சொல் சிதையும். எ+மனிதன் - பிரிக்க முடியும். அகத்தே நிற்பன (பிரிக்க முடியாதன) அகச்சுட்டு, அகவினா); புறத்தே நிற்பன (பிரிக்கக் கூடியன புறச்சுட்டு, புறவினா) எனப்படும்.

## வல்லெழுத்துக்கள் ஆறு

**68 வல்லினம் கசடத பற என ஆறே** 13

இவை ஆறும் வலி, வன்கணம், வல்லினம், வல்லெழுத்து எனப்படும்.

## மெல்லெழுத்துக்கள் ஆறு

**69 மெல்லினம் ஙஞணந மனஎன ஆறே** 14

இவை ஆறும் மெலி, மென்கணம், மெல்லினம், மெல்லெழுத்து எனப்படும்.

## இடையெழுத்துக்கள் ஆறு

**70 இடையினம் யரலவ ழள என ஆறே** 15

இவை ஆறும் இடை, இடைக்கணம், இடையினம், இடை யெழுத்து எனப்படும்.

'மெய் மூ வாறு' எனப்பட்ட மெய்யெழுத்து வகைகள் இவை.

## ஒன்றுக்கொன்று இனமாகும் எழுத்துக்கள் எவை?

**71 ஐஒள இஉச் செறிய முதலெழுத்து**
**இவ்விரண்டு ஓரின மாய்வரல் முறையே 16**

அ,ஆ ஓரினம். இ,ஈ ஓரினம். உ,ஊ ஓரினம். எ,ஏ ஓரினம். ஒ,ஓ ஓரினம். ஐ க்கு 'இ' இனமாகும்; ஒளவுக்கு உ இனமாகும். நீட்டி ஒலித்துப்பாருங்கள்; விளங்கிவிடும். அடுத்தடுத்து இரண்டு இரண்டு ஓரினமாய் வரும் என்றவர் ஐ,ஒள இரண்டுக்குமட்டும் இ,உ வருமென்றார். செறிய - இனமாகப்பொருந்த.

க,ங ஓரினம். ச, ஞ ஓரினம். ட, ண ஓரினம், த, ந ஓரினம், ப, ம ஓரினம், ற, ன ஓரினம்.

யரலவழள - ஆறும் ஓரினம். 'ஏற்புழிக் கோடல்' எனும் உத்தியின்படி, இவ்வாறு இடமறிந்து கொள்ளவேண்டும்.

## இன எழுத்துக்கள் என்று சொல்வதற்கான காரணங்கள் யாவை?

**72 தானம் முயற்சி அளவு பொருள் வடிவு**
**ஆன ஒன்று ஆதி ஓர் புடைஒப்பு இனமே 17**

தானம் - பிறக்குமிடம் (மார்பு, கழுத்து, மூக்கு, தலை). முயற்சி- நா, பல், இதழ், அண்ணத்தின் முயற்சி. அளவு - உச்சரிக்கும் ஒலியளவு. பொருள், வடிவம் முதலியவற்றில் ஒன்றோ பலவோ ஒருபுடை ஒப்புமையுடையனவாயின் அவை 'இனம்' எனப்படும்.

அ, ஆ இரண்டும் இனம். பிறக்குமிடம், முயற்சி, பொருளால் இனமாகும். அங்கு ஆங்கு - பொருள் ஒன்றே. உ ஊ ஒ ஓ ஒள - இதழ் குவிதலால் பிறத்தலால் ஓரினம் எனலாம்.

மெய்களில் வல்லெழுத்திற்கு மெல்லெழுத்து இனம். இடையினம் ஆறும் ஓரினம். முன் சொன்ன இடம் முயற்சி முதலானவற்றில், ஏதேனும் சில காரணங்களால் இவை இனமாதலை அறியலாம். அ, ஆ, எ, ஏ - வடிவ ஒப்புமையும் உண்டல்லவா? இனங் கருதியே தமிழ் எழுத்துக்கள் வரிசைப்படுத்தப்பட்டிருப்பது, அறிவாராய்ச்சிக்கு மிகவும் பொருந்தி வருகிறது.

## தமிழ் எழுத்துக்கள் வரிசைப்படுத்தப் பட்டிருப்பதற்கான காரணங்கள் யாவை?

**73 சிறப்பினும் இனத்தினும் செறிந்து ஈண்டு அம்முதல்**
**நடத்தல் தானே முறையா கும்மே 18**

உயிர் பனிரண்டும் மெய் பதினெட்டும் வரிசைப்படுத்தப் பட்டிருப்பதற்கு அவற்றின் சிறப்பும் இனமும் ஆகியவை காரணங்களாகும்.

'அ' - முதலாக, இவை ஒன்றற்கு அடுத்து ஒன்றாக நெருங்கி, வரிசையாகச் சொல்லப்படுவதே, அவற்றின் நெறிமுறையைக் காட்டும்.

தனித்தியங்கும் உயிர் முன்னதாகவும் உயிரின்றி இயங்காத மெய் அதற்குப் பின்பும் வருவது 'சிறப்பு'க் கருதியாகும். குறிலுக்குப் பிறகு நெடில் வருவது இனங் கருதியாகும். வல்லெழுத்து முன்னதாகவும் அதை அடுத்து மெல்லெழுத்துக்களும் க், ங் என இவ்வாறு நெருங்கி வருவது சிறப்பும் இனமும் கருதியாகும். இடை எழுத்து ஆறும் ஓரினமாதலின் சேர்ந்துவந்தன. அங்காத்தலால் பிறக்கும் அகரம், எனைய உயிர்களிலும் கலந்து நிற்பதால் முதலில் நிற்கிறது. இவ்வாறு முப்பது எழுத்திற்கும் தனித்தனி வரிசை முறைக்கான காரணம் உள்ளது.

## எழுத்துக்கள் பிறக்குமிடங்கள் யாவை? அவற்றின் பொதுவிதி யாது?

**74 நிறைஉயிர் முயற்சியின் உள்வளி துரப்ப**
**எழும்அணுத் திரள்உரம் கண்டம் உச்சி**
**மூக்குஉற்று இதழ்,நா, பல், அணத் தொழிலின்**
**வெவவேறு எழுத்தொலி யாய் வரல் பிறப்பே 19**

முதலில் உயிரின் முயற்சி வேண்டும். மக்கள் எழுத்தை உச்சரிக்க முயல்வது அது. உள்ளிருந்து வரும் காற்றே எழுத்தாக ஒலிக்கிறது (உள் வளி - உடம்பினுள் இருந்த காற்று. நுரையீரலிலிருந்து வரும் உயிர்க்காற்று) எழுந்து வெளிவரும் ஒலிஅணுக்கூட்டம். நான்கு பிறப்பிடங்கள்: உரம் (மார்பு), கண்டம்(கழுத்து), உச்சி, மூக்கு ஆகியவற்றில் , அக்காற்றுத் தங்கி வெளிவரும். வெளிப்படும் போது வாய் உறுப்புக்களான இதழ், நா, பல், அண்ணம் (மேல்வாய், வளைவான மேல் அண்ணம்). இந்த நான்கின் செயல் முயற்சி வேறுபாட்டால், வெவ்வேறு எழுத்தொலியன்களாக வெளிப்படுவதே எழுத்துக்களின் பிறப்பாகும். கழுத்து என்பது குரல்வளை.

## முதல் எழுத்துக்கள் முப்பதும் பிறக்குமிடங்கள் - பொதுவிதி

**75 அவ்வழி,**
**ஆவி இடைமை இடம்மிடறு ஆகும்**
**மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை 20**

உயிரெழுத்துக்களும் இடையின எழுத்துக்களும் (யரல வழள), பிறக்குமிடம் மிடறு- கழுத்து ஆகும். மெல்லெழுத்து (ஞஙண நமன) மூக்கினை இடமாகக் கொண்டுபிறக்கும். வல்லெழுத்து பிறக்குமிடம் உரம் - மார்பு ஆகும்.

## எழுத்துக்கள் பிறப்பதற்கான முயற்சி வேறுபாடுகள் - உயிரெழுத்துக்கள்

**76 அவற்றுள்,**
**முயற்சியுள் அ ஆ அங்காப்பு உடைய 21**

வாயை அகலத் திறந்து அங்காத்தலால் (ஆ என வாயைத் திறத்தலால்) அ, ஆ இரண்டும் பிறக்கும்.

**77 இ ஈ எ ஏ ஐ அங் காப்போடு**
**அண்பல் முதல், நா விளிம்புற வருமே 22**

அங்காத்தலுடன், அண்ணத்தின் (மேல் வாயின்) பல்லினது அடியை நாவினது விளிம்பு ஒட்டாமல் பொருந்துவது போல முயல்வதால் பிறக்கும்.

**78 உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே 23**

மேல் கீழ் இதழ்கள் குவிதலால் இவ் ஐந்து எழுத்தும் பிறக்கும்.

## மெய்யெழுத்துக்கள் பிறப்பதற்கான முயற்சிகள்

### கங, சஞ, டண

**79 கஙவும் சஞவும் டணவும் முதல்இடை**
**நுனிநா அண்ணம் உறமுறை வருமே 24**

க, ங அடிநா. அடியண்ணம் பொருந்தப் பிறக்கும்.
ச, ஞ இடைநா இடையண்ணம் பொருந்தப் பிறக்கும்.
ட, ண நுனி நா நுனியண்ணம் பொருந்தப் பிறக்கும்.
ஒலித்துப் பார்த்தால் விளங்கிவிடும்.

### த, ந

**80 அண்பல் அடிநா முடியுறத் தநவரும் 25**

மேல் அண்ணத்தில், இன்னும் முன்னதாகப் பல்லின் அடிப் பாகத்தை, நா நுனி பொருந்தத் த, ந பிறக்கும்.

த, ந மேலண்ணப் பல்லின் அடியை நாவின் நுனி பொருந்தப் பிறக்கும்.

**ப, ம**

**81 மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும் 26**

இன்னும் முன்னதாக மேலுதடும் கீழுதடும் பொருந்த ப,ம இரண்டும் பிறக்கும்.

இதுவரை அடியண்ணம் தொடங்கி, இதழ்கள் வரை வரிசையாய் முயற்சிப் பிறப்பு உள்ளமை புலப்படும். அதற்கு ஏற்பவே அவை வரிசைப்படுவது, மொழியின் செம்மையையும் அத்துணைச் சீர்பட வைத்தவர்தம் பெருமையையும் நினைப் பூட்டுகின்றன.

**ய**

**82 அடிநா அடிஅணம் உற'ய'த் தோன்றும் 27**

நாவின் அடி, அண்ணத்தின் அடியை அழுத்திப் பொருந்த 'ய' தோன்றும்.

**ர, ழ**

**83 அண்ணம், நுனி நா வருட ரழவரும் 28**

அண்ணத்தை (மேல்வாயை) நா நுனி வருட (தடவ) ர,ழ இரண்டும் பிறக்கும்.

**ல, ள**

**84 அண்பல் முதலும் அண்ணமும் முறையின்**
**நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்**
**லகார ளகாரமாய் இரண்டும் பிறக்கும் 29**

மேல் அண்ணத்தின் பல்லினது அடியை, நாவினது விளிம்பு (முன்பகுதி) அழுந்திப் பொருந்த 'ல' காரம் பிறக்கும்.

மேல் அண்ணத்தின் நடுப்பகுதியை நாவின்து விளிம்பு அழுத்தி வருடினால் 'ள' காரம் பிறக்கும்.

### வ

**85 மேற்பல் இதழ்உற மேவிடும் வவ்வே** 30

மேற்பல்லைக் கீழ் இதழ் பொருந்தினால் 'வ' பிறக்கும்.

### ற, ன

**86 அண்ணம் நுனிநா நனியுறின் றனவரும்** 31

மேல் வாயை நுனிநா மிக அழுத்தமாகப் பொருந்தினால் றன இரண்டும் பிறக்கும்.

## ஆய்தம், பிற சார்பெழுத்துக்கள் எங்கு பிறக்கும்?

**87 ஆய்தக்கு இடம்தலை, அங்கா முயற்சி**
**சார்பெழுத்து ஏனவும் தம்முதல் அனைய** 32

ஆய்தத்திற்குப் பிறக்குமிடம் தலை; முயற்சி அங்காத்தல். 'அஃ' என்றுதான் உச்சரிக்கவேண்டும்: ஏனைய சார்பெழுத்துக்கள் தத்தம் முதலெழுத்துக்கள் பிறக்குமிடத்திலேயே பிறக்கும். குற்றியலிகரமும் உகரமும், அவற்றின் முதலெழுத்துக்களாம் இ,உ பிறக்குமிடத்திலேயே பிறக்கும். இவ்வாறே கொள்க.

## எழுத்துப் பிறப்புக்குப் புறனடை

**88 எடுத்தல் படுத்தல் நலித்தல் உழப்பில்**
**திரிபும் தத்தமில் சிறிதுள வாகும்** 33

ழுத்துக்களுக்குப் பிறப்பு முறைகள் கூறப்பட்டது. ஆனாலும் அவரவர் ஒலிக்கும்போது, சூழல்களால் உரத்தோ மெலித்தோ கூறும் போது உயர்த்தும் தாழ்த்தியும் நலிந்தும் கூறும் முயற்சிகளால் அவை தத்தம்மில் சிறு வேறுபாடுகளும் உளவாகும்.

## உயிர்மெய்யெழுத்தின் இலக்கணம் அதன் வடிவ வேறுபாடுகள்

89 **புள்ளிவிட்டு அவ்வொடு முன்னுரு வாகியும்**
**ஏனை உயிரோடு உருவு திரிந்தும்**
**உயிரள வாய்அதன் வடிவுஒழித்து இருவயின்**
**பெயரொடும் ஒற்றுமுன் னாய் வரும் உயிர்மெய்** 34

க் எனும் மெய்யின் புள்ளியை எடுத்துவிட்டால் க எனும் உயிர்மெய் ஆகிவிடுகிறது. அதாவது புள்ளியை விட்டு. ‘அ’ வொடு ‘முன் உருவாகி’- புள்ளியில்லா முன்னைய உருவமே வடிவமாகிறது.

ஏனை உயிரொடு- பிற உயிர்களோடு சேர்ந்து உருவு வேறுபட்டு கி, கு என ஆகிறது, கி - விலங்குக்கோடு - ெ, ே - என்பன கொம்பு - ா - என்பது கால். திரிபுவடிவ உறுப்புக்கள். மாத்திரை எனும் இவை ஒலிக்கும் கால அளவைப் பொறுத்தவரை ‘உயிரளவாய்’ ஆகிறது. ‘அ’ என்பதும் ஒரு மாத்திரை; க என்றாலும் ஒரு மாத்திரையே. உயிரும் மெய்யும் சேர்ந்ததால் மாத்திரை கூடாது. உயிரின் மாத்திரையே உயிர்மெய்க்கும் மாத்திரையாகும். உயிர்மெய்யில் உயிரின் வடிவம் தோன்றாது; தெரியாது மறைந்துநிற்கும். இருவயின் பெயர் - பெயர் மட்டும் உயிர்மெய் என்று இரண்டும் சேர்ந்த பெயராகும். பிரிக்கும் பொழுது ஒற்று முன்னதாக உயிர் பின்னதாக வரும். உயிர்மெய் அதாவது க் + அ = க என்றே பிரியும். ஒற்று முதலில் நிற்கும். உயிர்மெய் எனும் பெயரின்படி, உயிர் முதலில் நிற்காது என்பகாம். உயிர்மெய் 18 x 12 = 216. வடிவம்.

## ஆய்த எழுத்து சார்ந்து வரும் இடம் யாது?

**90 குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி**
**உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே** 35

சூலாயுதம் போல மூன்று புள்ளிகளாய் வடிவம் அமைவதால், 'ஆய்தப்புள்ளி' என்றார். இது உயிர், உயிர்மெய்க் குற்றெழுத்தின் பின்னாலும் க்ச்ட்த்ப்ற் என்ற ஆறு வல்லெழுத்தும் உயிரொடு கூடியவற்றின் முன்னாலும் ஆக, அவற்றினிடையே வரும். அஃது, எஃகு,கஃசு (காற்பலம்),பஃறி (பன்றி). இவற்றை முற்றாய்தம் என்பர். ஒலிஅளவு குறையாதது.

இவை தவிர சொற்கள் சேரும் புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று: அல் + திணை = அஃறிணை போல்வன.

செய்யுளில் வரும் விகாரத்தால் அஃகான், செய்வஃது எனவரும் வருவனவும் ஒன்றுண்டு. ஆய்தம் 6 + 2 = ஆக 8 இடங்களில் வரும்.

இந்நூற்பா தொல்காப்பியத்திலிருந்து எடுத்தாளப் பெற்றுள்ளது. (தொல். மொழிமரபு, 5)

## உயிரளபெடையின் இலக்கணம் யாது? அது வரும் இடமும் எண்ணிக்கையும் யாவை?

**91 இசைகெடின் மொழிமுதல் இடைகடை**
**நிலைநெடில்**
**அளபுஎழும். அவற்றுஅவற்று இனக்குறில் குறியே**
36

செய்யுளில் இசை கெடின் - ஓசை கெடுமாயின், அதை நிறைவு செய்ய அளபெடை வரும். சொல்லின் முதல், இடை, கடை மூன்று இடத்தும் வரும். நெடில் அளபெழும் - நெட்டெழுத்துக்களே அளபெடுக்கும். அவ்வாறு அளபெடுத்ததன் அடையாளமாக, அந்த அந்த நெடிலின் குறில் பக்கத்தில் எழுதப்படும். ஆ அ, கூ உ என எழுதப்படும். குறி - அடையாளம்.

''ஆஅதும் என்னும் அவர்' (குறள் 653) மொழி முதலில் அளபெடுத்தது.

'உறாஅர்க்கு உறுநோய்' - (குறள்1200) மொழியிடையே அளபெடுத்தது.

'படாஅ பறை'(குறள்1115)-மொழியிறுதியில் அளபெடுத்தது.

இவை செய்யுள் ஓசை குறையுமிடத்தில் அளபெடுத்ததால் செய்யுள் இசை நிறை அளபெடை எனப்படும்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை (15).

இங்கு 'கெடுப்பதும்'என்றிருந்தாலும் ஓசை கெடாது. ஆயினும் இனிய ஓசைக்காக அளபெடுத்ததால் இது இன்னிசை அளபெடை.

நசை இ - விரும்பி, மரீஇ - மருவி - இங்கு சொல் வேறுபடுவதற்கு அளபெடை வருகிறது. எனவே இவை சொல்லிசை அளபெடை எனப்படும்.

நெட்டெழுத்து ஏழும் சொல் முதல் இடை கடை மூன்றிடத்தும் அளபெடுத்தலால் 7 x 3 = 21 ஆகும். ஔகாரம் சொல்லின் இடையிலும் கடைசியிலும் வாராது. அதனால் 19. இவற்றுடன் இன்னிசை, சொல்லிசை அளபெடைகளைச் சேர்க்க, எண்ணிக்கை மீண்டும் 21 ஆகிறது.

(ஆடூஉ, மகடூஉ எனச்சொற்களே அளபெடுத்துநிற்பது பழந்தமிழில் உண்டு. அவை 'இயற்கை அளபெடைகள்' எனப்படும்.)

## ஒற்றளபெடையின் இலக்கணம் யாது? அது எவ்வாறு 42 இடங்களில் வரும்?

**92 ஙஞண நமன வயலள ஆய்தம்**
**அளபாம், குறிலிணை குறிற்கீழ் இடைகடை**
**மிகலே, அவற்றின் குறியாம் வேறே** 37

ஙஞண நமன - மெல்லினம். யரலவழள - இடையினம். இதில் ர, ழ இரண்டும் அளபெடையாகாது. வல்லோசை யுடைமையால் வல்லினம் அளபெடுக்காது. ஆய்தம் ஓரளவு மெய்யெழுத்துப் போலவே உளது. ஆக மெல்லினத்தில் ஆறும் இடையினத்தில் நான்கும் ஆய்தமும் ஆக 11-ம் அளபெடுப்பதே ‘ஒற்றளபெடை’ எனப்படும். இதுவும் செய்யுளில் ஓசை குறையுமிடத்து, அதை நிறைவு செய்யவே அளபெடுக்கும்.

குறிற்கீழ் இடை- அஞ்ஞ்சினான்

குறிற்கீழ்க்கடை- மண்ண் கொண்ட

குறிலிணைக் கீழ்இடை- இலங்ங்கு வெண்பிறை

குறிலிணைக் கீழ்க்கடை-கலங்ங் கொண்ட (கலம்)

ஆய்தம் மொழியிடையில் மட்டுமே வரும்.

குறிற்கீழ்இடை - அஃஃஃகி அகன்ற

குறிலிணைக்கீழ் இடை - அலஃஃஃகுடை நீழல்

அளபாம் - அளபெடையாம். குறி-அடையாளம். வேறு - அதே எழுத்து அடுத்து வருவதை ‘வேறொன்று’ என்றார். 11 எழுத்து. குறிற்கீழ், குறிலிணைக்கீழ் இடை, கடை- 4. ஆக வருமிடம் 44. ஆய்தம் இறுதியில் வராது. அந்த இரண்டைக் கழித்தால் 42 ஆகும்.

## குற்றியலிகரம் இலக்கணம் (37 இடம்)

**93 யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்**
**அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய** 38

நாடு+யாது. முற்காலத்தில் சேர்த்துப்பாடும் செய்யுளில் இது நாடியாது என்று வரும். நாடி + யாது என்பது வேறு. நாடு+யாது சேர்ந்த புணர்ச்சிவேகத்தால் வரும் நாடியாது வேறு. இங்கு ‘இகரம்’ குறுகும். குறள் உ - குற்றியலுகரம். வல்லெழுத்து ஆறும் உகரத்துடன் வருவதே குற்றுகரம். கு, சு, டு, து, பு, று. வருமொழி முதலில் ‘யகர’ முதன் மொழி வந்தால், இந்தக் குறுகிய ‘உ’, ‘இ’ ஆகத் திரியும். முன்பு ‘மியா’ என, ஒரு முன்னிலை அசைச்சொல் வழங்கியுள்ளது கேண்மியா-கேள்.

சென்மியா - செல். 'மியா' விலுள்ள இகரமும் குறுகும். அதாவது ஒரு மாத்திரையுள்ள 'இ' அரை மாத்திரையே ஒலிக்கும். குற்றியலுகரம் 36 திரிந்த குற்றியலிகரமும் 36. அசைச்சொல் மியா - வில் வருவது ஒன்று. ஆக 3 . .

## குற்றியலுகர இலக்கணம் வருமிடங்களும் எண்ணிக்கையும் (36 இடம்)

**94 நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலியிடைத்**
**தொடர்மொழி இறுதி வன்மைஊர் உகரம்**
**அஃகும். பிறமேல் தொடரவும் பெறுமே 39**

மொழியிறுதியில் வல்லெழுத்துடன் வரும் உகரம் குறுகும். 1/2 மாத்திரையே ஒலிக்கும். 'இறுதியில் வன்மை (வல்லெழுத்தை) ஊர்ந்துவரும் 'உ'கரம் குறுகும். அதன் ஈற்றயல் எழுத்தால் அது பெயர் பெறும். நாடு - நெடில்தொடர்க் குற்றியலுகரம். எஃகு- ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம். படகு - ப, ட், அ + கு = ஈற்றயலாக உயிரே உளது. இது உயிர்த்தொடர்க் குற்றுகரம். சுக்கு - வன்தொடர்க்குற்றியலுகரம். 'குறள் உ' என்பதும் இதுவே. தொடர்மொழி என்றதால் நெடில்தொடர் தவிர, பிற யாவும் பிற எழுத்துக்கள் பலவாகத் தொடரப்பெறும். அஃது எனலாம்; முப்பஃது எனலாம். ஈற்றயலுக்கு அப்பால் பிறவும் தொடர்தல் இது. நெடில் மட்டுமே ஆடு, மாடு, காடு என ஓரெழுத்தே தொடரும். அதனால் 'நெடிலோடு' எனப் பிரிக்கப் பட்டது. தனிநெடில் 7, ஆய்தம் 1, ஔகாரம் மொழிக்கு இடையே வராத ஔ நீங்கிய உயிர் 11, வல்லினம் 6, மெல்லினம் 6, இடையில் இணைந்து வராத வகரம் நீங்கிய மெல்லினம் 5 - ஆக 36.

ஈற்றயல் எழுத்தால் பெயர் பெறுதலால், அவ் ஈற்றயல் எழுத்துக்கள் பொதுவாக 6; ஈற்று வல்லெழுத்தாறுமே உகரம் ஏறிக் குறுகுதலால் 6. இவற்றைப் பெருக்க (6 x 6) முப்பத்தாறு என்பது எளிதான பொதுக்கணக்குமாம்.

'நு'ந்தை - உன் தந்தை என்பதிலுள்ள உகரம் மொழி முதற்குற்றியலுகரம் என்பார் தொல்காப்பியர்; இது அக்கால உச்சரிப்பு முறை பற்றியது.

## ஐகாரக் குறுக்கம் வருமிடம் 3, ஔகாரக் குறுக்கம் வருமிடம் 1.

**95 தற்சுட்டு அளபுஒழி ஐம் மூவழியும்**
**நையும். ஔவும் முதல்அற்று ஆகும் 40**

'ஐ' என்று தன்னைத் தானே சுட்டும் பொழுது மட்டும், மாத்திரை அளபு குறுகாது. பிறவாறு ஐயர் என முதலிலும் இடையன் என இடையிலும் மடை எனக் கடைசியிலும் வரும்போது நெடிலுக்குரிய இரண்டு மாத்திரை, ஒரு மாத்திரையாகக் குறுகும். ஔகாரம் தன்னைக் குறித்து, 'ஔ' எனத் தனித்துச் சொன்னால் குறுகாது. ஔவை, மௌவல் - இங்கு ஒரு மாத்திரையாய்க் குறுகும். இவை செய்யுளில் அசை கணக்கிடும்போது பயன்படுவன. முன்பு பல நூற்பாக்கள் செய்யுளை நோக்கியே முன்னதாகக் கூறிவைக்கப்பட்டன. நையும் - குறுகும்; முதல் - முதலில் மட்டும். அற்று - ஐக்குக் கூறுயதுபோல் ஆகும். 'ஔ' உயிர்களும் உயிர்மெய்களும் மொழி முதலில் மட்டுமே வரும். அதனால் ஐகாரக் குறுக்கம் வருமிடம் 3, ஔவுக்கு வருமிடம் 1.

## மகரக் குறுக்கம் மூன்று இடங்களில் வரும்

**96 ணன முன்னும் வஃகான் மிசையும்மக் குறுகும் 41**

மருளும் என்பது மருண்ம் என வரும்போது, 'ம்' 1/4 மாத்திரை பெற்றுக் குறுகும். போலும் என்பது போன்ம் என வரும் போது 'ம்' 1/4 மாத்திரை பெற்றுக் குறுகும். வரும் வளவன்- எதிரே வகரம் வருவதால் ஈற்று 'ம்' குறுகும். இவை பழங்கால வழக்கு; செய்யுளில் வரும். மகரக்குறுக்கம் இம்மூன்று இடங்களில் மட்டுமே வரும்.

## ஆய்தக் குறுக்கம் வருமிடம் இரண்டு

**97 லளஈற்று இயைபினாம் ஆய்தம் அஃகும் 42**

கஃசு(காற்பலம்), அஃது என வரும் ஆய்தங்களை முற்றாய்தம் எனவும், புணர்ச்சியால் வரும் இரண்டும் ஆய்தக் குறுக்கம் என்றும் வேறுபாடறியக் கூறப்படுவதுண்டு.

கல் + தீது = கஃறீது. அல் + திணை = அஃறிணை. முள் + தீது = முஃடீது. ல திரிவது ஒன்று, ள திரிவது ஒன்று, ஆக 2. இவை பழந்தமிழ் வழக்கு.

## எழுத்துக்களின் வரிவடிவம்

**98 தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு**
**எய்தும் எகர ஒகரமெய் புள்ளி 43**

எல்லா எழுத்தும் தொன்மைக்கால முறைப்படி எழுதப்பட்டு வருகின்றன. தொல்லை வடிவு - பழைய வடிவம். எகர ஒகரமும் மெய்யெழுத்தும் தலைமேல் புள்ளிவைத்து எழுதப்பெறும். ஏ் - குறில் எ - நெடில் ஒ் - குறில், ஒ - நெடில். இன்று எ, ஏ, ஒ, ஓ - இவ்வாறு மாற்றி எளிமைப்படுத்தியவர் வீரமாமுனிவர். இம் மாற்றம் மிக இயல்பானதால் ஏற்கப்பட்டது.

## எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு மாத்திரை

**99 மூன்றுஉயிர் அளபு, இரண் டாம்நெடில், ஒன்றே**
**குறிலோடு ஐஔக் குறுக்கம் ஒற்றளபு,**
**அரை ஒற்று இ,உக் குறுக்கம் ஆய்தம்,**
**கால் குறள் மஃகான் ஆய்தம் மாத்திரை 44**

உயிரளபெடை- **மூன்று மாத்திரை**. ஆ அ, கூ உ என உயிர், உயிர்மெய் இரண்டுக்கும் பொருந்தும். நெட்டெழுத்து - **இரண்டு மாத்திரை**. ஏ,கே என இருவகை நெடிலுக்கும் இரண்டு மாத்திரையே. **ஒரு மாத்திரை பெறுவன**: குற்றெழுத்துக்கள்

(உயிரும் உயிர் மெய்யும்), ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஒற்றளபெடை. **அரை மாத்திரை பெறுவன**: ஒற்றெழுத்து, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம். **கால் மாத்திரை பெறுவன**: மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம்.

## மாத்திரை என்பது யாது?

**100 இயல்புஎழும் மாந்தர் இமைநொடி மாத்திரை 45**

மக்கள் இயல்பாகக் கண்ணிமைக்கும் பொழுதும் கை நொடிக்கும் (சுண்டும்) பொழுதும் ஒரு மாத்திரை எனும் கால அளவைப் பெறும். செயற்கையாகச் செய்தால் அது பொருந்தாது.

## ஒலி அளவைக்கடந்து நீண்டு ஒலிக்குமிடங்கள்

**101 ஆவியும் ஒற்றும் அளவிறந்து இசைத்தலும்**
**மேவும் இசைவிளி பண்டமாற்று ஆதியின் 46**

உயிரும், ஒற்றும் ஒலியளவு கூறியதை விடக் கூடுதலாக அளவு கடந்து ஒலிக்கும் இடங்களும் உண்டு. அவை இசை-இராகம் பாடும்போது. விளி - கூப்பிடும்போது. முருகா அஅஅ. அண்ணாஅஅஅஅ. பண்டமாற்று - உப்போஒஒஒ உப்பு. ஆதியின் - முதலியவற்றில். குறிப்பிசை, முறையீடு, புலம்பல் முதலானவை. 'பொலியோஒஒஒ பொலி' - நெல் தூற்றும்போது ஒலிப்பர். முறையிடுதல் - தடுக்காதே எஎஎ ! புலம்புதல் - ஐயோஒஒஒ. குறிப்பிசை - சூஃஃஃஃறென்றது.

## மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் யாவை? - முதனிலை

**102 பன்னீர் உயிரும் கசதந பமவய**
**ஞஙஈ ரைந்துஉயிர் மெய்யும் மொழிமுதல் 47**

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் கசதநபமவயஞங - பத்து உயிர்மெய்யும் மொழி முதலில் வரும் எழுத்துக்களாகும. எனவே ட, ற, ண, ன, ர, ல, ழ, ள = எட்டு உயிர்மெய்களும் தமிழ்ச் சொற்களில் மொழி முதலில் வாரா. கடவுள் என்பதில்‘க’ உயிர்மெய்யே மொழி முதலாகும் க்+அ என அது பிரியும். அவ்வாறெனில் மொழி முதலில் நிற்பது ‘க்’ மெய்யே. எனினும் உயிரோடு சேர்ந்தல்லது, மெய் மொழி முதலாகாது. ப்ரியா, ஸ்ருதி தமிழல்ல. பிரியா, சுருதி எனத் தமிழாக்குவர். **அ**ணில், **ஆ**டு, **இ**டை, **ஈ**தல், **உ**டை, **ஊ**க்கம், **எ**ழில், **ஏ**ணி, **ஐ**வர், **ஒ**ன்று, **ஓ**டு, **ஔ**வை, **க**டல், **ச**றுக்குதல், **த**டை, **ந**லம், **ப**டை, **ம**யில், **வ**யல், **ய**வனர், **ஞ**மலி (நாய்), **ங**னம் (இடம்). (அங்ஙனம், எங்ஙனம் என்றே வரும்.)

## வகரமெய் எவ்வெவ் உயிருடன் மொழிக்கு முதலில் வரும்?

103 **உஊ ஒஓ அலவொடு வம்முதல்** 48

வு,வூ,வொ,வோ,அல்லாதன மொழிமுதலில் வரும்.

வ, வா, வி, வீ, வெ, வே, வௌ - எனவே இவை எட்டும் மொழிமுதலில் வரும்.

வடு, வாழ்வு, விடை,வீழ்ச்சி,வெயில், வேலை, வையம், வௌவால்.

## யகர மெய் எவ்வெவ் உயிருடன் மொழிக்கு முதலில் வரும்?

104 **அஆ உஊ ஓஔ யம்முதல்** 49

ய, யா, யு, யூ, யோ, யௌ எனும் ஆறும் மொழி முதலில் வரும். அல்லாதன யி, யீ, யெ, யே, யை, யொ ஆகிய ஆறும் மொழிமுதலில் வாரா. யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

தொல்காப்பியர் கூற்றுப்படி 'யா' மட்டுமே முதலில் வரும். பிற யாவும் தமிழாக்கச்சொற்கள். பிறமொழி தமிழாகியவை.

## ஞகரமெய் எவ்வெவ் உயிருடன் மொழிக்கு முதலில் வரும்?

105 **அஆ எ ஒவ்வோ டாகும் ஞம்முதல்** 50

ஞ, அ ஆ எ ஒ - நான்குடன் மட்டும் மொழிமுதலாகும்.

ஞமலி (நாய்), ஞாலம் (உலகம்), ஞெகிழி, (தீக் கடைகோல்), ஞொள்குதல்(சுருங்குதல்).

## 'ங' மொழி முதலாகுமிடம்

106 **சுட்டு, யா எகர வினாவழி அவ்வை**
**ஒட்டி ஙவ்வும் முதலாகும்மே** 51

ஙகர மெய் 'அ' கரத்துடன் மட்டுமே மொழிமுதலாகும். சுட்டுடன் வரும் அங்ஙனம், இங்ஙனம். மேலும் யாங்ஙனம், எங்ஙனம் என வினாவுடனும் வரும். அங்ஙனே என மலையாளத்தில் வழங்குகிறது என்பர்.

ஙனம் - இடம், விதம், தன்மை. இங்ஙனம் எனக் கடிதத்தில், எழுதுபவர் குறிப்பிடுவதுண்டு. இது சுட்டு, வினாவுடன் சேர்ந்தல்லது 'ஙனம்' எனத் தனித்து வாராது.பொதுவாகப் பனிரண்டு உயிரும் பத்து மெய்யும் - அதாவது 22 எழுத்துக்கள் மட்டுமே தமிழ்ச்சொற்களில் மொழிமுதலாகவரும். அவற்றுட் சில சிறுபான்மையாகவரும். வ - 8 உயிரெழுத்துடன் வரும்; ய-6 உயிருடன் வரும்; ஞ - 4 உயிருடன் வரும். ங - ஒரே உயிருடன் மட்டும் வரும். இவ்வாறு கூறப்பட்டவற்றில் ய,ஞ,ங - முதன்மொழிச் சொற்கள் மிகக்குறைவு. இச் சிறப்புவிதிகள் 19 ஆகும். ஏனைய கசதநபம - எனும் ஆறு மெய்யும் பன்னிரண்டு உயிருடனும் வரும். 72. பனிரண்டு உயிரும் மொழிமுதலாகும். ஆக மொழி முதலாகும்

எழுத்துக்கள் 103. இவை தவிர்த்தவை தமிழ்ச்சொற்களாகா. க்ரியா, ப்ரியா எனத் தனிமெய்யெழுத்து மொழி முதலாகாது.

## மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் யாவை? - இறுதிநிலை

**107 ஆவி ஞணநமன யரலவ ழளமெய்**
**சாயும் உகரம் நாலாறும் ஈறே** 52

உயிர் 12ம் சொல்லுக்கு இறுதியில் வரும். அதாவது இதுவும் மெய்யுடன் கூடியே இறுதியில் வரும். 'எ' - அளபெடையில் மட்டுமே இறுதியில் வரும். ஞஙணநமன என்ற மெல்லினம் ஆறில் 'ங' ஈறாக வராது. யரல வழள - இடையினம் ஆறும் சொல்லுக்கு ஈறாக வரும். இவை பதினொன்றும் மெய்யெழுத்தாக இறுதியில் வரும். குற்றியலுகரமும் இறுதியில் வருமென்றது, தமிழ்ச்சொற்களின் இறுதியில் வல்லெழுத்து ஆறும் வாரா மையால், அவை உகரம் ஏறிக் குற்றுகரமாக மட்டும் வரும். ஆக ஈற்றில் வருவன 24 எழுத்துக்கள். வல்லெழுத்து மொழிக்கு இறுதியில் வாராது என்பது, தமிழின் எளிமையையும் இனிமையையும் காட்டுகிறது. பாக்கு, தெங்கு, நாடு என இவை க், ட் என நிற்காமல் 'உகரம்' பெற்று வருதல் காண்க.

உயிரீறு 12 - பல (ல்+அ) அகராஈறு. பலா, பலி, தீ, காடு, பூ, தேஎ, சே - (எருது), தழை, நொ, போ, கௌ (வு).

மெய் 10 - உரிஞ் (உரிஞ்சு என்பர் இன்று, கண், வெரிந் (முதுகு), மடம், ஆன், பாய், கூர்,தோல், தெவ், தமிழ், தாள். குற்றுகரம் - மாடு, பாட்டு, பங்கு, மார்பு, கஃசு.

## சில எழுத்துக்கள் இறுதியில் வருவதற்குச் சிறப்பு விதி

**108 குற்றுயிர் அளபின் ஈறாம். எகரம்**
**மெய்யோடு ஏலாது. ஒந் நவ்வொ டாம். ஔ**
**ககர வகரமோடு ஆகும் என்ப** 53

குற்றுயிர் - அ இ உ எ ஒ எனும் உயிர்க் குறில்கள், அளபெடைகளில் மட்டுமே இறுதியில் வரும். 'ஏஎ இவனொருவன்' 'பாஅ வண்ணம்' என்றாற் போல் வரும். 'எ'கரம் - மெய்யுடன் சேர்ந்தும் ஈறாகாது. கெ, தெ, பெ என்ற வரிசை சொல்லுக்கு ஈறாக வருவதில்லை. நொ = ந் + ஒ = நொந்துபோ என்பது பொருள். ஓரெழுத்தொருமொழி. ஒரே இடம். ஔவுக்கும் இரண்டே இடம் - கௌ (க் + ஔ), வௌ (வ் + ஔ) என வரும்.

இவை மிக அருகி வருவன எனலாம். சேவக், இந்த், பரிசத், பாரத் எனத் தமிழில் சொல்லிறுதியில் வல்லினம் நில்லாது. சேவகம், இந்து, பரிசத்து, பாரதம் என இவை போல்வன தமிழாக்கப்படும். காசிநாத் தமிழன்று; காசிநாதன் தமிழ் ஆகும். விவேக் தமிழன்று - விவேகம் தமிழாக்கம். முதனிலை, இறுதிநிலை, இடைநிலைகளை வைத்துத் தமிழையும் பிற மொழிச் சொற்களையும் பிரித்தறியலாம்

## உயிர்மெய் எழுத்தில் உயிரும் மெய்யும் ஒலித்து நிற்கும் இடம்

**109 நின்றநெறி யேஉயிர் மெய்முதல் ஈறே** 54

உயிர்மெய்யில் முன்னுள்ளது எது? ஒற்று; பின்னுள்ளது எது? உயிர். நின்ற நெறியே - அவ்வாறு ஒலித்து நிற்கும் முறைப் படியே மெய் முதல்; உயிர் ஈறு ஆகும்(க் + அ = க). மெய் முதல் உயிர் ஈறு என மாற்றிக் கொண்டுகூட்டவேண்டும். உயிர்மெய் என இரண்டொலி சேர்ந்த, ஓர் எழுத்துவடிவம் ஆதலின், ஒரே எழுத்துவடிவமாயினும் பிரித்துணர வேண்டிய தாகிறது. படகு - எது ஈறு? 'கு' -அதிலும் க் + 'உ' ஈறு. கடல் - முதல் எழுத்து'க'. ஆயினும் க் + அ எனப்பிரித்து, உணர வேண்டிய இடமும் உள.

# சொல்லின் இடையில் மெய்யெழுத்துக்கள் ஒன்றன்பின் ஒன்றாய்க் கலந்து நிற்கும் விதம் இடைநிலை மெய்ம்மயக்கம்

**110 கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம்**
**மெய்ம்மயக்கு; உடனிலை ரழஒழித்து ஈரெட்**
**டாகும்; இவ் இருபால் மயக்கும் மொழியிடை**
**மேவும் உயிர்மெய் மயக்கு அள வின்றே 55**

தமிழ்ச் சொற்களில் முதலில் நிற்கக் கூடியவை, இறுதியில் நிற்கக்கூடியவை, இடையில் கலந்து நிற்கக் கூடியவை என எழுத்துக்களை வரையறைப்படுத்தியிருப்பது, வேற்று மொழிகளிற் காணாதது. இவை தமிழ்ச் சொற்கட்டமைப்பை உணர்த்துகின்றன. இதனால் தமிழ்ச் சொல் அல்லாதனவற்றைப் பிரித்தறியலாம்.

இடைநிலைமெய்ம்மயக்கம் யாது? பக்கம், கச்சை. ப+க்+க்+அம், க+ச்+ச்+ஐ. இதில் இரண்டு'க்', 'ச்' சேர்ந்து வருவதே உடனிலை மெய்ம்மயக்கம். க,ச,த,ப நான்கு மெய்யும் உடனிலை மெய்ம்மயக்கமாகவே வரும். பக்கம் மெய்யும் உயிர்மெய்யுமாக வரினும், மெய்களே சேர்ந்து நிற்கின்றன. வெற்றுநிலை மெய்ம்மயக்கம் யாது? திங்கள், மஞ்சள். தி+ங்+க்+அ+ள், ம+ஞ்+ச்+அ+ள். இனமான வேறு மெய்யெழுத்து சேர்ந்து நிற்பதால், இது வேற்றுநிலை மெய்ம்மயக்கம்.

ர, ழ இரண்டும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவே வரும். குர்ரம், தாழ்ழம் என்றிப்படி வாரா. பார்வை, வாழ்வு (பா+ர்+வ்+ஐ, வா+ழ்+வ்+உ). இவ்வாறு அடுத்து வருவது வேறு மெய். இதுவே வேற்றுநிலை மெய்ம்மயக்கம்.

கசதப - உடனிலை, ரழ - வேற்றுநிலை. இந்த ஆறும் தவிர, ஏனைய பனிரண்டும் தம்முன்தாமும் மயங்கும்; தம்முடன் பிறவும் மயங்கும். அதாவது உடனிலை மெய்ம் மயக்கமாகவும்; வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் வரும். (கற்றல், கற்கை - கற் + ற் + அ + ல் = இது உடனிலை; கற் + க் + ஐ = வேற்றுநிலை) (வேட்டல், வேட்+ட்+அ+ல், வேட்கை - வேட்+க்+ஐ. உடனிலை, வேற்றுநிலை இரண்டும் வந்துளது.)

கசதப நீங்கிய 14 எழுத்துத் தொகுதியும்(ஈரேழ் - பதி - னான்கு) வேற்றுநிலை மெய்ம்மயக்கம். ரழ நீங்கிய பதினாறும் (ஈரெட்டு-பதினாறு) உடனிலை மெய்ம்மயக்கம். இவை ஆறும் நீங்கிய எஞ்சிய பனிரண்டும் இவ் விருவகை மயக்கமாகவும் சொல்லினிடையே வரும்.

ஒரு சொல்லிற்குள் உயிருடன் உயிர் மயங்குவது என்று ஒன்றில்லை. உயிர்மெய் மயக்கத்திற்கு வரையறை இல்லை. அதாவது மெய்யுடன் உயிரும் உயிருடன் மெய்யும் மயங்குவதற்கு வரையறை இல்லை. (வாராய் - வ் + ஆ + ர் + ஆ + ய். மெய்யும் உயிரும். அல்லல் - அ+ல்+லல் - உயிருடன் மெய்.)

## வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்பு விதிகள்

### ஙக - வய மயங்குதல்

**111 ஙம்முன் கவ்வாம், வம்முன் யவ்வே** 56

ங - க சேர்ந்துவரும். வங்கம், நங்கை.
வ - ய சேர்ந்துவரும். தெவ்+யாது(பகை யாது)

### ஞந முன் வருவன சதய

**112 ஞந முன் தம்மினம் யகரமொடு ஆகும்** 57

ஞ,ச இனமாக மயங்கும். நத இனமாக மயங்கும். இவற்றின் முன் 'ய'வும் வரும்.

பஞ்சு, மஞ்சள்,உரிஞ்யாது (உரிஞ்சு).
பந்து, மந்தை. பொருந்யாது(பொருறு)

### டற முன் கசப

**113 டற முன் கசப மெய்யுடன் மயங்கும்** 58

ட முன் கசப மெய்கள் மயங்கும்; ற முன்னும் அவ்வாறே வெட்கம், கட்சி, தட்பம்.

கற்கை, பயிற்சி, பொற்பு

## ணன முன் டற கசஞபமயவ

**114 ணன முன் இனம் கச ஞபமய வவ்வரும் 59**

ணன இரண்டின் முன்னும் அவற்றின் இனமாகிய ட,ற,வும்; கசஞபமயவ வும் மயங்கும், கண்டது, விண்கலம், வெண்சாந்து, திண்ஞாலம், நுண் பொருள், தண்மலர், புண்யாது, எண் வன்மை . நன்று, வன்கண், நன்செய், நன் ஞமலி, புன்பொழுது, நன்மலர், பொன்யாது, பொன் வலிது.

## ம முன் பயவ மயங்கும்

**115 மம் முன் பயவ மயங்கும் என்ப 60**

ம முன் ப யவ வந்து மயங்கும்.
வம்பு, நிலம்யாது, கலம் வலிது.

## யரழ முன் மொழிமுதலாகும் பத்து மெய்யும் வரும்

**116 யரழ முன்னர் மொழிமுதல் மெய்வரும் 61**

யரழ முன் கசதநபமவயஞங பத்து மெய்யும் மயங்கும்.

வேய்-கடிது, சிறிது. நாய் தீது, பாய் நீண்டது, காய் பெரிது, காய் மாண்டது, சேய் வலிது, நோய்யாது, பேய் ஞான்றது, வேய்ங்குழல்.

இதுபோலவே வேர் அல்லது நீர் என நிறுத்தியும், யாழ் அல்லது வீழ் (விழுது) என நிறுத்தியும் பத்து மெய்யையும் கூட்டிப் பார்க்கலாம். இதில் வேய்யாது - உடனிலையாகி விடுகிறது. வேய்ங்குழல் - ஈரொற்றாகிவிடுகிறது. இவை 'சுருங்கச் சொல்லல்' உத்தி எனக் கொள்ள வேண்டும்.

## லளமுன் கசப வய மயங்கும்

**117 லளமுன் கசப வயஒன் றும்மே 62**

லள + கசப வய ஐந்தும் மயங்கும்

பால் கடிது, வேல் சிறிது, நூல் புதிது, வால் வலிது, நூல் யாது. இது போலவே தேள், வாள் என நிறுத்திச் சேர்த்துப் பார்க்கலாம்.

முற்சுட்டியபடி இவை யாவும் வேற்று நிலை மெய்ம் மயக்கத்திற்குச் சிறப்பு விதிகள். ர,ழ இரண்டும் மட்டும் வேற்றுநிலையாகவே வரும். உடனிலையாக வரா. இவை ஒரே சொல்லில் வரவேண்டிய மெய்ம் மயக்கங்கள். ஆனால் காட்டுக்கள் கிடைக்காமையால், தொடர்ச் சொற்கள் (நிலம் + வலிது என்பது போலக்) காட்டப்படுகின்றன.

## உடனிலை மெய்ம் மயக்கங்களாக வரும் எழுத்துக்கள் யாவை?

**118 ரழ அல்லன தம்முன் தாம்உடன் நிலையும்** 63

ரழ அல்லாதன 16 மெய்கள். இவை தம்முடன் தாம் மெய்யும் மெய்யுமாய் நின்று மயங்கும் (இரண்டாவது உயிர் மெய்யாய் நிற்கும்)

க, ங, ச, ஞ, ட ண, த, ந, ப, ம, ய, ல, வ,ள, ற, ன. பக்கம், இங்ஙனம், பச்சை, மஞ்ஞை, விட்டம், வண்ணம், அத்தன், வெந்நீர், வெப்பம், பொம்மை, அய்யர், வல்லினம், தவ்வை, பள்ளம், சுற்றம், அன்னம்.

## ஈரொற்றுடனிலையாய் நிற்கும் எழுத்துக்கள் யாவை?

**119 யரழஒற் றின்முன் கசதப ஙஞநம**
**ஈரொற் றாம்ரழத் தனிக்குறில் அணையா** 64

இதுவரை பார்த்த மெய்ம் மயக்கம் மெய்யும் உயிர்மெய்யுமாக வருவன. (பக்கம்-ப+க்+க்+அ+ம்) க்-என்பதற்கு அடுத்தது க உயிர் மெய் வந்து, அதில் முன்நிற்பது 'க்' ஆதலால் உடனிலை

மெய்ம்மயக்கமானது) ஈரொற்று உடனிலை என்பது, இரண்டும் ஒன்றாகவே நின்று மயங்குவது. தாய்க்குலம், ஈர்க்கு, தாழ்ப்பாள் என்பதில் ய்க், ர்க், ழ்ப் என இரண்டும் ஒற்றாய் நிற்றலால் இவை ஈரொற்று உடனிலையாகும்.

யரழ ஒற்றின் முன் கசதப ஙஞநம எட்டும் ஈரொற்றாய் மயங்கும. ர,ழ இரண்டும் தனிக்குறிலைச் சார்ந்து வாரா. நாய்க்கடி, பாய்ச்சி, வாய்த்தது, ஏய்ப்பு, வேய்ங்குழல், காய்ஞ்சினம், வேய்ந்தனன், பாய்ம்முறம். ஈர்க்கு, தேர்ச்சி, பார்த்தனர், ஆர்ப்பரிப்பு, ஈர்ங்குழல், கூர்ஞ்சினம், தேர்ந்தனர், ஈர்ம்புனல்.

வாழ்க்கை, வீழ்ச்சி, தாழ்த்தனர், காழ்ப்பு, பாழ்ங்கேணி, பாழ்ஞ்சேறு, வீழ்ந்தது, பாழ்ம்புனல்.

இவையாவும் நெடிலின் பின் வரக்காணலாம். அய்ந்து, உய்ந்தனர், நெய்க்குடம் எனத் தனிக்குறிலின் பின் யகர மெய் ஈரொற்றாய் வருகிறது. ர, ழ இரண்டும் தனிக்குறிலின் பின் ஈரொற்றாக வாரா.

## செய்யுளுள் இரண்டே இடங்களில் வரும் ஈரொற்றுடனிலை

**120 ல ள மெய்திரிந்த னண முன் மகாரம்**
**நைந்துஈ ரொற்றாம் செய்யுள் உள்ளே** 65

செய்யுளில் போலும் என்பது போன்ம் எனவும் மருளும் என்பது மருண்ம் எனவும் வரும். இவையே ல,ள மெய்திரிந்த ன,ண ஆகும். ன்ம், ண்ம் - என வருவதால் இறுதி மகாரம் ('ம'), ஈரொற்றாக நிற்கும். அம்மகாரம் அதனால், நைந்து (ஓசை குறைந்து) முன்பு கூறிய படி 'மகரக் குறுக்கம்' ஆகும். ம் - மெய்க்கு அரை மாத்திரை. இம்மகரக் குறுக்கத்திற்கோ இன்னும் குறைந்து கால் மாத்திரை மட்டுமே.

**முதனிலை இறுதிநிலை இடைநிலையில் வருமென விதித்தவை அவ்வவ் எழுத்துக்களின் பெயர்களைக் கூறும்போது இம் முறைகளில் மாறும்.**

**121 தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும்**
**இம்முறை மாறியும் இயலும் என்ப** 66

தம்பெயர் மொழியின் - பெயரைக் கூறுமிடத்து. ரழ வரும் - ர முதலில் வந்தது. லகார ளகாரமாய் - ல, ள முதலில் வந்தன. 'கவ் வாம்' - க் பின்னே வ் வந்தது. (வர்க்கம், சொர்க்கம் - தமிழல்ல என்பதை இதனால் அறியலாம்).

## எழுத்துப்போலி

ஓரெழுத்தைப் போல ஒலிப்பதால், வரி வடிவில் மாற்றி எழுதப்படுவனவும், எழுத்துமாறினும் பொருள் மாறாதனவும் எழுத்துப்போலிகள் ஆகும்.

## மொழி இறுதியில் வரும் போலி எழுத்து

**122 மகர இறுதி அஃறிணைப் பெயரின்**
**னகர மோடு உறழா நடப்பன உளவே** 67

பால்பகா அஃறிணை பெயர்கள் - ஒன்றன்பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொதுவாய் வருவன. மகர மெய்யீறு பெறும் இவை னகாரமாக மாறுவதுண்டு. உறழா - உறழ்ந்து(உடன்பாட்டு வினையெச்சம்). இவை பெரிதும் குறிலிணைப்பின் வரும். மரம் - மரன், நிலம் - நிலன், முகம் - முகன், அகம் - அகன், அறம் - அறன். கலம் - கலன். நலம் - நலன். வலம் - வலன், மடம் - மடன், உறழா நடப்பன - உறழாது (மாறாது) நடப்பன உள என்றும் பொருள்படுதலால், குடம், திடம், வடம், படம், மாடம், கூடம், வட்டம், குட்டம் என னகரமாக மாறாதன பல உள என அறிக.

சுரும்பு - சுரும்பர் (வண்டு), சாம்பல் - சாம்பர், பந்தல் - பந்தர், வண்டு - வண்டர் என வரும் இறுதிப் போலிகளையும் இதில் இணைத்து உரையாசிரியர் காட்டுவர்.

## மொழிமுதல் இடையில் எழுத்துப் போலியாய் வருவன

**123 அஐ முதல், இடை ஒக்கும் ச ஞ ய முன் 68**

மக்கள் வழக்காற்றின் விளைவு இது. ஐந்து என்பதை அய்ந்து, அய்ஞ்சு, அஞ்சு என மாற்றுவர். இவற்றுள் சில ஏட்டிலும் ஏறியதால் ஏற்கப்பட்டன. அ, ஐ இரண்டும் சஞய மூன்று மெய்களின் முன் வரும்போது ஒன்றற்கு ஒன்று போலியாய் ஒத்து வரும். பொருள் மாறாது. பசல் - பைசல், மஞ்சு - மைஞ்சு, பயல் - பையல், மயல் - மையல். அரயன் - அரையன். இவை மாறியும் வரும்: ஐந்து - அஞ்சு. சமையம் - சமயம். பழைமை - பழமை.

## எழுத்துப்போலி - தொடர்ச்சி
## ஐ, ய எழுத்துக்களின் பின்னே ந, ஞ வாக மாறுதல்

**124 ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி**
**ஞஃகான் உறழும் என்மரும் உளரே 69**

ஐகாரத்தின் பின்னும் யகர ஒற்றின் பின்னும் நகர மெய் (ந்), ஞகர மெய்யாக (ஞ்) மயங்கி அருகி வழங்குவதும் உண்டு என்பர்.

ஐந்நூறு - ஐஞ்ஞூறு. செய்ந்நின்ற - செய்ஞ்ஞின்ற. உரை யாசிரியர்கள் மேலும் காட்டுவன: நேயம் - ஞேயம், நண்டு - ஞண்டு. ஐந்து - அஞ்சு. உய்ந்தனன் - உய்ஞ்சனன். உலக வழக்கில் தோன்றி, இவை சில ஏட்டிலும் காணப்படுவன.

## எழுத்துப்போலியில் பிறிதொருவகை

125 **அம்முன் இகரம் யகரம் என்றிவை**
**எய்தின் ஐ ஒத்து இசைக்கும். அவ்வோடு**
**உவ்வும் வவ்வும் ஔவோ ரன்ன** 70

அ முன் இகரம் எய்தின் ஐஒத்து இசைக்கும் = வயிரம் - வைரம், தயிலம் - தைலம்.

மாற்றி எழுதினால் ஓசை ஒத்திசைக்கும் போலிகள் இவை. பைத்தியம் - பயித்தியம்.

அ முன் யகரம் எய்தின் ஐ ஒத்து இசைக்கும்- ஐந்து, அய்ந்து, நைந்து, நய்ந்து

அ, உ சேர்ந்து ஔபோல ஒலிக்கும் - கவுந்தியடிகள், கௌந்தியடிகள்,

இ, உ என்பன உடம்படுமெய் பெறுதலால் க + உ = கவு என ஆகிறது. அ + இ = அயி என ஆகிறது. ஐ - அய் போல ஒலிக்கும். ஐயர், அய்யர்.

'ஔ' போல 'அ'வ்வும் ஒலிக்கும்- ஔவையார், அவ்வையார், கௌவை, கவ்வை.

வடமொழியில் சந்தியக்கரம் - கூட்டெழுத்து உண்டு. அதுபோல அய்இ = ஐ, அவ்உ = ஔ ஆனதாகப் பொருள் கூறுவர். வடமொழிப் புலமையால் தமிழுக்கு வடமொழி இலக்கணத்தைச் சேர்க்க முயன்ற வினையின் விளைவு இது. தமிழில் சந்தியக்கரமே இல்லை. இவை 'ஒத்து இசைக்கும்' எனக் கூறப் பட்டுள்ளதை ஒருமுறைக்கு, மூன்று முறை படிக்கவும். ஒத்து ஒலிக்கும் - அவ்வளவே. இவை 'போலி' எனக் கூறப்படுவது தமிழ் வழக்கு.

## தமிழ் எழுத்துக்களைச் சாரியை சேர்த்து எளிதாக ஒலிக்கும் முறைகள்

**126 மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும்**
**ஐஔக் கானும் இருமைக் குறில்இவ்**
**இரண்டொடு கரமுமாம் சாரியை பெறும்பிற 71**

மெய்களை க், ங் என்றால் ஒலிப்பது கடினம். அகரம் சேர்த்து ககரமெய், சகரமெய் எனல் வேண்டும். மெய்யுடன் 'அ' சேர்த்து, க, ங, ச, ஞ எனவும் கூறலாம். நெட்டுயிர் - உயிர் நெடில்கள்- காரச் சாரியை பெறும். ஈகாரம், ஊகாரம். ஐ, ஔ இரண்டும் கான் சாரியையும் உடன் பெறும் - ஐகாரம், ஐகான், ஔகாரம், ஔகான். இருமைக்குறில் - உயிர்க்குறிலும் உயிர்மெய்க் குறிலும். இவை காரம், கான் உடன் கரம் எனும் சாரியையும் பெறும்.

அகரம், அகாரம், அஃகான்

மகரம், மகாரம்,மஃகான்

கா, பா, தா - உயிர்மெய் நெடில்களுக்குச் சாரியை உதவிகள் தேவைப்படா.

## தனிஎழுத்தும் மொழியிடை எழுத்தும்

**127 மொழியாய்த் தொடரினும் முன்னனைத்து எழுத்தே 72**

தமிழ் எழுத்தைக் 'க' எனத் தனித்துக் கூறினும் கடல் என ஒரு சொல்லில் வைத்துக் கூறினும், 'எண், பெயர், மாத்திரை' முதலான எதனிலும் ஒரு தன்மைத்தாகவே இருக்கும்.

முதல் எழுத்தாம் உயிர் பனிரண்டுக்கும், மெய் பதினெட்டுக்கும் இது பொருந்தும். குற்றியலிகரம், குற்றிய லுகரம், ஆய்தம் மூன்று மட்டும் சிறிது வேறுபடும். பிற சார்பெழுத்துக்கள் என்றவை வடிவம், ஒலிக் குறுக்கம், நீட்டம் பற்றியவையே. பக்கம், தங்கம், அகம் -'க' ஓசை சிறிது மாறினும் இவை பொருள் மாறுவதில்லை.

தனி எழுத்துக்களைக் கூட்டி ஒலித்தால், மலர்களால் தொடுத்த மாலைபோல, ஒரே தன்மையில் இருப்பது தமிழ் மொழியின் எளிமைக்குச் சான்று.

ஒரே எழுத்து, சொற்களிடையே வரும் போது பல விதமாக ஒலிப்பதும், பொருள் வேறுபடுவதும் பிறமொழிகளில் காணப்படும்.

தமிழில் எழுத்துக்கள் தெரிந்தால், கூட்டி ஒலித்து விடலாம். எடுத்துக்காட்டிற்கு, ஆங்கிலத்தில் 'A' என்ற எழுத்துத் தெரிந்தால் மட்டும் போதாது. மொழியாய்த் தொடரும்போது, வெவ்வேறு விதமாக ஒலிப்பதும் தெரிய வேண்டும். Calamity - Ca - அ; la - ஆ. Date - ஏ. மேலும் சாய்வொலிகளும் உள.

# 2. பதவியல்

## இயல் கருத்து நிரல்

பதம் என்பது சொல், மொழி எனப்படும். தமிழ்ச்சொல் கட்டமைப்புடையது. ஒரு இயந்திரத்தின் உறுப்புக்களைத் தனித்தனியே பிரித்துவிடலாம்; பிறகு பிரித்தபடியே சேர்த்தால் அதே பொறி அல்லது இயந்திரமாகிவிடும். இதில் ஒவ்வோர் உறுப்பும் ஒரு வேலையைச் செய்கிறது; ஒரு பொருளைத்தர உதவுகிறது. சில உருபுகள், இடைச்சொற்கள் கட்டமைப்புச் சிதையாமல், கட்டுமானத்திற்கு உதவுகின்றன. இவை தொல்காப்பியரால் பல இடத்தும் கூறப்படுவனவே. இங்கு 'தொகுத்துச்சுட்டப்'படுகின்றன.

பெயர்க் குறியீடுகளை வடமொழிமயமாக்குவது இடைக்கால வழக்கம். சொக்கரைச் சுந்தரர் என்றும் தாயுமானவரை மாத்துருபூதம் என்றும் பெருவுடையாரை பிருகதீசுவரர் என்றும் மாற்றியதால், அக் கடவுளர் தமிழ்க் கடவுளர் ஆகாது போய்விடுவாரல்லர். பதவியல் என்ற பெயர்கண்டு மயங்கிய நம் உரையாசிரியர்களும் 'காலக் கோட்பட்டு'ச் சிலவற்றை எழுதியிருப்பினும் உண்மைகளி னின்றும் பெரிதும் விலகிப் போயினரல்லர்.

தமிழ்ச்சொற்கட்டமைப்புப் போன்ற ஒன்றைப் பிற எம் மொழியிலும், இத்துணைத் துல்லியமாகக் காண்பதரிது. ஓரளவே அமைவன அவை. காண்கின்றான் = காண் + கின்று + ஆன். ஒவ்வொன்றும் அதாவது முதனிலை (பகுதி), இடைநிலை, இறுதிநிலை (விகுதி) தத்தம் பொருளைத் தருகின்றன. காண் - அடிச்சொல் (காட்சிக்குரியது). கின்று- நிகழ்காலம் காட்டுகிறது. ஆன் - உயர்திணை ஆண்பால் படர்க்கை ஒருமை வினைமுற்று என்பன யாவும் இதனால் உணரப்படும். மொழியின் இந்தமுறை 'ஒட்டுநிலை' எனும், என்று முள இளமைநிலை. காண்றான், ஓட்றான் எனப் பேச்சு வழக்கில் திரிக்கும் போது இவை உட்பிணைப்பு நிலைக்குப் போய், மொழி விளக்கமின்றிப் போகிறது. எனவேதான்

'கட்டளைத் தமிழ்' என்று, எழுத்துத்தமிழைச் சிதைக்காமல் போற்றுகிறோம். பேச்சுவழக்கில் ஆயிரம் திரிபுவரும். விளையாட்றாங்க, விளையாடுறானுங்க, விளையாட்றானுக, வெள்ளாட்றானுங்க, வெளையாட்டுறாங்க என வட்டார வழக்குகள் ஒலித்திரிபுபடும். இவை பேச்சோடு சரி, இப்பேச்சுத் தமிழே தமிழ் என்று, எழுதும்போதும் பின்பற்றுபவர்களை நாம் பின்பற்றக்கூடாது. நான்காயிரம் ஆண்டுகளாகத் தமிழ் சீரிளமைத் திறத்தோடு விளங்கி வருவதற்கு இவ்விருவகை வழக்கையும் நம் முன்னோர் தனித்தனி பேணிப் போற்றிவந்ததே அடிப்படை. தமிழ் தோன்றிய காலந்தொட்டு, இருவழக்காக வழங்கிவருகிறது என்பார் பேரறிஞர் கால்டுவெல். நாம் பேசுவதுபோல் எழுதி, தமிழைக் கொச்சைப்படுத்தக்கூடாது; எழுதுவதுபோல் பேசி கேலி கிண்டல் செய்வதும் முட்டாள்தனமாகும். இரண்டையும் இடமறிந்து பயன்படுத்தக் கற்பதே, தமிழின் அடிப்படை இலக்கணக் கல்வியாதல் வேண்டும். அவ் வகையில், **சிதைக்காமல் எழுதும் கட்டளைத் தமிழை விளக்குவதே 'பதவியல்' என்பதை உணர்வோமாக.**

**பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்**
**சொல்லின் ஆகும் என்மனார் புலவர்**

**– (*தொல். பெயரியல் 641*)**

ஒரு சொல் இருவகையாக அறியப் படும். பொருள் உணர்த்துவதே சொல். இன்ன பொருளென உணர்வது பொருண்மை. சொன்மை - அச் சொல்லின் அமைப்பை அறிவது. அதுவே பதவியலாக, தொல்காப்பிய வழியில் உருவாகியுள்ளது. பிறமொழிவழி வந்ததன்று இது.

**பதம் – சொல் இருவகைப்படும்.**

*1.* ஓரெழுத்தேயாயினும் அது வேறு ஒரு பொருளைத் தரின் 'சொல்' எனப்படும். அதை ஓரெழுத்தொருமொழி என்பர். எழுத்து இரண்டு முதலாகத் தொடர்ந்து, பொருள் தருமாயின் பதமெனப்படும். அது பகுபதம், பகாப்பதம் என இருவகைப்படும்.

*1.1* தமிழில் ஓரெழுத்தொருமொழிகள் 42. உயிர் நெடில் 6. ம - வில் நெடில் 6. த - வில் 5. ப - வரிசையில் 5. ந - விலும் 5.

க - வில் 4. வ - வில் 4. ச - விலும் 4. யா, நொ, து - 3. ஆக 42.

1.2 பகாப்பதம் ஏழு எழுத்துவரை அமையும். பகுபதம் ஒன்பது எழுத்துவரை வரும்.

### பகாப்பதம்

2. பகுக்க முடியாதது; பகுத்தால் பொருள்தராதது; 'இடுகுறி' போல் நிற்கும்; ஒரே சொல்லாய் முடியும். இவ்வாறு பெயர் வினை இடை உரிச்சொற்களில் வருவன பகாப்பதமாம்.

### பகுபதம்

3. பகுபதம் பகுக்க முடிவது; பகுத்தால் பொருள் தருவது; காரணம் அறியக்கூடியது; ஒரே சொல்லாயினும் பல உறுப்புக்களையுடையது. பெயர்ப் பகுபதம் பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் (செயல்) என ஆறு வகைப்படும். காலங்காட்டும் தெரிநிலை வினை பகுபத மாகும். இதில் குறிப்புவினையும் வினையாலணையும் பெயரும் அடங்கும். இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பகுபதமாகாது என்பதும் இதனால் அறியப்படும்.

### பகுபத உறுப்புக்கள் 6

4. பகுபதத்தில் ஆறு உறுப்புக்கள் உண்டு. இவை எல்லாமே ஒரு சொல்லில் அமையுமென்பதில்லை. அவையாவன: பகுதி (முதனிலை), விகுதி (இறுதிநிலை), இடைநிலை, சாரியை (இறுதிநிலைக்கு முன்வரும்), சந்தி, விகாரம் (முதனிலைக்குப் பின்பு வரும்) முதனிலை, சந்தி இரண்டும் வேறுபட்டும் வரும். ('விகாரம்' எனப்படும்.) இவற்றுள் அவ்வச் சொல்லுக்கு ஏற்பன யாவை எனப் பிரித்துப் பார்க்கலாம்; பிரித்ததைச் சேர்த்தால் அதே பதம் வந்து விடும். இவ்வளவு பதமாக இருப்பதாலேயே இது பதமெனப் பட்டது.

### பகுதி

4.1 ஒரு சொல்லின் முதலில், மேலும் பகுக்க முடியாமல் நின்று, பொருள் தரும் பகாப்பதங்களே பகுதியாய்

நிற்கும். இவற்றை அடிச் சொற்கள் எனலாம். இவற்றி லிருந்தே பகுபதங்கள் உருவாகும்.

**பகுக்கக் கூடியது போல இருந்தாலும் மைவிகுதிப் பண்புச் சொற்கள், சொல்லளவில் பகாப்பதங்களாய்ப் பகுதிகளே யாகும்.**

4.2 செம்மை, சிறுமை, சேய்மை எனக் கூறப்பட்ட பதினொன்றும் இவற்றுக்கு எதிர்ப்பதமான கருமை, பெருமை, அணிமை போல்வனவும் இவை போல்வன பிறவும் 'பண்புப் பகாநிலைப் பதங்களே'யாம். இவை பகுதியாகவே கருதப்படும். செந்தமிழ் = செம்மை+தமிழ். செம்மையை செம்+மை எனப் பிரிக்கலாகாது. மை விகுதிக்குத் தனிப்பொருள் இல்லை, அது பகுதிப்பொருள் விகுதி எனப்படும். எனவே செம்மையை, ஒரே பதமாய், பகுதியாய்க்கொண்டு, இலக்கணம் கூறப்படுகிறது.

**'மை' விகுதி – பண்புப்பெயர்கள் பகுதியாய் நின்று புணரும் விதம்**

4.3 மை விகுதி போகும் (செம்மை + தழல் = செந்தழல்). இடையிலுள்ள உகரம் இகரமாகும் (கருமை + அன் = கரியன்). ஆதி - முதலெழுத்து நீளும் (பசுமை - இலை = பாசிலை). அடி - முதலிலுள்ள அகரம் ஐ ஆகும். (பசுமை + தமிழ் = பைந்தமிழ்). தன் ஒற்று (மெய்) இரட்டிக்கும். (வெறுமை + இலை = வெற்றிலை). முன்னே நின்ற மெய்யெழுத்து, வேறொன்றாக மாறும். (வெண்மை + அல்லி = வெள்ளல்லி). இன எழுத்துமிகும். (வெம்மை + சூடு = வெப்பச்சூடு. ஏனைய புணர்ச்சி விதிகளும் இவை போன்ற திரிபுகளும் பலவாக வரும்.

**தெரிநிலை வினைமுற்றுப் பகுதிகள்**

5. இவை முன் மாதிரிகள். மொழி இறுதியில் வருமென்று முன்பு குறித்த 24 எழுத்துக்களில் (107), 'எ' தவிர-ஏனைய 23ம் வருமாறு, வரிசைப்பட இவை நட, வா, மடி, சீ (அ,ஆ,இ,ஈ) என எண்ணுமாறு கூறப்பட்டுள்ளன. 'செய்' எனும் வாய்பாட்டுப்படி அமைந்தவை இவை. ஏவல் வினையாய் நிற்கும். ஏனைய வினைகளுக்கு முதலில் நிற்கும் வினைப் பகாப்பதமுமாகும். (செய் + கிறு + ஆன் = செய்கிறான்).

வினைச் சொற்களின் அடிச்சொற்களாக வரும் அனைத்திற்கும், இவை முன்மாதிரிகள் ஆகும். இவை நடவாய், வாராய் என நின்று 'ஆய்' விகுதி குன்றிய தென்பர்.

**தன்வினையாக வரும் இவ் 'ஏவல்' கள் பிறரைக் கொண்டு செய்யும் பிற வினைப் பகுதிகளாகவும் வருதல்**

5.1 செய் - செய்வி. நட - நடப்பி. வா - வருவி. தா - தருவி. பிறரைச் செய்யச் சொல்வது இது. செய் - தான் செய்வது. செய்வி(த்தல்) - பிறரைக் கொண்டு செய்வது. பிறவினை 'ஈரேவல்' ஆவது அரிதாக வ்ரும். செய்விப்பி, வருவிப்பி என வருவதுண்டு. வி,முதல் பிறவினை - பி - அடுத்த பிறவினை. இவை தருவியாய், செய்வியாய், விருவியாய் என்று நின்று, ஆய் விகுதி குன்றியதென்பர்.

**வினைப்பகுதிகள் வேறுபடாமல் வருவதன்றி வேறுபட்டு வருவனவும் உள**

5.2. அடி + த்+த்+ஆன் = அடித்தான்.கட்டினன் = கட்டு + இன் + அன். இவை மாறவில்லை. வந்தனன் - வா,'வ' எனக் குறுகியது. கண்டனன் - காண், கண் என ஆனது. செத்தனன் - சா, செ என மாறியது. இவ்வாறு முன்பு விளக்கப்பட்ட பகுதி, வேறு வேறாகத் திரிதலும் உண்டு.

**தெரிநிலை வினைமுற்று விகுதிகள்**

6. இருதிணை ஐம்பால் மூவிடம் எண் என நான்கு வகையாலும் வருவன இவை. இவை சில குறிப்பு வினையிலும் பெயர்களிலும் வரக் கூடிய இடங்களில் வரும்.

இவை அன் ஆன், அள் ஆள், அர் ஆர், ப,மார் என 37 விகுதிகள் கூறப்பட்டுள்ளன. இவை போல்வன பிறவும் உள. இவற்றுட்சில இன்று வழக்கில் இல்லை. சில மலையாள மொழியில் உள.

**பெயரிடைநிலைகள்**

7. பெயர்களில் வரும் இடைநிலைகள் வரம்பில. நாம் அறியும் எடுத்துக்காட்டான ஒரு பெயரை, பகுதி விகுதியை மட்டும் முதலில் பிரித்தவிடலாம். பிறகு இடையில் நிற்பவற்றைப் பெயரிடைநிலை எனலாம்.

வினையிற் போலக் காலங்காட்டும் இடைநிலைகள் இதில் இல்லை. வினையாலணையும் பெயர்கள், வினையிலிருந்து

உருவாவதால், அதில் இடைநிலை முதலியவை வினைச் சொல் போலவே பிரித்தறியப்படும்.

**வினைச் சொற்களில் வரும் காலங்காட்டும் இறந்த கால இடைநிலைகள்**

*8.1* த்,ட்,ற் எனும் ஒற்றுக்களும் இன் என்பதும் ஐம்பால் மூவிடத்திற்கும் உரிய வினைச் சொற்களின் காலங்காட்டும் இடைநிலைகளாகும். இவ்வாறு கூறவே இருதிணையும் ஒன்று பல எனும் எண்ணும் அடங்கும். 'இன்' என்பதில் 'இ' மட்டும் வருவதும் 'ன்' மட்டும் வருவதும் 'இன்' என முழுவதும் வருவதுமுண்டு.

**நிகழ்கால இடைநிலைகள்**

*8.2* கிறு, கின்று, ஆநின்று மூன்றும் ஐம்பால் மூவிடத்தில், நிகழ்காலத்தை உணர்த்தும் இடைநிலைகளாகும்.

**எதிர்கால இடைநிலைகள்**

*8.3* ப,வ மெய் இரண்டும் ஐம்பால் மூவிடத்தில் வந்து எதிர்காலம் காட்டும். சில சொற்களில் இங்கு கூறப்பட்ட இடைநிலைகள் இல்லாமல், விகுதிகளே காலங்காட்டுவதும், பகுதிகளே இரட்டித்துக் காலங்காட்டுவதும் சில உள.

**காலங்காட்டும் விகுதிகள்**

*9.* று,றும் து,தும் - இவை இறந்த காலமும் எதிர்காலமும் காட்டும். யாம் சென்று, சென்றும். யாம் சேறும் , யாம் வருதும்

டு,டும் - இறந்த காலம் காட்டும். யான் உண்டு, அவன் உண்டும் .

கு,கும் - எதிர்காலம் காட்டும் யான் உண்கு, நீ உண்கும்.

மின், ஆய் - வம்மின்,நடப்பாய், வருவாய்.

வியங்கோள் - வாழி, வாழ்க,வாழியர்.

மார், இகர ஈறுகள் எதிர்காலம் காட்டும் : சென்மார், சென்றி.

ப-ஈறு- இறந்தகாலமும் எதிர் காலமும் காட்டும். உணர்ப, என்ப. 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றின் ஈறு - நிகழ்காலமும் எதிர்காலமும் காட்டும். - அவன் இதைச் செய்யும். அவன் இனி வரும்.

முற்றாக முடியும் எதிர் மறை, எச்சமாக முடியும் எதிர் மறை ஆகிய இவை முக்காலமும் காட்டும். இங்கு எதிர்மறை ஈறு'ஆ' என்பது - உண்ணான், உண்ணாது, உண்ணாத, உண்ணா.

இங்கு எடுத்துக் கூறாத இடைநிலைகள் சிலவுள: இசின். ம், பகுதி இரட்டித்து இறந்தகாலம் காட்டுவனசிலவுள. என்றிசினோரே - இறந்த காலம். என்மனார் - ம்- எதிர் காலம்.

புகு - புக்கான், உறு - உற்றான். பகுதி இரட்டித்து இறந்த காலம் காட்டின.

**வடமொழியாக்கச் சொற்கள்**

10. இலக்கணப்படி தமிழில் வந்து வழங்கும் ஆரியச் சொற்களே 'வடசொல்' எனப்படும். அது தமிழ்ப்படுத்திய சொல். தமிழ் ஒலிக்கும் உட்படுத்திய சொல். தமிழ் எழுத்து முப்பதுக்குள் அடக்கிக் கூறப்படும் சொல்.

ஆரிய மொழியில் அச்சு என வழங்கும் உயிர் 16.

ஆரிய மொழியுள் அல் என வழங்கும் மெய் 37

ஆக 53 எழுத்துக்கள்.

| | |
|---|---|
| தமிழில் உயிர் | 12 |
| தமிழில் மெய் | 18 |

ஆக 30 எழுத்துக்கள்.

ஆரியத்திற்கும் தமிழுக்கும் பொது எழுத்துக்கள் 25.

அவையாவன: அ,ஆ,இ,ஈ,உ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ பத்து உயிரெழுத்து.

க,ங,ச,ஞ,ட,ண,த,ந,ப,ம யரலவ, ள ஆக 15 மெய்கள்

கசடதப- வருக்க எழுத்துடையவை - ka, kka, ga, gga எனப்படும் வருக்க எழுத்துக்கள் தமிழில் இல்லை. முதலிலுள்ள 5 எழுத்துக்கள் மட்டும் தமிழில் உண்டு.

ஆரிய மொழி உயிர் 16 இல் தமிழிலும் உள்ளவை 10.

ஆரிய மொழி மெய் 37இல் தமிழிலும் உள்ளவை 15

ஆகவே இரண்டுக்கும் பொது வானவை 25 எழுத்துக்கள்.

உயிர் 16இல் ஆரியத்திற்கே உரியவை 6

கசடதப ஐந்தும் வருக்க எழுத்து 5 x 4 = 20.

இருபதில் முதல் ஐந்து தமிழிலும் உண்டு. எஞ்சியவை 15

மெய்யில் ஆரியத்திற்கே உரியவை7

ஆக ஆரியத்திற்கே உரியவை 28

இரு மொழிக்கும் பொது எழுத்தொலிகளால் வருபவை தற்சமம் எனப்படும் (கமலம், காரணம்)

ஆரியச் சிறப்பெழுத்து, தமிழ் ஒலிக்கு இசைய மாறி வருவது தற்பவம் எனப்படும். (ரிஷபம் - இடபம், ஸ்ருதி - சுருதி)

இவற்றுக்குச் சிலவற்றை மட்டும் நன்னூலாசிரியர் பதவியல் 19,20,21,22 ஆம் நூற்பாக்களில் தந்துள்ளார். இவையும் முன்மாதிரிகளே.

11. தமிழின் சிறப்பெழுத்துக்கள்

றனழளஓ - ஐந்தும் தமிழுக்கே உரியன.

வடமொழியில் ஏ,ஓ நெடில்கள் மட்டுமே உண்டு. உயிர்மெய் வடிவமும் உயிரளபெடையும் வடமொழியில் உண்டென்பர். ஆயினும் ஏனைய சார்பெழுத்துக்கள் எனக் கூறும் ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம் பிற குறுக்கங்கள் யாவும் வடமொழியில் காணப்படாதன.

இவை தவிர்த்தவை இருமொழிக்கும் பொதுவான எழுத்துக்கள்.

## பொதுக்குறிப்பு

தமிழ்மொழி ஒலிப்புக்கு மாறானவற்றையும் மரபுக்கு எதிரானவற்றையும், தமிழாக்கி எழுதுவதே முறையாகும். தமிழ் ஒலிமுறைக்குள் அவை வரவேண்டும்.

குறிப்பாகத் தனிமெய் மொழிக்கு முதலில் வராது. க்ரியா, ப்ரியா, ப்ரியமான - தவறு. கிரியா,பிரியா, பிரியமான எனல் வேண்டும். கேரளா, ஆந்திரா - தவறு. கேரளம், ஆந்திரம் எனல் வேண்டும். கைலாஸ் - கைலாசம், கயிலாயம்.

ரிஷபம் - இடபம்(காளை). ம்ருகம் - மிருகம். சமஸ்கிருதப்படி ரிஷப - தான். த்ருஷ்டி - திட்டி. புஜம்-புயம். பங்கஜம் - பங்கயம். தின் - தினம்.

சஷ்டி - சட்டி, விஷம் - விடம், சேனா - சேனை, சீதா - சீதை, ஆராதனா - ஆராதனை, ஹரன் - அரன், ஹரி - அரி, பக்ஷம் - பக்கம்.

மாலா - மாலை, சாலா - சாலை. (தமிழிலிருந்து சென்றவை).

லாபம் - இலாபம். லோபம் - உலோபம்.

பல தமிழ்ச் சொற்களை நாம் வடசொல்போல ஒலிப்பதுண்டு. பதஷ்டம் - பதறுதலால் வரும் பதற்றம் தான் அது.

அரங்கம் - ஆற்றிடைக் குறை. அரங்கத்தில் உள்ளவன் அரங்கன். இது தமிழ்ச்சொல், பழஞ்சொல். இதை ரங்கன் ஆக்கி,மீண்டும் அரங்கன் என்பதுபோல் பல உதாரணங்களும் காட்டப்படுகின்றன.

பொதுவாக வடசொற்களைத் தமிழாக்குவது பற்றி ஒரு பட்டியல் தெரிந்துகொள்வது நல்லது.

எந்த ஒரு பிற மொழிச் சொல்லையும் தமிழிலுள்ள முப்பது ஒலிகளுக்குள் கொண்டுவர வேண்டும். ஆங்கிலத்தில் எந்த ஒரு பிறமொழிச் சொல்லையும் 'ஆங்கிலப்படுத்தி' விடுவர். இயலாத இடத்தில் 'குறிகள்' மூலமும் - சாய்வெழுத்தின் மூலமும் வேறுபடுத்துவர்.

தொல்காப்பியர் முதல் கம்பர் வரை- முன்னும் பின்னும் நம் முன்னோர், பிறமொழிச் சொற்களைத் 'தமிழாக்கம்' செய்ய வழிகாட்டியுள்ளனர். நன்னூலாரின் 'வடமொழி யாக்கம்' ஒரு வழிகாட்டி எனலாம்.

# பதவியல்

## பதம் இருவகைப்படும்: பகுபதம், பகாப்பதம்

128 எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம்; அதுபகாப் பதம்பகு பதம் என
இருபா லாகி இயலும் என்ப 1

ஒலி அணுத்திரள் எல்லாம் எழுத்தாவதில்லை. இருமுகிறோம், தும்முகிறோம் - அவையெல்லாம் ஓசை எழுப்பினும் பொருளெதுவும் தாராமையால் எழுத்தாவதில்லை. பொருள் தரும் ஒலியே எழுத்தாகும்.

எழுத்துக்கள் சேர்ந்தாலும் பொருள்தராவிட்டால் 'இறிஞி' 'மிறிஞி' என்றால் - அவை சொற்கள் எனப்படா. எழுத்துக்கள் சேர்ந்து, 'பொருள்தரின்' - மட்டுமே, அது பதமாம் - சொல்லாகும். தனித்து என்பது ஓரெழுத்தே, தன்னை உணர்த்துவது மட்டுமன்றி, பிறிதொரு பொருளைத் தருவது. ஆ - ஓர் உயிர் நெட்டெழுத்து. ஆ - பசு. பிறிதொரு பொருளைத் தருவதால், தமிழில் இவை போல்வன ஓரெழுத்தொரு மொழிகள் எனப்படும். கூ - கூவு. பா - பாட்டு. சா - செத்துப்போ. நா - நாக்கு. தா - கொடு. து - உணவு, ஊ - இறைச்சி - அருஞ்சொற்கள்.

எழுத்துக்கள் 'தொடர்ந்து' நின்று பொருள்தருவனவே சொற்களாகும். கடவுள், இறைவன், தெய்வம், பகவன் எனவரும். இப்பதம் (சொல்) பகாப்பதம், பகுபதம் என இரண்டு பிரிவாகி இயங்கும் என்பர். இருபால் - இரண்டு பிரிவு.

## ஓரெழுத்து ஒருமொழிகள் யாவை? 42

129 உயிர்,மவில் ஆறும்; தபநவில் ஐந்தும்
கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்

**ஆகும் நெடில்; நொது ஆங்குறில் இரண்டோடு**
**ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின** 2

உயிர் நெடில் 6, ம - வரிசை நெடில் 6, தபந - நெடில்கள் ஐந்தைந்து; கவச - நெடில்கள் நான்குநான்கு; ய - நெடில் ஒன்று; ஆக 40. நொ, து - குறில் இரண்டு. ஆக ஓரெழுத்தொரு மொழிகள் 42.

உயிர்நெடில் - ஆஈஊஏஐஓ.ஊ - இறைச்சி (ஊன்). ஏ -அம்பு. ஓ - மதகுநீர்தாங்கும் பலகை.

ம - நெடில் - மா, மீ,மூ,மே,மை,மோ

த - தா,தீ,து,தே,தை

ப - பா,பூ,பே,பை,போ. பே - அச்சம்

ந - நா,நீ,நே,நை.நோ. நே- நேயம். நை - நைதல். நோ - நொந்துபோ.

க - கா, கூ, கை, கோ

வ-வா,வீ,வை,வெள. வீ-சாதல், முற்றியமலர்

ச - சா,சீ,சே,சோ. சே - எருது. சோ - அரண்

யா,நொ,து. து-உண்

இவை தவிர கெள, ந, தோ(தோற்றுப்போ) என்பன சிலவுள. (ந - சிறந்தது)

## தொடரெழுத்து ஒரு மொழிகளின் எழுத்து எல்லை

**130 பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்**
**எழுத்துஈறாகத் தொடரும் என்ப** 3

இரண்டெழுத்துமுதல் தொடர்வதே தொடர் எழுத்து ஒருமொழி. இச் சொற்கள் பகாப்பதமாயின் ஏழு எழுத்து வரை தொடரும்; பகுபதமாயின் ஒன்பது எழுத்து முடியத் தொடரும். (ஈறாக - முடியும் வரை)

**இரண்டெழுத்து முதல் வந்த பகாப்பதம்:** அறி, அறம், அவலம் இவை மூன்றுமே இயல்பானவை. ஒருத்தல், எழுந்திரும், எழுந்திருந்து என ஒருசொல் நீர்மைத்தாய் வருவனவற்றை வேண்டுமேல் காட்டலாம். தேனீ, நாடன், வாழ்நன், வேட்டுவன், படித்தனன், தவழ்ந்தனள், தவழ்கின்றனள் விரித்துரைத்தனர். இவை இரண்டெழுத்து முதல் வந்த பகுபதம்.

## பகாப்பதம் என்பது யாது?

**131 பகுப்பால் பயனற்று இடுகுறிஆகி**
**முன்னே ஒன்றாய் முடிந்துஇயல் கின்ற**
**பெயர், வினை, இடை, உரி நான்கும் பகாப்பதம் 4**

இனிப் பகுக்க முடியாது என்ற அடிச்சொல் நிலைக்குள் இருப்பது பகாப்பதம், படி, நட, பூ, காய் - இவற்றைப் பகுக்க முடியுமா. கூன் - பகாப்பதம், கூனி - பகுபதம் (கூன்+இ). அறி - பகாப்பதம். அறிஞன் பகுபதம். அறி+ஞ்+அன்.

பகுத்ததால் பயனற்று - பொருளின்றி, இடுகுறிபோல் - காரணம் காட்டமுடியாமல் நிற்பது. முன்னே ஒன்றாய் - அதாவது முதலில் அடிப்பாகம் ஆக ஒருசொல்லாய் நின்று. ஒன்றாய் நிற்பது - இரண்டாய்ப் பிரிக்க முடியாமல் நிற்பது. அவ்வாறு முடிவுற்று இருப்பது பகாப்பதம். 1. பெயர்ப் பகாப்பதம் - வானம், நிலம்,மனம், இடம். 2. வினைப் பகாப்பதம் - நடி, ஓடு, உண், பார். 3. இடைச்சொற்பகாப்பதம் - கு, இன், கிறு, போல் 4. உரிச்சொற் பகாப்பதம் - சால, உறு, தவ, நனி. உரிச்சொற்களும் இடைச் சொற்களும் பகாப் பதங்களாகவே இருக்கும்.

## பகுபதம் - வகையும் விளக்கமும்

**132 பொருள்இடம் காலம் சினைகுணம் தொழிலின்**
**வருபெயர், பொழுதுகொள் வினைபகு பதமே 5**

பெயர்ப் பகுபதங்கள்: பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என ஆறு அடிப்படைகளில் வரும்.

பொழுது கொள்வினை: காலம் காட்டும் தெரிநிலை வினைகள். இவை பகுபதமாகும்.

பொருட்பெயர்ப் பகுபதம்: செல்வர், தேனீ, அரசன்.

இடப்பெயர்ப் பகுபதம்: குறத்தி, மலைநாடன், ஆலங்குடியான், செங்கோடன்.

காலப் பெயர்ப் பகுபதம்: ஆதிரையான், இளவேனில், கோடை, இடியன்.

சினைப்பெயர்ப் பகுபதம்: கரிகாலன், விரிதலையன், தென்னங்கீற்று, வேர்ப்பலா.

குணப்பெயர்ப் பகுபதம்: நல்லப்பன், கருப்பன், வெள்ளையன், தவச்செல்வி.

தொழிற்பெயர்ப் பகுபதம்: பொற்கொல்லன், கன்னான், எழுத்தர், மடையன் (சமையற்காரன்).

தெரிநிலைவினைப் பகுபதம்: நடந்தான், நடந்த, நடந்து, நடந்திலன் - பலவாறு வரும்.

குறிப்பு, வினைப்பகுபதமும் இதில் அடக்குவர்: நல்லன், கரியன், கரிய, பெரிய - பலவாறு வரும்.

வினையாலணையும் பெயர்களையும் இதில் அடக்குவர்: நடந்தவனைப் பார்த்தேன் - தெரிநிலைவினையடிப்படையில் வந்தது.

கரியவனைப் பார்த்தேன் - குறிப்பு வினையடிப்படையில் வந்தது.

### பகுபத உறுப்புக்கள்

133 பகுதி விகுதி இடைநிலை சாரியை
**சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை**
**முன்னிப் புணர்ப்ப முடியும் எப் பதங்களும்** 6

தமிழச் சொற்கட்டமைப்பு இது. பகுதி - முதலில் நிற்பது (முதனிலை). விகுதி - இறுதியில் நிற்பது. இடையில் நிற்பது இடைநிலை. இடைநிலையை இறுதிநிலையோடு இணைப்பது

சாரியை. முதனிலைக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது சந்தி. பகுதியோ, சந்தியோ திரியக்கூடும். அவை விகாரம் எனப்படும். இவை ஆறையும் ஆராய்ந்து, பிரித்துப் பார்த்து, மீண்டும் பொருந்தக்கூடியவற்றை முறைப்படி சேர்த்தால், தமிழில் எவ்வகைச் சொல்லும் முழுமை பெற அமையும்.

பேசி - பேசு + இ. முதனிலை + இறுதிநிலை (பகுதி + விகுதி)

பேசினான் - பேசு + இன் + ஆன் முதனிலை + இடைநிலை + இறுதிநிலை

அறிஞன் - அறி + ஞ் + அன் முதனிலை + இடைநிலை + இறுதிநிலை

உண்டனன் - உண் + ட் + அன் + அன் (இறுதிநிலைக்கு முந்தியது அன் சாரியை)

உடுத்தனன் - உடு+த்+த்+அன்+அன். பகுதி + சந்தி + இடைநிலை + சாரியை + விகுதி.

வந்தனன் - வா என்ற பகுதி வ எனத்திரிந்தது விகாரம்

வா + த் (இது ந் எனத் திரிந்தது சந்தி திரிந்தது)+த் - இடைநிலை. அன் - சாரியை, அன் விகுதி.

பகுதி திரிந்த விகாரம், சந்தி திரிந்த விகாரம் இரண்டுமே வந்துளது.

எல்லாச் சொற்களிலும் எல்லா உறுப்புகளும் வரும் என்பதில்லை.

முதனிலை (பகுதி) எப்போதும்முழுச்சொல்லாக - அடிச் சொல்லாக - பகாப்பதமாகவே இருக்கும்; இருக்கும்படிதான் பிரிக்க வேண்டும். வருகின்றான் - இதற்கு 'வா' என்பதே பகுதி. அது வரு எனத்திரிந்தது. கண்டனன் - காண் என்பதே பகுதி. அது கண் எனத்திரிந்தது.

இவற்றுள் விகாரம் - சொல்திரிபு, புணர்ச்சி பற்றியது. சந்தி, சாரியை - சொல்லுறுப்புக்களை இணைக்கவருவன. பகுதி, இடைநிலை, விகுதி என்பனவே அடிப்படையானவை. பாடினன் - பாடு + இன் + அன். பாடுவான் - பாடு + வ் + ஆன். கலைஞன் - கலை + ஞ் + அன். தலைவன் - தலை + வ் + அன்.

## முதனிலையாம் பகுதி பகாப்பதமாகவே இருக்கும்

**134 தத்தம்**
**பகாப்ப தங்களே பகுதி யாகும் 7**

முதனிலை (பகுதி) என்பது முழுச்சொல்லாக, ஆனால் பகுக்க முடியாததாக இருக்கும். அதாவது அதனதன் பகாப்பதமே, அதன் பகுதியாகும். வாழ்நன் - வாழ் + ந் + அன். இதில் 'வாழ்' ஓர் அடிச்சொல், முழுச்சொல், அது மேலும் பகுக்க - பிரிக்க முடியாது. வந்தான் - 'வா' பகுதி எனல் வேண்டும். வ - பகுதியாகாது. அது ஒரு சொல்லன்று. வா - தான் வ ஆக விகாரம் பட்டது. கண்டனன் - காண் வினைப்பகுதி. கண்ணன் - கண் பெயர்ப்பகுதி: பகுதி தவிரித்தவை அதன் உறுப்புக்களே. அவை ஒரு காரணம் கருதி இணைக்கப்படுவன.

## பண்புப் பகுதிகள் முழுச்சொல்லாகுமா?

**135 செம்மை சிறுமை சேய்மை தீமை**
**வெம்மை புதுமை மென்மை மேன்மை**
**திண்மை உண்மை நுண்மை இவற்றெதிர்**
**இன்னவும் பண்பின் பகாநிலைப் பதமே 8**

முதனிலை யாவும் பகாப்பதமாகவே இருக்கும் எனக்கூறி முடித்ததும் ஓர் ஐயம் எழும். அடைமொழிகள் பகாப்பதம் - சொல்லாகமா? செந்தழல் - இதன் பகுதி செம் + தழல் ஆகலாமா? பைந்தமிழ்- பைம் + தமிழ் எனப் பிரிக்கலாமா? வெஞ்சுடர் - வெம்+சுடர். நற்றமிழ் - நல்+ற்+தமிழ் ஆகுமா? மிக எண்ணிப் பார்த்து, பகுதி மட்டும் - பகாப்பதமாய் - மேலும்

பகுக்க முடியாத பதமாய் (பொருள்தரும் அடிச் சொல்லாய்) இருக்க வேண்டும் என்றார். சில இடங்களில் - அதுவும் பண்புப் பெயர்களில், அடைமொழியாய் வரும்போது எப்படிப் பிரிப்பது? முழுச்சொல்லாகவே பிரிக்க இது வழி காட்டுகிறது. செம்மை முதலிய பதினொன்றும் பண்புப் பெயர்கள். இவற்றெதிர் இன்னவும் - இவற்றுக்கு எதிர்ச்சொற்களும் இவை போல்வன பிறவும். கருமை, பெருமை அணிமை நன்மை என்பன பலவுள. இவை பகாநிலைப் பதமாகவே. கருதப்படும். கரு + மை. வெண் + மை என மை விகுதி பிரிக்கக் கூடுமேனும், அவ்விகுதி கருமையின் தன்மை எனப் பகுதிப்பொருளையே தருதலால, அதனை ஒரு சொல்லாகவே கொள்வர் .'மை' விகுதியைப் பகுதிப் பொருள் விகுதி என்பர். அதற்கு வேறு பொருள் இல்லை. அதனால் செம்மை + தமிழ் + செந்தழல், பசுமை + தமிழ் = பைந்தமிழ், வெம்மை + சுடர் = வெஞ்சுடர் என்றே பிரித்து, அவை அடைமொழியாகும் போது, இவ்வா றெல்லாம் திரியும் என்பர்.

## பண்புப் பெயர்கள் அடைமொழி வடிவாய்த் திரியும் விதிகள்

**136 ஈறு போதல் இடைஉகரம் இய்யாதல்**
**ஆதி நீடல் அடிஅகரம் ஐ ஆதல்**
**தன் ஒற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்**
**இனம்மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே** 9

தண்ணனி - தண்மை அளி; 'மை' விகுதி போனது. இவற்றில் முதனிலையாம் பண்புப்பெயர் திரிந்தது, அடைமொழியாகப் புணரும் போது, உடம்படுமெய் பெறுதல், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுதல் முதலான புணர்ச்சிவிதிகளையும் பெறும். இங்கே கூறுவன, பண்புச்சொல் திரியும் விதிகள் மட்டுமே.

நுண்மையில் மை ஈறுபோய், நுண்திறம் ஆகும். கருமையில், கரு - கரி ஆவது இடையிலுள்ள உகரம் 'இ' ஆதல். பாசியில் பசுமையின் ஈறுபோய், ப முதல் நீண்டு பா ஆனது. பைந்தமிழ் - பசுமையிலுள்ள ப பை ஆனது (அடி அகரம் ஐ ஆதல் இது).

வெற்றிலை - வெறுமை + இலை. வெற்ற - என ஒற்று இரட்டித்தது சேதாம்பல் - செம்மை + ஆம்பல். இறுதி மை கேட்டு 'செம்' ஆகி, முதல்நீண்டு சேம் ஆகி, முன்நின்ற ம,த ஆகி (அதாவது முன்நின்ற மெய் திரிந்து), 'சேத்' ஆகி, ஆம்பல் வந்து புணரும்போது மெய்யில் உயிர் ஏறி, சேதாம்பல் ஆனது. கரியன் = கருமை + அன் = மை கெட்டது. கரு, க்ரி ஆனது. அன் சேரும் போது ய் உடம்படுமெய் வந்தது. பைந்தமிழ் - பசுமை + தமிழ். பசுமையில் மை ஈறு கெட்டு, இடைநின்ற 'சு' வும் கேட்டு, ப - என்பது பை ஆகிப் தமிழ் வருமொழியாததொல் 'ந்' என்று அதன் இனவெழுத்து மிகுந்து, பைந்தமிழ் ஆனது.

## தெரிநிலை வினைப்பகுதிகள்

**137 நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை**
**நொப், போ, வௌ, உரிஞ், உண், பொருந், திரும், தின்,**
**தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகென்று**
**எய்திய இருபான் மூன்றாம் ஈற்றவும்**
**'செய்' என் ஏவல் வினைப்பகாப் பதமே** 10

தெரிநிலை வினை காலம் காட்டும் வினை. அதன் பகுதிகளுக்கு முன்மாதிரிகளாக 23 சொற்கள் இங்கு தரப் பட்டுள்ளன. இவை 'செய்' என்னும் வாய்பாடு போல்வன. நட, வா, போ என்றால் 'செய்' என்பதுபோல் இல்லையா? இவை பகுதியாய் வரும் பகாப்பதங்கள். நட என்பதை மேலும் பகுக்கவோ, சுருக்கவோ முடியாது. 'செய்து' என்பதை வாய்பாடாகக் கொண்டால் நடந்து, வந்து என்பன அடங்கும். அவை பகுபதங்களாகும். நடந்து என்பதன் பகுதி நட; வந்து என்பதன் பகுதி வா.

'செய்' என்று ஒருவரை ஏவலாம். அது ஏவல் வினைப் பகாப்பதமாகிய பகுதி. அதிலிருந்து செய்தான், செய்து, செய்த, செய்யாத எனப் பல சொற்கள் உருவாகும். அவ்வாறு வினைச்சொற்களாக வரும்போது 'செய்' என்னும் ஏவலும், 'செய்' என்னும் வினைச்சொற் பகுதியும்' என இரண்டும்

அடங்க, 'செய்' என் ஏவல் , வினைப்பகாப்பதம்' என்று கூறினார்.

இவை முன்பு சொல்லின் இறுதியல் வருமென்று கூறப் பட்ட 24 எழுத்துக்களின் அடிப்படையில் கூறப்பட்டுள்ளன. 'ஆவியும் ஞணநமன யரல வழள, என்னும் மெய்களும் குற்றியலுகரமும் மொழிக்கு ஈறாக வரும் ' என்றார் முன்பு (107). இவற்றுள் 'எ' தனித்துத் தன் பெயர் கூறும்போது 'எ' என வினவும் போதும் மட்டும் ஈறாவதாகக் கருதலாம். அதை விடுத்து, முன்னமே காட்டியவாறு, மற்ற 23 ஈறாகும் எழுத்துக்களின்படி இவை வரிசைப்படக் கூறப்பட்டுள்ளன. நட (அ), வா(ஆ). மடி(இ) சீ(ஈ) இவ்வாறு இவை கூறப் பட்டுள்ளன. நடவாய், வாராய் என்பனவே ஏவலாகும். இவை 'ஆய்' குறைந்து நிற்கின்றன. இவை வினைச் சொற் பகுதியாகும் போது நடந்தான், வந்தான், மடித்தான், சீத்தான் என இவ்வாறு அஃகினான் (சுருங்கினான்) முடிய உதாரணம் காட்டுவர்.

பொதுவாக இவை 23ம் வினையின் அடிச் சொற்கள். இவை தவிர்த்த அடிச் சொற்களும் பலவுள. இவ் அடிச்சொற்கள் அடித்தான் - அடி என் மாறாமல் வருவனவும் தருவான் - தா என்று திரிந்து வருவனவும் எனப்பலவாறு வரும்.

## ஏவல் பகுதி பிறவினையாதல்

**138 செய்என் வினைவழி விப்பி தனிவரின்**
**செய்விஎன் ஏவல் இணையின் ஈரேவல் 11**

செய் - தன்வினை. செய்வி - பிறவினை. செய்விப்பி - ஏவல்மேல் ஏவும் வினை. நட - தன்வினை. நடப்பி - பிறவினை (பிறனை நடக்கச்செய்). நடப்பிப்பி (அடுத்த ஏவல், அருகி வரும். ). ஒரு பொருளைத் 'தருவிப்பது', 'செய்விப்பது' எல்லாம் பிற வினைகள். இவற்றை ஏவும்போது நடப்பியாய், வருவியாய் என ஒரு பிறவினை வருவதே பெருவழக்கு. வருத்தினேன் - நானே செய்தேன்; தன்வினை. வருவித்தேன் - பிறரைக் கொண்டு செய்தேன்; பிறவினை. வருவிப்பித்தேன் - மிக அரிய வழக்கு.

தருவியாய், வருவியாய் - என்பன ஆய்விகுதிகுன்றி தருவி, வருவி என நிற்கும்.

## வினைப்பகுதிகள் திரிந்து வேறுபடுவதுண்டு

**139 விளம்பிய பகுதிவேறு ஆதலும் விதியே 12**

நட, வா முதலியனவாகக் கூறப்பட்ட பகுதி, சிற்சில வேறுபாட்டுடன் திரிந்து வருவதும் இலக்கணப்பாற்படும்.

வா என்னும் பகுதி வந்தான், வருகின்றான் என வேறுபடும். தா - தந்தான், காண் - கண்டான் என வரும், செல், சேல் ஆகிச்சேறல் ஆகும். சா - செத்தான் என மாறும். பகுதிகள் இதுபோல் மாறினும் வ, வரு பகுதியாகா; வா என்பதே பகுதியாகும். இவை பகுதி திரிந்த விகாரம்.

## தெரிநிலை வினைமுற்று விகுதிகள்

**140 அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார்**
**அஆ குடுதுறு என்ஏன் அல்அன்**
**அம்ஆம் எம்ஏம் ஓமொடு உம்மூர்**
**கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்**
**ஈயர் கயஉம் என்பவும் பிறவும்**
**வினையின் விகுதி பெயரினும் சிலவே 13**

அன், ஆன் - ஆண்பால் படர்க்கை. வந்தனன் வந்தான்.

அள், ஆள் - பெண்பால் படர்க்கை. வந்தனள், வந்தாள்.

அர், ஆர், ப, மார் - பலர்பால் படர்க்கை. வந்தனர், வந்தார், என்ப, என்மரும் உளரே, என்மார் இவரே.

அ, ஆ - பலவின்பால் படர்க்கை. பறந்தன (பறவைகள்). பாடா இப் பறவைகள்.

குடுதுறு - தன்மை ஒருமையில் வருவன. சில அருகிய வழக்கு - யான் செய்கு, யான் உண்டு (உண்டேன்), யான் வருந்து, யான் சேறு (சென்றேன்) - (மாலயாளத்தில் இன்றுமுளது). இஃது

அஃறிணைப் படர்க்கை ஒருமையிலும் வரும். அது பறந்தது, அது பேசிற்று, அது இனிமைப் பொருட்டு (பொருளை உடையது).

என், ஏன் - தன்மை ஒருமை: எடுத்தனென், எடுத்தேன் (என் என்பதே முன்னையது. தன்மையில் வரும் ).

அல், அன் - தன்மை ஒருமை: யான் நடப்பல், வேண்டுவல். யான் நடப்பன், வருவன்.

(வருவென், நடப்பென் என வழங்கிய சங்ககால வழக்கு இன்று வருவன், நடப்பன் என ஆகிவிட்டது. )

அம், ஆம் - தன்மைப்பன்மை. எழுதுவம், எழுதுவாம். பாடுவம், ஆடுவம் வம்மின்! கூவுவாம், பாடுவாம் வருவீர்!

எம், ஏம், ஓம் - தன்மைப்பன்மை - கண்டனெம், கண்டேம், கண்டோம்.

கும் டும் தும் றும் - (இவை உம் ஊர் கடதற எனப்பட்டன) இவையும் தன்மைப்பன்மையில் வந்ததுண்டு: யாம் நடக்கும், பாடும், வருதும், சேறும் என வரும். ஐ, ஆய்,இ- முன்னிலை ஒருமை: வந்தனை, வந்தாய், வருதி. சென்றனை, சென்றாய், செல்லுதி.

மின், இர், ஈர்- முன்னிலைப் பன்மை: பார்மின், கேண்மின், வந்தனர், கேட்டனிர், வந்தீர், பார்த்தீர்,

ஈயர், க,ய - வியங்கோள் வினைமுற்று: நிலீயர், பெறீயர், வருக,வாழ்க, வாழிய.

உம் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று பெயரினும் சில என்றதால், இவற்றுட் சில ஈறுகள் பெயர்களிலும் வரும் என்பதாம். கண்ணன், கன்னான், கனிமொழியாள், இன்சொல்லாள், கம்பர், கருவூரார் என வருவன கொள்க. இவை கரியன், நல்லன், கரியான், நல்லான், சிறியாள், இளையாள் என இவ்வாறு குறிப்பு வினைமுற்றுக்களிலும் வரும்.

## இடைநிலைகள் - பெயர்களில் வருவன

**141 இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்**
**பகுதி விகுதி பகுத்திடை நின்றதை**
**வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனலே 14**

இலக்கணம் முன்னதா? இலக்கியம் முன்னதா? - இலக்கியந்தான் முந்தியது. இலக்கியம் என்பது இங்கு உலக வழக்கு, இலக்கிய வழக்கு எனும் இரண்டையும் குறிக்கும். இந்த இடத்தில் இலக்கியம் என்றால், எடுத்துக்காட்டு. அதாவது எது வழக்கிலுள்ளதோ, அதற்கே இலக்கணம் வகுப்பர்.எனவே பெயர்களில் முதனிலை, இறுதிநிலை இரண்டையும் முதலில் பகுத்துவிட்டால், இடையிலிருப்பதை இடைநிலை எனலாம். வினையாலணையும் பெயர் வினை வடிவத்திலிருந்து பிறப்பதால், காலம் முதலியன காட்டும். அப்பெயர்க்கு, இவ்விதி பொருந்தாது. வினைப்பெயர் - வினையாலணையும் பெயர். மகிழ்நன் - மகிழ்+ந்+அன், கலைஞன் - கலை+ஞ்+அன். கொல்+அன் = கொல்லன். பகுதி விகுதி மட்டும் வந்தன. ல் இரட்டித்தது புணர்ச்சிவிதி.

மடவன் - மடம்+வ்+அன். வந்தவன் - வா+த்+த்+வ்+அன். முதல் த் - ந் ஆனதும் வா - வ ஆனதும் விகாரம். இதில் த் இடைநிலை. இறந்த காலம் காட்டும்.

மடவன் - குறிப்பு வினையாலணையும் பெயர்.
வந்தவன் - தெரிநிலை வினையாலணையும் பெயர்.

பெயர்களில் இவ்வாறு வராது. பெயர்கள் பலவாறு பிரிக்கப் படுதலால், பொதுவாக எடுத்துக்காட்டு (இலக்கியம்) கண்டதற்கு என்றார். காப்பியம் - காப்பு + இயம். அறிவியல் - அறி+வ்+இயல்.

## வினைச் சொல் இறந்தகால இடைநிலைகள்

**142 தடற ஒற்று இன்னே ஐம்பால் மூவிடத்து**
**இறந்த காலம் தரும் தொழில் இடைநிலை 15**

த்ட்ற் இன் **நான்கும்** ஐம்பால் மூவிடத்தும் இறந்த காலம் காட்டும் வினைஇடைநிலைகள். ஆண்பால், பெண்பால், பலர் பால், ஒன்றன்பால், பலவின்பால். தன்மை முன்னிலை படர்க்கை.

படர்க்கை: படித்தான் - படி+த்+த்+ஆன், படித்தாள்,படித்தார், துடித்தது, துடித்தன.

தன்மை, முன்னிலை: படித்தேன், படித்தாய், உண்டேன், உண்டாய், கற்றேன், கற்றாய். ஓடினாள் - ஓடு+இன்+ஆள். 'இன்' வந்தது. வருந்தியது - வருந்து+இ+ய்+அ+து. 'இன்'னில் 'இ' மட்டும் வந்தது. ஆனது - ஆ+ன்+அ+து. 'இன்' னில் 'ன்' மட்டும் வந்தது.

## நிகழ்காலம் காட்டும் இடைநிலைகள்

**143 ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்**
**ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை 16**

இவை **மூன்றும்** ஐம்பால் மூவிடத்தும் வந்து, நிகழ்காலம் காட்டும். கிறு, கின்று, ஆநின்று. நடக்கிறான், நடக்கின்றான், நடவாநின்றான். ஆநின்று அருகியே வரும். பறக்கிறது என்பதைப் பன்மையாகச் சொல்லவேண்டுமேல் பறக்கின்றன என்றேவரும். பறக்கிறன - என வராது. 'கின்று' பெரிதும் பன்மைக்குப் பயன்படுகிறது. உயர்திணையில் போகிறான், போகின்றான், போகிறார்கள், போகின்றார்கள் என வரும். அஃறிணையில் போகிறது, போகின்றது என வரும். ஆனால் பலவின்பாலில் போகின்றன என்றே வரும். 'கிறு' வராது என அறிக.

## எதிர்காலம் காட்டும் இடைநிலைகள்

**144 பவ்வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது**
**இசைவினை இடைநிலை யாம் இவை சிலஇல 17**

ப, வ **இரண்டும்** ஐம்பால் மூவிடத்தில் எதிர்காலம் காட்டும் இவை தெரிநிலை வினை இடைநிலைகள்.

படிப்பான் - ப். பெறுவான் - வ்.

ஆனால் இது காறும் கூறிய இடைநிலைகள் சிலபோது வராது போகலாம். முதனிலையே காலம் காட்டுவதுண்டு. சிலபோது இறுதிநிலை காலங்காட்டும். பிற இடைநிலைகளும் சிலவுள.

## விகுதிகள் காலங்காட்டுதல்

**145 றவ்வொடு உகர உம்மைநிகழ் பல்லவும்,**
**தவ்வொடு இறப்பும் எதிர்வும் டவ்வொடு**
**கழிவும் கவ்வோடு எதிர்வும் மின் ஏவல்**
**வியங்கோள் இம்மார் எதிர்வும் பாந்தம்**
**செலவொடு வரவும் செய்யும் நிகழ்பு எதிர்வும்**
**எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே 18**

று, றும் - (நிகழ்வு அல்லவும்) இறந்தகாலமும் சென்று, சென்றும் (சென்றோம்)

எதிர்காலமும் காட்டும் - சேறு, சேறும் (செல்வோம்)

து, தும் - முன்சொள்ள இரண்டு காலமும் காட்டும் வருது வருதும் (வருவேள், வருவோம்). (எதிர்காலம்). வந்து, வந்தும், (வந்தேன், வந்தோம்) (இறந்தகாலம்)

டு, டும் - இறந்தகாலம். உண்டு, உண்டும் - (உண்டேன், உண்டோம்)

கு, கும் - எதிர்காலம். உண்கு (உண்பேன்) உண்கும், (உண்பேம்) பருகு, பருகும் (பருகுவேம்).

மின், ஏவல், வியங்கோள் ஈறுகளும், இகர ஈறும், மார் ஈறும் :

உண்மின், பாராய், உண், தின், உ்ண்க, வாழிய, வருதி, பேண்மார். இவை எதிர்காலம் காட்டும்.

'ப' ஈறு - இறந்த காலமும் எதிர்காலமும் - என்ப - என்றனர், என்று சொல்லுவர். உண்ப (உண்பார்) காண்ப (கண்பார்).

செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றின் ஈறு நிகழ் காலமும் எதிர்காலமும் காட்டும். அவன் இன்று உண்ணும்; அவன் இனி உண்ணும்

முற்று, எச்சவிகுதிகளுடன் புணரும் எதிர்மறை 'ஆ' கார ஈறு மூன்று காலமும் ஏற்கும். உண்ணா (நோன்பு) பாரா (முகம்) அவன் உண்ணான். உண்ணாத பையன்

புகு - புக்கான், தொடு - தொட்டான், உறு - உற்றான் = பகுதி இரட்டித்து இறந்தகாலம் காட்டின

என்றிசினோர் - இசின் : இறந்த கால இடைநிலை.

என்மர், என்மனார் - ம் எதிர்காலம் காட்டுகிறது.

எடுத்தோதாத இடைநிலைகள் இவை போற் சிலவுள.

## வடமொழியாக்கச் சொற்கள்

**146 இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும்**
**'அல்'லா அச்சு ஐவருக்கம் முதல் ஈறு**
**யவ்வாதி நான்மை ளவ்வாகும் ஐயம்**
**பொதுவெழுத்து ஒழிந்த நாலேழும் திரியும் 19**

ஆரிய மொழியுள் 'அச்சு' என வழங்கும் உயிர் 16.

ஆரிய மொழியுள் 'அல்' என வழங்கும் மெய் 37

அவ் உயிர் எழுத்துக்களில் ஏழாம் உயிர்முதல் நான்கும் ஈற்றில் நின்ற இரண்டும் - ஆக 6ம் ஒழித்து, மீதமுள்ள அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஓ,ஔ - பத்தும் தமிழிலும் உண்டு.

முப்பத்தேழு மெய்களுள், க ங ச ஞ ட ண த ந ப ம என்னும் பத்தும் யரலவ என்னும் நான்கும் 'ள'வ்வும் ஆக பதினைந்தும் தமிழிலும் உண்டு.

ஆகவே ஆரியத்திற்கும் தமிழுக்கும் பொது எழுத்துக்கள் 25.

தமிழில் மெய் வருக்க எழுத்துக்கள் இல்லை. ஒரே எழுத்தை நான்கு வகையக ஒலிப்பர். 'க' என்பது **Ka, Kka, Ga, Gga** என ஒலிக்கப்படும்.

உயிர் பதினாறில் ஆறும் கசடதப எனும் ஐந்து வருக்கங்களிலும் **(5 x 4 = 20)** முதலிலுள்ளவை 5ம் தவிர்த்த 15ம் முப்பதாம் மெய் முதலான எட்டனுள் ளகரம் ஒழித்த 7ம் ஆக 6+15+7=28ம் ஆரியத்திற்கே சிறப்பெழுத்து.

ஆரியச் சிறப்பு எழுத்துக்களைத் தமிழில் எழுதிக்காட்ட இயலாது. தமிழுக்கும் ஆரியத்திற்கும் பொதுவான எழுத்துக்களால் வரும் சொற்களை, அப்படியே தமிழிலும் எழுதி விடலாம்: கமலம், குங்குமம் எனக் காட்டுவர். இவையும் ஆரியத்தில் கமல், குங்கும் என்றே வழங்கும். அங்கு வீர் என்பது தமிழில் வீரன் ஆகும்; பீம் என்பர் நம் பீமனை. இறுதி ஒட்டுக்கள் தமிழாக்கம் செய்வன.

வடமொழிச் சொற்கள், தமிழ் எழுத்துக்களுக்கேற்பத் திரிபுற்று, தமிழாக ஆக்கப்படும். ஹரி - அரி, ஹரன் - அரன். ஸ்ருதி - சுருதி, க்ரியா - கிரியை.

பொதுவான எழுத்தாலாகி மாறாமல் வருவன - தற்சமம் என்றும் ஆரியச் சிறப்பெழுத்தாலாகி, தமிழில் மாறிவருவன - தற்பவம் என்றும் கூறப்படும்.

ஆரியமொழி - சமஸ்கிருதம். தமிழாக்கம் பெற்று - அதாவது தமிழ் வடிவத்தை ஏற்று - தமிழ் எழுத்தால் மாற்றி வழங்குவனவே 'வடமொழி' எனப்படும். தமிழ்ச் சொல்வகை நான்கு - இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என. இவற்றுள் வடசொல் என்பது, தமிழாக மாற்றப்பட்டுவிட்ட ஆரியச் சொல். இது தமிழ்ச்சொல் வகையில் ஏற்கப்படும். கமலம், சுருதி, அருத்தம், காரணம், பாக்கியம் எல்லாம் தமிழ்ச் சொல் வகையில் வந்து, 'வடசொல்' எனும் பெயரால் ஏற்கப் பட்டன. எந்தப் பிறமொழிச் சொல்லையும், தமிழ்ஒலிக்கு ஏற்ப மாற்றவேண்டும்; ஒலிமாறாமல், தமிழ் ஒலியாகவே உச்சரித்து எழுதப்படுபவை தமிழாக ஏற்கப்படுதலில் தவறில்லை. ஒலிக் கலப்பே ஒரு மொழியைச் சிதைக்கும். இயேசு, விவிலியம், யோவான், யாக்கோபு, குரான், நபிகள் நாயகம், சன்னல், காரணம், காரியம் என வழங்குவன தமிழ்ச் சொல் வகையில் ஏற்கப்படும்.

## ஆரியச் சிறப்பெழுத்தாலாகி, தமிழ் ஆக மாறுவதற்குச் சில சிறப்பு விதிகள்

**147 அவற்றுள்**
**ஏழாம்உயிர் இய்யும், இருவும். ஐ வருக்கத்து**
**இடையில் மூன்றும், அவ்வம் முதலும்**
**எட்டே யவ்வும் முப்பது சயவும்**
**மேலொன்று சடவும் இரண்டு சதவும்**
**மூன்றே யகவும் ஐந்திரு கவ்வும்**
**ஆஈறு ஐயும் ஈஈறு இகரமும்**

ஆரியச் சிறப்பெழுத்தாகிய ஏழாம் உயிர் இகரமும் இருவும் ஆகும். ரிஷபம் - இடபம். ம்ருகம் - மிருகம். ரிஷி - இருடி. த்ருஷ்டி - திட்டி.

ஐந்து வருக்கத்தில் இடைநின்ற மூன்றும் அவ்வவ் வருக்கங்களின் முதலெழுத்தாக மாறும், நாகம்,மேகம், விசயம், பீடம், தலம், தினம், பலன், பந்தம். இவ்வாறு வரும். சொல்லை உரப்புதல், கனைத்தல் எல்லாம் தமிழில் இல்லை.

எட்டாம் மெய் - 'ய்' ஆகும். அஜன் - அயன். புஜம் - புயம். பங்கஜம் - பங்கயம்.

முப்பதாம் மெய் மொழிமுதலில் ச, ஆகும். இடையில் ய ஆகும். சுலபம், மயானம். முப்பத்தொன்றாம் மெய் மொழிமுதலில் ச ஆகும்; இடையில் ட ஆகும். ஸஷ்டி, சட்டி, விடம், இடபம்.

முப்பத்திரண்டாம் மெய் மொழிமுதலில் சஆகும்; இடையில் த ஆகும். சேனை, வாதனை.

முப்பத்து மூன்றாம் மெய் மொழி முதலில் 'அ' ஆகும்; இடையில் க ஆகும். அரன், அரி, சிங்கம், பங்கம்.

முப்பத்தைந்தாம் மெய் இரண்டு 'க' ஆகும்.

பக்ஷம் - பக்கம். தக்ஷிணம் - தக்கணம். பொது எழுத்துள் மொழியிறுதி 'ஆ', 'ஐ' ஆகும்.

மாலா - மாலை. (தமிழ் மாலை வேறு), பாடசாலா - பாடசாலை. மொழி இறுதி ஈ, இகரமாகும் - ப்ரீ - புரி.

பல தமிழ்ச் சொற்கள் வடமொழியாகும். நம் வடையை வடா என்பர்; தோசையை தோசா என்பர். முற்றிலும் ஆரியச் சொற்கள்; மூலத் திராவிடம் தொட்டு வடமொழியில் ஏறிய தமிழ்ச்சொற்கள்; இரண்டு மொழியிலும் காணப்படும் பொதுச் சொற்கள் பல.

பவணந்தி முனிவர் சமஸ்கிருதச் சொற்களைத் தமிழாக்கம் செய்த, பழைய மரபை இலக்கணமாக்கியுள்ளார். 'வடசொற் கிளவி வடஎழுத்து ஒரிஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே' என்று (884) தொல்காப்பியர் சுருங்கச் சொன்னதை, இவர் விரிவுபடுத்தியுள்ளார். வடஎழுத்து ஒரீஇ - பிறமொழி ஒலி யோசையைக் கலக்காதே என்பது இது. எழுத்தொடு புணர்ந்த - தமிழ் எழுத்தொலிப்படி எதையும் எழுது என்பது இது. சனவரி, சூன் என எழுதுக என்பதாம்.

## மேலும் சில வடமொழியாக்கம்

**148 ரவ்விற்கு அம்முதல் ஆம், முக் குறிலும்.**
**லவ்விற்கு இம்முதல் இரண்டும், யவ்விற்கு**
**இய்யும் மொழிமுத லாகிமுன் வருமே 21**

ர - விற்கு அம்முதல் முக்குறிலும் ஆம் (அ,இ,உ) ராட்சசன் - அரக்கன். ராமன் - இராமன். ரோமம் - உரோமம். (அரங்கு தமிழ்ச்சொல். அரங்கன் எனக் காட்டுவது தவறு)

ல - விற்கு இ, உ இரண்டும் ஆம். லாபம் - இலாபம். லோபம் - உலோபம். ய - விற்கு இ முதலில் வரும். யட்சன் - இயக்கன்.

**149 இணைந்தியல் காலை யரலக்கு இகரமும்**
**மவ்வக்கு கரமும் நகரக்கு உகரமும்**
**மிசைவரும் ரவ்வழி உவ்வும் ஆம்பிற 22**

ஆரிய மொழியில் இரண்டெழுத்து இணைந்து ஒரே எழுத்துப் போல வரும்போது, பின்னே வரும் யரலக்கள் முன் 'இ' கரம் வரும். வாக்ய - வாக்கியம், பாக்ய - பாக்கியம். வக்ர - வக்கிரம், வச்ர - வச்சிரம். சுக்லம் - சுக்கிலம்

இதில் 'ர'கரத்திற்கு முன் உகரமும் வரும். அர்த்த - அருத்தம். கர்த்த - கருத்தன். மகர வகரங்களுக்கு முன் உ வரும். பத்மம் - பதுமம். 'ந' கரத்தின் முன் அ வரும். அரதநம்

தமிழ் ஒலிக்கேற்ப மாறும் இவை மேலும் பல வகைப்படும். 'பிறமொழிச்சொல் தமிழாக்கம் - நெறிமுறை மரபுகள்' என ஆய்வு செய்யலாம். தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் எனப் பழந்தமிழ் நூல்கள் நூற்றுக் கணக்கில் வழிகாட்டியுள்ளன. லக்ஷ்மண் என்பதை இலட்சுமணன் என்பர். கம்பரோ 'இலக்குவன்' என முழுமை பெறத் தமிழாக்குவார்.

## தமிழின் சிறப்பெழுத்தும் பொது எழுத்தும்

**150 றனழஎ ஒவ்வும் உயிர்மெய்யும் உயிரளபு**
**அல்லாச் சார்பும் தமிழ்; பிற பொதுவே** 23

ற, ன, ழ மூன்று மெய்யும் எ, ஒ உயிர்க்குறில் இரண்டும் தமிழுக்கே உரியவை. பத்து என நன்னூலார் சார்பெழுத்தை, அவை வரும் இடம் நோக்கி முன்னே கூறினாரல்லவா? அவற்றுள் உயிர்மெய்யும் உயிரளபெடையும் ஆரிய மொழியிலும் உண்டு. அவை அல்லாத ஆய்தம், ஒற்றளபெடை, குற்றிய லிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என எட்டும் தமிழில் மட்டுமே காணப்படுவன.

மற்றையவை ஆரியத்திலும் உண்டு. அதனால் அவை பொது எழுத்துக்களாகும்.

# 3. உயிரீற்றுப் புணரியல்

## இயல் கருத்து நிரல்

- ••• தமிழ்மொழி எளிமை நோக்கியது; இளமை நோக்கியது; இனிமை நோக்கியது.
- •• தமிழ் இலக்கணம் போன்ற கட்டமைப்பு வேறு எம் மொழிக்கும் இல்லை. இது வெளிநாட்டவரும் சொன்னது.
- • தமிழ் இலக்கணம் நுண்மாண் நுழைபுலத் தொகுப்பு. ஆராய்ச்சியாளர்க்கு உரியவை; அன்றாட நடைமுறைப் பயன்பாட்டுக்கு உரியவை என இரண்டும் கலந்துள. தமிழ் மாணவர்கள் நடைமுறைப் பயன்பாட்டுத் தமிழை முதலில் நன்கு அறிந்தால் போதும். அவ்வாறு தொடங்கினால் தமிழைப் போல் எளியது பிறிதொன்று இல்லை எனலாம்.

1. தமிழில் ஓரெழுத்தொரு மொழிகள் 42 எனக் கணக்கிடப் பட்டுள்ளன. உயிர் நெடில்கள் ஆ-பசு, ஈ-கொடு, ஊ - இறைச்சி, ஏ-அம்பு, ஐ-வியப்பு, ஓ-மதகுப்பலகை. கோ - அரசன், வா, போ, தீ, தா என உயிர்மெய் நெடில்களும் ஓரெழுத்தொரு மொழிகளாகும். ஆ - எழுத்தைக் குறிக்கும் போது எழுத்து; பிறிதொரு பொருளை (பசு எனக்) குறிக்கும் போது சொல். அதற்கு முதலும் அதுவே; இறுதியும் அதுவே. கோ-க்+ஓ= இதில் க் முதல் எழுத்து; ஓ இறுதி எழுத்து. ஆயினும் கோ - என உயிர்மெய்யாய், ஓரெழுத்து வடிவினதாதலின், நன்னூலார் இவற்றையும் ஓரெழுத்தொரு மொழிகள் என்றார்.

### கூட்டுச் சொற்கள்

1.1 தமிழில் ஈரெழுத்துச் சொற்கள் மூன்றெழுத்துச் சொற்கள் கணக்கற்றவை. இவை கூட்டுச் சொற்களாகவே (தொடர்களாகவே) பயன்படுகின்றன. A heap of stone என ஆங்கிலத்தில் தனித்தனி நிற்பதைத் தமிழில் ஒரு கற்குவியல் என்கிறோம். கல்லால் ஆன குவியல் எனத் தனித்தனியே எழுதுவதில்லை. ஆங்கிலத்தில் எல்லா

உருபுகளும் தனித்து நிற்கும். For him அவனுக்காக. To that - அதற்கு. கூட்டுச் சொற்களாக இணைக்கும்போது ஒலிச் சேர்க்கை, பொருளுணர்ச்சி இரண்டும் வருகின்றன. பொருள் + பால் = பொருட்பால். அருள் + தந்தை = அருட்தந்தை. கல்வி சிறந்தது; கல்விச்சிறப்பு. இவற்றில் ஒலி, பொருள் ஆகியவற்றில் வேறுபாடு இருப்பதை அறியலாம்.

2. உயிரெழுத்து பன்னிரண்டும் மொழிமுதலில் வரும். உயிரெழுத்து எதுவும் தனித்துச் சொல் இறுதியில் வராது. பல - ல்+ அ; பலா - ல்+ஆ; தலை - ல்+ஐ - இவ்வாறு மெய்யுடன் சேர்ந்தே வரும். அவ்வாறு வந்தாலும் இவை 'உயிரீற்றுச் சொற்கள்' என்றே கூறப்படும். இவ்வாறு மெய்யுடன் வருவன, ஓரெழுத்தொரு மொழியாய்த் தனித்து நிற்பன - ஆகிய 12 உயிரை இறுதியாகவுடைய உயிரீற்றுச் சொற்புணர்ச்சியே இதில் விளக்கப்படுகிறது.

2.1 தமிழில் மெய்யெழுத்துக்கள் தனித்து மொழியிறுதியில் வரும். ஆனால் தனித்து மொழிமுதலில் வராது; உயிர்மெய்யாக மட்டுமே முதலில் வரும். க்ரியா, ப்ரியா, ஸ்ருதி, க்ரைம், க்ளாஸ் - தமிழல்ல. இனிப்பு - உயிர்முதன் மொழி. சிரிப்பு - ச்+இ என முதலெழுத்துப் பிரிவதால் இது மெய் முதன்மொழி. மெய் முதலில் வருவதாகச் சொல்வன அனைத்தும் உயிர்மெய்யாகவே இருக்கும்.

3. தமிழில் மொழி இறுதியில் வருவன 24 எழுத்துக்கள். இதில் எந்த உயிர் எழுத்தும் தனித்து இறுதியில் வராது; மெய்யுடன் சேர்ந்தே வரும். 'எ' என்பது மெய்யுடன் சேர்ந்தும் இறுதியில் வராது. ஆ, ஈ முதலிய ஓரெழுத்தொரு மொழிகள் மொழி ஈறாகவும் கொள்ளப்படும். நொ - என்பதுடன் மட்டுமே ஒ இறுதியில் வரும் (நொந்துபோ). கௌ (கௌவு) வௌ (வௌவு) இவ் இரண்டு தவிர 'ஔ' ஈறாவதில்லை. மெய்களில் கசட தபற எனும் ஆறும் தமிழில் மொழிக்கு இறுதியில் வரா. எளிமை, இனிமை நோக்கியது இது. பிறமொழிகளில் வல்லோசை இறுதியில் வரும். (Book, Clock, Bat இவை தமிழில் புக்கு, கிளாக்கு, பேட்டு என வழங்கக் கேட்டிருக்கலாம்.) தமிழில் வல்லெழுத்து 'உகரம்' பெற்றே வரும். அதற்குக்

குற்றியலுகரம் என்று பெயர். தேக்கு, பாட்டு, பத்து, பற்று என வரும்.

ஏனைய மெய்களில் ஙஞண நமன - மெல்லினம். இதில் 'ங' இறுதியில் வராது. 'ஞ' - உரிஞ் என்று மட்டுமே வந்து, உரிஞ்சு - என இன்றுவழங்குகிறது. 'ந்' என்பதும் பொருந்- (ஒத்திரு, போரிடு), வெரிந் (முதுகு) என்று மட்டுமே வரும். பொருநு - பொருநன் என ஆகும் (கூத்தன், வீரன்). கூடுதலாக இறுதியில் வருவன ண, ம, ன மட்டுமே. யரல வழள - இடையினம். இவற்றிலும் வ் மிகக் குறைவாகவே அவ் இவ் என வரும்.

ஆக, இதுகாறும் கூறிய மொழியிறுதி எழுத்துக்கள், வருமொழி முதலுடன் சேரும் புணர்ச்சியே மெய்யீற்றுப் புணரியலில் கூறப்படும்

3.1 வருமொழி முதலில் பனிரண்டு உயிரும் வரும். மெய் வல்லினம் கசட தபற-வில் ட,ற மொழி முதலில் வாரா. கசதப நான்கும் வரும். மெல்லினம் ஙஞண நமன-வில் ங-ஙனம் என ஒரே சொல்லில் மொழி முதலாகும். ண,ன மொழி முதலாகா. இடையினம் - யரல வழள-வில் ர,ல,ழ,ள நான்கும் மொழி முதலாகா. ய, வ மட்டுமே மொழி முதலில் வரும்.

இவ் வருமொழி முதலெழுத்துக்களே, நிலைமொழி ஈற்று எழுத்துக்களுடன் சேர்ந்து, புணர்ச்சி விதிபெறும்.

**புணர்ச்சி - பொது இலக்கணம்**

4. மெய்யும் உயிரும் (மேலே விளக்கியபடி), ஈறாக வரும் பகுபதம், பகாப்பதம் இரண்டும் தன்னொடுதானும் தன்னொடு பிறிதுமாகப் புணரும். இவை வேற்றுமைத் தொடராகவோ, வேற்றுமையல்லாத அல்வழித் தொடராகவோ புணர்வதற்கு ஏற்பப் பொருள் வேறுபடும். ஒன்றற்கு வரும் புணர்ச்சிவிதி மற்றதற்கு வராது. ஒன்று போல் வருமிடங்கள் குறைவு. புணர்ச்சி மாறும் போது பொருள் மாறும் அல்லது பொருள் மாற்றத்திற்கு ஏற்பப் புணர்ச்சியும் மாற நேரும். நிலைமொழி - முதலில் நிற்பது. வருமொழி - வந்து சேர்வது. முதலில் நிற்பதின் இறுதியெழுத்தும் வந்து சேர்வதின் முதலெழுத்தும் கூடுவதால் ஏற்படும் மாற்றங்களே புணர்ச்சி விதிகள்.

இவை மாற்றமில்லாவிட்டால் இயல்புப் புணர்ச்சி என்றும் மாற்றங்கள் ஏற்பட்டால் விகாரப்புணர்ச்சி என்றும் கூறப்படும்.

*4.1* ஐ, ஆல், கு, இன், அது, கண் எனும் ஆறு வேற்றுமை உருபுகளும் மறைந்து நின்றால் வேற்றுமைத் தொகை; உருபுகள் விரிந்து நின்றால் வேற்றுமை விரி. இவை யாவும் வேற்றுமைத் தொடர்கள் என்றே கூறப்படும். கற்சிலை - வேற்றுமைத் தொகைத்தொடர். கல்லால் செய்த சிலை - வேற்றுமை விரித்தொடர். ஆல் (ஆன், ஒடு, ஓடு). இன், (இல், இருந்து.) அது, அ, கண், (இல், இடம்) முதலியன. ஐ, கு இரண்டும் அவையே வரும். பிறவற்றில் மேலே குறித்தபடி பல உருபுகளாக வரினும் தலைமை உருபுகள் ஆல், இன், அது, கண் என்பனவே.

*4.2* வேற்றுமை அல்லாத எல்லாம் அல்வழித் தொடர்கள் எனப்படும். எட்டு வேற்றுமைகளிலேயே முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் (விளி) உருபுகள் இன்மையால், அவையும் அல்வழி எனப்படும். வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை. இவை ஐந்தும் இடையே சொற்கள் சில தொக்கு வருவதால் தொகைநிலைத் தொடர்கள் எனப்படும்.

**தொகைநிலைத் தொடர்கள் ஐந்து – விளக்கம்**

1. வினைத்தொகை - செய்தொழில் - செய்கின்ற தொழில் (செய்த, செய்யும்)
2. பண்புத்தொகை - செந்தமிழ் - செம்மையாகிய தமிழ்
3. உவமைத்தொகை மதிமுகம் - மதிபோலும் முகம்
4. உம்மைத்தொகை இரவுபகல் - இரவும் பகலும்
5. அன்மொழித்தொகை பொற்கொடி வந்தாள் -
   பொன்போலும் கொடியனையாள் வந்தாள்.
   பொன்போலும் கொடியைக் குறிக்காமல்,
   அப் பெயருடைய பெண்ணைக் குறித்தது.

**தொகாநிலைத் தொடர்கள் ஒன்பது உள.**

1. எழுவாய்த் தொடர் - முருகன் வந்தான்
2. விளித்தொடர் - முருகா! வா

3. பெயரெச்சத் தொடர் - படித்த பெண்
4. வினையெச்சத்தொடர் - படித்துத் தேறினாள்
5. தெரிநிலை வினைமுற்றுத் தொடர்- படிக்கின்றாள் பாவை
6. குறிப்பு வினைமுற்றுத் தொடர் - நல்ல பெண்
7. இடைச்சொற்றொடர் - வருகதில் அம்ம - இடைச்சொற்றொடர் (தில், அம்ம)
8. உரிச்சொற்றொடர் - உறுபொருள், தவச்சிறிது
9. அடுக்குத்தொடர் - தீதீதீ, தண்ணீர் தண்ணீர், படிபடி (என்றார் ஆசிரியர்)

ஆக, 14 தொடர்கள் அல்வழித் தொடர்களாகும்.

4.3 அல்வழி, வேற்றுமைப் புணர்ச்சி வேறுபாடுகள் - பொருள் வேறுபாடுகள்.

விலை குறைந்தது - அல்வழித்தொடர்

விலைக் குறைப்பு - விலையினது குறைப்பு அல்லது முன் விலையிலிருந்து குறைப்பு. வேற்றுமைத் தொடர்

பொருள் ஒன்றே. புணர்ச்சி மட்டும் வேறுபடுகிறது.

தந்த கட்டில் - பெயரெச்சத்தொடர். அல்வழி

தந்தக் கட்டில் - தந்தத்தால் செய்த கட்டில். வேற்றுமை

இதில் பொருள் வேறுபடுகிறது. புணர்ச்சி வேறுபாடு பொருளை வேறுபடுத்துகிறது.

5. எவ்வித மாற்றமும் இன்றிப் புணர்வது இயல்புப் புணர்ச்சி.

மணி + மேகலை, கண்ணன் கண்டான்.

6. ஒரு சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் மாற்றம் வரும். அது எழுத்து தோன்றுதல், கெடுதல், திரிதல் என மூவகைப்படும்.

மாம்பழம் - முதலில் தோன்றுதல். மரவேர் - இறுதியில் கெடுதல். அறுபது - ஆறு, அறு ஆனது முதலில் திரிபு. பத்து - பது ஆனது இடையில் கெடுதல். கல் + சிலை = கற்சிலை - இறுதியில் திரிபு. ஒன்பது + ஆயிரம் = தொள்ளாயிரம். முதலிடை கடை மூன்று இடத்தும் மாற்றங்கள் வந்தன.

6.1 செய்யுளில் வேண்டுமிடங்களில் வருவன சில விகாரங்கள் உள.

1. வலித்தல் விகாரம் - சிலம்பு + அதிகாரம் - சிலப்பதிகாரம்.
2. மெலித்தல் விகாரம் - தட்டையைத் 'தண்டை' என்பது. கிளிகடி கருவி.
3. நீட்டல் விகாரம் - நீழல். இணையடிநிழல்
4. குறுக்கல் விகாரம் - திருத்தார் நன்றென்றேன் தியேன் - தீயேன்
5. விரித்தல் விகாரம் - 'தட்கும்மா காலே' - தட்கும் - தளையிடும்.
6. தொகுத்தல் விகாரம் - சிறியிலை. சிறிய இலை. 'ய' மறைந்துளது.

6.2 ஒரு சொல்லின் முதலெழுத்துக் குறைந்தால் முதற்குறை - தாமரையை 'மரை புரை சேவடி' எனச் செய்யுளில் வரும். இடையில் எழுத்துக் குறைவது இடைக்குறை - ஓந்தியை ஓதி என்பர் இலக்கியத்தில். கடைசியில் எழுத்து மறைவது கடைக்குறை - நீலம் 'நீல்'நிறப் பட்டு எனவரும் பாடலில். இவை செய்யுளில், மரபுவழிப்படி ஏற்கப்படும். நாம் நினைக்கிறபடி குறைக்கக் கூடாது.

6.3 ஒரே புணர்ச்சியில் தோன்றல் விகாரம் மட்டுமே வரும்; திரிதல் மட்டுமே வரும் என்பதில்லை. இரண்டும் மூன்றும் கூட வரலாம். பனை + கிழங்கு = பனங்கிழங்கு பனை - பன் ஆனது ஐ கெடுதல் பன் + அம் = பனம் - தோன்றல். பனம் + காய் = பனங்காய். ம், ங் ஆனது திரிதல். மூன்று விகாரமும் வந்தன.

**6.4 புணர்ச்சி இலக்கணத்தில் 'நாற்கணம்' என்பது என்ன?**

உயிர்க்கணம் - உயிர் எழுத்து, ஆவி

வன்கணம் - வலி, வல்லினம், வல்லெழுத்து, வல்லொற்று

மென்கணம் - மெலி, மெல்லினம், மெல்லெழுத்து, மெல்லொற்று

இடைக்கணம் - இடை, இடையினம், இடையெழுத்து, இடையொற்று

6.5 **பொதுப்பெயர், உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் விளக்கம் :**

முன்பு ஆடு மாடு நாய் போலும் வீட்டுயிரினங்களையும் பழகும் விலங்கு பறவைகளையும் பெயரிட்டழைப்பர். சாத்தன், சாத்தி, கொற்றன், கொற்றி போல்வன. சாத்தன் புல் மேயும் - அஃறிணை. சாத்தி மா அரைக்கும் - உயர்திணை. சாத்தியின் குணநலம் - இருவழியும் வரும் பொதுப்பெயர்.

7.0 இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூறுதல் மரபு. எடுத்துக்காட்டுகள் உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் காணப்படுகின்றன. அவை சிதைவின்றி - பிழை, குறுமொழி, ஒலித்திரிபு இல்லாமல் - வரின், அவற்றுக்கு இலக்கணம் கூறப்படும். அதனால் எடுத்துக் காட்டுக்களையும் இங்குப் பார்ப்போம். இலக்கணத்தை அவ்வந் நூற்பாவில் பயில்வோம்.

7.1 1. 24 எழுத்துக்களையும் இறுதியிற்கொண்ட சொற்களின் முன் ஞ நம வய - முதலிற்கொண்ட சொற்கள் வரின் அல்வழி வேற்றுமை இரண்டிலும் இயல்பாகப் புணரும். கலை + நன்று. அல்வழி. கலை + நலம் வேற்றுமை.

2. குற்றெழுத்தை அடுத்த - ய - மெலி மிகும். மெய்ஞ் ஞானம், மெய்ம்மலி உவகை.

3. ஐ, நொ, து - முன் மெலி மிகும். ஐந்நூறு, நொந்நாகனே, துந்நாகனே.

4. ண,ன,ள,ல வந்தால் - எதிரில் வரும் ந - திரியும். கண் + நீர் = கண்ணீர். பொன் + நீலன் = பொன்னீலன்.

8.1 1. பொதும் பெயர், உயர்திணைப் பெயர்ச் சொல்லிறுதியில் வரும் மெய்யெழுத்துக்களின் முன் வரும் வல்லொற்று மிகாது. உயிரெழுத்து ய,ர முன் வரும் வல்லெழுத்தும் மிகாது.

உயர்திணையில் சில இடத்து இவை விகாரப் படும். ஆண் + சான்றோன். பெண் + பெரியள். சாத்தன் கொம்பு, சாத்தன் கொடியன். நான் தலைவன். நீ செய்தாய். இவை பொதுப் பெயர்கள், முருகன் தலைவன், அவள்

சிரித்தாள், அண்ணல் காந்தி, பொன்னன் பெருமை இவை உயர்திணைப் பெயர்கள்.

2. உயிர், யர முன் வலி வரினும் மிகாது.

சாத்தி சிறுபெண், சாத்தி கன்றீன்றது, மழலை சிரித்தது. நம்பி + கை இது, தம்பி + சிரிப்பு நன்று. பேய் கொடிது, நீர் பெரியிர்.

3. உயர்திணையில் சில விகாரப்படும். மாணிக்கம் + செம்மல் = மாணிக்கச் செம்மல். சமணர் + பள்ளி = சமணப் பள்ளி. கண்ணகி சிலை, கண்ணகிச் சிலை - இரண்டும் வரும்.

8.2 வினாப் பெயர்முன் வல்லொற்று மிகாது. அவனா கொடுத்தான்? விளிப் பெயர்முன் வல்லொற்று மிகாது. நண்பா கேள்! முருகா பார்!

8.3 ஏவல் வினை, முன்னிலை வினையில் உயிரும் யரழவும் நிற்க, வரும் வல்லொற்று இயல்பாகவும் வரும்; விகற்பமும் பெறும்.

போயினை புலவ, மறைந்தாய் கண்ணகி, கூடினிர் புலவரே, இவை முன்னிலை வினை. நட குழந்தாய்! செய் குழந்தாய்! சேர் குழந்தாய்! நீடுவாழ் குழந்தாய்! - ஏவல் வினைகள்.

8.4 இயல்பினும் விதியினும் நின்ற உயிரெழுத்தின் முன்னே வரும் கசதபக்கள் மிகும். விதந்தவை மிகா.

தேக்கு + கிளை = தேக்குக் கிளை. இயல்பீறு. மரம் + கிளை = மரக்கிளை. மரம் - மர என நின்று 'ம்' கெட்டதால் அது விதி ஈறு.

வாழைப்பழம், பலாச்சுளை, கலைக் கழகம் - இயல்பீறு.

பழம் + சாறு = பழச்சாறு, ஒன்று + கை = ஒற்றைக்கை - விதி ஈறு.

8.5 மரப் பெயர்கள் முன் வல்லெழுத்துக்குப் பதிலாக அதன் இனமான மெல்லெழுத்து வருமிடங்களும் உள. மாம்பழம் (மாப்பழம் ஆகவில்லை). பலாக்கனி, வாழைப் பழம் என பொதுவிதிப்படியும் வருவன உள.

### அகர ஈற்று முன் கசதப வல்லினம் வருதல்

8.6 செய்யிய எனும் வாய்பாட்டு வினையெச்சம் பலவகைப் பெயரெச்சம், பலவகை வினைமுற்று, ஆறாம் வேற்றுமை 'அகர' உருபு, அஃறிணைப் பன்மைப் பெயர்கள் 'அம்ம' - என்னும் உரையசை இடைச்சொல் ஆகிய அகர ஈற்றவாகிய இவற்றின் முன் வரும் கசதப வல்லெழுத்துக்கள் இயல்பாய் முடியும். பூக்களைக் கொய்யிய சென்றனள். உதிர்ந்த பூக்கள், நல்ல பையன். பறந்தன பறவைகள், கரியன குதிரைகள். என கைகள். (அ - பன்மை உருபு). பறப்பன பறவைகள். அம்ம கேளாய்.

### ஆகார ஈறு

8.7 ஆ, மா, மியா ஆகார ஈற்று வினைமுற்றுக்கள் முன் வல்லினம் மிகாது, அல்வழியில்.

ஆ பெரிது, மா கரிது, கேண்மியா கலைஞனே. ஓடா குதிரைகள், பாடா பறவைகள் (எதிர்மறை ஆகார ஈற்று அஃறிணை வினைமுற்றுக்கள்).

ஆமா குறிது (ஆமா காட்டுப்பசு).

### இகர ஈறு

8.8 செய்யுளில் அன்றி, இன்றி என்பன அன்று, இன்று என வரும். எதிரே வரும் கசதப வல்லினம் இவற்றில் மிகாது. நாளன்று போகி, பதனன்று புக்கு, உப்பின்று புற்கை.

8.9 சுவையைக் குறிக்கும் புளி முன் வல்லினம் மிகுதலேயன்றி அதற்கு இனமான மெல்லினமும் மிகும். புளிங்கறி, புளிக்கறி. புளிஞ்சாதம், புளிச்சாதம்.

8.10 அல்வழியில் இ, ஐ இறுதிமுன் கசதப வரின் இயல்பும், மிகலும் இருவழியாகவும் முடியும். கிளி பேசியது, தலை சுற்றியது. வருந்திப் படி, மலைக் குகை. முன்னது இயல்பு; பின்னதில் மிக்கது. உறழ்ந்து வருதல் அரிது.

### ஈகார ஈறு

8.11 நீ, மீ, பீ முன்வரும் கசதப இயல்பாகும். மீ - மட்டும் வல்லினமும் மெல்லினமும் மிகக் கூடும். நீ சிரித்தாய். மீ கண் - கண்ணின் மேற்பகுதி. பீ - கரிது. மீக்கூற்று - புகழ் மொழி. மீந்தோல் - மேல்தோல். முறையே வலி, மெலி மிகுந்தன.

**உகர ஈறு**

*8.12* மூன்றாம் வேற்றுமை உருபு 'ஒடு'; ஆறாம் வேற்றுமை உருபு 'அது'; எண்ணுப்பெயர்கள், வினைத்தொகை, சுட்டு - ஆகிய இம் முற்றுகரச் சொற்களின் முன் வரும் வல்லினம் இயல்பாகும். கண்ணனொடு பேசினேன், எனது கண், ஒரு கை, இரு புத்தகம், அறு கோட்டு இரலைமான், எழுகடல். சுடு சோறு, அடு களிறு, பகுபதம், தொடு கறி. அது பெரிது, இது குறைவு.

*8.13* வன்தொடர்க் குற்றுகரம் தவிர்த்த, ஐந்து குற்றியலுகரத் தொடர்களிலும் அல்வழியில் வல்லொற்று மிகாது. நாடு பெரியது, எஃகு கடிது, முடுகு சந்தம், வண்டு கரிது, சால்பு சிறந்தது. வன்தொடர்க் குற்றியலுகரத்தில் மட்டும் ஒற்று மிகும்; சுக்குக் கடிது, கொக்குப் பறந்தது (ஒலி இணைப்புக்கே இவை மிக்கன).

*8.14* இடைத்தொடர்க் குற்றுகரம் - சார்பு கடுமை (சார்பினது கடுமை)

ஆய்தத் தொடர்க்குற்றுகரம் - எஃகு கடுமை

ஒற்று இடையில் மிகாத நெடில் தொடர் - காடு கிழாள் (காளி)

உயிர்த்தொடர்க் குற்றுகரம் - முருகு திருவருள்

வேற்றுமையில் இவற்றின் முன் வல்லொற்று மிகாது.

**ஊகார ஈறு**

*8.15* பூ எனும் பெயர் முன் வல்லினம் வரின் வல்லொற்று மிகுதலே அன்றி மெல்லினமும் தோன்றும். பூக்கொடி, பூங்கொடி.

**ஏ, ஓ – ஈறு**

*8.16* ஏ, ஓ இடைச்சொல் முன், வல்லினம் வரின் இயல்பேயாம். அவனே செய்தான், அவனோ கொடுத்தான்.

உயிரீற்றுப் புணரியலில் இதுகாறும் 15 நூற்பாக்கள் கசதப - வல்லொற்று மிகுதலும் மிகாமையும் பற்றியே கூறுவதால், அவை தொகுத்துத் தரப்பெற்றன. இவற்றில் வரும் உதாரணங்களைத் தனியே எடுத்து, பட்டியல் போல எழுதிப் படித்தால், இயல்பாகவே எங்கு ஒற்றுப் போட வேணடும், எங்கு வேண்டாம் என்று எண்ணும் மனப் பழக்கம்

வந்துவிடும். முதலில் உதாரணங்களே மனப்பாடமாக வேண்டும்... பிறகு இலக்கணம் தானே உணரப்படும்.

9. இ ஈ ஐ இறுதியில் நிற்க எதிரே உயிர் வந்தால் 'ய' உடம்படு மெய் வரும். ஏனையவை நிற்க, உயிர்எழுத்து வரின் 'வ' உடம்படுமெய் வரும். ஏ - நிற்க, உயிர்வரின் ய அல்லது வ உடம்படு மெய்யாக வரும்.

10.1 1. எ - வினா; அஇஉ - சுட்டு. இவற்றின் முன் உயிரெழுத்தும் 'ய'கரமும் வந்தால் 'வ' மெய் தோன்றும் 2. பிற எழுத்துக்கள் முன்னே வந்தால், வந்த ஒற்றே மிகும். 3. செய்யுளில் சுட்டு எழுத்து நீண்டால் 'ய'கரம் இடையில் தோன்றும்.

11. 1. குற்றியலுகரம் எதிரே உயிரெழுத்து வந்தால் மெய்யெழுத்தை விட்டுவிட்டு, உகரம் நீங்கும் 2. எதிரே 'ய'கரம் வந்தால் குற்றுகரம் 'இ'கரமாகத் திரியும். 3. சிலபோது முற்றியலுகரத்திற்கும் இவ்விதிகள் பொருந்தும்.

**அகர ஈறு - வாழிய**

12. வாழிய - என்பதில் ஈற்றுயிர் மெய்கெட்டு 'வாழி' என்றே நிற்பதுண்டு. அங்ஙனம் மாறினும் வாழிய என்பதன் வல்லொற்று மிகாதது போல, வாழி என்பதன் முன்னும் மிகாது. வாழி குமரா, வாழி சாத்தப்ப, வாழி தமிழ்மொழி.

13. சாவ என்பதன் ஈற்றுயிர் மெய் 'வ' கெட்டு 'சா' என நிற்பதும் உண்டு. சாவக் குத்தினான் என்பதேயன்றிச் சாக்குத்தினான் என்றும் வரலாம்.

14. பலசில - இவை தம்முன் தாம் வரின் இயல்பும் மிகலும் உளதாகும். சிலபோது அகரம் கெட பல், சில் என நின்று அந்த 'ல'கரம், றகரமாதலும் உண்டு. பிற சொற்களுடன் புணரின், அகரம் நீங்கியும் நீங்காமலும் விகற்பிக்கும். பிறவாறு வருவனவும் உள. பலபல, சிலசில, பற்பல, சிற்சில, பலதுறை பல்துறை. பல்பல, சில்சில என்று அருகி வருதலும் உண்டு.

15. குற்றெழுத்தின் கீழ்வரும் 'ஆ', குறுகுதலும் குறுகுதலுடன், உகரம் பெறுதலும், அவ்விரண்டுமின்றித் தன்னியல்பாக நிற்றலும் உண்டு. நிலா, நில, நிலவு- கனா, கனவு, இரா,

இர, இரவு, பலா, பல, பலவு. 'மிடா' என்பது இவ்வாறாகாது. வருமிடம் நோக்கி அறிக.

16. நாழி + உரி = நாடுரி எனவரும். (நாழியிற் பாதி உரி). நாழி - நாட் + உரி நாடுரி. உரி + உப்பு = உரியவுப்பு அல்லது உரியுப்பு (உரியளவுள்ள உப்பு)

17. ஆ + பீ = ஆப்பீ - இது ஆப்பி என்று குறுகும். அல்வழியில் ஆப்பி - சிறிது, சிறிது என இயல்பாகும். வேற்றுமையிலும் ஆப்பி அருமை என வருமெனக் கூறுவர். இருவழியிலும் இயல்பாகிறது.

18. செய்யுளில் அது + அன்று - அது + ஆன்று - அதான்று எனவரும்.

19. நெடில்தொடர்க் குற்றுகரம் உயிர்த்தொடர்க் குற்றுகரம் வேற்றுமையில் ட, ற ஒற்று, இடையில் பெரும்பாலும் இரட்டிக்கும்.

ஆடு + கால் = ஆட்டுக்கால். நாறு + கால் - நாற்றங்கால். வயிறு + பசி - வயிற்றுப் பசி

காடு கிழாள், நாடு கிழவோன் - இரட்டிக்காதும் வந்தன. இது சிறுபான்மை.

20. மென்தொடர்க் குற்றுகரங்கள் சில வேற்றுமையில், தம் இனமான வன்தொடர் ஆகும். வன்தொடராதல் கட்டாய மில்லை. மருந்து + பை = மருத்துப்பை, மருந்துப்பை. கருப்பஞ்சாறு, கரும்புச்சாறு.

21. மென்தொடர்க் குற்றுகரங்கள் சில, ஐ ஈறு பெறுபவையும் உள. பண்டு + காலம் = பண்டைக்காலம். இன்று + பொழுது = இற்றைப் பொழுது.

22. வடக்கு, கிழக்கு - வட, கிழ என்பன மட்டும் நிற்கும். வடகிழக்கு. கிழமேல் இரண்டடி. வடமலை. தெற்கு + மேற்கு = தென் மேற்கு, தென்குமரி, மேல்பால், மேற்கு + வீதி = மேலவீதி, மேலமடை. மேல் + நாடு = மேனாடு. குடக்கும் (மேற்கு) குணக்கும் (கிழக்கு) அவ்வாறே புணரும் குடதிசை, குணகடல், குடநாடு. தெற்குத்தெரு, வடக்கு வாசல், கிழக்குக் கோபுரம், மேற்குச் சாலை என இயல்பான சொற்களே வருவதும் உண்டு.

23. தெங்கு - தேங்கு ஆகி பிறகு ஈற்றுயிர்மெய் கெட்டுத் 'தேங்' என நின்று காய் சேர்ந்து தேங்காய் ஆகும். தெங்கங் காய் என்பதுமுண்டு.

24. நிலைமொழி ஒன்றுமுதல் எட்டு ஈறாக நின்று, எதிரே எண்ணுப்பெயர், நிறைப்பெயரும் அளவுப் பெயரும் வரின் ஏற்படும் விகாரங்கள். ஒன்றும் இரண்டும் - முதல் நீளும் - ஓ, ஈ ஆகும். மூன்று, ஆறு, ஏழு - முதல் குறுகும் - மு, அ, எ. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, எட்டு - இந்த ஆறு எண்களின் ஈற்றுயிர்மெய் கெடும். ஏழு - இதில் ஈற்றுயிர் கெடும். ஏற்குமிடமறிந்து கொள்க.

அறுபது, எழுபது, ஏழ்கடல். இரண்டாயிரம், ஏழாயிரம்.

24.1 ஒன்-ஓன்-ஓர். இரண் - ஈர் ஆகும். முதல் நூற்பாத் தொடர்ச்சியாகக் கொள்க. ஓராயிரம், ஈராயிரம், ஒருபது, இருபது.

24.2 மூன் - மூ - மு = மூவுழக்கு, மூவுலகு, முப்பது, முந்நூறு, முத்தமிழ்.

24.3 நான்-மெய் நால் அல்லது நாற் ஆகும். நாலடி, நாற்புறம்.

24.4. ஐந் - நகர ஒற்று வருமொழி முதல் ஒற்றுடன் சேர்ந்து அதே ஒற்றாகும், அல்லது அதற்கு இனமாகும் அல்லது கெடும். ஐம்மூன்று, ஐம்பது, ஐம்பொறி, ஐங்குளம், ஐந்நூறு.

24.5. எட்டு - எட் - ட் என்பது 'ண்' ஆகும். எண்பது, எண்குணம்.

24.6. ஒன்பது + பத்து - ஒன்பது + நூறு + தொண்ணூறு

ஒன்பது + நூறு - ஒன்பது + ஆயிரம் = தொள்ளாயிரம்

இவற்றுக்குப் புணர்ச்சி விதி, மிக வலிந்து கூறப்பெறும்.

24.7 முதல் எட்டு எண்களின் முன்வரும் பத்து என்பதில், இடையொற்று கெடும்; ஆய்தமாக மாறும். இருவிதியும் ஏற்கும். இருபது, இருபஃது.

24.8 ஒருபஃது முதல் எண்பஃது வரை நிற்க, எதிரே ஒன்பதெண்ணும் அவை சேர்ந்த பிற சொற்களும் வந்தால், ஆய்தம் கெடும். அங்கு இயல்பாய் 'த'கரம் வரும். ஒருபத்தொன்று, இருபத்தொன்று.

*24.9* பத்துடன் எதிரே ஒன்று முதல் பத்தும் ஆயிரம் கோடி என்பனவும் நிறைப்பெயரும் அளவுப் பெயரும் பிற பெயரும் வந்தால், பத்துவில் து கெடும்; த்-துடன் இன், அல்லது இற்றுச் சாரியை சேரும். ஒன்பதினுக்கும் இச்சாரியைகள் வரும்.

பத்து + மூன்று = பதின்மூன்று. பத்து + பத்து = பதிற்றுப்பத்து.

பதினாயிரம், ஒன்பதினாயிரம். பதின்கோடி. பத்துக்கோடி, ஒன்பது கோடி என்பதே உலக வழக்கு.

*24.10* பத்து + இரண்டு. பத்(து)-து கெடும். பத்-த்-ன் ஆகும். பன் என நிற்கும். 'இரண்டு' சேரப் பன்னிரண்டு, பனிரண்டு என வரும்.

*24.11* ஒன்பது தவிர்த்த, ஒன்று முதல் ஒன்பதும் தம் முன்தாம் வந்து இரட்டித்தால், நிலைமொழியின் முதலெழுத்துத் தவிர ஏனையன நீங்கும். எதிரே உயிர் வந்தால் 'வ'கர ஒற்றுவரும். மெய் முதலான சொல் வந்தால் வந்தே ஒற்றே வரும். ஒவ்வொன்று, பப்பத்து.

**ஐகார ஈறு**

*25.* ஐ ஈற்றுப் சொற்கள், வேற்றுமைத்தொடரில், இறுதி எழுத்துக்கெட்டு, 'அம்' சாரியை பெறும். கொன்றை + குழல் = கொன்றையங்குழல்.

*26.* 'பனை' - படம் எழுதிய கொடி பனைக்கொடி. பனை முன்கொடி வரின் ஒற்று மிகுகிறது. கசதப - வல்லினம் எதிரே வரின் ஐ-நீங்கி, பன் என்று நின்று அம் சேர்ந்து பனங்காய், பனம்பழம் எனவரும். திரள் என்பது வரின் பனைத்திரள், பனந்திரள் என இருவகை யாகவும் வரும் (உறழ்தல் - இரு வழியிலும் வருதல்). அட்டு - கருப்பட்டி. பனை + அட்டு = ஐ கெட்டு, அட்டு - ஆட்டு என நீண்டு பன் + ஆட்டு = பனாட்டு என ஆகும்.

# உயிரீற்றுப் புணரியல்

## புணர்ச்சி என்பதுதான் என்ன?

151 மெய்உயிர் முதல்ஈறாம்இரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே 1

மெய் முதலும் மெய் ஈறுமாக வருவனவும் உயிர் முதலும் உயிர் ஈறுமாக வருவனவும் இவை மாறி வருவனவும் பகுபதம், பகாபதம் என இரு வகைப்படும். கடவுள்-மெய்முதல் மெய் ஈறு (க்+அ).நட-மெய் முதல் உயிர் ஈறு (ந்+அ+ட்+அ) அணில் (உயிர் முதல் மெய் ஈறு). அலை-அ+ல்+ஐ=உயிர் முதல் உயிர் ஈறு. இவற்றுள் நட, அணில், அலை - பகாப்பதம். கடவுள் - பகுபதம். இத்தகைய சொற்கள் தன்னொடு தானும் தன்னொடு பிறிதுமாகக் கூடும். கல் + குவியல் = கற்குவியல் - மெய்முன் மெய். கல் + அணை = கல்லணை - மெய்முன் உயிர். கூலி + ஆள் = கலியாள் - உயிர்முன் உயிர். வாழை + கன்று = வாழைக்கன்று - உயிர்முன் மெய்.

சொற்கள் இணைந்து கூட்டுச் சொற்கள் தொடர்கள் ஆகும்போது வேற்றுமைப் பொருளிலும் வேற்றுமை அல்லாத பொருளிலும் கூடும். கண்காட்சி - கண்ணாற் காணும் காட்சி. வேற்றுமைத் தொடர்ச்சொல். கண்ணன் கண்டான் - அல்வழித் தொடர். இதில் வேற்றுமை உருபு சேர்க்க வேண்டாம். தொடர்களின் பொருளை வைத்து இவை அறியப்படும். கூட்டுத் தொடரில் முதலில் ஒன்று நிற்கும்; மற்றது அதன் இறுதியுடன் வந்து சேரும். கல் - நிலைமொழி; குவியல் - வருமொழி. இவை இயல்பாக நிற்கும்போது இயல்புப் புணர்ச்சி எனப்படும். கண் கண்டது. வேறுபடும்போது விகாரப் புணர்ச்சி எனப்படும். கற + குவியல். ல்-ற் ஆனது விகாரம். இவையே புணர்ச்சியின் பொது இலக்கணம்.

மெய்யையும் உயிரையும் முதலாகவும் ஈறாகவுமுடைய பகுபதம் பகாப்பதமாகிய இரண்டும், தன்னொடு தானும் தன்னொடு பிறிதுமாய், அல்வழி வேற்றுமைப் பொருளில் தொடர்ந்து பொருந்தும் போது, நிலைமொழியும் வருமொழியுமாய் நின்று, இயல்பாகவும் விகாரப்பட்டும் புணர்வது பதப்புணர்ச்சி எனப்படும்.

## அல்வழித் தொடர், வேற்றுமைத் தொடர் என்பன யாவை?

**152 வேற்றுமை ஐம்முதல் ஆறாம். அல்வழி**
**தொழில்பண்பு உவமை உம்மை அன்மொழி**
**எழுவாய் விளிஈர் எச்சம்முற்று இடைஉரி**
**தழுவுதொடர் அடுக்குஎன ஈர் ஏழே** 2

வேற்றுமைத் தொடர் என்பன ஐ ஆல் கு இன் அது கண் என இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை வருவன. இவை ஆறு தொடர்கள். இவை வேற்றுமை உருபு தொக்கும் உருபு விரிந்தும் வரும். இருவகையாக வரினும் வேற்றுமைத்தொடர் என்றே கூறப்படும்.

### வேற்றுமைத் தொடர்கள்

| | |
|---|---|
| 1. பாடம் படித்தேன் | (தொகை) பாடத்தைப் படித்தேன் |
| 2. மண் பொம்மை | மண்ணாற் செய்த பொம்மை |
| 3. என் மாமன் | எனக்கு மாமன் |
| 4. மதுரை வண்டி வரும் | மதுரையின் வண்டி வரும் |
| 5. பாட்டுப் பொருள் | பாட்டினது பொருள் |
| 6. தலைச்சுமை | தலையின்கண் சுமை |

இவை வேற்றுமைத் தொடர்கள் உருபு மறைந்தும் விரிந்தும் வந்தன. வேற்றுமை உருபு பெறாத, வேற்றுமை அல்லாத வழித் தொடர்கள் எல்லாம் அல்வழித் தொடர்கள் எனப்பட்டன. அவை பதினான்காகும். அவை தொகைநிலைத் தொடர்கள், தொகாநிலைத் தொடர்கள் என இருவகைப்படும்.

தொகை நிலைத்தொடர்கள் ஐந்து: தொழில் (வினை) - வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத் தொகை அன்மொழித் தொகை என்பன தொகைநிலைத் தொடர்கள். உருபு முதலியன இடையே மறைந்து வருவன. தொகாநிலைத் தொடர்கள் ஒன்பது. எழுவாய்த் தொடர், விளித்தொடர் (விளி - அழைப்பது). ஈர் எச்சம் - வினையெச்சத் தொடர், பெயரெச்சத் தொடர், ஈர்முற்று - தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், இடைத் தொடர், உரித்தொடர், அடுக்குத் தொடர் - இவற்றில் அவ்வச் சொற்கள் முதலில் நிற்கும்.

ஐந்து **தொகைநிலைத் தொடர்கள்** இதிலுள

1. விடிவெள்ளி - வினைத்தொகை. எப்போதும் விடியும் - விடிகின்ற, விடிந்த, விடியும் என முக்காலமாகவும் வரும்.
2. செந்தமிழ் - செம்மையாகிய தமிழ். பண்புத்தொகை
3. கயற்கண் - கயல் போலும் கண். உவமைத் தொகை
4. இரவுபகல் - இரவும் பகலும். உம்மைத் தொகை.
5. மலர்விழி வந்தாள் - மலர்போலும் விழியுடைய பெண் வந்தாள் - அன்மொழித் தொகை.

இவற்றுள் இடையிலுள்ள ஆகிய, போலும் உம் ஆகிய உருபுகளை விரித்தே பொருளைக் கொள்ள வேண்டும். அவை மறைந்துள்ளன. அன்மொழித்தொகை (அல்லாத பிறமொழிகளும் தொக்குவருவது)

14 அல்வழித் தொடர்களில் எஞ்சிய. ஒன்பதும் தொகாநிலைத் தொடர்கள் என்று கூறப்படும். அவற்றுள் உருபெதுவும் மறைந்திருக்க இடமில்லை.

1. முருகன் அருளினான் - எழுவாய்த் தொடர்
2. முருகா! அருள் - விளித்தொடர்
3. வந்த முருகன் - பெயரெச்சத்தொடர் (பெயரைக் கொண்டு முடிவது)

4. வந்து தந்தான்- வினையெச்சத் தொடர் (வினையுடன் முடிந்தது)

5. அருளினான் முருகன் - முதலில் முற்றுவினை நிற்பதால் தெரிநிலை வினைமுற்றுத் தொடர்

6. அருட்செல்வன் முருகன் - குறிப்பு வினைமுற்றுத்தொடர் (செல்வன் காலங்காட்டாத பயனிலை)

7. பயன் என்கொல்? - 'கொல்' இடைச்சொல். இடைச்சொல் தொடர்

8. உறுபொருள் - (மிக்கபொருள்) உறு-உரிச்சொல். இது உரிச்சொல் தொடர்.

9. தீதீ - அடுக்குத் தொடர்

தமிழில் அடுக்குத் தொடர் பலவகையாக வரும். ஒரே சொல் திரும்ப வருவதையே நம் உரையாசிரியர்கள் காட்டி வருகின்றனர். அடிஅடி என்று அடித்தான், படிபடி என்று தூண்டினான், பார்பார் என்று வேண்டினான். துடிதுடிப்பு, கடுகடுப்பு எனப்பலவாறு எண்ண இடமுளது. கலகலவென்று, பொலபொலவென்று, சலசலவென்று என்பன இரட்டைக்கிளவி எனப்படும். கல, பொல, சல எனப்பிரித்தால் பொருள் தரா. இவைபோல் ஒரே பொருளில் வரும் இணைத் தொடர்கள் பேரும் புகழும், சீரும் சிறப்பும் என வருவன; வேறுபட்ட பொருளில் வரும் இணைத் தொடர்கள் ஆடலும் பாடலும், காடும் கழனியும், வலிவும் பொலிவும் என்பன; முரண்பொருளில் வருவன மேடும் பள்ளமும், கருப்பும் சிவப்பும் முதலியன பலவுள. இவற்றை அடுக்குத் தொடரில் தவிர வேறு எதிலும் அடக்க முடியாது.

தழுவுதொடர் என்பது யாது? சொல்லும் பொருளும் இடைவெளியின்றித் தழுவிநிற்பது தழுவுதொடர். இதுகாறும் குறிப்பிட்டவை தழுவு தொடர்களே.

பாடநூல் வெளியிட, அரசும் தனியாரும் முயல்கின்றனர். இதில் 'வெளியிட முயல்கின்றனர்' என இது வினையெச்சத் தொடர். ஆனால் தழுவாது நிற்கின்றமையால் தழாத்தொடர்

என்பர். பாடத்தைப் படித்தான் - வேற்றுமையில் தழுவு தொடர். பாற்பானை - பாலை வைத்திருக்கும் பானை - தழாத்தொடர்.

## புணர்ச்சி வகைகள் - இயல்புப் புணர்ச்சி

**153 விகாரம் அனைத்தும் மேவலது இயல்பே 3**

எந்தவகை விகாரமும் - வேறுபாடுமின்றிச் சொற்கள் தொடர்ந்து நின்றால், அஃது 'இயல்புப் புணர்ச்சி' எனப்படும்.

மீன் + வலை = மீன்வலை. கண் மலர்ந்தாள், காய்கறி, பேசும்படம். எல்லாம் இயல்புப் புணர்ச்சி.

## விகாரப்புணர்ச்சி

**154 தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்**
**மூன்றும் மொழிமூ விடத்தும் ஆகும் 4**

எழுத்தேனும் சாரியையேனும் தோன்றல், திரிதல், கெடுதல் மூன்றும் விகாரப் புணர்ச்சியாகும். இவை நிலைமொழி வருமொழிகளில் முதல் இடை கடை மூன்றிடத்தும் நிகழும்.

வாழை + பழம் = வாழைப்பழம். வருமொழிக்கேற்ப 'ப்' தோன்றிற்று.

கல் + தாழை = கற்றாழை. நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் திரிந்தன.

மரம் + வேர் = மரவேர். நிலைமொழி ஈறு கெட்டது.

இவை தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்.

பசுமை + இலை = பாசிலை. பா என்று நீண்டது. மொழி முதலில் வந்த விகாரம். இடையிலும் சு - சி ஆகியது, மொழியிடையில் வந்தது. மை விகுதி கெட்டது - இறுதியில் வந்தது. தமிழச்சாதி - அகரச் சாரியை பெற்றது (தமிழ்+அ). புளியம் பழம் - அம் சாரியை பெற்றது.

காய்கறி என்றும் சொல்லலாம் - காய்க்கறி என்றும் சொல்லலாம். காய்கறி - காயும் கறியும் - காய்வகையும் பிற கறிவகையும், காய்க்கறி - வாழைக்காய், வெண்டிக்காய் போல ஒரே கறியை அது குறிக்கும். புணர்ச்சியால் பொருள் வேறுபடுவது தமிழ்மொழி. கல்வெட்டு - கல்லை வெட்டு, கல்மேல் வெட்டு, கல்லினது வெட்டு என விரிக்க இடம் தரலால், வேற்றுமைத் தொகை பலவாறு விரிந்து பொருள்தர இடமுண்டு. கல் கிடைத்தது, கல் உடைந்தது என்றால் அல்வழி. பாம்பு கடித்தது - அல்வழி. பாம்புக்கடி - வேற்றுமை - பாம்பினால் ஏற்பட்ட கடி.

அல்வழியாய், வேற்றுமையாய்த் தொடர்வதினாலும் பொருள் வேறுபடும் இயல்பு, விகாரப் புணர்ச்சிகளாலும் பொருள் வேறுபடும். இக்காலத்திற்கு ஏற்ப, இவற்றைச் சில உதாரணங்கள் மூலம் சொன்னால், எளிதில் விளங்கும்.

## செய்யுள் விகாரம்

**155 வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்**
**விரித்தல் தொகுத்தல் வரும்செய்யுள் வேண்டுழி 5**

செய்யுளில் வேண்டுமிடத்து ஆறுவகையாக வேறுபாடுகள் (விகாரம்) வரும். இவை வழக்கிலும் உண்டு.

வலித்தல் விகாரம் - இருப்புச்சட்டி, இருப்புப் பாதை, கருப்பஞ்சாறு.

'ம்' - மெல்லினம் இவற்றில் 'ப்' என வல்லினமானது வலித்தல் விகாரம். செய்யுளிலும் இவ்வாறு வரும்.

'தண்டை இனக்கிளி கடிவோள்' - தட்டை கொண்டு, கிளிக் கூட்டத்தை விரட்டுவோள். 'ட்' வல்லொற்று - ண் ஆனது மெலித்தல் விகாரம். 'இணையடி நீழலே' - நிழல் நீழலானது நீட்டல் விகாரம்.

'திருத்தார் நன்றென்றேன் தியேன்' - தீயேன் என்பது குறுகியது குறுக்கல் விகாரம். (திருத்தார் - அழகிய மாலை)

மன்னன் மீது காதல் கொண்டவள், தன்னைப் பற்றிக் கூறிக் கொள்வது இது.

நெல் விளையுமே - என்பது 'நெல் விளையும்மே' என அழுத்தமாகச் செய்யுளில் வரும். விரித்தல் விகாரம்.

சிறிய இலை - ய - மறைந்து, சிறியிலை ஆவது தொகுத்தல் விகாரம்.

இவை செய்யுளில் அருகி வரும். பழம்பாடல்களில் இவ்வாறு வருமிடங்களைத் தொகுப்பது, இலக்கணத்தை எளிமைப்படுத்த உதவும்.

## செய்யுளில் வரும் சில சிறப்பு விதிகள்

**156 ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே 6**

முன் செய்யுள் விகாரம் என்பதனுள் இதுவும் அடங்கும். பாடலில் வரும்போது மட்டும் 'மரை இதழ் புரையும் சேவடி' எனலாம். தாமரை என்பதில் தா மறைந்தது. முதற்குறை.

'ஓதி முது போத்து' (ஓதி - ஓந்தி) - இடைக்குறை -'ந்' இடையில் விடுபட்டுளது. 'நீல் உண் துகில்' - நீலம் எனும் நிறம் பொருந்திய பட்டாடை. நீலம் - நீல் ஆனது, கடைக்குறை. இவை செய்யுளில் வருமிடங்கள் சிலவுள. பாடலமைப்பை நோக்கியன.

## புணர்ச்சி இடம்பெறும் விதம்.

**157 ஒரு புணர்க்கு இரண்டும் மூன்றும் உறப்பெறும் 7**

ஒரு நிலைமொழி வருமொழிப் புணர்ச்சியில் ஒரே விகாரம்தான் வருமென்பதில்லை; இரண்டு மூன்று வேறுபாடும் வரலாம்.

கலைக் கோயில் - ஒன்று வந்தது. மரக்கிளை - ம் கெட்டு, க் வந்தது. இரண்டு விகாரம். தென்னை + தோப்பு - தென்னந் தோப்பு. ஐ-கெட்டு, அம் தோன்றி, ம் ந் ஆனது. மூன்று விகாரம்.

இதுகாறும் கூறியவை 'புணர்ச்சி இலக்கணம்' பற்றிய பொது விதிகள். இனிவரும் நான்கு நூற்பாக்களிலும் உயிர், மெய் எனப் பிரிக்காமல், அனைத்து ஈறுகளுக்குமுரிய பொதுவான புணர்ச்சி நிலைகளைக் கூறுகிறார்.

## பொதுப் புணர்ச்சி

## எல்லா ஈற்றெழுத்துக்களின் முன்னும் மெல்லின மெய்யும் இடையின மெய்யும் புணர்தல்

**158 எண்மூ எழுத்தீற்று எவ்வகை மொழிக்கும்**
**முன்வரு ஞநமய வக்கள் இயல்பும்**
**குறில்வழி யத்தனி ஐந்நொது முன்மெலி**
**மிகலுமாம் ணளனல வழி'ந'த் திரியும்** 8

இலக்கணம் முன்னைய தொடர்ச்சி விளங்கினால் மட்டுமே, மேலும் விளங்கும்.

புணர்ச்சி என்பது என்ன?

ஒரு சொல்லின் இறுதி எழுத்து, வரும் சொல்லின் முதலெழுத்துடன் சேர்வதுதான் அது. கல் + சிற்பம் = கற்சிற்பம். கல்+வலிது = கல்வலிது. மொழி இறுதியில் வரும் எழுத்து 24 என்றும் முதலில் வரும் எழுத்து 22 என்றும் படித்தோமல்லவா?

இவை அல்வழி, வேற்றுமைப் பொருளில் புணரும். கல் வலிது - எழுவாய்த்தொடர்; இது அல்வழி. கற்சிற்பம் - கல்லால் ஆன சிற்பம் - ஆல் வேற்றுமை உருபு; இது வேற்றுமைத் தொடர்.

கல் சிற்பம் என்பது வேற்றுமைத் தொடராகும்போது கற்சிற்பமாகிறது; கல் சிறந்தது என்பது அல்வழியாதலின் இயல்பாகிறது. இவை பொருள் கொள்ளுவது பற்றிய வேறுபாடு, ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; பொருள் வேறு படுவதால் புணர்ச்சி வேறுபடும்; புணர்ச்சியை வேறுபடுத்தினால் பொருள் மாறிவிடும்.

1. எண்மூ எழுத்து ஈற்று எவ்வகை மொழிக்கும் - 24

(எண்+மூ = 8x3=24) எழுத்துக்களை இறுதியாகவுடைய, எவ் வகைப்பட்ட சொல்லுக்கும் (பெயர், வினை முதலியன) எதிர்வரும் ஞநமய வ - எழுத்துக்களை முதலாகவுடைய சொற்கள் இயல்பாகப் புணரும்.

கலை+ஞானம் = கலைஞானம். கலை+நன்று = கலைநன்று. பலா+மரம் = பலாமரம். நிலம்+வலிது = நிலம் வலிது. கண்+யாது = கண்யாது. உரை+யாப்பு = உரையாப்பு. இவை அல்வழித் தொடர்கள்.

கலை நலம் (கலையினது நலம்). கண்வீச்சு, தன்வயம், எண்மாட்சி - இவை வேற்றுமைத் தொடர்கள். எல்லாம் இயல்பாகப் புணர்ந்தன.

2. குறில்வழி'ய' - மெலி மிகும். மெல்லெழுத்து மிகும்.

மெய்+ஞானம் = மெய்ஞ்ஞானம். மெய்ம்மலி உவகை (உடல் நிறையும்படி மகிழ்தல்). நெய்ம்மணம். 'மிகலுமாம்' என்பதால், 'நெய் மணம்' என மிகாது வரவுங்கூடும்.

ஐ, நொ, து - மூன்றும் ஓரெழுத்தொரு மொழிகளாக வரும்போது மெல்லெழுத்து மிகும். ஐ, கை, மை, வை என வருவன பல. இவை அருகி வருவன. (நொ - நொந்து போ, து-உண்)

ஐ+நூறு = ஐந்நூறு. ஐ+ஞாலம் = ஐஞ்ஞாலம்.

கை+நீளம் = ஒரு கைந்நீளம். (கை நீளம். பொருள் வேறுபடும்)

இருவகையாகவும் வரும்.

நொந்நாகா - நாகனே நொந்துபோ

துந்நாகா - நாகனே உண்பாயாக

இவை இன்று வழக்கில் இல்லை. நொ-அடிச்சொல். நொந்துபோதல், நோதல், நொந்தான் எனவும் - து அடிச் சொல் துப்பார்க்கு (உண்பார்க்கு), துய்ப்பு, துய்த்தல் எனவும் சொற்கள் உருவாகி, அவையே வழக்கிலுள்ளன.

3. சொல்லிறுதியில் ண,ன,ள,ல வந்தால் எதிரில் வரும் ‘ந’ திரியும்.

   கண்+நீர் = கண்ணீர். தண்+நீர் = தண்ணீர். பொன் + நீலன் = பொன்னீலன். அடியில் மண்ணிறைந்துளது. குடத்தில் பொன்னிறைந்துளது. (இன்று பிரித்தெழுதிப் பழகுவதால் மண் நிறைந்துளது என்கின்றோம்.)

## எதிரே வல்லெழுத்துக்கள் வரின் ஏற்படும் மாற்றங்கள்

**159 பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்**
**வலிவரின் இயல்பாம்; ஆவி யரமுன்**
**வன்மை மிகா; சில விகாரமாம் உயர்திணை 9**

ஆண், பெண் என்பன உயோ்திணை, அஃறிணை இரண்டிற்கும் பொதுப்பெயர்கள். நான், நீ (எனும் இடப் பெயர்களும் கற்பனையில் பிற உயிரினங்களும் பேசுவதாகப் படைப்பதால்) பொதுப் பெயர்கள். முற்காலத்தில் ஆடு மாடுகளையும் சாத்தன், சாத்தி என்பதுபோலப் பெயரிட்ட ழைத்ததால், அவையும் பொதுப்பெயர்கள். இன்று நாய்களுக்குப் பெயரிட்டழைப்பது போல்வது அது. இவை ‘விரவுப் பெயர்’ என்றும் கூறப்படும்.

ஈற்றில் வரும் மெய்கள் : ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள்

1. இவை ஈற்றில் வர, எதிரே வல்லெழுத்து வரின் இயல்பாகும்.

   ஆண் சிறியன், பெண் பெருமை, சாத்தன் கொம்பு, சாத்தன் கை, நான் தலைவன், நீ சிறியை. இவைகள் பொதுப் பெயர்கள்.

   அவன் தலைவன், அவள் சிரித்தாள், அண்ணல் காந்தி, பொன்னன் பெருமை - இவை உயர்திணைப் பெயர்கள்.

2. உயிர் (ஆவி) எழுத்துக்கள் ய, ர ஈற்றில் நிற்க எதிரே வல்லினம் வந்தால் ஒற்று மிகாது.

சாத்தி சிறுபெண் (உயர்திணை)

சாத்தி சிறியது (அஃறிணை)

பேய் கடிது, நாய் குரைத்தது. நம்பி கை இது, தம்பி சிரிப்பு அது, நீர் பெரியிர் - இவ்வாறு வரும்.

3. உயர்திணையில் சில விகாரப்பட்டு வரும்.

மாணிக்கம் + செம்மல் = மாணிக்கச் செம்மல்

சமணர் + பள்ளி = சமணப்பள்ளி

கபிலர் + பரணர் = கபில பரணர்

கண்ணகி + சிலை = கண்ணகிசிலை, கண்ணகிச்சிலை

## வினா, விளிப் பெயர்கள் முன்வரும் வல்லினம் மிகாது

**160 ஈற்றுயா வினாவிளிப் பெயர்முன் வலி இயல்பே 10**

ஈற்றிலே ஆ, ஓ, ஏ என வரும் வினாப் பெயர்கள் முன்னும், யா என்னும் வினாப் பெயர் முன்னும் விளிப் பெயர்கள் முன்னும் வல்லொற்று மிகாது; இயல்பாக வரும்.

1. அவனா + கொடுத்தான் = அவனா கொடுத்தான்

யாரோ + கெடுத்தவர் = யாரோ கெடுத்தவர்

நீயோ + கொடைஞன் = நீயோ கொடைஞன்

போனதே + பொருள் = போனதே பொருள்? (அரிதாக வரும்)

யா + கேட்பன = யா கேட்பன?

யா + சிறியவை = யா சிறியவை?

2. நண்பா + கேள் = நண்பா கேள்

அன்பே + பேசு = அன்பே பேசு

தாயே + தருக = தாயே தருக

## முன்னிலை வினை, ஏவல் வினைகளின் முன்வரும் வல்லினம் இயல்பும் விகற்பமுமாம்

**161 ஆவி யரழ இறுதிமுன் னிலை வினை**
**ஏவல் முன் வல்லினம் இயல்பொடு விகற்பே 11**

ஆவி எனப்படும் உயிரெழுத்துக்கள் யரழ மெய்யெழுத்துக்கள் ஆகியவற்றை இறுதியிற்கொண்ட முன்னிலை வினை, ஏவல் வினை முன்வரும் வல்லினம் இயல்பாக மிகாமலும் வரும்; சிலபோது மிகுந்து விகாரப்படுதலுமுண்டு.

உயிர்களுடன் யரழ மெய்களும் சொற்களின் இறுதியில் வரும் முன்னிலை வினை ஏவல்வினை இரண்டின் முன் வல்லெழுத்தாறும் வரின் இயல்பாகும். திரிந்து விகற்பமாதல் மிக அரிதின் உண்டு.

போயினை புலவ! புகழ்ந்தனை கபில!
நீ ஏன் மறைந்தாய் கண்ணகி
மறைவாய் உறைவாய் கயவா
உண்டனிர் செல்வர்காள்! கூடினிர் படைஞரே!

இவை முன்னிலை வினைகள்; இயல்பாயின. ழகரம் முன்னிலை வினையில் வராது.

நட குழந்தாய்! படி பையா!
ஆய்வுசெய் கலைமதி! சேரிடம் அறிந்து சேர் + தலைவா
நீடு வாழ் பாவல!

உறழ்ந்து வருமென்பதற்குக் காட்டுக்கள் இல்லை. நடக் கொற்றா! சிரிப் பையா! எனக் காட்ட முயன்றாலும் பொருந்த வில்லை.

## உயிரெழுத்து ஈறாக வர, எதிரிலும் உயிரே வரும் புணர்ச்சி

**162 இஈ ஐவழி யவ்வும் ஏனை**
**உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்**
**உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும் 12**

சொல்லின் இறுதியிலும் உயிரெழுத்து, வரும் சொல்லின் முதலிலும் உயிரெழுத்து என்றால், உயிரையும் உயிரையும் சேர்க்க இடையே வரும் 'மெய்'தான் உடம்படுமெய். இ, ஈ, ஐ மொழி இறுதியில் நின்றால், 'ய' மெய்வந்து உடம்படுவிக்கும். கூலி+ஆள் = கூலியாள். ஈ+என இரத்தல் = ஈயென இரத்தல். வேலை+ஆள் = வேலையாள். இஈஐ – மிக இயல்பாக பேச்சிலும் 'ய'கரம் பெறுகிறது.

ஏனைய உயிர்கள் : 'வ'கர மெய் பெறுதல்.

பல+உயிர்கள் = பலவுயிர்கள். நிலா + அழகி = நிலாவழகி. அது + அன்று = அதுவன்று. பூ + எழில் = பூவெழில். எ - ஈறாவதில்லை. 'ஓ'வும் அரிய வழக்கு. சோ + அரண் = சோவரண். 'ஔ'வும் அரிய வழக்கு.

'ஏ' முன் ய, வ இரண்டும் வரும். தே + இலை = தேயிலை. தே + இனிது = தேவினிது. (தே - தெய்வம்)

சிலபோது உடம்படுமெய் இன்றியும் கூறுவர்.

மா இலை, மாவிலை. வேறு மாற்றங்களும் சிலவுள. கோ + இல் = கோவில், கோயில் இருவிதமாகவும் வழங்குகிறது. ஈற்றில் வரும் உயிரை வைத்தே இவை கூறப்பெற்றன. வருமொழி முதலில் எவ்வுயிரும் வரலாம்.

## எகர வினா, சுட்டு எழுத்துக்கள் பற்றிய புணர்ச்சி விதிகள்

**163 எகர வினாமுச் சுட்டின் முன்னர்**
**உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்,**
**பிறவரின் அவையும், தூக்கில் சுட்டு**
**நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே** 13

1. எ, அ இ உ – இவை ஈற்றில் நிற்க எதிரே உயிரெழுத்தும் யகர மெய்யும் வந்தால் வகர மெய் இடையே வரும்.

   எ + உயிர் = எவ்வுயிர், எ + ஊர் = எவ்வூர்.

அ + உலகம் = அவ்வுலகம் இ + உலகம் = இவ்வுலகம்

எ + யாடு = எவ்யாடு அ + யாடு = அவ்யாடு.

2. பிற எழுத்துக்கள் வரின் அவையே மிகும். எ + குதிரை = எக்குதிரை. அ + புத்தகம் = அப்புத்தகம். இ + பொழுது = இப்பொழுது. வந்த ஒற்றே மிக்கது.

3. தூக்கில் - பாடலில். சுட்டு நீளின் - அ இ உ சுட்டெழுத்து நீளுமாயின் யகரமும் மிகுதல் விதியாகும். அ - ஆ + இடை ஆயிடை. (இவை அரிதாகப் பாடலில் வருவன).

உரையாசிரியர் கூறுவன: யா + ஙனம் = யாங்ஙனம்.

அங்ஙனம், ஆங்ஙனம் ஆதலுண்டு. இங்ஙனம் - ஈங்ஙனம் ஆதலுண்டு. 'இது' என்பதை ஈது என்பதுமுண்டு. ஆங்கு, ஈங்கு, ஊங்கு; ஆண்டு, ஈண்டு எனச் சுட்டுப்பெயர்கள் நீள்வதுண்டு. (அங்கு-ஆங்கு).

## குற்றியலுகரம் முற்றியலுகரம் பற்றிய சில புணர்ச்சி விதிகள்

**164 உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்**
**யவ்வரின் இய்யாம் முற்றும்மற்று ஒரோவழி 14**

உக்குறள் - குறள் 'உ' - குற்றியலுகரம். இது மொழியிறுதியில் நின்று, எதிரே உயிரெழுத்து வரின் அந்த 'உகரம்' போய்விடும். வாய்ப்பு + இல்லை. வாய்ப்பில்லை. வாய்ப்ப் (உ-கெட்டது) + இல்லை = வாய்ப்பில்லை என ஆனது. பாட்டறியேன், படிப்பறியேன். பாட்டு + அறியேன். 'டு'வில் உ கெட்டு, நின்ற 'ட்' இல் அ சேர்ந்தது. பாட்ட்+அறியேன் (பாட்டறியேன்). படிப்பு என்பதில் இறுதி உ கெட்டது.

எதிரே 'யகர' முதன்மொழி வரின், குற்றியல் 'உகரம்' இகரமாகத் திரியும். நாடு + யாது = நாடியாது, ஆறு + யாது = ஆறியாது. சேர்த்துச் சொல்லும்போது அவ்வாறு வருவதை உற்று நோக்கி அறியலாம்.

முற்றும் - முற்றியலுகரமும். ஒரோவழி அற்று - ஒருசில இடங்களில் அதுபோல வரும். கதவு + அடைப்பு = கதவடைப்பு. இரவு + அன்று = இரவன்று. இவை முற்றிய லுகரங்கள். ஆயினும் வல்லெழுத்துடன் வரும் குற்றுகரம் போன்று, கடைசி உகரம் கெட்டன.

## உயிர் எழுத்து ஈறாக வரும் சொற்களின் முன் வல்லொற்று மிகுதலும் மிகாமையும்

**165 இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்**
**கசதப மிகும்வித வாதன மன்னே** 15

ஒற்றெழுத்து (கசதப) மிகுதலும் மிகாமையும் பற்றிய பொது விதி இது.

இயல்பு ஈறு என்பது தேக்குக்கிளை எனவரும். நிலை மொழி ஈறு இயல்பாக அவ்வாறே நிற்பதால் இயல்பீறு. மரம் + கிளை = மரக்கிளை. மரம் என்பதன் 'ம்' ஈறுகெட்டு, ஒற்று மிகுந்தது. மரம் - மர ஆனது விதி ஈறு எனப்படும். இவ்வாறு இயல்பினும் விதியினும் நின்ற எல்லா உயிர் முன்னும், வருமொழி முதலில் கசதப வல்லெழுத்து முதன்மொழிகள் வந்தால் ஒற்றுமிகும். ஆயினும் வேறு பல சூத்திரங்களில் விதந்து (தனியே எடுத்துச்) சொல்லப்பட்டவை இதற்கு விதி விலக்கு.

வாழை + பழம் = வாழைப்பழம். பலா + சுளை = பலாச்சுளை. பரிசு + பொருள் = பரிசுப்பொருள். பரிதி + சுடர் = பரிதிச் சுடர். தீ + பிழம்பு = தீப்பிழம்பு. கலை + கழகம் = கலைக்கழகம். பொது + தலைப்பு = பொதுத்தலைப்பு. இவை யாவும் இயல்பீற்றுப் புணர்ச்சிகள்.

மரம் + கிளை = மரக்கிளை. தமிழ் + சாதி = தமிழச்சாதி. பழம் + சாறு = பழச்சாறு. ஒன்று + கை = ஒற்றைக்கை. இவை போல்வன விதி ஈறு.

தோட்டம் + பயிர் = தோட்டப்பயிர். ஈத்தொல்லை, பாம்புக்கடி, காஞ்சிப்பட்டு. இவ்வாறு அல்வழி, வேற்றுமைத் தொடர்களில்

உயிர்முன் வரும் வல்லினம் ஒற்று மிகும். தனியே வேறு நூற்பாக்களில் விதந்தவை மிகாது வரும். வா கண்ணன், வருக கண்ணன், வாழ்க கண்ணன். கண்ணா கேள், கண்ணா பார்.

ஏவல், வியங்கோள், விளி (அழைத்தல்) ஆகியவற்றில் மிக வில்லை. அவை மிகாது இயல்பாகும் என்று விதந்து ஓதப் பட்டுள்ளன.

பொருளுணர்ச்சியோடு சொல்லிப் பார்த்தால் மிகுமா, மிகாதா என்பது விளங்கிவிடும். மிகுவதால் ஒருபொருள்; மிகாமையால் ஒரு பொருள் தரும். தந்த கட்டில் - தந்தக் கட்டில். கை பிடி - கைப்பிடி. கடலை சாப்பிடு - கடலைச் சாப்பிடு. பாம்பு கடித்தது - அல்வழி. பாம்புக்கடி (பாம்பின் கடி) - வேற்றுமை.

ஒற்று மிகுதல் ஒலி இணைப்புக்கு வருமிடங்கள் : யானையைப் பார்த்தேன். தேர்வுக்குப் படித்தேன். பொருள் இணைப்புக்கு வருமிடங்கள் : கை குட்டை, கைக்குட்டை, காடு கிழாள், மலை கிழவோன் எனச் சிலபோது மிகாதும் வரும். கொக்கு பறந்தது - அல்வழி - மிகவில்லை. கொக்குச் சிறகு - வேற்றுமை - ஒற்று மிகுந்தது.

## உயிர் ஈறாக வரும் சில மரப்பெயர்களின் முன் வல்லினம் வரும் புணர்ச்சி

**166 மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து**
**வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே 16**

மரப் பெயர்களில் உயிரீறு பெற்றவை முன்னர் கசதப - ஒற்று மிகாமல் அவற்றின் இனமான ங, ஞ, ந, ம மிகுவதும் உண்டு. கருவிளம் + கனி = கருவிளங்கனி.

மா + காய் = மாக்காய் ஆகாமல் மாங்காய் என க் - இனமான ங் - வந்தது. மா + பழம் = மாப்பழம் ஆதல் வேண்டும். ம் அதன் இனமான மெல்லெழுத்து. எனவே மாம்பழம் ஆனது. களாப்பழம், களம்பழம், களங்கனி என்றும் வரும்.

பலாக்கனி, வாழைப்பழம், கொய்யாப்பழம் எனப் பொது விதிப்படி வருவனவும் பலவுள. அதனால்தான் 'வரப்பெறுதலும் 'உள' என 'உம்மை' கொடுத்துக் கூறியுள்ளார். இவற்றில் இன மெல்லெழுத்து வராமல், வந்த எழுத்தே மிகுகிறதல்லவா?

## அகர ஈறு

## சொல்லின் இறுதி அகரமாக இருக்கும்போது புணரும் நெறிகள்

**167 செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்**
**பெயரின் எச்சம்முற்று ஆறன் உருபே**
**அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே 17**

செய்யிய என்பது ஒரு வினையெச்சம். செய்வதற்காக என்பது போல்வது அது. பாடிய பறந்தனள், ஆடிய சென்றனள், தேடிய காத்திருந்தாள் (இன்று அரிய வழக்கு), பழம்பாடல்களில் வரும். அகர ஈற்று இவ்வினையெச்சம் முன் வல்லொற்று மிகவில்லை.

பல்வகைப் பெயரெச்சம் அகர ஈற்றுடன் முடியும். நடந்த கதை, தொடர்ந்த புதினம், அடர்ந்த காடு, உற்ற துன்பம், கறுவிய தோழன், பாடிய பறவை, வெளுத்த சலவை, பண்பு சான்ற பெரியோர், சிறிய தந்தை, பெரிய பையன், கரிய குதிரை. தெரிநிலை, குறிப்புப் பெயரெச்சங்கள் முன்வந்த வல்லினம் மிகவில்லை.

பல்வகை முற்று - பலவகை வினைமுற்றுக்கள். தெரிநிலை, குறிப்பு வினைமுற்றுக்கள். கண்டன கண்கள், வென்றன படைகள், கரியன குதிரைகள், சிறியன பைகள் இவை வினைமுற்றுத் தொடர்கள். அகர ஈற்றன. ஒற்று மிகவில்லை. வாழ்க பல்லாண்டு, வாழிய கயல்விழி என வியங்கோள் வினைமுற்றிலும் மிகவில்லை.

ஆறன் உருபு - பன்மைக்குரிய 'அ' உருபு. என கைகள், (உன்னுடையன செல்வங்கள் - உடையன - சொல்லுருபின் அகர ஈறும் இன்று காட்டலாம்.)

அகரத்தில் முடியும் அஃறிணைப் பன்மைப் பெயர்கள் முன் வல்லினம் மிகாது. பறப்பன குருவிகள், தின்பன

குதிரைகள். அம்ம - ஒருவரைக் கூப்பிடுவது. அம்ம பாராய், அம்ம தோழி, கேளாய் அம்ம கிளி மொழியே. 'அம்ம கேட்பிக்கும்' - தொல். 761. இடைச்சொல்.

## வாழிய எனும் சொற்புணர்ச்சி

**168 வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்**
**ஏகலும் உரித்து, அஃது ஏகினும் இயல்பே** 18

வாழிய என்ற வியங்கோள் வினைமுற்று, ஈற்று உயிர்மெய் (ய) குறைதலும் உண்டு. அவ்வாறு வரினும் ஒற்று மிகாது. வாழி பல்லாண்டு, வாழி புலவோர் வாழிவாழியே, வாழி தமிழ் மொழி. வாழிய - அகர ஈறு. வாழி - இகர ஈறு. ஆயினும் மிகவில்லை.

## சாவ எனும் சொற்புணர்ச்சி

**169 சாவஎன் மொழிஈற்று உயிர்மெய்சா தலும்விதி** 19

'சாவ' என்பது வினையெச்சம். சாவப் போகின்றான். இன்று சாகப் போகின்றான் என்பர். இதன் ஈற்று உயிர்மெய் 'வ'. அத சாதலென்பது கெட்டுப்போதல். 'சா' என நிற்கும். சாக்குத்தினான். சாகும்படி குத்தினான். சாவக் குத்தினான் என்பதே பொருந்துகிறது. இன்று சாகக் குத்திவிட்டான், சாகச் செய்தான் என்பர். சாவடி அல்லது சாகடி என்பதை, 'சாக்கடித்தல்' என வழங்குகின்றனர். இதில் 'சா' என்றே நிற்கிறது. அடி - துணைவினை. சாகஅடி, சாவ அடி என்பன 'அக்கு'ச் சாரியை பெற்று 'சாக்கடி' என ஆகும்போது, 'சா' என்றே நிற்பது கருதத்தக்கது.

## பலசில எனும் சொற்புணர்ச்சி

**170 பலசில எனும்இவை தம்முன் தாம்வரின்**
**இயல்பும் மிகலும், அகரம் ஏக**
**லகரம் றகரம் ஆகலும், பிறவரின்**
**அகரம் விகற்பம் ஆகலும் உளபிற** 20

பலசில என்பன தம்முன்தாம் வரின் இயல்பாகும். பலபல, சிலசில. பலசில உளவேல், சிலபல மாறினும் என வரும். இவை அடுக்குத்தொடர் போல்வதும் உணர்க. மிகலும் உண்டு; பலப்பல, சிலச்சிலவாக எடுத்துவை. அகரம் ஏக (நீங்க), லகரம் றகரமாகலுமுண்டு. பற்பல, சிற்சில.

பிற சொற்கள் வரின், ஈற்று அகரம் குறைந்தும் விகாரப்பட்டும் பலவாறு வரும். பலகலைகள், பல்கலைக் கழகம், பஃறாழிசை (பல் + தாழிசை), பல நாட்கள், பலமணி - பன்மணி மாலை, பல்லடை. சிலபொருள்கள், சில நாட்கள், சில்லரை.

## ஆகாரஈறு

## ஆ, மா, மியா சொற்புணர்ச்சி

**171 அல்வழி ஆ, மா, மியாமுற்று முன்மிகா 21**

அல்வழித்தொடரில் 'ஆ' முன் வல்லொற்று மிகாது. ஆ சென்றது, ஆ கரியது, மா கத்துகிறது, மா சிறியது. (ஆ-பசு, மா-விலங்கு). 'மியா' முன்னிலை அசை. முன்பு ஒருவரைக் கூப்பிட்டுச் சொல்லினர். கேண்மியா கதிரனே, சென்மியா பையனே. ஒற்று இங்கெல்லாம் மிகவில்லை. ஆகார ஈற்று அஃறிணைப் பன்மை எதிர்மறை வினை முற்றுக்கள் முன்பும் ஒற்று மிகாது.

இனி ஓடா குதிரைகள், குயில்போல் பாடா பறவைகள், புல்லைத் தின்னா கழுதைகள்.

இவை எதிர்மறை வினைமுற்றுக்கள். ஓடா - ஓடமாட்டா, பாடா - பாடமாட்டா. ஓடாக் குதிரைகள் என ஒற்று மிகுந்தால், எதிர்மறைப் பெயரெச்சமாகிவிடும். ஆமா - காட்டுப்பசு. ஆமா பெரிது, ஆமா கரிது என்றாலும் இதுவே விதி. உண்ணா(து) கிடந்தன, தின்னா(மல்) நின்றன என வினையெச்சமாக வரும்போதும் இயல்பாதலுண்டு.

## நிலா, கனா, பலா போலும் குறியதன் பின்வரும் 'ஆ' புணர்தல்

**172 குறியதன் கீழ்ஆக் குறுகலும் அதனோடு**
**உகரம் ஏற்றலும் இயல்புமாம் தூக்கின் 22**

தூக்கு - சீர்பட அமையும் ஓசை; ஓசையுள்ள பாட்டு. குற்றெழுத்தை அடுத்து 'ஆ'காரம் வரும் சொற்கள் சிலவுள : பலா, கனா, நிலா, இரா. சுறா (மீன்), இறா (மீன்). இவை ஆ - அகரமாகக் குறுகியும் வரும். நிலவிரி கடற்கரை, (இ)ரப் பொழுது, சுற மறிவன துறையெல்லாம். பலவு (பலா - பல என - அகரம் ஆகி அதனுடன் உகரம் பெற்றது. வகர உடம்படுமெய்யும் சேர்கிறது. பல-பலா-பலவு. கனா, கனவு. நில, நிலா, நிலவு. இர, இரா, இரவு, சுற, சுறா, சுறவு, இறா, இறவு. உலக வழக்கிலும் சிலவுள. இயல்பான சொல் நிலா, இரா, பலா எனபனவே. இவை செய்யுளுள் நில, நிலவு; இர, இரவு; பல பலவு என வருமிடங்கள் பலவுள. இந்நூற்பா ஐயம் அகற்ற இடையில் வந்துளது.

இவை நிலாக்கதிர், நிலவுப்பொழுது; இராப்பொழுது, இரவுக்குறி, பலாப்பழம், பலவுக்கிளை; இரவுப்புறம், சுறவுக்கோடு (கொம்பு) என வல்லினம் மிக்கு வருதலையும் நினைவு கொள்க.

## இகர ஈறு

## அன்றி இன்றி சொற்புணர்ச்சி

**173 அன்றி இன்றிஎன் வினைஎஞ்சு இகரம்**
**தொடர்பினுள் உகரமாய்வரின் இயல்பே 23**

தொடர்பு - செய்யுள். செய்யுளில் அன்றி, இன்றி என்ற குறிப்பு வினையெச்சங்கள், அன்று, இன்று என உகரம் பெற்று வருமிடங்களும் சிலவுள. அங்ஙனம் வரின், எதிரே வரும் கசதப வல்லொற்று மிகாது.

'நாளன்று போகி', 'பதனன்று புக்கு' 'உப்பின்று புற்கை' (உப்பில்லாக் கஞ்சி).

இசையன்றிச் சிறந்தெதுவுமில்லை, விலையின்றித் தந்தான், அன்றி, இன்றி - அவ்வாறே வரின், வல்லொற்று மிகுகிறது.

## நாழி + உரி சொற்புணர்ச்சி

**174 உரிவரின் நாழியின் ஈற்றுஉயிர் மெய்கெட**
**மருவும் டகரம், உரியின் வழியே**
**யகரஉயிர் மெய்யாம் ஏற்பன வரினே 24**

நாழி என்பது ஓர் அளவைப் பெயர். இன்று ஒரு நாழியை அரைப்படி என்பர். உரி - நாழியிற்பாதி. 'நாழிஉரி' எனச் சொல்லிச் சொல்லி 'நாடுரி' ஆகிவிட்டது. அதற்கு இலக்கணம் எழுதப்பட்டது இது. உரி முன்னே வரின் முதலிலுள்ள 'நாழி'யில் - 'ழி' உயிர்மெய் கெடும். அந்த இடத்தில் 'ட்' (டகர மெய்) வரும் (மருவும் - பொருந்தும்) நாட் + உரி = நாடுரி ஆகும்.

உரியின் வழி - உரிமுதலில் நிற்க அதன் பின்னால் வேறு சொல்வரின் 'யகர' உயிர்மெய்யெழுத்து ஏற்குமிடங்களில் மட்டும் வரும். உரியவுப்பு, உரியவரிசி (உரியளவுள்ளவை). உரியுப்பு, உரியரிசி, உரியெண்ணெய் என வருதலே மிகுதி.

## 'புளி'ச் சொற்புணர்ச்சி

**175 சுவைப்புளி முன்இன மென்மையும் தோன்றும் 25**

சுவைப்புளி - புளி என்பது புளிப்புச் சுவைப்பெயர். மரமோ, பழமோ அன்று என்பதாம். அதன்முன் வல்லினம் மிகுதலே யன்றி, அதற்கு இனமான மெல்லினமும் மிகும். புளிக்கறி, புளிங்கறி. புளிச்சோறு, புளிஞ்சோறு.

## இகர, ஐகார ஈறு
## இகரம் ஐகாரம் முன் வல்லினம் வருதல்

**176 அல்வழி இஐம் முன்னர் ஆயின்**
**இயல்பும் மிகலும் விகற்பமும் ஆகும் 26**

அல்வழித் தொடரில் இ, ஐ இறுதியில் வர, எதிரே வல்லினம் கசதப வரின் இயல்பாய் முடியும்; மிகுதலும் உண்டு; விகற்பம் - மிகுந்தும் மிகாமலும் வேறுபடவும் முடியும்.

கிளி பேசியது, தலை சுற்றியது. அல்வழியில் ஒற்று மிகவில்லை.

திருத்திக் கொள்க - வினையெச்சத்தொடர், அல்வழி, மிக்கது.

தலைத் தலை - அடுக்குத்தொடர், அல்வழி , மிக்கது.

வருந்தித் திருந்தினான், வருந்தி திருந்தினான்.

பாலைப் பருகினான், பாலை பருகினான் - உறழ்ந்தும் வந்தன. மிகாதபோது, விட்டிசைக்க வேண்டும். இங்கு ஒலி இணைப்புக்கு மட்டுமே வல்லெழுத்து வருகிறது.

கிளிப்பேச்சு, தலைச்சுற்று - வேற்றுமையில் மிகுந்தது.

## ஈகார ஈறு
## ஆப்பீ சொற்புணர்ச்சி

**177 ஆமுன் பகரஈ அனைத்தும்வரக் குறுகும்**
**மேலன அல்வழி இயல்பா கும்மே 27**

பழங்காலத்தில் மாடுகளே செல்வம். சாணம், சாணி என்று இன்று நாம் கூறுவதே ஆப்பீ என்பது. இதன் எதிரே எச்சொல் எவ்வெழுத்து வரினும் பீ என்பது பி எனக் குறுகும். மேற் சூத்திரத்தில் இயல்பு, மிகல், விகாரம் எனக் கூறிய மூன்றில், அல்வழிக் கண் இயல்பாய் மட்டுமே வரும். ஆப்பீ - அப்பி என ஆகும். ஆப்பி கரிது, ஆப்பி நன்று எனவரும். ஆப்பி அருமை என வேற்றுமையிலும் இயல்பாக வரும். ஆப்பி குளிரும் என அல்வழியில் மிகாதது, ஆப்பிக்குளிர்ச்சி என வேற்றுமையில் மிக்கதும் காண்க.

## பவ்வீ, நீ, மீ சொற்புணர்ச்சி

**178 பவ்வீ, நீ, மீ முன்னர் அல்வழி**
**இயல்பாம் வலிமெலி மிகலுமாம் மீக்கே 28**

பவ்வீ - ப + ஈ = பீ. பீ சிறிது, பீ தீது. நீ குட்டை, நீ கரியை. நீ பெரியை. மீ கண் - கண்ணின் மேற்பகுதி. அல்வழியில் இயல்பானது. மீக்கூற்று - புகழ்மொழி. மீந்தோல் - மேல்தோல். வலியும் மெலியும் மிகுந்தன.

## உகர ஈறு

## சில முற்றுகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி

**179 மூன்று, ஆறு உருபு, எண், வினைத்தொகை சுட்டுஈறு**
**ஆகும் உகரம் முன்னர் இயல்பாம் 179**

1. மூன்றாம் வேற்றுமை உருபு - ஒடு. 2. ஆறாம் வேற்றுமை உருபு - அது. 3. எண்கள் : ஒரு, இரு, அறு, எழு. 4. வினைத்தொகை : சுடு, அடு, படு, 5. சுட்டு : அது, இது. இவற்றின் ஈறாகும் முற்றியலுகரம், வருமொழி முதலில் வல்லினம் வந்தால் இயல்பாகும். வல்லொற்று மிகாது. 1) கண்ணனொடு பேசினேன், வருத்தத்தொடு கொடுத்தான். 2) முருகனது தோட்டம், எனது புத்தகம். 3) ஒரு கை, ஒரு படம், இரு படைகள், இரு சுடர், அறு தொழிலோர், அறு பகுதிகள் 4) சுடுகாடு, அடுபகை, தொடுகறி 5) அது சிறந்தது, இது பெரிது.

மேலே காட்டப்பட்டவை முற்றியலுகரச் சொற்கள். தனிக் குறிலை அடுத்து வருவது குற்றியலுகரமாகாது, முற்றியலுகரமாகும்.

## அது - அதான்று ஆதல்

**180 அதுமுன் வரும்அன்று ஆன்றாம் தூக்கின் 30**

அது என்பது சுட்டுப்பெயர். அன்று என்பது குறிப்புவினைச் சொல் (காலங்காட்டாதது). இரண்டும் சேர்ந்து செய்யுளில்

வரும்போது, அன்று - ஆன்று என முதல் நீளும். அது + அன்று = அதுவன்று என வரவேண்டியது, அதான்று என்று பாடலில் வரும். திருமுருகாற்றுப் படையில் (திருப்பரங்) குன்றமர்ந்து உறைதலும் உரியன் - அதான்று, (திருச்சீர்) அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே - அதான்று... என வருவன கற்க.)

## குற்றியலுகர ஈற்றுச் சிறப்பு விதி

**181 வன்தொடர் அல்லன முன்மிகா அல்வழி 31**

பாக்கு - வன்தொடர்க் குற்றியலுகரம். இதைத் தவிர்த்த ஏனைய ஐந்து தொடர்க் குற்றியலுகரங்களின் பின்னே வரும் வல்லொற்று, அல்வழித் தொடரில் மிகாது.

நாடு சிறந்தது, ஆடு கத்துகிறது - நெடில்தொடர்க் குற்றுகரம் அல்வழியில் மிகவில்லை.

எஃகு கடிது, எஃகு பெரிது - ஆய்தத்தொடர்க் குற்றுகரம்.

பழகு தமிழ், கிணறு சிறிது - உயிர்த்தொடர்க் குற்றுகரம்.

வெந்து போனது, வம்பு கொடிது - மென்தொடர்க் குற்றுகரம்

செய்து கழிந்தது, சால்பு குறைந்தது - இடைத்தொடர்க் குற்றுகரம்

வன்தொடர்க் குற்றுகரமாயின், பாக்குக் கடிது, சுக்குச் சிறிது, பொறுத்துப் போதல் என வல்லொற்று மிகும்.

## மீண்டும் சில குற்றுகர ஈற்றுச் சிறப்புவிதி

**182 இடைத்தொடர், ஆய்தத்தொடர், ஒற்று இடையின்
மிகாநெடில், உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை32**

வேற்றுமைத் தொடருக்கு இலக்கணம் இது. இடைத் தொடர்க் குற்றுகரம் முன் வரும் வல்லினம் மிகாது. சால்பு பெருமை (சால்பினது பெருமை). ஆய்தத் தொடர்க் குற்றுகரம் : எஃகு கடுமை. ஒற்று இடையில் மிகாத நெடில் : பாகு + தித்திப்பு. பாகினது தித்திப்பு. உயிர்த்தொடர் : வரகுகதிர்.

(இவையே சால்புப் பெருமை என்றால் சால்பாகிய பெருமை என்றும் பாகுத்தித்திப்பு என்றால் பாகு போன்ற தித்திப்பு என்றும் பொருள் வேறுபடும், அல்வழியில்.)

## மேலும் சில குற்றுகர ஈற்றுச் சிறப்புவிதிகள்

**183 நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள்**
**டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே 33**

நெடில் தொடர்க் குற்றுகரம், உயிர்த் தொடர்க் குற்றுகரங்களுள், வல்லெழுத்து எதிரே வந்தால், ட, ற ஒற்று இடையில் வருபவை மட்டும் வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டிக்கும். சிறுபான்மை இரட்டிக்காதும் வரும். அல்வழியிலும் சிலபோது இவ்வாறு வரும்.

நாடு + பற்று = நாட்டுப்பற்று (நாடு - நாட்டு ஆனதே 'ட்' இரட்டிப்பு).

வயிறு + பசி = வயிற்றுப்பசி (வயிறு - வயிற்று ஆனதே 'ற்' இரட்டிப்பு).

முன்னது நெடில் தொடர்; பின்னது உயிர்த்தொடர்க் குற்றுகரங்கள். இவை வேற்றுமைத் தொடரில் இரட்டித்தன. நாடு கிழவோன் - நாட்டு என ஆகவில்லை. காடு கிழவோள் (காளி); காடகத்தே (காட்டு ஆகவில்லை). காட்டரண், களிற்றியானை - அல்வழியிலும் இரட்டித்தன.

## அவை வேற்றுமைத் தொடரில் புணர்தல்

**184 மென்தொடர் மொழியுள் சிலவேற் றுமையில்**
**தம்இன வன்தொடர் ஆகா மன்னே 34**

மென்தொடர்க் குற்றுகரம் வேற்றுமைத் தொடர் சிலவற்றில், வருமொழியுடன் புணரும்போது வன்தொடராக மாறா. ஆகவே பலவற்றில் மாறும் என்பது பெறப்படும். இரும்பு + பாதை = இருப்புப் பாதை. ம்-ப் ஆனது மென்தொடர் வன் தொடரானது

ஆகும். கரும்பு + வில் = கருப்பு வில். இரும்பு + சட்டி = இருப்புச்சட்டி. மருந்துப்பை, கரும்புவில் என இயல்பாதலே மிகுதி. குரக்கு மனம், அற்புத்தளை (அன்பு - அற்பு) என அல்வழியிலும் வன்தொடராயின. வம்புப் பேச்சு, வண்டுக்கால் என்பன வன்தொடராக மாறாதன. வழக்கு நோக்கி அறிதல் வேண்டும்.

## ஐ-ஈற்றுக் குற்றுகரங்கள்

**185 ஐஈற் றுடைக்குற் றுகரமும் உளவே 35**

மென்தொடர்க் குற்றுகரங்கள் பல, 'ஐ'காரச் சாரியை பெறுவதுமுண்டு. பண்டு + காலம் = பண்டைக்காலம்.

இன்று + நாள் = இற்றைநாள். அன்று + கூலி = அற்றைக்கூலி. நேற்றைப் பொழுது எனவும் ஒற்றை, இரட்டை, ஏழரையாட்டை எனத் தனியே இவ்வாறு வருவனவும் உள. கண்ணகி பன்னீராட்டைப் பருவத்தாள் எனவரும். ஆண்டு - ஆட்டை என வந்தது. ஏழரையாட்டைச் சனியை இன்று ஏழரைநாட்டுச் சனியெனத் திரித்து வழங்குவர்.

## திசைச் சொற் புணர்ச்சிகள்

**186 திசையொடு திசையும் பிறவும் சேரின்**
**நிலைஈற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்**
**றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற 36**

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்பன நான்கு திசைகள். இவை தம்மொடு தாமும் தம்மொடு பிறசொற்களும் சேரும் போது, நிலைமொழி உயிர்மெய், க் எனும் கவ்வொற்று இரண்டும் நீங்கும். சில இடத்து ற என்பது ன அல்லது ல ஆகத் திரியும். மேலும் பிறவாறும் திரிபுகள் பெறும்.

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு. 'க்கு' இரண்டும் நீங்கின.

வடமேற்கு, வடமலை, வடவேங்கடம்.

கிழக்கு + மேற்கு = கிழமேற்கு

குடக்கு + நாடு = குடநாடு (குடதிசை - மேற்கு)

குணக்கு + கடல் = குணகடல் (குணக்கு - கிழக்கு)

தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு (ற்-ன் ஆனது) தென்மேற்கு, தென்குமரி.

மேற்கு + நாடு = மேல்நாடு (ற்-ல் ஆனது) பிறகு அது மேனாடு ஆகும். மேலவீதி, மேலத்தெரு எனவரும்.

மேலைத்திசை, கீழைத்திசை, வடக்கூர், தெற்கூர், தெற்குமலை எனப் பலவாறு வருவன 'பிற' என்பதால் கொள்ளப்படும்.

திசைப்பெயர்கள் குற்றியலுகர ஈற்றுடன் உள்ளன. நான்கும் வன்தொடர்க் குற்றுகரங்கள்.

## தேங்காய் ஆன விதம்

**187 தெங்குநீண்டு ஈற்றுயிர் மெய்கெடும் காய்வரின் 37**

தெங்கு - தென்னை. தெங்கு நீண்டு - தேங்கு. ஈற்று உயிர்மெய் 'கு' - அது கெடும். நிற்பது தேங்+காய் தேங்காய் ஆனது. முன்பு இதைத் தெங்கங்காய் என்றும் வழங்கியுள்ளனர்.

## எண்முதலான அளவைப் பெயர்ப் புணர்ச்சிகள்

**188 எண்நிறை அளவும் பிறவும் எய்தின்**
**ஒன்றுமுதல் எட்டு ஈறாம் எண்ணுள்**
**முதல்ஈர் எண்முதல் நீளும் மூன்றாறு**
**ஏழ்குறு கும்ஆறேழ் அல்லவற்றின்**
**ஈற்றுயிர் மெய்யும் ஏழன் உயிரும்**
**ஏகும் ஏற்புழி என்மனார் புலவர் 38**

நிலைமொழியாக ஒன்று முதல் எட்டு ஈறாம் எண்கள் நிற்க, வருமொழிகளாக எண்ணுப்பெயர், நிறைப்பெயர், அளவுப் பெயர், பிறபெயர் வரின் புணரும் விதிகள் வருமாறு :

ஒன்றும் இரண்டும் **முதல் எழுத்து நீளும்**. ஒ-ஓ, இ-ஈ.

மூன்று, ஆறு, எழு **முதல் எழுத்து குறுகும்**. மூ-மு. ஆ-அ. ஏ-எ.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து - இவற்றின் ஈற்றிலுள்ள **உயிர்மெய் கெடும்**.

ஏழு - ஈற்று உயிர் கெடும். இவை அவையவை ஏற்குமிடங்களில் வரும். ஓர், ஈர். முத்தமிழ், அறுசுவை, எழுகலம்.

ஆறு + பத்து = அறுபது, ஏழு + பத்து = எழுபது. ஏழுகடல் - ஏழ்கடல்.

எண்ணுப் பெயர்களில் ஏழு தவிர யாவும் குற்றியலுகர ஈறுடையன. ஏழு - முற்றியலுகர ஈறு. இனம் நோக்கி உடன் கூறப்பட்டது. ஒருபடி, இருகழஞ்சி, நான்கு பொருள் எனவும் வரும். பிற விதிகள் தனித்தனியே பின்னர்க் கூறப்படுகின்றன.

ஒன்று - ஒன், இரண்டு - இரண், மூன்று - மூன், நான்கு - நான், ஐந்து - ஐந் என்றாகும்.

## ஒன்று, இரண்டு ஓர் ஈர் ஆன விதம்

**189 ஒன்றன் புள்ளி ரகரம் ஆக**
**இரண்டன் ஒற்றுஉயிர் ஏகஉவ் வருமே** 39

ஒன்று - பொதுவிதியால் று கெட்டது. ஒன் - ஒர் என ஒன்றன் புள்ளி ரகரம் ஆகியது. முதல்நீளும் என்பதும் பொதுவிதி. 'ஓர்' ஆனது. இரண்டு - ஈற்று 'டு' பொதுவிதியால் கெட்டது. இரண் - என்பதில் ரகரத்தில் உள்ள அகர உயிரும் ணவும் (இரண்டன் ஒற்று, உயிர் ஏகின). பொதுவிதியால் 'ஈ' ஆனதன்படி 'ஈர்' ஆனது. ஓர், ஈர் எனவும், 'உ'வ் வருமே என்றபடி ஒரு, இரு ஆனதும் கொள்க. ஓராயிரம், ஈராயிரம்.

ஒருயிர், ஈருடல். ஒருபது, இருபது. ஒருநூல், இருநூல். ஒன்று, இரண்டு என்றும் ஒரு இரு என்றும் ஓர் ஈர் என்றும் வழங்கும். மக்கள் சிதைவின்றி, நல்லமுறையில் வழங்குவதற்கு ஏற்ப இலக்கணம் கூறியாக வேண்டும் என்னும் முயற்சியை இதில் காணலாம்.

ஓர்இரவு, ஓருயிர் என எதிரே உயிரெழுத்து வரின் ஓர் வரும். ஒருகவிதை, ஒருபயன் என எதிரே மெய்யெழுத்து வரின், 'ஒரு' வரும். ஒரு, ஓர் - எண்ணைக் குறிக்காது, ஒப்பற்ற என்றும் பொருள்படும். அதனால் ஓர்குலம், ஓர்நிறை என மாறி வருவதுமுண்டு.

## மூன்று

**190 மூன்றனுறுப்பு அழிவும் வந்ததும் ஆகும் 40**

மூ-மு என ஆவதும் இறுதி று - கெடுவதும் பொதுவிதி. முன் - என நிற்பதில், ன் (மூன்றன் உறுப்பு) கெட்டு, வருமொழியின் முதலெழுத்து திரிதலுமாகும்.

'மூ' என்பது குறுகாதபோது மூன்று + உலகம் = மூவுலகம், மூன்று + அலகு = மூவலகு, மூ + ஏழ் + உலகம் = மூவேழுலகம். எதிரே உயிர்வரின் 'மூ' என்றே நிற்றல் காண்க.

மூன்று + பத்து = முப்பது, மூன்று + காலம் = முக்காலம், மூன்று + சந்து = முச்சந்து, மூன்று + தமிழ் = முத்தமிழ், மூன்று + நூறு = முந்நூறு.

## நான்கு

**191 நான்கன் மெய்யே லறவா கும்மே 41**

நான்கு என்பதன் 'கு' பொதுவிதிப்படி கெடும். நான் என்பதில் உள்ள 'ன்' - ல் அல்லது 'ற்' ஆக மாறும்.

நான்கு + அடியார் = நாலடியார். நான்கு + புறம் = நாற்புறம்.

நான்கு + பத்து = நாற்பது, நான்கு + திசை = நாற்றிசை, நான்கு + காலி = நாற்காலி. (கால் + இ = காலி, காலையுடையது.)

நாலடி, நாலேழு, நாலெட்டு என வருவதை நோக்க எதிரே உயிர் எழுத்து வரின் 'நால்' என நிற்பதை அறியலாம். எதிரே வல்லெழுத்து வரின் நாற்பது, நாற்காலி என றகர ஒற்று வருவதையும் அறியலாம். நாலு முழம், நான்கு திசை என வருவனவும் உள. எந்த எண்ணையும் முழுமையாகவும் கூறலாம். ஒன்றுபுரி கொள்கை, இரண்டு தலைவாயில், மூன்று வகை இலக்கணம்.

## ஐந்து

**192 ஐந்தன் ஒற்று அடைவதும் இனமும் கேடும் 42**

ஐந்து – 'து' கெட்டுவிடும். ஐந் – என்பதிலுள்ள நகர ஒற்று வரும் ஒற்றாகியும் அல்லது அதன் இனமாகியும் அல்லது கெட்டும் முடியும்.

ஐந்நூறு, ஐம்மூன்று. ஐம்பொறி, ஐம்புலன், ஐங்கலம், ஐந்தலை. ஐவகை, ஐவிரல்.

## எட்டு

**193 எட்டன் உடம்பு, ணவ் வாகும் என்ப 43**

எட்டு – 'டு' முன்பே கெடும். எட் – ட் என்பது ண் ஆகும்.

எட்டு + பத்து = எண்பது, எட்டு + நூறு = எண்ணூறு, எட்டு + குணம் = எண்குணம்.

## ஒன்பது

**194 ஒன்பா னொடுபத்தும் நூறும் ஒன்றின்**
**முன்னதின் ஏனைய முரணி ஒவ்வொடு**
**தகரம் நிறீஇப்பஃது அகற்றி னவ்வை**
**நிரலே ணளவாத் திரிப்பது நெறியே 44**

ஒன்பது + பத்து = தொண்ணூறு. ஒன்பது + நூறு = தொள்ளாயிரம். இவ்வாறு ஆவது வியப்பளிக்கும். ஆனால் இதற்கும் இலக்கண அமைதி காட்டப்படுகிறது.

ஒன்பான், ஒன்பது, ஒன்பஃது என வரும்.

ஒன்பது + பத்து. பத்து - நூறு ஆக மாறும்.

ஒன்பது + நூறு. தொண் + நூறு தொண்ணூறு.

தொன்பஃது - பஃது நீக்கி நூறை ஆயிரம் ஆக்குக.

தொன் - தொள் (நூறு ஆயிரமாகவே) தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம்

'முன்னதின் ஏனைய முரணி' - என்பதால் பத்து, நூறு ஆகவும் நூறு ஆயிரமாகவும் மாற்றப்பட்டன.

பத்துக்கு முந்தையது தொன்பது, ஒன்பது ஆனது; நூறுக்கு முந்தையது தொல்நூறு - தொந்+நூறு - தொண்ணூறு ஆனது; ஆயிரத்துக்கு முந்தையது தொல் ஆயிரம் தொல்லாயிரம் - தொள்ளாயிரம் ஆனது என்றும் கூறுவர். தொண்டு என்று ஒன்பது குறிக்கப்படுவதுண்டு. தொண்டு + நூறே தொண்ணூறு என்றும் தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம் என்றும் குறிப்பவரும் உளர். ஈற்றுக்கு முந்தையதை இவ்வாறு சுட்டுவது தமிழ்மரபுமாகும். ஆயினும் தொல்காப்பியர் முதலாக, இலக்கணங்கள் கூறுவன முன்சுட்டியவையே.

## பத்துக்கள் புணர்தல்

**195 முதல்,இரு நான்காம் எண்முனர்ப் பத்தின்**
**இடைஒற்று ஏகல் ஆய்தம் ஆகல்**
**எனஇரு விதியும் ஏற்கும் என்ப** 45

ஒன்றுமுதல் எட்டுவரை (இருநான்கு - எட்டு) உள்ள எண்களின் முன்னர், பத்து வரின் அதன் இடையிலுள்ள ஒற்று கெடுதலுண்டு. 'பது' ஆகும். அங்கு ஆய்தம் வருதலும் உண்டு. பஃது. இவ்விரு விதியும் பொருந்தும்.

ஒன்று + பத்து = ஒருபது, ஒருபஃது.

இரண்டு + பத்து = இருபது, இருபஃது
மூன்று + பத்து = முப்பது, முப்பஃது
நான்கு + பத்து = நாற்பது, நாற்பஃது
ஐந்து + பத்து = ஐம்பது, ஐம்பஃது
ஆறு + பத்து = அறுபது, அறுபஃது
ஏழு + பத்து = எழுபது, எழுபஃது
எட்டு + பத்து = எண்பது, எண்பஃது

முதலிலுள்ள நிலைமொழி மாறுதல்கள் முன்பு கூறப்பட்டன. ஒருபா ஒரு பஃது, இருபா இருபஃது - என்பன தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகள்.

## பத்துடன் தொடரும் எண்கள்

**196 ஒருபஃது ஆதிமுன் ஒன்றுமுதல் ஒன்பான்**
**எண்ணும் அவையூர் பிறவும் எய்தின்**
**ஆய்தம் அழியஆண்டு ஆகும் தவ்வே** 46

ஒருபஃது, இருபஃது முதலியவற்றின் முன் ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்ணும் அவையூர்ந்த பிறவும் வந்து புணருமானால், ஆய்தம் கெடும்; அங்கு தகர ஒற்று நிற்கும். ஒரு பஃது + ஒன்று - ஒருபது + ஒன்று - ஒருபத்தொன்று, இருபத்து ஒன்று, முப்பத்து ஒன்றே கால், நாற்பத்து ஏழரைக் காணி நிலம் என வரும்.

இன்று இருபத்தி இரண்டு என்றோ, நாற்பத்தி நான்கு என்றோ 'தி' போட்டு எழுதுவன பிழை.

இருபத்து + இரண்டு = இருபத்திரண்டு எனவரும் புணர்ச்சி வேறு. பிரித்தால் இருபத்து இரண்டுதான்.

## பத்துடன் தொடரும் பேரெண்கள்

**197 ஒன்றுமுதல் ஈரைந்து ஆயிரம் கோடி**
**எண்நிறை அளவும் பிறவரின் பத்தின்**
**ஈற்றுஉயிர் மெய்கெடுத்து இன்னும் இற்றும்**
**ஏற்ப தேற்கும் ஒன்பதும் இனைத்தே** 47

ஒன்றுமுதல் பத்துவரை நிறுத்தி, ஆயிரமும் கோடியும் ஆகிய எண்ணுப் பெயர்களும் நிறைப்பெயர்களும் அளவுப்பெயர்களும் பிறபெயர்களும் எதிரே வந்தால் எப்படிப் புணரும்?

பத்து - ஈற்றுயிர்மெய் கெடும். 'பத்' என நிற்கும். இன் அல்லது இற்றுச் சாரியை பொருந்துமிடம் நோக்கி அங்கு தோன்றும். ஒன்பது - நிலைமொழியாக வரினும் இன் அல்லது இற்றுச்சாரியை ஏற்கும் இடத்து ஏற்று வரும்.

பத்து + ஒன்று = பதினொன்று. (இன் வந்தது) - பத் + இன் + ஒன்று.

பதின்மூன்று, பதின்கழஞ்சு, பதின்மடங்கு, பதிற்றொன்று, பதிற்றுப்பத்து, ஒன்பதிற்றொன்று. பதினாயிரம், பதின்கோடி, பதிற்றுக்கோடி

பத்தாயிரம், பத்துக்கோடி, ஒன்பதாயிரம், ஒன்பதுகோடி என இயல்பாக வழங்குவனவே பெருவழக்கு. இதனை 'ஏற்பது ஏற்கும்' என்றது, செய்யுள் நோக்கியேயாம்.

## பன்னிரண்டு

**198 இரண்டு முன்வரின் பத்தின்ஈற்று உயிர்மெய்**
**கரந்திட ஒற்று னவ்வாகும் என்ப** 48

பத்து + இரண்டு. பத்தினது ஈற்றிலுள்ள உயிர்மெய் 'து'. அது மறைந்துவிட, மீதமுள்ள 'த்' ஒற்று 'ன்' என மாறும். 'பன்' என நிற்கும். இரண்டு சேரவே, 'பன்னிரண்டு' ஆகும். பத்து + இரண்டு = பன்னிரண்டு, பனிரண்டு எனவும் வருவது இடைக் குறை. 'பனிரெண்டு' என்று எழுதுவது பிழை.

## எண்கள் இரட்டித்தல்

**199 ஒன்பது ஒழிந்தஎண் ஒன்பதும் இரட்டின்**
**முன்னதின் முன்னல ஓட, உயிர்வரின்**
**'வ'வ்வும், மெய்வரின் வந்ததும் மிகல்நெறி** 49

ஒன்பது நீங்க, ஏனைய எண்கள் ஒன்பதும் தம்முன்தாம் வந்து இரட்டித்தால், முன்னதின் முன்அல - முதலிலுள்ளதின் முதல்

எழுத்துத் தவிரப் பிற எல்லாம் ஓடும். எதிரே உயிர்வரின் 'வ'கர ஒற்றும், மெய் முதலான எண்வரின் அந்த அந்த ஒற்றும் மிகுதலே முறையாம்.

ஒன்று+ஒன்று=ஒவ்வொன்று. இரண்டு+இரண்டு=இவ் விரண்டு. மூன்று+மூன்று = மும்மூன்று. நந்நான்கு, எவ்வேழு, எவ்வெட்டு, பப்பத்து. ஐ+ஐந்து = ஐவந்து ஆகாமல் ஐயைந்து ஆகிறதும் உண்டு. ஒவ்வொன்றாக இரண்டிரண்டாக என்றும் வரும்.

## ஊகார ஈறு

**200 பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும் 50**

பூ என்ற பெயர் முன் கசதப வல்லினம் வரின், வல்லினம் மிகுதலேயன்றி, அவற்றின் இனமான மெல்லினமும் மிக்கு வரும்.

பூ + கொடி = பூக்கொடி, பூங்கொடி. பூ + செடி = பூச்செடி, பூஞ்செடி.

பூ + தோட்டம் = பூத்தோட்டம், பூந்தோட்டம். பூ + பந்தர் = பூப்பந்தர், பூம்பந்தர்.

## ஏகார ஈறு, ஓகார ஈறு

**201 இடைச்சொல் ஏஓ முன்வரின் இயல்பே 51**

ஏ, ஓ என்பன இடைச்சொற்கள். அவனே கொண்டான் என்று தேற்றேகாரமாகவும் அவனே செய்தான்? என வினவும் முறையிலும் மற்றவரல்லர் அவனே தலைவன் எனப் பிரிநிலையிலும் என இவ்வாறு 'ஏ' இடைச்சொல் பலபொருள் தரும்.

அவனோ செய்தான், அவனோ கொடியவன் என 'ஓ' இடைச் சொல்லும் வரும். இங்கெல்லாம் வல்லொற்று மிகாமை காண்க.

## ஐகார ஈறு

**202 வேற்றுமை யாயின் ஐகான் இறுமொழி**
**ஈற்றழி வோடும்அம் ஏற்பவும் உளவே 52**

ஐகாரத்துடன் முடியும் சொற்கள் பலவுள. கொன்றை, புன்னை, முல்லை, ஆவிரை, வழுதுணை. இவை வேற்றுமைக்கண் வரும்போது, ஈற்றெழுத்து நீங்க 'அம்'முச் சாரியை பெறுவனவும் உள; ஐகாரம் கெடாது 'அம்'முச் சாரியை பெறுவனவும் உள.

கொன்றை + தீங்குழல் = கொன்றையம் தீங்குழல்

புன்னை + கானல் = புன்னையங்கானல் (கடற்கரை)

முல்லை + புறவு = முல்லையம்புறவு (காடு)

இவை 'ஐ' கெடாது 'அம்' சேர்ந்தவை.

ஆவிரை + பூ = ஆவிரம்பூ (ஐ கெட்டு, அம் சேர்ந்தது)

வழுதுணை + காய் = வழுதுணங்காய் (ஐ கெட்டு அம் சேர்ந்தது)

முல்லைப் புறவம், புன்னைக்கானல் என இயல்பாய் வருவனவும் பலவுள.

## பனைச் சொல் புணர்ச்சி

203 **பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்**
**ஐபோய் அம்மும் திரள்வரின் உறழ்வும்**
**அட்டுறின் ஐ கெட்டுஅந் நீள்வுமாம் வேற்றுமை** 53

பனை எனும் சொல் முன் 'கொடி' எனும் சொல்வரின் வந்த ஒற்று மிகும். பனை + கொடி = பனைக்கொடி (பனை எழுதிய கெடி). பனைச் சொல்முன் கசதப வல்லெழுத்துக்கள் வரின் நிலைமொழி இறுதி 'ஐ'கெட்டு, 'அம்'முப் பெறும்.

பனை + காய் = பனங்காய், பனை + பழம் = பனம்பழம்
பனை + கிழங்கு = பனங்கிழங்கு.

பனை + திரள் என வரின் இருவழியாகவும் வரும். உறழ்வு - இருவழியாகவும் மாறி வருதல். பனந்திரள், பனைத்திரள். பனை + அட்டு என வரின், ஐ கெட்டு, வருமொழி அ - ஆ என நீளும். பன் + ஆட்டு = பனாட்டு. பனைக்கருப்பட்டி. இவை யாவும் வேற்றுமைத் தொடர்கள்.

# ௪. மெய்யீற்றுப் புணரியல்

## இயல் கருத்து நிரல்

•••• உயிர் பனிரண்டில் 'எ' தவிர்த்தவை மெய்யுடன் கூடி மொழியிறுதியில் வரும். மெய்யெழுத்துக்கள் 18இல், 11 மட்டுமே மொழி இறுதியில் வரும். வல்லெழுத்து ஆறும் (கசடதபற) மொழிக்கு இறுதியில் வாரா. ங,வும் வராது. இப்பதினொன்றும் நிலைமொழி இறுதியில் நிற்க, வருமொழி முதலில், மொழிமுதல் எழுத்துக்கள் எனப்பட்ட உயிர் 12, கசத நபம வயஞங உயிர் மெய் 10 - ஆக 22ம் வந்து சேர்ந்து புணர்வதே மெய்யீற்றுப் புணர்ச்சி ஆகும்.

••• இவை அல்வழி, வேற்றுமைப் பொருள்படும் தொடர்க்ளில் இருசொற்கள் கூடியமையும். புணர்ச்சி வேறுபாட்டினால் பொருள் வேறுபடக் கூடும் (தலை சுமை - தலையே சுமையாகும். தலைச்சுமை - தலையிலுள்ள சுமை. தலைச் சுமையை இறக்கி வைக்கலாம். தலை சுமையானால், இறக்கி வைக்க இயலாது.)

•• தமிழில் ஓரெழுத்தே ஒரு சொல்லாகும் ' ஓரெழுத்தொரு மொழிகள்' 42ம் மேலும் பலவுமுள. ஈரெழுத்தொரு மொழிகள் மிகக் கூடுதல்; மூவெழுத்து மொழிகள் அதனிலும் கூடுதல். அதனால்தான் தொல்காப்பியர், 'ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொருமொழி இரண்டிறந்து இசைக்கும் தொடர்மொழி' எனச் சொற்களை மூவகைப்படுத்தினார் (45). தமிழின் சொற்களஞ்சிய இயல்பறியாதார், தொல்காப்பியர் ஒன்று, பல என்ற மரபை விடுத்துப் பிறமொழிகளைப் பின்பற்றி எழுதிவிட்டார் என வருந்தி, உடம்பைக் கெடுத்துக் கொள்வர்.

• மொழிகளைத் தனிநிலை, ஒட்டுநிலை, உட்பிணைப்பு நிலை இயல்பின என மூவகைப் படுத்துவர். அவற்றுள் தமிழ் 'ஒட்டுநிலை' இயல்பினது. ஓர் இயந்திரத்தை அதன் பாகங்களைத் தனித்தனி பிரிக்கலாம்; பின்பு அதே முறையில் ஒன்று சேர்க்கலாம். ஒவ்வோர் உறுப்பும் ஒரு

வேலையைச் செய்யும். ஒரு சிறு ஆணிக்கும் அதன் பயன் ஒன்றுண்டு. தமிழ்ச் சொற்களையும் தனித்தனி பிரித்து, பின்பு அதே முறையில் சேர்க்கலாம் (கூனன் - கூன் + அன். படிக்கின்றனன் - படி + க் + கின்று + அன் + அன்) ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பங்கு - பொருள் - பயன் உண்டு. தமிழ்த் தொடர்களும் பெரிதும் கூட்டுச் சொற்களாக இருப்பதால், பிரித்து மீண்டும் பொருத்திப் பார்க்க முடியும். (கற்சிற்பம் = கல் + சிற்பம்). பொற்றாமரைக் குளம் - பொன் + தாமரை + குளம்). இக்கூட்டுச் சொற்களில் உயிரை ஈறாகவுடையவை புணரும் விதிகள் முன்னர்க் கூறப்பட்டன. இங்கு மெய்யை ஈறாகவுடையன, இணையும் நெறிமுறை விதிகள் கூறப்படுகின்றன.

### மெய்மீது உயிர் பொருந்துதல்

1. முதலில் இயல்புப் புணர்ச்சி கூறப்படுகிறது. மொழி யிறுதியில் மெய் நின்று, வருமொழி முதலில் உயிர்வந்தால், மெய்மீது உயிர்கூடி ஒன்றாவது இயல்பேயாகும். (தமிழ் + இனிமை = தமிழினிமை).

### ஒற்று இரட்டித்தல்

2. தனிக்குறிலுக்குப் பின்வரும் ஒற்று, எதிரே உயிரெழுத்து வரின் இரட்டும். (கல் + அணை = கலணை ஆகாது, கல்லணை ஆகும்.)

### யகரமெய்வரின் புணரும் நெறி

3. ‘யகர’மெய் ஏனைய மெய்களுக்கு முன்னே, எதிரில் வருமானால், இறுதி ஒற்றில் ‘இகரம்’ வந்துசேரும். பொன்னியாது, கண்ணியாது (பொன் யாது, கண் யாது) என இயல்பாக வழங்கலே பிற்காலத்து மிகுதி.) குற்றிய லுகரத்துக்குப் பின் வரும் யகர முதன்மொழிக்கு முன் ‘இ’ ஆதல், முன்பு கூறப்பட்டது (37). குரங்கு + யாது = குரங்கியாது. காட்டு + யானை = காட்டியானை. இங்கு அனைத்து மெய்களுக்குப் பின்னும் அதே போல் வருமென்பது கூறப்படுகிறது. இனி வரும் அனைத்து மெய்யீற்றுப் புணர்ச்சிக்கும் ‘ய’கரம் தவிர்த்த மெய்யிறுதிகள் பற்றியே விதி கூறப்படுகின்றது.

### ஏவல், முதனிலை வினை முற்று மெய் விகுதிகள்

4. ஞண நம, லவளன ஒற்று ஈற்று ஏவல், வினைகளின் முன்

எதிரே மெய் வந்தால், இறுதிமெய் உகரம் பெறும். உண்ணு கண்ணா, தின்னு பையா, உரிஞு செல்வி, நில்லு நண்பா. உண்ணுப்பெருமை, கண்ணுக் கரிது எனவும் வழங்கியுள்ளன. இவ் ஒலித்துணை உகரம் உச்சரிப்பு எளிமை நோக்கியது.

**நகர ஈற்று மெய்ப் புணர்ச்சி**

5. ந்-ஈற்று, 'பொருந்' எனும் தொழிற்பெயர் உகரச் சாரியையேயன்றி, அகரச் சாரியையும் பெறும். பொருநுப் பெருமை, பொருநத்திறமை, பொருந வலிமை.

ஈறாகும் பதினொரு மெய்களில் 'ந' (பொருந், வெரிந்), ஞ (உரிஞ்) - இவற்றில் மட்டுமே வரும். எனவே முன்னதாகக் கூறி முடிந்தன. இனி வருவன பிற ஒன்பது மெய்யீறு பற்றியே, விதிகள் வகுக்கப்படுகின்றன.

**ண,ன ஈறுகள்**

6.1 இவை பத்து விதமாகக் கூறப்படுகின்றன.

ண, ன வேற்றுமையில் எதிரே வல்லினம் வரின் ட,ற வாகும். பிறவரின் இயல்புமாகும். அல்வழியில் அனைத்து மெய் முன்னும் இயல்பாகும். மட்குடம், பொற்பாதம், மண் மீட்டல், பொன்ஞாண், பொன் சிறந்தது. கண் நல்லது, மண் வலிது.

6.2 குறிற்கீழ் அல்லாத சொற்களின் இறுதி ண, ன முன் வரும் ந முன்னுள்ள மெய்யாகத் திரியத் தாம் கெடும். (ண, னகெடும்)

பாண் + நன்று = பாணன்று, தேன் + நன்று = தேனன்று.

6.3 பாண், உமண், அமண், பரண், கவண் பெயர்களின் இறுதியில் இயல்பாகும், வேற்றுமைத்தொடரில். அல்வழியில் எண் (எள்), சாண் முதலியன 'ட்' ஆகலும் உண்டு.

பாண்குடி, உமண் சேரி, அமண் குடியிருப்பு, பரண் கால், கவண் கொம்பு, எட் கரிது, சாட்கோல், எண்கரிது, சாண்கோல்.

6.4 வேற்றுமைத் தொடரில் எயின் என்பது இயல்பும், அகரம் வருதலும் பொருந்தும்.

எயின் குடி, எயினக்குடி, எயின வாழ்வு.

6.5 வேற்றுமைத் தொடரில் மீன் - றகரமாகவும் இயல்பாகவும் உறழும்.

மீன் கண், மீற்கண்

6.6. தேன் எனும் சொல், இருவழித் தொடர்களிலும் எதிரே மூவின மெய்யெழுத்து வரின் இயல்பாயும் மெல்லெழுத்து வரின் ஈற்றெழுத்து 'ன்' மறைதலும் வல்லெழுத்துவரின் ஈறு போவதுடன் வல்லெழுத்தோ மெல்லெழுத்தோ மிகுதலும் ஆகும்.

தேன் சிறிது, தேன்கனி, தேன் மிகுதி, தேன் விலை.

தேன் + மொழி = தேமொழி. தேன்குடம், தேக்குடம், தேங்குடம்.

6.7. எகின் எனும் அன்னப் பறவைப் பெயர், வல்லினம் வரின் இயல்பாகும், வேற்றுமைத் தொடரில். இருவழியிலும் அகரச் சாரியை பொருந்த வருமொழி முதலிலுள்ள வல்லினமாவது அதற்கு இனமாவது மிகும்.

எகின் கால், எகின் சிறகு. எகினப் பறவை, எகினப்புள், எகினஞ்சிறகு.

6.8 குயின், ஊன் இரண்டும் வல்லினம் வரின் வேற்றுமையிலும் அல்வழியிலும் இயல்பே ஆகும். குயின்பெரிது, குயின் கூட்டம், ஊன் தடித்தது, ஊன் கடுமை, (குயின் - மேகம்)

6.9 மின் பின் பன் கன் - தொழிற்பெயர் போல உகரம் பெறும் கன் - அகரமும் பெற்று வல்லெழுத்து அல்லது மெல்லெழுத்து மிகும்.

மின்னுக் கடிது, பின்னுப் பெரிது, பன்னுப் பொழிவு, கன்னுச் சிறப்பு, மின்னுநன்று. கன்-கனனத் தட்டு, கன்னந்தட்டு.

6.10 தன், என் - ஈற்று 'ன்', எதிரே வல்லினம் வரின், 'ற'கர மாவதுடன் இயல்பாகவும் வரும். நீ - நின் ஆகும்போது வல்லினம் வரின் திரியாது. தன் பெருமை, தற்பெருமை. என்புகழ், எற்புகழ். நின்புகழ். (நிற்புகழ்ந் தேத்தி என வருமிடமும் உளது. பொதுவிதிப்படி (209) வருகிறதெனலாம்.)

**மகர ஈறு**

மகர ஈறு ஐந்து விதிகள் பெறுகிறது.

7.1 மகர ஈறு - ஈற்று'ம்' கெட்டு, உயிர் ஈறுபோல நின்று உடம்படு மெய் பெறும். வல்லினம் வரின் அது மிகும் அல்லது அதற்கு இனமாகத் திரியும்.

மரம் + அடி = மரவடி. மரம் + கிளை = மரக்கிளை. பாடம் + கேள் = பாடங்கேள். வாடுஞ்சின ன.

7.2 வேற்றுமைத் தொடரில் 'ம்' போய், வல்லெழுத்து அல்லது மெல்லெழுத்து மிகும். அல்வழியில் உயிர் இடையே வரின் இயல்பாகும். குளக்கரை, குளங்கரை. நலக்கேடு, நலங்கேடு. நலம் உறுக - நலமுறுக. மனம் யாது. நல்லுள்ளம் வாய்த்தது.

7.3 நும் தம் எம் நம் - சொற்களின் ஈற்று மகரம், எதிரே வரும் ஞ, ந வாகத் திரியும். நும்+நலம் = நுந்நலம், தம் + நலம் = தந்நலம். எம் + ஞாலம் = எஞ்ஞாலம். நம் + நூல் = நந்நூல். (நமது நூல்).

7.4 அகம் - எனும் சொல்லின்முன் செவி, கை, (சிறகு) சொற்கள் வந்தால் 'க' - இடையிலுள்ள உயிர்மெய் கெடும். எதிர்வரும் வல்லெழுத்துக்கு இனமாக இறுதி 'ம்' திரியும்.

அகம் + கை - அம் + கை = அங்கை. அகம் + செவி = அம் + செவி = அஞ்செவி. அஞ்சிறையும் இதுபோல்வரும்.

7.5 ஈம், கம், உரும் - மூன்றும் தொழிற்பெயர் போல, இருவழியும் உகரம் பெறும். ஈம் கம் இரண்டும் வேற்றுமைத் தொடரில் அகரச் சாரியையும் பெறும்.

ஈமுக் கொடிது, கம்முக் கடிது, உருமுப் பெரிது.

ஈமுக் கடுமை, கம்முத் தொழில், உருமுப்பெருமழை

ஈமு நிலம். கம்மு வலிமை. ஈமக்குடம், ஈமத் தொழில் கம்மத் தொழில்.

**யரழ – ஈறு**

யரழ ஈற்றுப் புணர்ச்சி மூன்று நூற்பாக்களில் கூறப்படுகிறது.

8.1 அல்வழியில் யரழ எதிரே கசதப வரின் இயல்பும் மிகுதலு மாகும். வேற்றுமைத் தொடரில் மிகுதலும் இனம் மிகுதலும் உளதாம்.

நாய் குரைத்தது, யார் சொன்னது, யாழ் தொலைந்தது, தாய் படுத்தனள்.

தாய்த்தமிழ், கார்ப்பருவம், யாழ்ச் சிறப்பு, வேய்ங்குழல்.

8.2 வேற்றுமைத் தொடரில் தமிழ் - அகரச் சாரியை பெறும்.

தாழ் என்பதுடன் கோல் வந்து சேரின் அதுவும் அகரச் சாரியை பெறும். தமிழச்சாதி, தாழக்கோல்.

8.3 கீழ்-சொல்முன் வரும் கசதப இயல்பாதலும் மிக்கும் வரும். கீழ்கடல், கீழ்புலம், கீழ்க்குணம், கீழ்த்திசை, கீழ்ப்புலம்.

**லகர ளகர – ஈறு**

லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சிகள் எட்டு நூற்பாவில் கூறப்படுகின்றன.

9.1 வேற்றுமைத் தொடரில் ல ள இரண்டும் வல்லினம் வரின் ற ட ஆகும். அல்வழியில் இவை இயல்பாயும் ற ட பெற்றும் வரும். இருவழித் தொடர்களிலும் ல ள எதிரே மெல்லினம் வரின் ன, ண ஆகும்.

இடையெழுத்து வரின் இயல்பாகும்.

கற்சிற்பம், பொருட்பால். கல்சிறந்தது, பொருள் சிறந்தது. கல் + தீது = கற்றீது. முள் + தீது = முட்டீது. கல் + மனம் = கன்மனம். அருள் + மொழி = அருண்மொழி. கல் வலிது, பொருள் யாது.

9.2 தனிக் குறிலின் பின்வரும் ல, ள இரண்டும் அல்வழித் தொடரில், எதிரே 'த'கர முதன்மொழி வந்தால் ஆய்தமாகவும் பெறும். அல் + திணை = அஃறிணை. முள் + தீது = முஃடீது.

9.3 தனிக் குறிலைச் சாராத ல, ள இரண்டும் அல்வழித் தொடரில் 'த'கரம், ற,ட வாகத் திரிந்தபிறகு கெட்டுவிடும். கோல் + தீது - கோ + றீது - கோறீது. வாள் + தீது - வாள் + றீது = வாறீது.

ல, ள ஈற்று இருவழித் தொடர்களிலும் 'ந'கரம் வரின் அது ன,ணவாகத் திரிந்தபின், அந்த இறுதி ல,ள கெடும். முதல் + நிலை = முதனிலை. பால் + நன்று = பா + னன்று = பானன்று. கோள் + நன்மை = கோ + ணன்மை = கோணன்மை. வல்லெழுத்து எதிரே வரின் இயல்பும் திரிபும் ஆகும். வாள்கூரிது. கால் கொதிப்பு = காற்கொதிப்பு.

9.4 லகர ஈற்றுத் தொழிற்பெயரும் (ஆடல், பாடல்), ளகர ஈற்று முதனிலை திரிந்த தொழிற்பெயரும் (கொள்ளுதல் - கோள்), முன்பு சுட்டிய முதனிலைத் தொழிற்பெயர்

போல, இருவழித் தொடர்களிலும் 'உ'கரத்தை இறுதியில் பெறா (207). வல்லினம் (கசதப) எதிரே வரினும் அல்வழியில் இயல்பாக வரும். ஆடல் வலிது, கோள் கடிது; ஆடற்சிறப்பு, கோட்கடுமை என வேற்றுமையில் வரும்.

9.5 வல் - என்னும் வல்லாடல் (சதுரங்கம்) பற்றிய தொழிற் பெயர், இருவழித்தொடர்ப் புணர்ச்சியிலும், முன்பு குறிப்பிட்டது போல் (207) இறுதியில் உகரம் பெறும். பலகை, நாய் (காய்) என்பன வேற்றுமைத் தொடரில் அகரச் சாரியையும் உகரச் சாரியையும் பெறும். வல்லுக் கடிது, வல்லுவன்மை. வல்லப் பலகை, வல்ல நாய், வல்லப்புலி, வல்லக்குதிரை.

9.6 நெல், செல், கொல், சொல் - நான்கும் எதிரே வல்லினம் வரின், வேற்றுமைத் தொடரிற் போலவே, அல்வழித் தொடரிலும் 'றகர'மாகத் திரியும். நெற்குறிது, செற்செறிவு (செல்-மேகம்), கொற் கடிது (கொல்லர் தொழில்), சொற் தெளிக. (நெற்குப்பை, சொற்செறிவு என்பன வேற்றுமைத் தொடர்கள்).

9.7 இன்மை என்பதைக் குறிக்கும் 'இல்' - என்னும் சொல்லுக்கு, ஐகாரச் சாரியை பொருந்த (இல்லை), அதன்பின் வருமொழியில் வரும் வல்லினம் மிகுந்தும் மிகாமலும் விகற்பமாகும். ஆகாரச் சாரியை பொருந்தும் போது (இல்லா), அதன்பின் வரும் வல்லினம் மிகும். இவ்விரு விதியும் பெறாமல் இயல்பாதலும் உண்டு. தமிழனிடம் இல்லை தன்மானம். தமிழரிடம் இல்லைத் தன்மானமெனில் தவறன்று. நிலை இல்லாப் புகழுக்கு ஏங்குவதேன்? நிலையில்லா கவலை இது.

9.8 புள், வள் என்பன இருவழித் தொடர்களிலும், இயல்பாதலே யன்றி, முன்பு சுட்டியதுபோல (207) உகரச் சாரியை பெற்றுப் புணரும். புள்ளுப் பறந்தது, புள்ளுக் கூட்டம், வள்ளு நிறைந்தன, வள்ளுநலம். புள் - பறவை. வள் - கடிவாளம்.

## வகர ஈறு

வகர ஈற்றுச் சொற்புணர்ச்சி இரண்டு நூற்பாக்களில் கூறப் படுகிறது.

10.1 அவ், இவ் உவ் - சுட்டு வகரம், எதிரே வல்லினம் வரின் ஆய்தமாகும்; மெல்லினம் வரின் அதுவே மிகும்; இடையினம் வரின் இயல்பாகும். அவ்+கடிய = அஃகடிய. இவ் + ஞாலம் = இஞ்ஞாலம், இவ் + விதம் = இவ்விதம்.

10.2 'தெவ்' என்பதும் முன்பு கூறியதுபோல 'உகரச் சாரியை' பெறும் (207). எதிரே 'ம'கரம் வந்தால், உகரச் சாரியை பெறுதலேயன்றி, ஒரோவழி, அந்த ஈற்றுவகரம் - மகரமாக மாறும். தெவ்வுக் கொடிது, தெவ்வு மூண்டது. தெவ்வுக்கடுமை. தெவ்வுத் தொல்லை. தெவ்வுமுனை, தெம்முனை. (போர்க்களம்).

### வருமொழித் திரிபுகள்

நிலைமொழி ஈறு திரிதலேயன்றி, வருமொழி முதலும் திரியும் புணர்ச்சி ஒன்று கூறப்படுகிறது.

11. ன, ல முன் வரும் த-ற ஆகும். பொன் + தாமரை = பொற்றாமரை, கல் + தூண் = கற்றூண்.

ன,ல முன் வரும் ந-ன ஆகும். பொன் + நன்று = பொன்னன்று, கல் + நன்று கன்னன்று.

ண, ள முன் வரும் த - ட ஆகும். மண் + தீது = மண்டீது, முள் + தாள்+தாமரை = முட்டாட்டாமரை.

ண, ள முன் வரும் ந - ண ஆகும். களிமண் + நிலம் = களிமண்ணிலம். தெள் + நீர் = தெண்ணீர்.

### உருபு விரிந்தும் தொக்கும் புணர்தல்

12. உருபுகள் விரிந்து நின்று முடியும் முடிபுகள், அவை தொக்கு நின்றாலும் அப் பொருளையே தரும்.

சிலையைத் திறத்தல், சிலை திறத்தல். எனக்கு மகன், என்மகன். எனது புத்தகம், என் புத்தகம்.

### புணர்ச்சிகளுக்கெல்லாம் புறனடை

13. இடைச்சொல், உரிச்சொல், வடசொல் ஆகியவற்றுக்கு இதுவரை கூறியவை பொருந்தாமல் வேறுபட வருவனவும் இருக்கக்கூடும். இலக்கணப் போலிகள், மரூஉ மொழிகள் உலக வழக்கிலும் எழுத்து வழக்கிலும் மிகப்பலவுள. அவற்றை வழங்கும் நெறியை நன்கு அறிந்து, முன்பு கூறியவற்றுக்கும் அறிவுக்கும் இயைபுபடப் பொருந்தும்படி

புணர்த்தல், அறிவுடையோர் எல்லோர்க்கும் உரிய நெறியாகும். இலக்கணத்திற்கு எல்லை இல்லை. காலந் தோறும் வளரும், மாறும். மரபுவழி மட்டும் மிகவும் முரண்படலாகாது.

மழ களிறு, தடந்தோள், இல்முன்னை முன்றில் எனல், குணாது, வடாது தெனாது என்பன, சோணாடு, தஞ்சை, புதுகை, புதுவை எனல், ஆதன் தந்தையை ஆந்தை எனல் - இங்ஙனம் இன்றும் மிகப்பலவுள. எல்லாவற்றுக்கும் ஏற்பப் புதிய இலக்கணம் படைத்துக் கொள்ளுதல் அறிவுடையோர்க்குரிய நெறியாகும்.

# மெய்யீற்றுப் புணரியல்

## மெய்முன் உயிர்வரின் இயல்பாதல்

**204 உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே 1**

ஒரு சொல்லின் இறுதியில் உடல் - அதாவது மெய் நிற்க, வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால், இரண்டும் ஒன்றாகும். அஃது இயல்புப் புணர்ச்சியேயாகும். உடலுடன் ருயிர் சேர்வது மிக இயல்பானதே என்பதும் தொனிக்கின்றது.

கடல் + அலை = கடலலை. தமிழ் + ஆர்வம் = தமிழார்வம். ஓர் + இரவு = ஓரிரவு. தேன் + ஈ = தேனீ. உயிர்மெய் வடிவம் இயல்பாவதால், மெய்யுடன் உயிர்சேர்ந்து ஓரெழுத்தாவதும் இயல்புப் புணர்ச்சி எனப்பட்டது.

## தனிக்குறில் முன் வரும் ஒற்று உயிர்முன் இரட்டிக்கும்

**205 தனிக்குறில் முன்ஒற்று, உயிர்வரின் இரட்டும் 2**

தனிக்குற்றெழுத்தின் முன்னுள்ள ஒற்று (கல், வில், அல், நல்) எதிரே உயிர் முதன்மொழி வந்தால் இரட்டிக்கும்.

கல் + எடை = கல்லெடை (கல் + எ = கலெ ஆகும். கலெடை ஆகவேண்டும். ஆனால் கல்+ல்+எடை = கல்லெடை என ஆகிறது. இது உடலும் உயிரும் இணைவதுபோல், ஒரு பொதுவிதி.) வில் + ஆளி = விலாளி அன்று, வில்லாளி. அல் + உம் = அலும் அன்று, அல்லும் பகலும். நல் + அன் = நலன் அன்று, நல்லன். மண்ணகம், பொன்னொளி, விண்ணுலகம்.

## மெய் ஈற்றின் முன் யகரம்

206 தன்ஒழி மெய்ம்முன் யவ்வரின் இகரம்
துன்னும் என்று துணிநரும் உளரே 3

மொழிக்கு முதலில் வருவன கசதநபமவயஞங - பத்து மெய்கள். இவற்றுள் 'ய' தவர்த்த எழுத்துக்களின் முன்னர் அந்த 'ய' வரின், சொல்லிறுதியில் 'இகரம்' வந்தும் பொருந்தும் என்று அரிதாகக் கூறுவோரும் உளர். துன்னும் - பொருந்தும். நன்னூலார்க்கும் முன்பு இவ்வாறு தமிழை உச்சரித்துள்ளனர் என நினைக்கலாம். பொன் + யாது = பொன்னியாது. கண் + யாது = கண்ணியாது. பொருள் + யாவை = பொருளியாவை. 'துணிநரும் உளரே' என்ற உம்மையால், பொன் யாது, பொருள் யாவை என்றே பெரிதும் வழங்கினர் என அறியலாம்.

உச்சரிப்பு எளிமைக்காக, தொடக்க காலமுதல் அ, இ, உ-க்களை சில மெய்யிறுதியில் சேர்த்து வழங்கியுள்ளனர். நாள் + யாது = நாளியாது. குழந்தையை 'என் கண்ணு, பொன்னு', என்று கண், பொன்னுடன் உகரம் சேர்த்தே சொல்லும் இன்றைய வழக்கை ஒப்பிடுக.

## மெய்யீற்று முதனிலைத் தொழிற்பெயரும் ஏவல்வினையும் புணரும் விதிகள்

207 ஞணநம லவளன ஒற்றிறு தொழிற்பெயர்
ஏவல்வினைநனி யவ்வல் மெய்வரின்
உவ்வுறும் ஏவல் உறாசில சில்வழி 2

ஏவல்வினை உண், தின், நில், பார் என்பன. இவை பல முதனிலைத் தொழிற்பெயராகவும் பயன்படுவதுண்டு. உண், தின், பார் எனவரும் ஏவல் வினை உண்ணாய், தின்னாய், என்பனவே, ஆய் விகுதி கெட்டு உண், தின் என நிற்கின்றன என்பர். உண்ணுதல், தின்னுதல், பார்த்தல் - போல்பவையும் 'தல்' தொழிற்பெயர் விகுதி கெட்டு, முதனிலை மட்டும் நிற்பதால் முதனிலைத் தொழிற்பெயர் எனப்பட்டன. இவை

இரண்டும் பயன்படும் இடம் நோக்கி ஏவல் வினை என்றும் முதனிலைத் தொழிற்பெயரென்றும் கொள்ளப்படும்.

மொழி இறுதி மெய் எழுத்துக்கள் : ஞஙணமன யரலவழள - என்பன. இவற்றுள் யரல மூன்றும் தவிர்த்த, எட்டு ஒற்றுக்கள் இறுதியாக வரும் முதனிலைத் தொழிற்பெயரும் ஏவல் வினையும், மேலே கூறிய 'ய'கரம் தவிர்த்த பிற மெய்கள் மொழி முதலாக வந்து சேருமாயின் பெரும்பாலும் உகரச் சாரியையை இறுதியில் பெறும். ஏவல்வினை சில இடங்களில் அவ்'உகரச்' சாரியை பெறாமலும் வரும். நனி-பெரிதும், பெரும்பாலும்.

உண்ணு, தின்னு, நில்லு + கண்ணா, பையா. உண், தின் என்று உகரம் பெறாதும் வரும். வருமொழி இன்றியே, என் கண்ணு, பொன்னு என்றும் வரும். உண்ணு, தின்னு, கவ்வு (கௌவு).

முதனிலைத் தொழிற்பெயரில் உண்ணுப்பெருமை, தின்னுக்கடிது என வழங்கியுள்ளன.

## நகர ஈறு அகரச் சாரியையும் பெறும்

**208 நவ்விறு தொழிற்பெயர்க்கு அவ்வுமாம் வேற்றுமை.**

நகர மெய்யிறுதி முதனிலைத் தொழிற்பெயர்க்கு, உகரச்சாரியையே அல்லாமல் அகரச் சாரியையும், வேற்றுமைத் தொடரில் வரும்.

பொருநப் பெருமை, பொருந வலிமை என வரும். (பொருநுதல்ல், பொருந்துதல், ஒத்தல், ஒருவர் போல நடித்தலால் பொருநர், போரில் பொருபவரும் பொருநரே. 'பொருந்' என்பது இவற்றின் அடிச்சொல். பழங்காலப் பெருவழக்கு.)

இதுவரை கூறப்பட்ட பொதுவானவையே. மெய் - ஈறு என்பதால் மொழியிறுதியில் வரக்கூடிய ணன, ம, யரழ, ல, வ, ள, வ என்னும் மெய்களின் புணர்ச்சி விதிகள் இனிக் கூறப் படுகின்றன. (ஞ், ந் பற்றியவை மிகக்குறைவு. அவை முன்னதாகக் கூறப்பட்டுவிட்டன.)

## ண, ன ஈறுகள் வருமொழிகளுடன்

**209 ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்**
**இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு; அல்வழிக்கு**
**அனைத்துமெய் வரினும் இயல்பாகும்மே** 6

ண, ன - வில் முடியும் பதங்கள், வேற்றுமைத் தொடரில், எதிரே வல்லெழுத்து வந்தால் ண-டவாகவும் ன-றவாகவும் மாறும். வல்லினமல்லாத பிற வரின் இயல்பாகும். அல்வழித் தொடரில் எந்த மெய்யெழுத்து எதிரே வந்தாலும் இயல்பாகும்.

மண்+குடம் = மட்குடம், பொன்+பாதம் = பொற்பாதம். மண்மீட்டல், பொன் ஞான். விண் வீழ்கொள்ளி, பொன் வார்த்த சிலை.

கண் கண்டது, பொன் சிறந்தது, மண் நல்லது, பொன் மீண்டது, மண் விளைகிறது, பொன் வளைகிறது.

## ணன மெய்முன் 'ந' திரியும்

**210 குறில்அணை வில்லா ணனக்கள் வந்த**
**நகரம் திரிந்துழி நண்ணும் கேடே** 7

குற்றெழுத்தொடு சேராத ணன - க்கள் முன் எதிரே 'ந' வரின் அது ண,னவாக மாறும். மாறியதும் முன்பு நின்ற ண,னக்கள் கெடும்.

பாண்+நன்று = நன்று 'ணன்று' என மாற, ண் கெடும் = பாணன்று ஆகும். வெண்பொன்+நன்று = வெண் பொனன்று என ஆகும். (பாணன்று என்பதைப் பாண் அன்று எனவும் பிரிக்கலாமாதலால், நன்று - ணன்று என மாறியதாக விதி கூறப்பட்டுள்ளது போலும்.). அவன் + நலம் = அவனலம். இவை அக்கால வழக்கு.

## ணகர ஈறு - சிறப்புவிதி

**211 சாதி குழூஉப்பரண் கவண்பெயர் இறுதி**
**இயல்பாம் வேற்றுமைக்கு, உணவு எண்சாண்பிற**
**டவ்வா கலுமாம் அல்வழி யும்மே** 8

சாதிப்பெயர் - பாண் (பாணர்) உமண் (உமணர், உப்பு வணிகர்). குழு பற்றிய பெயர் - அமண் ( அமணர் - சமணர்). பரண், கவண் பெயர்கள். இவற்றின் இறுதி 'ண்' வேற்றுமையில் வல்லினம் எதிரேவரின் இயல்பாகும். அல்வழியில் எண், சாண் 'ட்' ஆகவும் மாறும்.

பாண்குடி, உமண்குடி, பாண்சேரி, உமண் சேரி. அமண்குடி, அமண் சேரி. பரண்கால், கவண்கொம்பு. (பரண் - பரணி - முன்பு தினை காக்கும் பரண். கவண் - கல்லெறி கருவி.)

உணவு .எண் - 'எள்' என்பதன் மறுபெயர். சாண்-(நீளம்). எண் + கரிது = எட்கரிது. எட்சிறிது. சாண் + கோல் = சாட்கோல். இவற்றை எண் கரிது, சாண்கோல் என வழங்குவதே சிறப்பு என்பதை 'டவ்வாகலுமாம்' என்ற உம்மை காட்டுகிறது. பாணக் குடி, அமணச்சேரி என வழங்கலும் மண்குடம் மட்குடம் என உறழ்தலும் எல்லாம் 'பிற' என்பதால் பெறப்படும் என்பர் உரையாசிரியர்கள்.

## எயினர் - குலப் பெயர்ப் புணர்ச்சி

**212 னஃகான் கிளைப்பெயர் இயல்பும், அஃகான்**
**அடைவும் ஆகும் வேற்றுமைப் பொருட்கே 9**

எயின் எனும் னகர மெய்யீற்றுக் கிளைப்பெயர் (குலப்பெயர்), எதிரே வல்லின வருமொழிகளின் முன், வேற்றுமைத் தொடரில் இயல்பாகும்; சிலபோது 'அ'கரச் சாரியை பெறும்.

எயின் குடி, எயின்சேரி, எயினக்குடி, எயினச்சேரி, எயினமரபு, எயின வாழ்வு என மெல்லினம், இடையினம் முன்னும் 'அ'கரச் சாரியை பெறுதலுண்டு.

## மீன் - சொற்புணர்ச்சி

**213 மீன்றவ் வொடுபொரூஉம் வேற்றுமை வழியே 10**

மீன் - மொழியிறுதி 'ன'கரம், வேற்றுமைத் தொடரில் எதிரே வல்லெழுத்து வரின் 'ற'கரத்துடன் உறழ்ந்துவரும்.

மீன்கள், மீற்கள், மீன்செவி, மீற்செவி. மீன்தலை, மீன்கண் என இயல்பாதலே பெருவழக்கு. முன்பு இவ்வாறு வழங்கியதுபோலும் என்பர் உரையாசிரியர்.

## தேன் - சொற்புணர்ச்சி

**214 தேன்மொழி மெய்வரின் இயல்பும் மென்மை**
**மேவின் இறுதி அழிவும் வலிவரின்**
**ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் இருவழி** 11

தேன் என்னும் சொல் வேற்றுமைத் தொடர், அல்வழித் தொடர் இரண்டிலும் கீழ்வருமாறு புணரும். மூவின மெய்களும் வரின் இறுதி 'ன்' இயல்பாகும். மெல்லினம் எதிரே வரின் இயல்பாதலே யன்றிக் கெடுதலும் வல்லினம் வரின் இயல்பாதலே யன்றிக் கெடுதலுடன், வந்த வல்லினமாவது அதற்கு இனமாவது மிகும்.

தேன் சிறிது, தேன் கனியமுது, தேன் மிகுந்தது, தேன் விலையுயர்ந்தது. தேன்மொழி, தேமொழி, தேன் குழம்பு, தேக்குழம்பு, தேங்குழமபு என இருவகையிலும் வரும்.

தேன்குழல், தேன் மலிவு, தேங்குழல், தேங்குடம் - வேற்றுமையில் வந்தன. தேக்குடம் என அரிதாக வரும்.

## எகின் - சொற்புணர்ச்சி

**215 மரம்அல் எகின்மொழி இயல்பும் அகரம்**
**மருவ வலிமெலி மிகலும் ஆகும்** 12

மரம் ஒன்றும் அன்னப் பறவையும் எகின் எனப்படும். இங்கு மரமல்லாத எகின் பறவைச் சொல் வல்லினம் எதிரே வரின், வேற்றுமைத் தொடரில் இறுதி இயல்பாகும். வேற்றுமை அல்வழித் தொடர் இருவழியும் அகரச் சாரியையைப் பொருந்த, வருமொழி முதலிலுள்ள வல்லினமாவது அதற்கு இனமாவது மிகும்.

எகின் கால், எகின் சிறகு, எகின் தலை. எகினப் பறவை, எகினம்புள், எகினச்சிறகு, எகினஞ்சிறகு - இருவழியும்

அகரம்வர, வல்லெழுத்து அல்லது மெல்லெழுத்து மிகுந்தன. எகின வாழ்க்கை, எகின அழகு எனப்பிற இடத்தும் வரும்.

### குயின், ஊன் - சொற்புணர்ச்சி

**216 குயின்ஊன் வேற்றுமைக்கண்ணும் இயல்பே 13**

வேற்றுமைத் தொடரிலும் குயின் (மேகம்), ஊன் (இறைச்சி) வல்லினம் எதிரே வரின் இயல்பாகும். அவ்வழியிலும் இயல்பே.

குயின் - பெரிது, குயின் - கரிது, குயின் - கூட்டம், ஊன் - தடித்தது, ஊன்-கொடுமை.

### மின்பின் பன்கன் - சொற்புணர்ச்சி

**217 மின்பின் பன்கன் தொழிற்பெயர் அனைய**
**கன்'அவ்' ஏற்று மென்மையோடு உறழும் 14**

மின்பின் பன்கன் என்பன முதனிலைத் தொழிற்பெயர்க்கு முன்பு கூறியது போல (207), யகரமெய் அல்லாத மெய்கள் எதிரே வரின் உகரச் சாரியை பெறும். 'கன்' எனும் சொல் உகரச் சாரியையேயன்றி அகரச்சாரியையும் பெற்று, எதிரே வல்லினம் வந்தால் வந்த எழுத்தாதல் அல்லது அதற்கு இனமாதல் மிகும். (மின்-மின்னல், பின்-பின்னுதல், பன்-பன்னுதல் (சொல்லுதல்), கன்-சிறு தராசுத்தட்டு. இதைக் கன்னம் என்றும் கூறுவர்).

மின்னுக்கடிது, பின்னுப் பெரிது, பன்னுப் பொழிவு, கன்னுச் சிறப்பு. மின்னு நன்று, பின்னு வலிது.

மின்னுக் கடுமை, பன்னு வன்மை,
கன்னத்தட்டு, கன்னந்தட்டு.

### தன், என், நின் - சொற்புணர்ச்சி

**218 தன்என் என்பவற்று. ஈற்று'ன'வ் வன்மையோடு**
**உறழும் நின்ஈறு இயல்பாம் உறவே 15**

தான் என்பது தன் எனவும் யான் - என் எனவும் வேறுபடும். அவற்றின் ஈற்று 'ன்' வல்லினம் எதிரே வரின் பொதுவிதிப்படி றகர வல்லெழுத்தாய்த் திரிவதுடன், (209) இயல்பாகவும் வரும். நீ என்பது நின் என மாறிவரும்போது அதன் ஈற்று 'ன்' வல்லினம் வரின் திரியாது.

தன்பெருமை, தற்பெருமை. என்புகழ், எற்புகழ். நின்புகழ்.

## மகர ஈறு

**219 மவ்வீறு ஒற்றொழிந்து உயிர்ஈறு ஒப்பவும்**
**வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் 16**

மகர ஈற்றுச் சொற்ளில் 'ம்' ஒற்று நீங்கிவிட, உயிர்ஈறு போல நின்று புணர்வதுண்டு. உயிர் எதிரே வரின் உடம்படுமெய் தோன்றும். வல்லினம் வரின் அது மிகும் அல்லது அதற்கு இனமாய்த் திரியும்.

அறம் + ஆணை = அறவாணை. அறம் + அடிப்படை = அறவடிப்படை. மரம் + அடி = மரவடி. மரம் + கிளை = மரக்கிளை. பாடம் + கேட்டனர் = பாடங்கேட்டனர். பாடுங்குயில், வாடுஞ்சினை.

## மகர இறுதிக்குச் சிறப்பு விதி

**220 வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும்**
**அல்வழி உயிர்இடை வரின்இயல் பும்உள 17**

வேற்றுமைத் தொடரில் மகர இறுதி கெட, அவற்றிற்கு எதிரில் வரும் வல்லினமோ மெல்லினமோ உறழந்துவரும். அதாவது ஒரே சொல் இருவழியிலும் வரும். அல்வழித்தொடரில் உயிரும் இடையினமும் வரின் கெடாது இயல்பாகலும் உளவாம்.

குளக்கரை, குளங்கரை. நலம் + கேடு = நலக்கேடு, நலங்கேடு. நலம் + உண்டாகுக = நலமுண்டாகுக. வலம் +உறுக = வலமுறுக (வலம் - வெற்றி). மனம் வளர்ச்சியடைந்தது. உள்ளம் வாய்த்தது.

## நும்தம் எம்நம் - புணர்ச்சிவிதிகள்

**221 நும்தம்**
**எம்நம் ஈறாம் மவ்,வரு ஞநவே** 18

நும், தம், எம், நம் என்பன உருபேற்க வரும் விகாரம் பெற்ற சொற்கள். (உம் - நும் ஆனது, தாம் - தம்மானது, யாம் - எம்மானது, நாம் - நம்மானது). இவற்றின் ஈற்றிலுள்ள மகரம், எதிரே வரும் ஞ, ந - வாகத் திரியும்.

நும் + ஞாண் = நுஞ்ஞாண். நும் + நலம் = நுந்நலம்.
தம் + ஞாலம் = தஞ்ஞாலம். தம் + நலம் = தந்நலம்.
எம் + ஞாலம் = எஞ்ஞாலம். எம் + நூல் = எந்நூல்.
நம் + ஞாலம் = நஞ்ஞாலம். நம் + நூல் = நந்நூல்.

## அங்கைப் புணர்ச்சி

**222 அகம்முனர்ச் செவிகை வரின்இடை யனகெடும்** 19

அகம் - உள்ளிடம். அதன் முன் செவி, கை எனும் சொற்கள் வந்தால், முன் குறித்தது போல், நிலைமொழி இறுதி 'ம்' - எதிரே வரும் வல்லெழுத்துக்கு இனமாகத் திரியும்; இடையே உள்ள 'க'கர மெய் கெடும். அகம் + கை . அம் + கை = அங்கை. அகம் + செவி - அம் + செவி = அஞ்செவி. இதுபோல அம் + சிறை - (சிறகு) = அஞ்சிறை என வரும். இவற்றை அங்கை (உள்ளங்கை), அகஞ்செவி (உட்செவி), அகஞ்சிறை (உட்சிறகு) என்றும் கூறலாம் என்பர்.

## ஈம், கம், உரும் - சொற்புணர்ச்சிகள்

**223. ஈமும்**
**கம் மும் உருமும் தொழிற்பெயர் மானும்**
**முதலன வேற்றுமைக்கு அவ்வும் பெறுமே** 20

ஈம், கம், உரும் - மூன்றும் வேற்றுமை அல்வழி இரண்டிலும் முதனிலைத் தொழிற் பெயர்போல. 'ய அல்லாத பிற மெய்கள்

எதிரே வந்தால், உகரச் சாரியை பெறும். இவற்றில் முதலிலுள்ள ஈம், கம் - இரண்டும் வேற்றுமைத் தொடரில் உகரச் சாரியை யன்றி, அகரச் சாரியையும் பெறும்.

ஈம் - ஈமத் தொழில் (கருமாதி என்பர் இன்று). கம் - கம்மியர் - ஆசிரியர் தொழில் (கல், மரம், தங்கம் பற்றியவை) உரும் - இடிஇடிப்பது.

ஈமுக்கொடிது, கம்முக் கடிது, உருமுப் பெரிது, ஈமுக் கொடுமை, கம்முத்தொழில், உருமுப்பெருமழை. ஈமு நிலம், உருமு வலிமை. ஈமக்குடம், ஈமத் தொழில், கம்மத் தொழில், கம்மக்குடம்.

## யரழ ஈற்றுப் புணர்ச்சி

**224 யரழ முன்னர்க் கசதப அல்வழி**
**இயல்பும் மிகலும் ஆகும்; வேற்றுமை**
**மிகலும் இனத்தோடு உறழ்தலும் விதிமேல்** 21

யரழ முன்னர் கசதபக்கள் வந்தால், அல்வழியில் இயல்பாதலும் ஒற்று மிகுதலும் உண்டு. வேற்றுமைக்கண் மிகுதலும் இன எழுத்தாக உறழ்தலும் விதியாகும்.

தாய் கூறினாள், நாய் குரைத்தது; வேர் செழித்தது, யாழ் கவர்ந்தது. அல்வழியில் இயல்பாயின. தாய்த்தமிழ், கார்ப்பருவம், தமிழ்த்தாய் - அல்வழியில் மிக்கது. பேய்ச்சிரிப்பு, தேர்ச்சக்கரம், யாழ்க்கோடு. வேய்ங்குழல் - இன எழுத்து வந்தது. வாய்புகுதல் - இயல்பானது.

## தமிழ், தாழ் - சொற்புணர்ச்சிகள்

**225 தமிழ்அவ் உறவும் பெறும் வேற்றுமைக்கே;**
**தாழும் கோல்வந்து உறுமேல் அற்றே** 22

தமிழ் - வேற்றுமைப் புணர்ச்சியில் அகரச் சாரியை பொருந்தவும் பெறும். தாழ் என்பதன்முன் 'கோல்' என்பது வந்தால், அகரச் சாரியையைப் பெறும்.

தமிழச் சாதி (தமிழைப் பேசும் சாதி). தமிழ இனம், தமிழப் பண்பாடு, தமிழ நாகரிகம், தமிழ ஞாலம்.

தாழ்+கோல் = தாழக்கோல் - (தாழைத் திறக்கும் கோல்)

## கீழ் - சொற்புணர்ச்சி

**226 கீழின்முன் வன்மை விகற்பமும் ஆகும் 23**

கீழ் என்னும் சொல்லின்முன் வரும் கசதப எனும் வல்லினம் இயல்பாயும் மிக்கும் வரும். விகற்பம் - வேறுபடுதல், மிகுதல், கீழ்கடல், கீழ் புலம், கீழ்தளம்.

கீழ்க்குணம், கீழ்த்திசை, கீழ்ப்புலம். மிகுதலே மிகுதி. கீழ் திசைக்கண், கீழ் பொருள் என இயல்பாயும் வரும்.

## லகரம், ளகரம் - ஈறு

**227 லளவேற் றுமையில் றடவும்; அல்வழி**
**அவற்றோடு உறழ்வும் வலிவரி னாம்,மெலி**
**மேவின் னணவும் இடைவரின் இயல்பும்**
**ஆகும் இருவழி யானும் என்ப 24**

வேற்றுமைத் தொடரில் ல,ள இரண்டும் வல்லினம் எதிரே வரின் ற, ட ஆகும். கல் + சிற்பம் = கற்சிற்பம். பால் + குடம் = பாற்குடம். அருள் + தந்தை = அருட் தந்தை. பொருள் + காட்சி = பொருட்காட்சி.

அல்வழியில் இவை இயல்பாயும் ற, ட பெற்றும் உறழும்.

கல்தீது, முள்சிறிது என இயல்பாய் வரும். கல் + தீது = கற்றீது, முள் + தீது = முட்டீது - என்பன பழைய வழக்கு.

மெல்லெழுத்து எதிரே வரின் ல,ள - இரண்டும் ன,ண ஆகும். கல் + மனம் = கன்மனம். அருள் + மொழி = அருண்மொழி. கல் + மாரி பெய்தது - கன்மாரி பெய்தது. தெள் + நீர் = தெண்ணீர்.

கல்யாது, முள்வலிது. இடையெழுத்துமுன் இயல்பாயின.

## குறில்வழி ல, ள
## கஃறீது, முஃடீது

**228 குறில்வழி லளத்'த'வ் அணையின் ஆய்தம்**
**ஆகவும் பெறூஉம் அல்வழி யானே** 25

தனிக் குறிலின் பின்வரும் ல, ள இரண்டும், அல்வழித் தொடரில், எதிரே 'த'கர முதன்மொழி வந்தால் ஆய்தம் ஆகவும் பெறும்.

கல் + தீது = கஃறீது. முள் + தீது = முஃடீது.

அல் + திணை = அஃறிணை. (கற்றீது, முட்டீது என ஆகாமல், ஆய்தமும் வரும் என்பதாம்.)

## குறில் சாராத ல,ள

**229 குறில் செறி யாலள அல்வழி வந்த**
**தகரம் திரிந்தபின் கேடும்; ஈரிடத்தும்**
**வரு'ந'த் திரிந்தபின் மாய்வும் வலிவரின்**
**இயல்பும் திரிபும் ஆவன உளபிற** 36

தனிக்குறிலைச் சாராத ல, ள இரண்டும் அல்வழித் தொடரில் 'த'கரம் ற,ட வாகத் திரிந்தபிறகு கெட்டுவிடும். கொடுங்கோல் + தீது = தீது, றீது என ஆக, 'ல்' கெட, கொடுங்கோறீது என ஆகும்.

கடல் + தாவுபடலம் = கட + றாவு படலம் = கடறாவுபடலம். கொடுவாள் + தீது = 'றீது' - கொடுவாறீது (ள் கெட்டது).

ல,ள ஈற்று - இருவழித் தொடர்களிலும் 'ந'கரம் வரின் அது ன,ண வாகத் திரிந்த பின், அந்த இறுதி ல்,ள கெடும். பால் + நன்று - பா+ னன்று, பானன்று, பால் + நன்மை - பானன்மை. கோள்+நன்று = கோ+ணன்று கோணன்று. கோள் + நன்மை = கோணன்மை.

வல்லெழுத்து எதிரே வரின் இயல்பும் திரிபும் ஆகும். கால் + கொதித்தது. வாள் + கூரியது. காற்கொதிப்பு. வாட்கண்.

பிற என்பதால் கற்சிலை, விற்புருவம் என்றும் கொல்களிறு, தொல்பொருள், கொள் கந்தா, என்றும் திரிந்தும் இயல்பாயும் வருவன பலவும் கொள்க. இவை முன்பு கூறப்பட்ட விதிகளிலும் அடங்கும்.

## ல,ள ஈற்றுத் தொழிற்பெயர்கள்

**230 லளஇறு தொழிற்பெயர் ஈரிடத்தும் உவ்வுறா,**
**வலிவரின் அல்வழி இயல்புமா வனஉள 27**

ல, ஈற்றுத் தொழிற்பெயரும் (ஆடல், பாடல்) ள ஈற்று முதனிலை திரிந்த தொழிற்பெயரும் (கொள்ளுதல் - கோள்). முன்பு சுட்டிய முதனிலைத் தொழிற்பெயர் போல இருவழித் தொடர்களிலும் 'உ'கரத்தை இறுதியில் பெறா (207). வல்லினம் எதிரேவரினும் அல்வழியில் இயல்பாக வரும்.

ஆடல் வேண்டும் ஆடல் வன்மை. கோள் கடிது, கோள் கடுமை, நடத்தல் கடிதானது, வலித்தல் கூடுதலானது. ஆடல் சிறந்தது. வேற்றுமையில் ஆடற்சிறப்பு, கோட்கடுமை என வரும்.

## 'வல்' - சொற்புணர்ச்சி

**231 வல்லே தொழிற்பெயர் அற்றுஇரு வழியும்;**
**பலகைநாய் வரினும் வேற்றுமைக்கு அவ்வுமாம் 28**

வல் என்பது முன்னைய சதுரங்கம்; ஆடு புலி ஆட்டம் போல்வது. இன்றைய சதுரங்க ஆட்டம் உலகப் புகழ் பெற்றுளது. முன்பு பொழுது போக்கிற்கும் சூதாடுதற்கும் இது பயன்பட்டது. வல்லுப் பலகையில் வல்லுநாய், வல்லுப்புலி, வல்லுக்குதிரை எல்லாம் வைத்து ஆடிநர். வல்லாடுதல் வல் எனப்பட்டது முதனிலைத் தொழிற்பெயர். இது முன்பு குறப்பிட்டபடி (207) இறுதியில் உகரம்பெறும. வல்லுக் கடிது, வல்லு நன்று, வல்லுவன்மை என வரும். இருவழித் தொடரிலும் உகரம் பெற்றது. பலகை, நாய் (காய்) என்பன வேற்றுமைத் தொடரில் அகரச் சாரியையும் உகரச் சாரியையும் பெறும். வல்லப் பலகை, வல்லநாய், வல்லப்புலி எனவும் வல்லுப்பலகை, வல்லுப்புலி, வல்லுநாய் எனவும் வரும்.

## நெல் செல் கொல் சொல் - புணர்ச்சிகள்

**232 நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்**
**அல்வழி யானும் றகரம் ஆகும்** 29

நெல், செல், கொல், சொல் - நான்கும் எதிரே வல்லினம் வரின் வேற்றுமைத் தொடரிற் போலவே, அல்வழித் தொடரிலும் 'றகரம்' ஆகத் திரியும்.

நெற்சிறிது, செற்பெரிது (செல்-மேகம்), கொற் கடிது (கொல்லர் தொழில்), சொற் தெளிக (நெற்குப்பை, சொற்கடுமை என்பன வேற்றுமைத் தொடர்கள்.)

## இல்(லை) என்னும் சொற்புணர்ச்சி

**233 'இல்' என் இன்மைச் சொற்குஐ அடைய**
**வன்மை விகற்பமும் ஆகாரத்தொடு**
**வன்மையாகலும் இயல்பும் ஆகும்** 30

இன்மை என்பதைக் குறிக்கும் 'இல்' என்னும் சொல்லுக்கு, ஐகாரச் சாரியை பொருந்த, அதன்பின் வருமொழியில் வரும் வல்லினம் மிகுந்தும் மிகாமலும் விகற்பமாகும். ஆகாரச் சாரியை பொருந்தும் போது, அதன்பின் வரும் வல்லினம் மிகும்; இயல்பாதலும் உண்டு.

இல்-இல்லை என ஆவது 'ஐ'காரச் சாரியை பெறுதலாகும். பள்ளிக் கல்விக் கூடத்தில் இல்லை தமிழ் என்றான் என் தம்பி. இல்லைத் தமிழ் எனவும் வரலாம் என்பது விகற்பமாதல். இன்று அவ்வாறு சொல்வதில்லை. இல் + செல்வம் = நிலையில்லாச் செல்வம். ஆகாரச் சாரியை வந்தது. நிலையில்லா புகழுக்கு ஆர்வம் எதற்கு - இயல்பாகவும் வருகிறது.

## புள், வள் - சொற்புணர்ச்சி

**234 புள்ளும் வள்ளும் தொழிற்பெயர் மானும்** 31

புள், வள் என்பன வேற்றுமை,அல்வழித்தொடர் எனும் இரு வழியிலும், யகரமல்லாத மெய்கள் எதிரே வரின், இயல்பாதலே

யன்றி முன்பு கூறிய தொழிற்பெயர் விதி போல (207) உகரச் சாரியை பெற்றுப் புணரும். (மானும் - போலப் பொருந்தும்)

புள்ளுப் பறந்தது, புள்ளுக் கூட்டம், வள்ளு நிறைந்தன, வள்ளுநலம்.

## வகர ஈறு

235 சுட்டு வகரம்மூ வின்ம்உற முறையே
ஆய்தமும் மென்மையும் இயல்பு மாகும் 32

சுட்டு வகரம் : அவ், இவ், உவ். மூவினம் - வல்லினம், மெல்லினம், இடையினம். வல்லினம் வரின் ஆய்தமும் மெல்லினம் வரின் மெல்லின மெய்யும் இடையினம் வரின் இயல்புமாகும். அவ் + கடிய = அஃடிய, இஃகடிய, உஃகடிய.

அவ் + ஞானம் = அஞ்ஞானம். இவ் + மனிதன் = இம்மனிதன்.

அவ் + விதம் = அவ்விதம். இவ் + யானை = இவ்யானையைக் கட்டுக.

## தெவ் - சொற்புணர்ச்சி

236 'தெவ்'என் மொழியே தொழிற்பெயர் அற்றே
மவ்வரின் வஃகான் மவ்வு மாகும் 33

'தெவ்' எனும் சொல் 'ய' அல்லாத மெய்களின் முன், முன்பு கூறியபடி, தொழிற்பெயர்போல, (207) உகரச் சாரியை பெறும். எதிரே 'ம'கரம் வந்தால் உகரச்சாரியை பெறுதலேயன்றி, ஒரோவழி அந்த ஈற்று வகரம் - மகரமாகத் திரியும். (தெவ் - பகை. தெவ்வர்-பகைவர்).

தெவ்வுக்கொடிது. தெவ்வு மூண்டுவிட்டது. தெவ்வுக்கடுமை, தெவ்வுத் தொல்லை. தெவ்வுமுனைக்கண் வீரர் குவிந்தனர். தெம்முனைக்கண் வீரர் குவிந்தனர்.

## வருமொழித் திரிபுகள்

**237 னலமுன் றனவும் ணளமுன் டணவும்**
**ஆகும் தநக்கள் ஆயுங் காலே** 34

1) ன, ல முன் வரும் த - ற ஆக மாறும்.
2) ன, ல முன் வரும் ந - ன ஆக மாறும்.
3) ண, ள முன வரும் த - ட ஆக மாறும்.
4) ண, ள முன் வரும் ந - ண ஆக மாறும்.

பொன் + தாமரை - பொற்றாமரை. பொன் + தூயது - பொற்றூயது. கடல் + தாவுபடலம் - கடறாவுபடலம். கல் + தூண் - கற்றூண். பொன் + நன்று - பொன்னன்று. கல் + நன்று - கன்னன்று.

மண் + தீது - மண்டீது. முள் + தாள் + தாமரை - முட்டாட்டாமரை.

களிமண் + நிலம் - களிமண்ணிலம். களிமண் + நன்று - களிமண்ணன்று.

அல்வழித் தொடர், வேற்றுமைத் தொடர் இரண்டும் பொருள் வேறுபாடுடையன. ஆகவே புணர்ச்சிக்கு ஏற்பப் பொருள் விரிக்க வேண்டும். அல்லது நாம் கருதும் பொருளுக்கு ஏற்பப் புணர்க்க வேண்டும். பொன்னாலான தாமரை எனில் பொற்றாமரை எனப் புணர்க்க வேண்டும். பொற்றாமரைக்குளம் என்றே இன்றும் வழங்குகின்றனர். பொன்னாகிய தாமரை என நாம் எண்ணினால் பொன் + தாமரை என, இயல்பாகும் இது.

'முள்தாள் இரண்டும் உளது தாமரை' - எனக் கூறுவோமேல், இயல்பாகவே புணர்க்க வேண்டும். முள்ளும் தாளும் - உம்மைத் தொகை, அல்வழி.

## உருபு தொக்குநின்றாலும் பொருள் வேறுபடாது

**238 உருபின் முடிபவை ஒக்கும்அப் பொருளினும்** 35

உருபுகள் விரிந்து முடியும் புணர்ச்சிக்குரிய பெருள் முடிபுகள், அவ்வுருபுகள் தொக்கு நின்றாலும் பொருள் மாறாது. அடுத்து

உருபு புணரியல் வருவதனால், இங்கேயே தோற்றுவாய் செய்யப்படுகிறது.

சிலையைத் திறந்தனர் - சிலை திறந்தனர் - பொருள் ஒன்றே. தனது கை, தன்கை. எனதுகை, என்கை. பொருள் முடிபு புணர்ச்சி முடிபால் மாறவில்லை.

## புணரியல்களுக்குப் புறனடை

**239 இடைஉரி வடசொலின் இயம்பிய கொளாதவும்**
**போலியும் மரூஉவும் பொருந்திய ஆற்றிற்கு**
**இயையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே 36**

இடைச்சொல், உரிச்சொல், வடசொல் - ஆகியவற்றுக்கு இதுவரை இயம்பியவை, பொருந்தாமல் வேறுபட்டு வருவனவும் உள. இலக்கணப்போலிகள், மரூஉ மொழிகள் ஆகியவை உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் மிகப்பலவுள. அவற்றை வழங்கும் நெறியறிந்து, முன்பு கூறியவற்றுக்கும் அறிவுக்கும் இயைபுபடப் பொருந்தம்படி புணர்த்தல், அறிவுடையோர் எல்லோர்க்கும் உரிய நெறியாகும்.

சுருக்கமாக, இதுவரை கூறப்படாத விதிகளுமுண்டு; பல்வேறு வகையாக நிகழும் புணர்ச்சி நிலைகளையும் நெறியறிந்து இயைபுபடப் புணர்த்தல் எல்லோர்க்கும் உரியதாகும். பொருந்திய ஆறு - பொருத்தமான நெறிமுறை. இயைய - முன் கூறிய விதிகளுடன் முரண்படாமல், இயைபுபட.

மழகளிறு - ஒற்று மிகவில்லை. தடம் + தோள் = தடந்தோள் - மெல்லெழுத்து மிகுந்தது. இல்முன் - என்பதை முன்றில் என மாற்றிச் சொல்வது இலக்கணப்போலி. குணாது (கிழக்கு), தெனாது (தெற்கு), வடாது (வடக்கு) என வருவன விதி பெறாதன. சோணாடு, தஞ்சை, புதுகை, புதுவை என்பனவும் சுருக்கங்கருதிப் புணர்ந்தன. ஆதன் தந்தை = ஆந்தை; பூதன் தந்தை - பூந்தை மரூஉ மொழிகள். இவ்வாறு புது வரவுகள், விதிக்குப் புறமாய் வருவன யாவற்றையும் பொருந்தும் வழியறிந்து புணர்த்துக் கொள்க.

# 5. உருபு புணரியல்

## இயல் கருத்து நிரல்

**உருபுகள் வருமிடம் நாற்பது**

1. எழுவாய், ஐ இரண்டாம் வேற்றுமை, ஆல் (ஆன் ஒடு ஓடு மூன்றாம் வேற்றுமை), கு நான்காம் வேற்றுமை, இன் (இல், இருந்து) ஐந்தாம் வேற்றுமை, அது, அ (உடைய) ஆறாம் வேற்றுமை, கண் (இடம்) ஏழாம் வேற்றுமை, விளி (தன்முகமாக ஒருவரை அழைக்கும்) எட்டாம் வேற்றுமை. பெயர்கள் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து. எட்டும் ஐந்தும் உறழ, உருபு புணர்ச்சி வருமிடம் நாற்பதாகும்.

   சார்பெழுத்து வருமிடம் 369 எனக் கணக்கிட்டார். பலர் அதைத் தமிழ் எழுத்து எண்ணிக்கை என்றே நினைக்க, நூற்பா மயக்கம் தந்துவிட்டது. அதுபோல எழுவாயும் விளியும் கூட உருபேற்கும் புணர்ச்சிக்கு இடமாதல் உண்டு என்பதால் இங்ஙனம் நாற்பது இடம் உண்டென உருபு புணர்ச்சிக்கு வரையறை கூறுகிறார்.

**பெயரில் உருபு வருமிடம்**

2. ஐ ஆல் கு இன் அது கண் - என்பன பெயரின் பின்னே, அதன் பொருளை வேறுபடுத்த வரும்.

**உருபுகளின் புணர்ச்சி வேறுபாடுகள்**

3. உருபுகளும் ஒற்று உயிர் இரண்டும் முதலாகவும் ஈறாகவும் கொண்டு வரும். ஆன் - உயிர்முதல், ஒற்று ஈறு. ஐ, அதுவே முதலும் ஈறுமாம். இவை வேற்றுமைத் தொடர்ப் புணர்ச்சிகளுக்குக் கூறப்பட்ட அவ்விதிகளையே பொருந்தி வரும்.

**சாரியை – விளக்கம்**

4. பெயர் + உருபுகளைச் சார்ந்து, அவற்றை இணைக்க வருவது சாரியை. 1. பதம் முன் விகுதி புணரும் சாரியை 2. பதமும் பதமும் புணரும்போது வரும் சாரியை 3. பதம்

முன் உருபு புணரும் சாரியை. இவை புணருமிடத்து, ஒன்றும் பலவுமாகச் சாரியைகள் வருதலுமுண்டு; வராது இயல்பாதலுமுண்டு.

**சாரியைகள் யாவை?**

5. அ ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம் தம்நம் நும் ஏ அ உ ஐகுன - இவை 17ம் இவை போல்வன பிறவும் விகுதிப்புணர்ச்சிச் சாரியை, பதப்புணர்ச்சிச் சாரியை, உருபுப் புணர்ச்சிச் சாரியை ஆகிய மூன்றனுக்கும் பொதுச்சாரியைகளாகும். இன்ன பிறவும் என்பதால் தன், தான், தாம், ஆம், ஆ முதலியனவும் கொள்வர்.

**எல்லாம் - என்பதன் உருபு புணர்ச்சி**

6. அஃறிணையில் எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் என அற்று இடையில் வந்து, முற்றும்மை இறுதியில் வரும். உயர்திணையில் எல்லா நம்மையும், எல்லா நம்மாலும் என இடையே 'நம்' சாரியை வரும். எல்லாவற்றினோடும் என்று அவற்றுடன் இன்னும் வரும்.

**எல்லாரும் எல்லீரும் உருபு புணர்ச்சி**

7. எல்லார் தம்மையும் எல்லீர் நும்மையும் என வருவதும், முன் காட்டியது போன்றதே. இவற்றுள் நம், தம், நும் என்பன சாரியைகளாயினும் தன்மை, படர்க்கை, முன்னிலைப் பொருளும் உணர்த்திவிடுகின்றன. சாரியை பொருள் உணர்த்தாது. இவை மட்டும் வேறுபடுகின்றன. இவற்றை எல்லாரையும், எல்லீரையும் என்றும் சாரியை யின்றிக் கூறலாம்.

**மூவிடப் பெயர்கள் - உருபு புணர்ச்சி**

8. தான் தாம் நாம் ஆகியவை முதல் குறுகும் : தன், தம், நம் ஆகும். உருபேற்கும் போது தான் + ஐ = தன்னை ஆகும்.

யான் யாம் நீ நீர் நான்கும் - என் எம் நின்
நும் ஆகி, உருபுடன் சேரும். யான் + ஐ = என்னை என ஆகும்.

கு - உருபுக்கு 'அ' - சாரியை வரும். எனக்கு (ன்+அ). தன்+கு = தனக்கு, தன்+அது = தனது. தனிக்குறில் முன் நான்கிலும் ஆறிலும் ஒற்று இரட்டிக்காது. இன்றேல் தன்னக்கு, தன்னது என்றல்லவா வரும்?

**ஆ, மா, கோ – உருபுடன் புணர்தல்**

9. ஆ, மா, கோ மூன்றும் னகரச் சாரியை பெறவும் கூடும். ஆன், மான், கோன். சாரியை பெறாது ஆ, மா, கோ எனவும் நிற்கும். 'ஆமா' - காட்டுப்பசு. அதுவும் ஆமான் என வருதலும் உண்டு. ஆவுக்கு - உகரச் சாரியை, ஆவினை - இன்சாரியை பெற்றும் வரும்.

**எண்ணுப்பெயர்கள் உருபுடன் புணர்தல்**

10. ஒன்றுமுதல் எட்டு வரையிலான எண்களுடன், பத்து முன்னே வரின், அதன்முன் ஆன் சாரியை வர, முதல் எழுத்து 'ப' ஒற்று மட்டுமே நிற்கும். ஒன்று + பத்து + ஆன் + ஐ = ஒரு பானை. ஒரு பதை என இருவிதமாகவும் செய்யுளில் வரும். இருபான் + ஐ = இருபானை, இருபதை என்றும் வரும்.

11. **அவ்-வுடன் உருபு புணர்ச்சி**

அஃறிணைப் பன்மையவாய் வரும் அவ் இவ் உவ் சுட்டுப்பெயர்களுக்கு உருபு புணரும்போது, அற்றுச்சாரியை வரும். அவ்+ஐ = அவற்றை, இவற்றை. அவற்றினை, இவற்றினை - இன் சாரியையும் சேர்ந்து வருதலுமுண்டு.

**சுட்டு – உருபுடன் புணர்தல்**

12. சுட்டின் முன்னுள்ள ஆய்தம் (அஃது), எதிரே அன் சாரியை வரின், ஆய்தம் கெடும். அஃது + ஐ = அதனை, அதை என வரும். அஃதை என்றே ஆய்தம் கெடாமலும் வரும்.

**அத்துச் சாரியைப் புணர்ச்சி**

13. அத்துச் சாரியை வந்து, எதிரே அகர உயிரே வரின், மரம் + அத்து + ஐ = மரத்தை. மரம் + அத்து - (மரம் இறுதி ம் கெட மர என நிற்கும்) மர + அத்து = மரவத்து ஆகாது. அத்திலுள்ள 'அ' எதிரே நிற்கும் அ முன் கெடும். த்து - ஆகும். அதனால் மரத்தை ஆனது.

**சாரியைப் புணர்ச்சிக்குப் புறனடை**

14. சாரியைகள் ஒலி எளிமைக்கு உதவுவன. தமிழின் தனித் தன்மைக்குச் சான்று பகர்வன. உருபு, எழுத்துப்பேறு, சாரியை, இடைநிலை, இறுதிநிலை முதலிய உறுப்புக்கள், மெய்ம்மயக்கங்கள் - யாவும் 'தமிழ் மொழிக் காவலர்கள்' எனலாம். இன்று பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம்

செய்து தமிழ் வடிவப்படுத்தும்போது அவற்றின் உதவி பெரிது.

இதற்கு இது சாரியை என வரையறுக்கப் புகுந்தால், அளவின்றிப் பெருகும். ஆகவே விகுதி - பதம் - உருபு இவற்றைப் பகுத்து, இடைநிற்கும் எழுத்து பதம் இரண்டையும் - அவை அல்லாத இயல்பானதையும் பொருந்த உணர்தல் அறிஞர் கடனாகும்.

ஸ்வர - என்ற வடசொல்லை, அந்தச் 'சுரத்தை'ப் பாடு என்பர். சுரம் ஆகி அத்து சேர்ந்து ஐ உருபுடன், சுரத்தை என ஆவது தமிழாக்க வடிவம்.

தமிழிலும் விகுதிப் புணர்ச்சிச் சாரியை (பார் + த் + த் + அன் + அன். இறுதிநிலை அன்னுக்கு முன்னுள்ள அன் போல்வன), பதப் புணர்ச்சிக்குச் சாரியை (தமிழப் பண்பாடு - 'அ'கரச் சாரியை போல்வன), உருபுப் புணர்ச்சிச் சாரியை (தமிழிற்கு - கு உருபுக்கு வந்த இன் சாரியை) என மூவகைப்படும். அ, ஏ எந்பன எழுத்துச் சாரியை. அல், அன் என்பன பதச் சாரியை.

15. நான்கு புணர்ச்சிக்கும் புறனடை

விகுதி, பதம், சாரியை, உருபு நான்கினுக்கும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று புணர்வது என்பதை, முன்பு கூறப்பட்ட உயிரீறு, மெய்யீறு பற்றிய புணர்ச்சிகளைக் கூர்ந்து நோக்கி, ஏற்புடையவற்றைக் கொள்ள வேண்டும்.

இவை புணர்க்கப்படும்போது முன்சொன்ன விதிகளை நினைவுகூர்ந்து, பார்க்க வேண்டும்.

### இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை

16. இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ - இயல்பாகும் என்று கூறிய இடங்களில் விகாரப்பட்டும், விகாரப்படும் என்ற இடங்களில் இயல்பாகியும் உயர்திணையில் வேண்டாத இடத்து விரிந்தும் தொக்கும் வரும். விரவுப் பெயர்களில் உருபு விரிந்தும் தொக்கும் வரும்.

### மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை

17. மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியில், மெய்யும் உயிரும் இறுதியாக வரும் சொற்களின் முன்னே, தம் இனமாகிய அதே வினைச்சொல் (நிலைமொழிப் பொருளையே தரும்

சொல்) வந்தால், வல்லெழுத்து மிக்கும் இயல்பாயும் முடியும்.

புலி அவனைக் கடித்தது - அவன் புலியாற் கடிக்கப் பட்டான்.

இரண்டாவதாகிய செயப்பாட்டு வினைத் தொடர்களே, இங்கு 'தம்மினாகிய வினைச்சொல்' எனக் குறிக்கப் பட்டன.

நாய்க் கோட்பட்டான், நாய்கோட்பட்டான், புலிக் கோட்பட்டான், புலி கோட்பட்டான்.

### எழுத்ததிகாரத்திற்குப் புறனடை

*18.* இதற்கு இதுதான் விதியென்று, ஒன்றும் விடாமல் எல்லா வற்றையும் இலக்கண விதிகளில் கூறிவிட முடியாது. இவற்றில் வருவன முன்மாதிரிகளே; வழிகாட்டிகளே; நெறிமுறைகளை மேன்மேலும் கண்டுகொள்ளத் தூண்டு வனவே. எனவே, புதியன, வேறுபடுவன கண்டால், முன்பு கூறி விதித்த நெறிமுறைகளை அறிந்து, அவற்றின்படி, இங்கு வகுத்துரைக்காதவற்றுக்கும் தாமே விதி வகுத்துக் கொள்ள வேண்டும்.

# உருபு புணரியல்

## எட்டு வேற்றுமை ஐம்பால் நாற்பது உருபுவரும் இடங்கள்

240 ஒருவன் ஒருத்தி பலர்ஒன்று பலஎன
வருபெயர் ஐந்தொடு பெயர்முதல் இருநான்கு
உருபும் உறழ்தர நாற்பதாம் உருபே 1

'சார்பெழுத்துக்கள்' என அவை வருமிடங்களையும் கணக்குக் காட்டி, 369 என்பதாகப் பவணந்தியார் எழுதவே, படிப்பவர் மனத்தில் ஒரு திகைப்பு ஏற்பட்டது. தமிழ் எழுத்துக்கள் முப்பதே. சார்பெழுத்தும் முதலெழுத்துடன் சார்த்தி உணரப் படுவதுடன் அடங்கிவிடும். அவையும் குற்றியலிகரம், குற்றிய லுகரம், ஆய்தம் என்றது புணர்ச்சிவேற்றுமையும் பொருள் வேற்றுமையும் தருமிடங்களும் உண்டு என்பதாலேயாம். உயிர்மெய் 216 என்பதும் வடிவங்களின் எண்ணிக்கையே.

இங்கு 'பெயர் முதல் இருநான்கு உருபு' என்பது, எழுவாய், ஐ ஆல் கு இன் அது கண் விளி எனும் எட்டுமே யாகும். ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்பது ஐம்பால் பெயர்கள். வேற்றுமைகள் பெயரைச் சார்ந்தே வருதலால், உருபு புணர்ச்சி வருதற்குரிய இடங்கள் 8 x 5 = 40 என்று,மிகத் துல்லியமாகக் கணக்கிடுகிறார் நம் பவணந்தியார்.

முருகன், முருகனை, முருகனால், முருகனுக்கு, முருகனின், முருகனது, முருகன்கண், முருகா - என ஆண்பாலுக்கு 8 வந்தன. இதனைப் பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின் பாலுக்கும் தனித்தனி சொன்னால் நாற்பதாகும்.

## உருபு வருமிடமும் பொருள் தருதலும்

241 பெயர்வழித் தம்பொருள் தரவரும் உருபே 2

வேற்றுமை உருபுகளே பெயரின் நிலையை - செயலை வேறுபடுத்துவன. எழுவாய்க்குப் பெயரே, உருபு, வேறுஉருபு இல்லை. விளி - பெயர் ஈறு வேறுபடுவதே உருபு. ஏனைய இரண்டுமுதல் ஏழுவரை வரும் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறுமே உருபுகள். இவை சில பல வடிவம் பெறும் (மூன்றாம் வேற்றுமையுருபு ஆல், ஆன், ஒடு, ஓடு, ஆவதுபோல). சொற்களேகூட உருபாக வருவதுண்டு. இவை எப்பொழுதும் பெயர்வழி - அதாவது பெயர்களுக்குப் பின்னே தான் வரும். இவை தத்தம் பொருளைத்தர, அவ்வாறு வரும்.

## ஐ ஆல் கு இன் அது கண் - உருபுகள் ஆறும் முன்புவிளக்கிய வற்றுமைப்புணர்ச்சிகளைப் போலவே புணரும்

**242 ஒற்றுஉயிர் முதல்ஈற்று உருபுகள், புணர்ச்சியின்**
**ஒக்கும்மன், அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே 3**

உருபுகளும் ஒற்றுமுதலும் உயிர் ஈறும் என இவ்வாறு வரும். (கு - க் + உ - மெய் முதல், உயிர் ஈறு). இவை புணர்ச்சியில், அவ்வப் பெயர்கள் வேற்றுமைத் தொடர்ப் புணர்ச்சியில் என்னஎன்ன வேறுபாடுகளை அடையுமோ அவைகளையே தாமும் அடையும். அதாவது முன்னர் உயிரீற்றுப் புணரியலிலும் மெய்யீற்றுப் புணரியலிலும் வேற்றுமைத் தொடர்ப் புணர்ச்சியில் என்ன என்ன வேறுபாடுகளை அடையுமோ அவற்றையே தாமும் அடையும்.

நகரின்கண் வாழ்வு - இயல்பானது. உறிக் கட்டயிர் - உறிக்கண் தயிர் - ணன வல்லினம் வர டற'வாகும் என்ற விதிப்படி ஆனது. பழி+கு+அஞ்சி = பழிக்கஞ்சி என்பது 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்பதால் ஆன புணர்ச்சி. இவை பெயருடன் சேர்ந்து, பெயர்போலவே புணர்ச்சியடைவன என்பதை, முன்னைய இரண்டு புணர்ச்சி இயல்களையும் வைத்து அறியலாம். முருகன் + அது = முருகனது. 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' எனும் விதிதானே இங்கு பொருந்துகிறது?

## சாரியை என்பது என்ன?

**243 பதம்முன் விகுதியும் பதமும் உருபும்**
**புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை**
**வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும் 4**

சாரியைகள் என்பன சார்ந்து ஒட்டுவதற்கு வருவன. அதாவது பெயரையும் உருபையும் ஒட்டுவன. பதம் முன் விகுதி முதலாய உறுப்புக்களை ஒட்ட வருவன விகுதிப்புணர்ச்சியுட் சாரியைகள் ஆகும். பதம் முன் பதத்தை ஒட்ட வருவன பதப்புணர்ச்சியுட் சாரியைகள். பதம் முன் உருபை ஒட்ட வருவன உருபு புணர்ச்சியுட் சாரியைகள்.

நடந்தனன் - நட+த்(ந்)+த்+**அன்**+அன் = இதில் இறுதி 'அன்' னுக்கு முந்திய அன் சாரியை; நடந்தான் - நட + த்(ந்)+த்+ஆன். இதில் சாரியை இல்லை. முன்னதில் வந்த சாரியை பின்னதில் இல்லை. இதுவே உறழ்தல் ஆகும். விகுதிப் புணர்ச்சியில் இருவழியாகவும் வருதல் இது. புளி + காய் - புளி + அம் + காய் = புளியங்காய் 'அம்' - சாரியை. புளிக்கறி - சாரியை இல்லை. நெல்லின்குப்பை - இன் சாரியை. நெற்குப்பை - சாரியை இல்லை. இவை பதப்புணர்ச்சியுட் சாரியை, வந்ததும் வராததும்.

அவை + ஐ = அவற்றை - அவை + அற்று + ஐ. உருபு சேர்க்க அற்றுச் சாரியை வந்தது. மரத்தை = மரம் + ஐ. உருபு சேர்க்க அத்து இடையே வந்தது. ஆ + ஐ = ஆவை. பால் + ஐ = பாலை. உருபு புணர்ச்சியுட் சாரியை. வருதலும் தவிர்தலுமாயின.

## சாரியைகள் யாவை?

**244 அன்ஆன் இன்அல் அற்றுஇற்று அத்துஅம்**
**தம்நம் நும்ஏ அஉ ஐகுன**
**இன்ன பிறவும் பொதுச்சா ரியையே 244**

சாரியையாக வருவன இவை 17 என இங்கு கூறப்பட்டுளது. இவை போல்வன மேலும் பலவுள. பால் + கு = பாலுக்கு என்கிறோம் - உகரச் சாரியை உச்சரிப்பை எளிமைப்படுத்துகிற தல்லவா? பாற்கு என்றால் விளங்கவும் இல்லையே? விதிப்படி

அதுவும் சரியே. மொழியினை உயிரெனச் சொல்வது, வாழ்வுக்கு அது மிகவும் உதவி செய்வதாலேயாம். மொழி + இன் + ஐ. இதை மொழியை என்றும் 'இன்' சாரியை இன்றிக் கூறலாம். வாழ்வு + கு = வாழ்வுக்கு. இதையே வாழ்வினுக்கு என்றால், 'இன்' சாரியை பெற்றது அது.

| | | | |
|---|---|---|---|
| அன் | பார்த்தனன் | ஆன் | எழுபான் ஆண்டு |
| இன் | தமிழின் சிறப்பு | அல் | தொடையல் |
| அற்று | அவற்றை | இற்று | பதிற்றுப்பத்து |
| அத்து | மரத்துக்கு | அம் | புளியம்பழம் |
| தம் | எல்லார் தம்மையும் | நம் | எல்லா நம்மையும் |
| நும் | எல்லீர் நும்மையும் | ஏ | ஏழே தருக |
| அ | படித்தது | உ | அவனுக்கு |
| ஐ | போத்தை | கு | வருகுவாய் |
| ன | ஆன் | | |

இவை பதினேழும் பதமொடு விகுதியும், பதமொடு பதமும், பதமொடு உருபும் எனும் மூன்று புணர்ச்சிகளிலும் வருவதால், பொதுச் சாரியை எனப்பட்டன. இன்ன பிறவும் என்பதனால் தன், தான், தாம், ஆம், ஆ என வருவனவற்றை உரையாசிரியர் காட்டுவர்.

தன் - உன்தனை. தான் - அவன்தான். தாம் - அவர்தாம்.

ஆம் - மூன்றாம்பிறை. ஆ - நிலை இல்லாச் செல்வம்.

## எல்லாம் - என்பதன் உருபு புணர்ச்சி

**245 எல்லாம் என்பது இழிதிணை யாயின்**
**அற்றோடு உருபின் மேல்உம் உறுமே**
**அன்றேல் நம்இடை அடைந்து அற்றாகும்** 6

எல்லாம் என்பது அஃறிணையில் வரும்போது, அதனுடன் ஆறு வேற்றுமை உருபுகளும் (ஐ ஆல் கு இன் அது கண்) புணரும்போது, இடையே அற்றுச்சாரியையும் உருபுக்குப் பிறகு முற்றும்மையும் வரும். எல்லாவற்றையும் எல்லாவற்றாலும், எல்லாவற்றுக்கும். அதுவே உயர்திணையில் வரும்போது நம்

சாரியை இடையே வந்து, உருபுக்குப் பிறகு முற்றும்மையும் வரும். எல்லா நம்மையும், எல்லா நம்மாலும், எல்லா நமக்கும்.

இதற்கு வேறுவிதமாயும் பொருள் கூறலாம். 'எல்லாம் என்பது இழிதிணையாய், இன் அற்றோடு பெறும் என்று கொண்டு, 'எல்லாவற்றினோடும்' எனக் காட்டுவர்.

எல்லா நம்மையும் போல நம், நும் என்பன சாரியை ஆகும்போது, தன்மை, முன்னிலைப் பொருள் உணர்த்தி விடுகின்றன என்பர்.

## எல்லாரும் எல்லீரும் - உருபு புணர்ச்சி

**246 எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை**
**தள்ளி நிரலே தம்நும் சாரப்**
**புல்லும் உருபின் பின்னர் உம்மே 7**

எல்லாரும் எல்லீரும் என்பனவற்றின் இறுதி உம்மை தள்ளப்பட்டு, முறையே எல்லார்தம், எல்லீர்நும் ஆக்கி, பிறகு உருபின் பின்னர் அந்த உம்மை இணைப்பர்.

எல்லார் தம்மையும், எல்லீர் நும்மையும். இதனை எல்லாரையும், எல்லீரையும் என்றும் சாரியையின்றிக் கூறலாம்.

## மூவிடப்பெயர் - உருபுபுணர்ச்சி

**247 தான்தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்**
**நீநீர் என்எம் நின்நும் ஆம்பிற**
**குவ்வின் அவ்வரும் நான்குஆறு இரட்டல 8**

தான் தாம் நாம் ஆகிய மூவிடப் பெயர்களும் ஆறு உருபுகளுடனும் புணருமிடத்து, அவை நெடில் முதல் குறுகும்.

தான் - தன், தாம் - தம், நாம் - நம் என ஆகும். உருபு சேரும்போது தன்னை, தம்மால், நம்மிடம் என்றாகும்.

யான் யாம் நீ நீர் நான்கு பெயரும் முறையே என், எம், நின், நும் என மாறும். உருபேற்கும்போது என்னை, எம்மால், நின்னது, நும்மிடம் என ஆகும்.

'கு' - உருபு (நான்காம் வேற்றுமை) இவ் ஏழு பெயர்களுடனும் புணரும்போது இடையே 'அ'கரச்சாரியை வரும். என்+அ+கு, எனக்கு. கு-உருபுடன் அகரச்சாரியை வரும் போதும் ஆறாம் உருபிலும் தனிக்குறில் முன்னுள்ள ஒற்றுக்கள் இரட்டாவாம். தன்-கு = தன்னக்கு என இரட்டிக்காது தனக்கு என்றே வரும். தன்+அது = தன்னது ஆகாது தனது என்றே ஆகும்.

பிற என்றமையால் நீ - உன், நீர் - உம் ஆவனவும் கொள்க.

## ஆ, மா, கோ - உருபு புணர்தல்

**248 ஆ,மா, கோனவ் அணையவும் பெறுமே** 9

ஆ என்னும் பெயர், மா என்னும் விலங்குப் பொதுப்பெயர், கோ என்னும் இறைவன் பெயர், உருபுகள் புணரும்போது, இடையே னகரச் சாரியை பொருந்தவும் பெறும். ஆனை, மானை, கோனை. ஆ + ஐ என்பது இடையில் ன் பெற்று ஆனை ஆகிறது. பூவை, மாவை, கோவை என இயல்பாக வருதலும் உண்டு. ஆனுக்கு, மானுக்கு கோனுக்கு என உகரச் சாரியை உடன் பெற்றது. ஆவுக்கு, மாவுக்கு, கோவுக்கு என உகரச் சாரியை மட்டுமே பெற்றது. ஆவினை, மாவினை கோவினை என - இன் சாரியை பெற்றது. ஆமா - காட்டுப்பசு. அதற்கும் இவ்விதிகளைச் சேர்ப்பதுண்டு. ஆன், மான், கோன் என உருபின்றி நிற்பதுமுண்டு.

## எண்ணுப்பெயர்கள் - உருபு புணர்தல்

**249 ஒன்று முதல்எட்டு ஈறாம் எண்ஊர்**
**பத்தின்முன் ஆன்வரின் பவ்ஒற்று ஒழியமேல்**
**எல்லாம் ஓடும் ஒன்பதும் இற்றே** 10

ஒன்று முதல் எட்டு ஈறாம் எண்களுடன், பத்து எனும் சொல் வந்து புணரும்போது - அதன்முன் ஆன் வரின், 'ப'வ் ஒற்று மட்டுமே நிற்க மேல்நின்ற எல்லா எழுத்தும் கெடும். ஒன்பது - முன்னரும் உருபுகள். புணரும்போது ஆன் சாரியை வரின், அதன் வல்லொற்று (ன்) நிற்க, மேல்நின்ற எல்லா எழுத்தும் கெடும். ஒன்று+பத்து+ஐ = ஒரு+ப்+ஆன்+ஐ = **ஒருபானை**, ஒருபதை, ஒருபஃதை; *இருபானை*, இருபதை, இருபஃதை, **ஒன்பானை**, ஒன்பதை, ஒன்பஃதை என விகற்பித்தும் வரும் என்பர் உரையாசிரியர். ஆன் வரும்போது மட்டும், பிற எழுத்து யாவும் நீங்குதல் காணலாம்.

## அவ் - உருபு புணர்ச்சி

**250 வவ்இறு சுட்டிற்கு அற்றுஉறல் வழியே** **11**

அஃறிணைப் பன்மையவான அவ் இவ் உவ் என்னும் சுட்டுப் பெயர்களுக்கு உருபு புணரும்போது அற்றுச் சாரியை வருதலுண்டு. அவ்+ஐ = அவற்றை, இவ்+ஆல் = இவற்றால், உவ்+கு = உவற்றுக்கு. அவற்றினை, இவற்றினை, உவற்றினை என இன் சாரியை உடன் வருதலுமுண்டு.

## சுட்டு - உருபு புணர்தல்

**251 சுட்டின்முன் ஆய்தம் அன்வரின் கெடுமே** **12**

அஃது இஃது உஃது எனவரும் சுட்டுப் பெயர்களுடன் உருபுகள் புணருமிடத்து, இடையே அன் சாரியை வரின், முன் நின்ற ஆய்தம் கெடும். அஃது+ஐ = அதனை, அதை, இதனை, இதை. அஃதை, இஃதை என ஆய்தம் கெடாமல் வருதலுமுண்டு.

## அத்துச் சாரியைப் புணர்ச்சி

**252 அத்தின் அகரம் அகரமுனை இல்லை** **13**

அத்துச் சாரியையது அகரம், முன்னர் அகர உயிரே நிற்பின் கெடும். மரம் + அத்து + ஐ = மர + அத்து + ஐ - அத்தின் 'அ'

கெடாவிட்டால் மரவத்தை ஆகும். 'அ' கெட்டதால் மரத்து ஆகி, ஐயுடன் சேர்ந்து - மரத்தை ஆகியது.

## புறனடைநூற்பாக்கள்

## சாரியைப் புணர்ச்சிகளுக்குப் புறனடை

**253 இதற்குஇது சாரியை எனின்அளவு இன்மையின்**
**விகுதியும் பதமும் உருபும் பகுத்துஇடை**
**நின்ற எழுத்தும் பதமும் இயற்கையும்**
**ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறியே 253**

இதற்கு இது சாரியையென வரையறுத்தால் அதற்கு ஓர் அளவில்லை. அதாவது முழுவதும் வகுத்துக்காட்ட இயலாது. அதனால் ஒரு சொல்லில் விகுதி, பதம், உருபு மூன்றையும் பகுத்து இடையிலே அவற்றை இணைப்பதற்குச் சார்ந்துவரும் எழுத்தையும் (ஏ, அ போல்பவை), பதத்தையும் (அன், ஆன், இன் போல்வன) இவ்விரு சாரியையும் இன்றிவருவதையும் கண்டறிதல் அறிஞர்தம் கடமையாகும். விகுதிப் புணர்ச்சியில் வரும் சாரியை, பதப்புணர்ச்சியில் வரும் சாரியை, உருபுப் புணர்ச்சியில் வரும் சாரியை என வருமிடம் மூன்று. எழுத்துச் சாரியை, பதச்சாரியை என வகை இரண்டு. சாரியைகள் இணைத்து, ஒட்டி, ஒன்றாக்க வருவன. ஆன் நெய் - ன் எழுத்துச் சாரியை. 'ஆனமணி இயம்பும் கானம்' - ஆன - ன், அ இருசாரியைகள். பாட்டின் பொருள் - பாட்டு எனும் குற்றுகரத்துக்கு இன் சாரியை வந்துளது. மரத்தினை - அத்துச் சாரியை வந்தது. தாழக்கோல் - பதச்சாரியை - (அ). தன் கை, என் கை, ஆவை, கோவை எனச் சாரியை இன்றியும் வந்தன. எழுத்துச் சாரியை, பதச்சாரியை - இரண்டும் இடைச்சொற்களே. படித்தனன் = படி+த்+த்+அன்+அன் = விகுதிப் புணர்ச்சிச் சாரியை. தமிழ்+அ+சாதி = தமிழச்சாதி - பதப்புணர்ச்சியில் சாரியை. முருகனுக்கு - முருகன் + உ + க் + கு = உருபு புணர்ச்சியில் சாரியை.

## விகுதி, பதம், சாரியை, உருபு நான்கு புணர்ச்சிக்கும் புறனடை

**254 விகுதி பதம்சாரியை உருபு அனைத்தினும்
உரைத்த விதியினோர்ந்து ஒப்பன கொளலே**

விகுதி, பதம், சாரியை, உருபு - யாவும் சேர்ந்து புணரும்போது, புணர்ச்சி விதிகள் ஏற்படுமல்லவா? முன்பு உயிரீறு, மெய்யீறுகட்குப் புணர்ச்சி விதிகள் கூறப்பட்டனவன்றோ? அவை இங்கு எவை பொருந்துமோ அவை கொள்ளப் படும். அவ்வாறு அவ்விதிகளை ஓர்ந்து - கூர்மையாய்க் கவனித்து ஒத்துவருவன இங்கு கொள்ள வேண்டும். வாராதவற்றுக்குப் புதியன வகுத்துக் கொள்க என்கிறது இப் புறனடைச் சூத்திரம்.

**விகுதிப் புணர்ச்சி :** றும் நிகழ்காலமன்றி எதிர்காலமும் இறந்த காலமும் காட்டும் என்பது பொதுவிதி. சென்று - என்புழி இறந்த காலமும், சேறு என்புழி எதிர்காலமும் காட்டும்.

**பதப்புணர்ச்சி :** 'அல்வழியில் இ, ஐ முன்னே வரின், வல்லினம் இயல்பும் மிகலும் விகற்பமும் பெறும் என்பது முன்பு கூறிய விதி. ஆடி திங்கள் என்றோ, பருத்திக் குறிது என்றோ வராது. ஆடித்திங்கள் - பண்புத்தொகையாதலின் மிகும். பருத்தி குறிது எழுவாய்த் தொடராதலின் மிகாது. அதாவது எல்லாவற்றையும் நோக்க வேண்டும். சட்டவிதிகள் போல இவை பொதுவிதி, துணைவிதிகளால் அடிபட வாய்ப்புண்டு. மேலும் பொருள் விளக்கத்திற்கேற்ப, புணர்ச்சி அமையும். சிலபோது ஒலி இனிமை, பொருட்பொருத்தம் இரண்டும் கருதியுள்ளனர். எனவே புணர்ச்சிவிதி, இடமறிந்து நாம் கொள்வதே அறிவுடைமையாகும்.

**உருபுப்புணர்ச்சி :** 'ஒற்றுயிர் முதல்ஈற்று உருபுகள்' எனத் தொடங்கும் நூற்பாப்படி நம்பிகு எனவும் நம்பிக்கண் என்றும் கொள்ள வாய்ப்புண்டு. ஆயினும் நம்பிக்கு, நம்பிகண் என்றே கொள்ள வேண்டும்.

**சாரியைப் புணர்ச்சி :** வீட்டினின் நீங்கினான் என விதிப்படி வரவேண்டும். ஆனால் இன் உருபிற்கு இன் சாரியை வாராது என்ற விதியும் உளது. அதனால் வீட்டின் நீங்கினான் என

இயல்பாதலே பொருந்தும். நாட்டுக்கண் இருந்தான் என்பதை நாட்டின்கண் இருந்தான் என்றும் கூறலாம். அதாவது விதிகளை இடமறிந்து கொள்ளுதலே அறிவுடைமையாம்.

## இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை

**255 இயல்பின் விகாரமும் விகாரத்து இயல்பும்**
**உயர்திணை இடத்து விரிந்தும் தொக்கும்**
**விரவுப் பெயரின் விரிந்து நின்றும்**
**அன்ன பிறவும் ஆகும்ஐ உருபே** 16

இரண்டாம் வேற்றுமை உருபாகிய 'ஐ', தனக்கு விதித்த முறைகளின்படி வராமல், அவற்றுக்கு மாறாக வருமிடங்கள் பலவுண்டு.

'ஐ' - உருபு, இயல்பாய் வருமென்ற இடத்து விகாரமாக முடியும். நின்+புறம் = இயல்பாக வேண்டிய இடம். இது 'நிற்புறம்' என விகாரப்படும்.

விகாரமாக வருமென்ற இடத்து இயல்பாக முடியும்.

மண் தரை, மட்தரை ஆகாது மண் தரை என்றும் வரும். மண் கொணர்க என இயல்பாக வருவதும் காண்க.

உயர்திணைக்கண் வேண்டாத இடத்து விரிந்தும் தொக்கும் மாறிவரக்கூடும். நம்பிக் கொணர்ந்தான் என வர வேண்டியது நம்பியைக் கொணர்ந்தான் என உருபு விரிந்தது. நான்முகனைத் தொழுது என விரிந்து வர வேண்டியது, நான்முகற்றொழுது என உருபு தொக்கது.

விரவுப் பெயரிலும் விரிந்தும் குறைந்தும் வரும். இவை போல்வன பிறவும் உள. ஏற்பன மட்டும் இடமறிந்து கொள்ள வேண்டும். சாத்தன், சாத்தி - மக்களையும் மாடு ஆடுகளையும் குறிக்க முன்பு வழங்கியதால் விரவுப் பெயர் எனப்படும். இவையும் சாத்தியைக் கொண்டுவா (மாடு), ஆண் பெற்றாள் என வரவேண்டிய விதிக்கு மாறாக வந்துள என்பர்.

'தற்கொண்டாற் பேணி', என இயல்பாயும் வர வேண்டிய இடத்தில், திரிந்தே வந்துளது.

## மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை

256 **புள்ளியும் உயிரும் ஆஇறு சொல்முன்**
**தம்மினாகிய தொழில்மொழி வரினே**
**வல்லினம் விகற்பமும் இயல்பு மாகும்** 17

மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியில் புள்ளியும் (மெய்யும்) உயிரும் இறுதியாய் நிற்கும். சொற்களின் முன், தம் இனமாகிய வினைச்சொற்கள் (நிலைமொழிப் பொருளையே தருவன) எதிரே வந்தால், வல்லெழுத்து மிக்கும் இயல்பாயும் முடியும்.

தம்மின் ஆகிய வினைச்சொல் - சாத்தன் நாயால் கடிக்கப் பட்டான், பேயால் பிடிக்கப்பட்டான், புலியால் கொள்ளப் பட்டான் என்பன போல்வது. இவை நாய்க் கோட்பட்டான் என வரும் (கோள்-கொள்ளப்படுதல்). பேய்க் கோட்பட்டான், புலிக் கோட்பட்டான். இன்று இயல்பாயும் வரும், நாய்கோட்பட்டான், பேய் கோட்பட்டான் என. நாயால் - எனவரும் ஆல் உருபு தொக்கது. சாத்தனைப் புலி கடித்தது. எழுவாய்த் தொடர். புலியால் சாத்தன் கடிக்கப்பட்டான் - செயப்பாட்டு வினைத் தொடர்.

சுறாப் பாயப்பட்டான், அராத்தீண்டப்பட்டான் என வல்லொற்று மிகுதலே பெரும்பான்மை.

## எழுத்ததிகாரத்திற்குப் புறனடை

257 **இதற்குஇது முடிபுஎன்று எஞ்சாது யாவும்**
**விதிப்பு அளவின்மையின் விதித்தவற்றியலான்**
**வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே** 18

இதற்கு இதுதான் விதி என்று, ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் விதி வகுத்துக் கூறப்புகுந்தால், அதற்கு அளவே கிடையாது. ஆகவே, புதியன, வேறுபடுவன கண்டால், முன்பு கூறி விதித்த

முறைகளை அறிந்து அதன்படி, இங்கு வகுத்துரைக்காத வற்றுக்கும் தாமே விதி வகுத்துக் கொள்வார்களாக.

1. அணுத்திரளாய ஒலியே எழுத்து என்றார். வரிவடிவில் எழுதப்பட்டதால் எழுத்து என்பதையும் சேர்த்துக் கொள்க.
2. பெருமாள் : அன் ஆன் - ஆண்பாலுக்கு என்றார். இதில் பெருமையையுடைய பெருமான் என்பதன் திரிபே பெருமாள் ஆனது. ஆக ஆள் விகுதி, இங்கு ஆண்பாலை உணர்த்திற்று.
3. 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்பது தான் விதி. 'ணன வல்லினம் வரட் டறவும்' என்னுமிடத்து டகரமும் வல்லினமாதலின் 'ட்டறவும்' என இரட்டித்தது.
4. 'நும்தம் எம்நம் ஈறாம் மவ்வரு ஞநவே' என்பது விதி. ஆனால் 'அம்' என்பதும் ஞ,ந வரின் அதே விதி பெறுகிறது. அம்+நலம் = அந்நலம். அம்+ஞாலம். அஞ் ஞாலம் (அம் - அழகிய)
5. உருபு புணரியலில் இரண்டாம் வேற்றுமைக்கும் மூன்றாம் வேற்றுமைக்கும் புறனடை கூறப்பட்டுள்ளது. ஏழாம் வேற்றுமைக்கும் இது பொருந்துமிடமுண்டு. 'மண் புகுந்தும் விண் பறந்தும்' என்புழி, இயல்பாக வந்தது பொது விதிக்கு மாறானதாகும்.

இவ்வாறு வருவன பலவற்றையும், இதுவே நெறிமுறையாகக் கொண்டு, வதி வகுத்துக் கொள்ள வேண்டும்.

# நன்னூல்

## எழுத்ததிகாரம்

## நூற்பா முதற் குறிப்பு அகர நிரல்


| நூற்பா | நூற்பா எண் |
|---|---|
| **அ** | |
| அ ஆ உ ஊ | 104 |
| அ ஆ எ | 105 |
| அ இ உம் முதல் | 66 |
| அ ஐ முதல் இடை | 123 |
| அகமுனாச் செவி | 222 |
| அடிநா அடி | 82 |
| அண்ண நுனிநா நனி | 86 |
| அண்ண நுனிநா | 83 |
| அண்பல் அடிநா | 80 |
| அண்பல் முதலும் | 84 |
| அதுமுன் வரும் | 180 |
| அத்தின் அகரம் | 252 |
| அம்முதல் | 63 |
| அம்முன் இகரம் | 125 |
| அரிதிற் பெய | 34 |
| அல்வழி இ ஐம் | 176 |
| அல்வழி ஆமா | 171 |
| அவற்றுள் அ இ உ | 64 |
| அவற்றுள் ஏழாம் | 147 |
| அவற்றுள், முயற்சியுள் | 76 |
| அவற்றுள், வினையின் | 6 |
| அல்வழி, ஆவி | 75 |
| அவ்வினை | 45 |
| அழலின் | 46 |
| அளக்க லாகா | 28 |
| அறம் பொருள் | 10 |
| அன் ஆன் அள் ஆள் | 140 |
| அன் ஆன், இன் அல் | 244 |
| அன்றி இன்றி | 173 |
| அன்னம் | 38 |
| **ஆ** | |
| ஆ ஈ ஊ ஏ | 65 |
| ஆக்கியோன் | 47 |
| ஆசான் | 44 |
| ஆநின்று கின்று | 143 |
| ஆமா கோனவ் | 248 |
| ஆமுன் பகர ஈ | 177 |
| ஆயிரம் | 54 |
| ஆய்தக்கு | 87 |
| ஆவி ஞணநமன | 107 |
| ஆவி யரழ | 161 |
| ஆவியும் ஒற்றும் | 101 |
| ஆற்றொழுக்கு | 19 |
| **இ** | |
| இ ஈ எ ஏ | 77 |
| இ ஈ ஐ வழி | 162 |
| இசைகெடின் | 91 |
| இடுகுறி | 62 |
| இடைச் சொல் | 201 |
| இடைத்தொடர் | 182 |
| இடையினம் | 70 |
| இடையில் நான்கும் | 146 |
| இடைஉரி | 239 |
| இணைந்தியல் காலை | 149 |
| இதற்கு இது சாரியை | 253 |
| இதற்கு இது முடிபு | 257 |
| இயல்பினும் விதியினும் | 165 |
| இயல்பின் விகாரமும் | 255 |
| இயல்பெழு மாந்தர் | 100 |
| இரண்டு முன் வரின் | 198 |
| இருவர் நூற்கும் | 8 |
| இலக்கியம் கண்டு | 141 |
| இல்என் இன்மை | 233 |
| **ஈ** | |
| ஈதல் இயல்பே | 36 |
| ஈமும், கம்மும் | 223 |
| ஈறு போதல் | 136 |
| ஈற்றுயா | 160 |
| **உ** | |
| உ ஊ ஒ ஓ ஔ | 78 |
| உ ஊ ஒ ஓ | 103 |
| உடல்மேல் உயிர் | 204 |
| உயிரும் | 59 |
| உயிர்மவில் ஆறும் | 129 |
| உயிர்மெய் ஆய்தம் | 60 |
| உயிர்மெய் இரட்டு | 61 |
| உயிர்வரின் உக்குறள் | 164 |
| உரத்தின் வளம் | 25 |
| உரிவரின் நாழியின் | 174 |
| உருபின் முடிபவை | 238 |

| நூற்பா | நூற்பா எண் |
|---|---|
| **எ** | |
| எகர வினா | 163 |
| எடுத்தல் படுத்தல் | 88 |
| எட்டன் உடம்பு | 193 |
| எண் நிறை அளவும் | 188 |
| எண்பெயர் | 57 |
| எண்மூ எழுத்து | 158 |
| எயா முதலும் | 67 |
| எல்லாம் என்பது | 245 |
| எல்லாரும் எல்லீரும் | 246 |
| எழுத்தே தனித்தும் | 128 |
| எழுவகை மதமே | 11 |
| **ஐ** | |
| ஐ ஒள இ | 71 |
| ஐகான் அவ்வழி | 124 |
| ஐந்தன் ஒற்று | 192 |
| ஐயம் தீரப் | 29 |
| ஐயீற் யுடைக் | 185 |
| **ஒ** | |
| ஒருகுறி | 42 |
| ஒருநெறி இன்றி | 17 |
| ஒருபஃது ஆதி | 196 |
| ஒருபுணர்க்கு | 157 |
| ஒருமொழி மூவழிக் | 156 |
| ஒருவன் ஒருத்தி | 240 |
| ஒற்றுஉயிர் முதல் | 242 |
| ஒன்பது ஒழித்த | 199 |
| ஒன்பானொடு | 194 |
| ஒன்றன் புள்ளி | 189 |
| ஒன்றுமுதல் ஈரைந்து | 197 |
| ஒன்று முதல்எட்டு | 249 |
| **க** | |
| கஙவும் | 79 |
| கசதப ஒழித்த | 110 |
| கருத்துப் பதப்பொருள் | 22 |
| களிமடி மானி | 39 |
| **கா** | |
| காலம் களனே | 48 |
| **கீ** | |
| கீழின் முன் | 226 |
| **கு** | |
| குலன் அருள் | 26 |
| குயின்ஊன் | 216 |
| குறியதன்கீழ் | 172 |
| குறியதன் முன்னர் | 90 |
| குறில்அணைவு இல்லா | 210 |
| குறில்செறி யாலள | 229 |
| குறில்வழி லள | 228 |
| குற்றுயிர் அளபின் | 108 |
| குன்றக் கூறல் | 12 |
| **கோ** | |
| கோடல் மரபே | 40 |
| **ங** | |
| ஙஞண நமன | 92 |
| ஙம்முன் கவ்வாம் | 111 |
| **சா** | |
| சாதி குழூஉப் | 211 |
| சாவஎன் | 169 |
| **சி** | |
| சில்வகை எழுத்தில் | 18 |
| சிறப்பினும் | 73 |
| **சு** | |
| சுட்டுயா எகர | 106 |
| சுட்டின் முன் | 251 |
| சுட்டு வகரம் | 235 |
| சுருங்கச் சொல்லல் | 13 |
| சுவைப்புளி | 175 |
| **சூ** | |
| சூத்திரத் துட்பொருள் | 23 |
| **செ** | |
| செம்மை சிறுமை | 135 |
| செய்யிய என்னும் | 167 |
| செய்என் வினைவழி | 138 |
| **ஞ** | |
| ஞண நம | 207 |
| ஞநமுன் தம்மினம் | 112 |
| **ட** | |
| டறமுன் கசதப | 113 |
| **ண** | |
| ணனமுன் இனம் | 114 |
| ணன முன்னும் | 96 |
| ணன வல்லினம் | 209 |
| **த** | |
| தடற ஒற்று இன்னே | 142 |
| தத்தம் பகாப்பதம் | 134 |
| தமிழ் அவ்வுறவும் | 225 |

| நூற்பா | நூற்பா எண் |
|---|---|
| தம்பெயர் மொழியின் | 121 |
| தற்சுட்டு அளபு | 95 |
| தனிக்குறில் | 205 |
| தன்மகன் | 37 |
| தன்னாசிரியன் | 51 |
| தன்என் என்ப | 218 |
| தன்னொழி மெய்ம்முன் | 206 |
| **தா** | |
| தானம் | 72 |
| தானே | 33 |
| தான் தாம் | 247 |
| **தி** | |
| திசையொடு திசையும் | 186 |
| **தெ** | |
| தெங்கு நீண்டு | 187 |
| தெரிவரும் | 27 |
| தெவ்என் மொழியே | 236 |
| **தே** | |
| தேன்மொழி | 214 |
| **தொ** | |
| தொகுத்தல் | 50 |
| தொல்லை வடிவின | 98 |
| **தோ** | |
| தோன்றல் திரிதல் | 154 |
| தோன்றா | 52 |

| நூற்பா | நூற்பா எண் |
|---|---|
| **ந** | |
| நடவா மடி | 137 |
| நவ்விறு தொழிற் | 208 |
| **நா** | |
| நான்கன் மெய்யே | 191 |
| **நி** | |
| நிறைஉயர் | 74 |
| நின்ற நெறியே | 109 |
| **நு** | |
| நுதலிப் புகுதல் | 14 |
| நுந்தம், எம்நம் | 221 |
| **நூ** | |
| நூலின் | 4 |
| நூலே நுவல்வோன் | 3 |
| நூல்பயில் | 41 |
| நூற்பொருள் வழக்கொடு | 15 |
| **நெ** | |
| நெடிலோடு ஆய்தம் | 94 |
| நெடிலோடு உயிர்த் | 183 |
| நெல்லும் செல்லும் | 232 |
| **நே** | |
| நேரின மணியை | 16 |
| **ப** | |
| பகாப்பதம் ஏழும் | 130 |
| பகுதி விகுதி | 133 |
| பகுப்பால் பயனற்று | 131 |
| பஞ்சிதன் சொல்லா | 24 |
| பதமுன் விகுதியும் | 243 |

| நூற்பா | நூற்பா எண் |
|---|---|
| பலசில எனும் | 170 |
| பல்வகை உதவி | 35 |
| பவ்வ மூவிடத்து | 144 |
| பவ்வீ நீமீ | 178 |
| பனைமுன் | 203 |
| பன்னீர் உயிரும் | 102 |
| **பா** | |
| பாடம் கருத்தே | 21 |
| பாயிரம் பொது | 2 |
| **பி** | |
| பிண்டம் தொகை | 22 |
| **பு** | |
| புள்ளியும் உயிரும் | 256 |
| புள்ளிவிட்டு | 89 |
| புள்ளும் வள்ளும் | 234 |
| **பூ** | |
| பூப்பெயர் முன் | 200 |
| பூமலி அசோகின் | 56 |
| **பெ** | |
| பெயர்வழித் தம்பொருள் | 241 |
| பெய்த முறை | 32 |
| **பொ** | |
| பொதுப் பெயர் | 159 |
| பொருள் இடம் | 132 |
| **ம** | |
| மகர இறுதி | 122 |
| மங்கலம் ஆகி | 30 |
| மம்முன் பயவ | 115 |
| மரப்பயர் முன்னர் | 166 |
| மலர் தலை உலகின் | 1 |

| நூற்பா | நூற்பா எண் |
|---|---|


மவ்வீறு ஒற்றழிந்து 219
மன்னுடை 53

மா

மாடக்கு 55

மி

மின்பின் பன் 217

மீ

மீகீழ் இதழ்உற 81
மீன்றவ் வொடு 213

மு

முகவுரை பதிகம் 1
முக்காற் கேட்பின் 43
முதல்இரு நான்காம் 195
முதல்வழி 5
முதல்நூல் 49
முன்னோர் நூலின் 7
முன்னோர் மொழி பொருளே 9

மூ

மூன்றன் உறுப்பு 190
மூன்று ஆறு உருபுஎண் 179
மூன்று உயிர் அளபு 99

மெ

மெய்கள் அகரமும் 126
மெய்உயிர் முதல்ஈறு 151
மெல்லினம் 69
மென்றொடர் மொழியுள் 184

மே

மேற்பல் இதழ்உற 85

மொ

மொழிகுணம் 31
மொழிமுதல் 58
மொழியாய்த் 127

ய

யகரம் வரக் 93
யரழ முன்னர்க் கசதப 224
யரழ முன்னர் மொழி 116
யரழ ஒற்றின் 119

ர

ரவ்விற்கு அம்முதல் 148
ரழ அல்லன 118

ல

லளமுன் கசப 117
லளமெய் திரிந்த 120
லளஇறு தொழிற் பெயர் 230
லளவீற்று 97
லளவேற்று மையில் 227

வ

வலித்தல் மெலித்தல் 155
வல்லினம் 68
வல்லே தொழிற் பெயர் 231
வவ்விறு சுட்டிற்கு 250
வன்றொடர் அல்லன 181

வா

வாழிய என்பதன் 168

வி

விகார மனைத்தும் 153
விகுதி பதம் 254
விளம்பிய பகுதி 139

வே

வேற்றுமை மப்போய் 220
வேற்றுமை யாயின் 202
வேற்றுமை ஐம்முதல் 152

ற

றவ்வொடு உகர 145
றனழள ஒவ்வும் 150

ன

னஃகான் கிளைப் பெயர் 212
னலமுன் றனவும் 237



தமிழை அறிவோம்; தமிழராவோம்

தமிழறிவோரே தமிழர்களாவர்

புதிய நூல்கள் : தமிழ் மொழிப் பயிலக வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | தமிழில் அடிக்கடி நேரும் பிழைகளும் திருத்தமும் | ரூ. 20 |
| 2. | பிழை திருத்தும் மனப்பழக்கம் | ரூ. 20 |
| 3. | சொல் புதிது; சுவை புதிது | ரூ. 20 |
| 4. | திருக்குறள் – நுண்பொருளுரை | ரூ. 120 |
| 5. | திருக்குறள் – தெளிவுரை | ரூ. 50 |
| 6. | புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாறு | ரூ. 60 |
| 7. | ஆய்வியல் அறிமுகம் | ரூ. 110 |
| 8. | ஒப்பிலக்கிய அறிமுகம் | ரூ. 45 |
| 9. | தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா? | ரூ. 25 |
| 10. | திருவள்ளுவரின் மனித நேயம் | ரூ. 12 |
| 11. | சங்க இலக்கிய ஒப்பீடு | ரூ. 120 |
| 12. | நன்னூல் சொல்லதிகாரம் | ரூ. 60 |
| 13. | அன்னைத் தமிழ்மொழி – அறிமுகம் | அச்சில் |
| 14. | பத்து நாளில் பைந்தமிழ் இலக்கணம் | ,, |
| 15. | தமிழ்ச்சொல் விளையாட்டு | ,, |
| 16. | தமிழ்த்தொடர் விளையாட்டு | ,, |
| 17. | தண்டியலங்காரம் – எளிய உரை | ,, |
| 18. | யாப்பருங்கலக் காரிகை | ,, |